


# கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை பற்றிய உண்மைகளைக் கண்டறியும் அறிக்கை

மார்ச் 2018

LAW & SOCIETY TRUST

# கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை பற்றிய உண்மைகளைக் கண்டறியும் அறிக்கை

மார்ச் 2018

# கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை பற்றிய உண்மைகளைக் கண்டறியும் அறிக்கை

மார்ச் 2018

LAW & SOCIETY TRUST

© சட்டத்திற்கும் சமூகத்துக்குமான அறநிலையம் 2021

LAW & SOCIETY TRUST

**சட்டத்திற்கும் சமூகத்துக்குமான அறநிலையம்**
3, கின்சி டெரஸ்
கொழும்பு - 8
தொலைபேசி : +94112684845
+94112691228
தொலைநகல் : +94112686843
இணையத்தளம் : lstlanka.org
மின்னஞ்சல் : admin@lstlanka.org
முகநூல் : www.facebook.com/lstlanka
டிவிட்டர் : @lstlanka

ISBN :978-624-5545-06-3

# உள்ளடக்க அட்டவணை

அறிக்கையின் சுருக்கம்…………………………………………………………..……… 01

அத்தியாயம் 1 - அறிமுகம் ……………………………………………………………… 10

அத்தியாயம் 2 - திகன, தெல்தெனிய மற்றும் அக்குரணை வன்முறை ……………… 13

அத்தியாயம் 3 - அக்குரணை, 8 ஆம் கட்டை பற்றிய சம்பவக்
கற்கை (7 மார்ச் 2018) …....................................................................................... 33

அத்தியாயம் 4 - நிகழ்வுக்குப் பின்னரான குறிப்புக்கள்………………….……….…..... 40

அத்தியாயம் 5 - சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்களின் வாக்குமூலங்கள் ………..... 49

அத்தியாயம் 6 - வன்முறையின் பின்னர் உள்ளூர் பௌத்த துறவிகளின்
கண்ணோட்டம் ….................................................................................................... 56

அத்தியாயம் 7 - நிவாரண நடவடிக்கைகள ……………………………………......... 59

அத்தியாயம் 8 - 2018 மார்ச் நிகழ்வுகள் பற்றிய கருத்துரைகள் - அரசியல்
செயற்பாட்டாளர்கள் ……………………………………………….......................... 63

அத்தியாயம் 9 - சிவில் சமூக இடையீடுகள்……………………..………………….. 69

அத்தியாயம் 10 - நிகழ்வுகளின் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடக
உள்ளடக்கம்…………............................................................................................ 73

நூற்பெயர்க் கோவை……………………………………..…………………...... 86

**ஏற்புரை**

கொழும்பு பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த பேராசிரியர் பர்சானா ஹனீபா அவர்களினால் எழுதப்பட்ட இந்த அறிக்கைக்கு கலாநிதி விஜய ஜயதிலக (பேராதனைப் பல்கலைக்கழகம்), பேராசிரியர் ஷாமளா குமார் (பேராதனைப் பல்கலைக்கழகம்), சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம (பேராதனைப் பல்கலைக்கழகம்) மற்றும் பேராசிரியர் சுமதி சிவமோகன் (பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோர் அடங்கிய ஆய்வணி உதவி வழங்கியுள்ளது.

உண்மைகளைக் கண்டறியும் பணிக்குத் தேவையான பௌதிகவள, தொழில்நுட்ப, நிர்வாக உதவியினையும் அறிக்கையினை வெளியிடுவதற்கான உதவியினையும் சட்டத்திற்கும் சமூகத்துக்குமான அறநிலையம் (LST) வழங்கியுள்ளது. குறிப்பாக எல்எஸ்டியின் அணி உறுப்பினர்களுள், மெகரா டெகல், களத்தில் பௌதிக வள உதவியினை வழங்கியதுடன் அறிக்கைக்குத் தேவையான மேலதிக ஆய்வினை மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான அரசாங்க உதவி தொடர்பான அறிக்கையின் ஒரு பகுதியினை எழுதியுள்ளார். ஆய்வு மற்றும் ஆக்கத்தில் உதவியதற்காக கொழும்புத் திட்டப் புலமையாளரான ஒலிவர் பிரைட்மெனுக்கும் நாம் நன்றி தெரிவிக்க விரும்புகின்றோம். நைஜல் நுகவெல பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மேற்கொண்ட ஆய்வு விஜயங்களைத் திட்டமிட உதவினார், டில்ஹார பதிரன, ஆசிரியர் (LST), வெளியீட்டுக்கு உதவி வழங்கினார், அமலினி டி த சாய்ரா (தொடர்பாடல் உத்தியோகத்தர்) முன்னட்டைக்கான புகைப்படத்தினை வழங்கினார் மற்றும் கலாநிதி சகுந்தலா கதிர்காமர், நிறைவேற்றுப் பணிப்பாளர் வெளியீட்டுக்கு உதவி வழங்கியதுடன் பல தாமதங்களையும் சவால்களையும் தாண்டி அறிக்கை பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தினார். சுகன்யா விக்னராஜா அறிக்கையினை வெளியீட்டுக்கு ஏற்ற முறையில் தயார் செய்தார்.

களப் பணியினை நஜா மொஹமட் மற்றும் சம்சுதீன் அப்துல் ஹலீம் இஷாக் (அக்குரணை, குருகொட மொஹியதீன் ஜும்மா பள்ளிவாயல் செயலாளர்), மடவளையைச் சேர்ந்த பீர் மொஹமட் நிஜாம்தீன் மொஹமட் சப்ராஸ் ஆகியோரும் பலகொல்ல விஹார அபிவர்தன சமிதியவும் வசதிப்படுத்தினர்.

கள நேர்காணல்களை நடத்த திகனயிலுள்ள அனர்த்த சேவைகள் மையத்தின் கலாநிதி லரீப் சுபைரும் அவரது அணியினரும் ஆய்வணியினருக்கு அளப்பரிய உதவிகளை வழங்கினர்.

கண்டி அரசாங்க அதிபரும் அரச அதிகாரிகளும் வழங்கிய உதவிக்கும் தமது நேரத்தினை வழங்கிய பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த சமுதாயத் தலைவர்களுக்கும் நாம் நன்றி தெரிவிக்க விரும்புகின்றோம்.

இந்தத் துயரத்தின் மானுடப் பக்கத்தினைப் பகிரங்கப்படுத்துவதற்காகவும் இவ்வாறான மோதல்கள் வெறுமனே நிகழ்ந்துவிடுவதில்லை மாறாக அவை சதி முயற்சிகளினாலேயே பொதுவாக உருவாக்கப்படுகின்றன என்பதைக் கோடிட்டுக்காட்டுவதற்காகவுமே சட்டத்திற்கும் சமூகத்துக்குமான அறநிலையம் இந்த உண்மையினைக் கண்டறியும் பணிக்கு உதவி வழங்கியுள்ளது. பொதுமக்களாகிய நாங்கள் இது பற்றி அறிந்திருக்காவிட்டால், வெறுப்பினைப் பரப்புவதற்கான தொடரான சதி முயற்சிகளுக்கான வாய்ப்புக்கள் மீண்டும் ஏற்படும். திகனயில் நடந்த துயரத்தினை உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களும் (2019) அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த பல மாற்றங்களும் மறைத்து விட்ட போதிலும், பாதிக்கப்பட்ட மற்றும் பாதிப்புறக்கூடிய மக்கள் அனைவரையும் பாதுகாப்பதற்கான கலந்துரையாடல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான தேவையினையும் வன்முறையற்ற ஓர் எதிர்காலத்தினை நோக்கித் தாம் பணியாற்றுவோம் என்கின்ற அரசினதும் சமுதாயங்களினதும் கடப்பாட்டிற்கான தேவையினையும் நாம் முன்னெப்பொழுதையும் விட இப்போது கோடிட்டுக் காட்டுகின்றோம்.

**அறிக்கையின் சுருக்கம்**

கண்டி மாவட்டத்தின் திகனயிலும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் 2018 மார்ச் மாதத்தில் நிகழ்த்தப்பட்ட முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை பற்றிய விபரங்களே இந்த அறிக்கையாகும். முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையின் காரணமாக நாடு முழுவதிலும் 10 நாட்கள் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு சமூக ஊடகங்களை அணுகுவது கட்டுப்படுத்தப்பட்டு சுமார் 100 பேர் கைதுசெய்யப்பட்டனர். கலகம் விளைவித்தோர் 33 வீடுகளைத் தரைமட்டமாக்கி, 256 வீடுகளுக்குப் பகுதியாகச் சேதமேற்படுத்தி, 163 கடைகளையும் 47 வாகனங்களையும் அழித்துவிட்டனர். மேலும் பல்வேறு இடங்களில் 20 பள்ளிவாயல்கள் சேதமாக்கப்பட்டன. (இணைப்பு 1 இனைப் பார்க்க)

பிரதேசத்திற்கு மேற்கொண்ட ஐந்து கள விஜயங்கள், கண்டியிலும் கொழும்பிலும் நடத்தப்பட்ட பிரதான தகவலாளர் நேர்காணல்கள், சம்பவம் பற்றிய செய்தி அறிக்கையிடல் பற்றிய கணிப்பீடு மற்றும் சம்பவத்தின் பின்னர் அரசியல்வாதிகள் வெளியிட்ட பதில்களின் ஊடக உள்ளடக்கம் ஆகியவற்றினை இந்த அறிக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

2009 இல் யுத்தம் முடிவடைந்ததில் இருந்து சிறிது சிறிதாக உருவாக்கப்பட்டு சிங்களம் மற்றும் தமிழ் பேசும் பிரதேசங்களில் கணிசமான ஆதரவினைக் கொண்டுள்ள முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு பிரபலமான இயக்கத்தின் சூழமைவிலேயே இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது என்பதனால், இதனை ‘‘கும்பல் வன்முறை’’ அல்லது ‘‘கலவரம்’’ என இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.தொடர்ந்துவரும் தேர்தல்களுடன் பொருந்தும் விதத்தில் கிரமமான முறையில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளைப் பொதுவாகக் கட்டவிழ்த்து விட முடியும் எனும் அளவுக்கு முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்தின் வெற்றி இருந்து வருகின்றது. சிறுபான்மையினருக்கெதிரான உணர்வுகள் தேர்தல் பிரச்சாரமாகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்து சில வாரங்களின் பின்னரே திகனவில் வன்முறை வெடித்தது. முஸ்லிம்களுக்கெதிரான திட்டவட்டமான நிகழ்ச்சிநிரலைக் கொண்டுள்ள மஹசொன் பலகாயவின் தலைவரான அமித் வீரசிங்கவின் அலுவலகம் வன்முறை நிகழ்ந்த இடத்திற்கு அருகிலேயே அமைந்துள்ளது. ராஜபக்சவின் தலைமையிலான மொட்டுக் கட்சியினால் (பொஹொட்டுவ) வெற்றிகொள்ளப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலும் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளை விதைக்கின்ற அமைப்பு பிரதேசத்தில் பிரசன்னமாகியிருந்தமையும் நிகழ்விற்குப் பங்களிப்பு வழங்கிய முக்கியமான காரணிகளாகப் புரிந்துகொள்ளப்பட்டன.

இந்த அறிக்கை பின்வருவனவற்றினை உள்ளடக்குகின்றது: நிகழ்வுக்கு முன்னர் நடந்த நிகழ்வுடன் தொடர்புடைய சம்பவங்கள், பாதிக்கப்பட்ட நபர்களினால் குறிப்பிடப்படும் வன்முறைச் சம்பவங்கள், பல்வேறு இனச் சமயக் குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சமுதாயத் தலைவர்களினால் விபரிக்கப்பட்டவாறான வன்முறைக்கு முன்னரான கண்டியச் சூழமைவு, வன்முறை நிகழ்வுகளுக்கான பதிற்செயற்பாடுகள் பற்றிய தெரிவுசெய்யப்பட்ட அரசாங்க அதிகாரிகளின் விளக்கங்கள், நிகழ்வுகளுக்கான அரசியல்வாதிகளின் பதில்கள் பற்றி செய்திகளில் வந்தவை என்பனவாகும். வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களின் அனுபவங்களை அங்கீகரிப்பதற்காகவும் புவியியல் ரீதியில் பிரதேசங்களில் தாக்குதல் இடம்பெற்ற பாங்குகளையும் ஒத்த தன்மைகளையும் கோடிட்டுக் காட்டுவதற்காகவும் பாதிக்கப்பட்டவர்கள் விபரித்தபடியே வன்முறை நிகழ்வுகள் அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பின்வரும் காரணங்களுக்காக நாம் அரசியல் பிரதிநிதிகளின் தலையீடுகளின் தொகுப்பினையும் இங்கே வழங்குகின்றோம். அளுத்கம நிகழ்வுக்குப் பின்னர், நிகழ்வுக்குக் காரணம் முஸ்லிம்களே என முஸ்லிம்களைக் குற்றஞ்சாட்டி பல்வேறு மட்டங்களில் நிகழ்வின் விபரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அரச பிரதிநிதிகளின் முயற்சிகள் காணப்பட்டன. மனித உரிமைப் பேரவையில் பொலிஸ் மாஅதிபரினாலும் அரசாங்கப் பிரதிநிதிகளினாலும் முஸ்லிம்களே குற்றமுடையவர்கள் என சம்பவத்தின் விபரங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் சமர்ப்பிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ராஜபக்சவினாலும் இது மேற்கொள்ளப்பட்டது.[1] திகன கலவரத்தின் பின்னர் அரசாங்கத்தினால் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. தாக்குதலில் வெளிப்படையான அரச உடந்தை இல்லாமையினைப் புரிந்துகொள்வதில் அரசாங்கத்தின் வெற்றாரவார பதில்களை நாம் முக்கியமானதாகக் கருதுகின்றோம். எவ்வாறாயினும், வன்முறை நிகழ்வதைத் தடுப்பதிலும் முதலாவது தாக்குதல்கள் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் அது பரவுவதைக் கட்டுப்படுத்துவதிலும் அரசாங்கம் செயற்திறனற்றிருந்தது என்பதை அது நிரூபித்துள்ளது. வன்முறையினை அரசாங்கத்தினால் நிறுத்த முடியாமல் போனமையும் அரசாங்கத்தின் திருப்திகரமற்ற பதிற்செயற்பாடுகளும் அவ்வாறான வன்முறை அரசாங்கத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்பதை முஸ்லிம்களுக்குச் சுட்டிக்காட்டியது. கண்டியில் நடைபெற்ற வன்முறைக்கு அரசாங்கம் போதிய பதிற்செயற்பாட்டினை வழங்காமையானது முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைக்கு இட்டுச் சென்று இலங்கையில் புதிய ‘‘வழமையின்’’ ஒரு பாகமாக அது மாறியுள்ளது.

[1] பர்சானா ஹனிபா மற்றும் பலர், *அயலவர்கள் எல்லோரும் எங்கே போய்விட்டனர்? அளுத்கமை கலவரமும் அதற்குப் பின்னர் நடந்தவையும்: அளுத்கமை தர்கா நகரில் உண்மையைக் கண்டறிவதற்கான பணி, வெலிப்பன்ன மற்றும் பேருவளை*, சட்டத்திற்கும் சமூகத்துக்குமான அறநிலையம் - 2020

## பிரதானமாகக் கண்டறிந்தவைகள்

### ஓரு புதிய வழமையாக முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை

2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதன் மூலம் *நல்லாட்சி* அரசாங்கம் ஆட்சிக்கு வரக் காரணம் ஆட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக முஸ்லிம்கள் அளித்த வாக்குகளாகும். 2012 ஆம் ஆண்டில் இருந்து முஸ்லிம்களுக்கு எதிரான ஓர் இயக்கத்தினை உருவாக்கி 2014 இல் அளுத்கமையில் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக்கு ராஜபக்ச அரசாங்கம் அளித்த மறைமுகமான இணக்கத்திற்கு எதிராக அளிக்கப்பட்ட எதிர்ப்பு வாக்குகளாகவே இந்த வாக்குகள் கருதப்பட்டன. *நல்லாட்சி* அரசாங்கம் பதவியில் இருந்த காலத்தில் நடைபெற்ற கண்டி வன்முறை ஓர் அதிர்ச்சியான நிகழ்வாகும். ஏனெனில் இவ்வாறான வன்முறைகள் அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்டதல்ல என்பதுவும் அதிகாரத்தில் இருப்பது யாராக இருப்பினும் பிராந்திய நகரங்களில் உள்ள சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் மிக இலகுவாகக் கட்டவிழ்த்துவிடப்பட முடியும் என்பதுவும் கண்டி வன்முறையின் மூலம் தெளிவாக்கப்பட்டமையே இதற்கான காரணமாகும்.*நல்லாட்சி* அரசாங்கத்தின் கீழ் முஸ்லிம்களுக்கு எதிரான பல நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. 2017 இல் காலி ஜிந்தோட்டை மற்றும் கண்டி நிகழ்வுக்குச் சில நாட்களுக்கு முன்னர் அம்பாறையிலும் இடம்பெற்றன. எவ்வாறாயினும், இவை சிறு அளவிலான வன்முறைகள் என்பதுடன் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. கண்டியில் நடந்த நிகழ்வுகள் நீண்ட முன் நிகழ்வுகளைக் கொண்டிருந்தன. 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி தெல்தெனியவிலுள்ள சிறு கிராமத்தினைச் சேர்ந்த குமாரசிங்க என்ற ஒரு நபர் உள்ளூர் எரிபொருள் நிலையத்தில் வைத்து நான்கு முஸ்லிம் இளைஞர்களால் தாக்கப்பட்டது முதல் அப்பிரதேசத்தில் பதற்றம் நிலவி வந்தது. குமாரசிங்க இறந்து விட்டார் என்ற செய்தி 2018 மார்ச் 2 ஆம் திகதி வெளியிடப்பட்டதும் பிரதேசத்தில் பதற்றம் மேலும் அதிகரித்து இறுதியில் குமாரசிங்கவின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற 2018 மார்ச் 5 ஆம் திகதி வன்முறைகள் வெடித்தன. அதிகாரிகளினால் வன்முறையினைக் கட்டுப்படுத்த முடியாமல் பல நாட்களாக வன்முறை தொடர்ந்த போதுதான், ராஜபக்சவின் சித்தாந்தத்தினை விட வித்தியாசமான சித்தாந்தத்தினைக் கொண்டிருப்பது தாமே நாட்டில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையினைத் தடுப்பதற்கான உத்தரவாதம் அல்ல என்பது அவதானிப்பாளர்கள் பலருக்குத் தெளிவாகியது.

### வன்முறையின் பாங்கு

திகன வன்முறைக்கும் அளுத்கமை வன்முறைக்கும் இடையிலான ஒற்றுமைகள் அவதானிக்கத்தக்கதாகும். நிகழ்வுகள் நடைபெற முன்னர் சமூக ஊடகங்களில் வெறுப்புப் பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டது. மேலும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் ஆவணப்படுத்தப்பட்டவாறாக, வன்முறை பரவிய தினங்கள் முழுவதும் வெறுப்புப் பேச்சுக்கள் தொடர்ந்தன. வன்முறையினைத் தூண்டிய நிகழ்வு கண்டியில் நடைபெற முன்னர் முஸ்லிம்களுக்கெதிரான பல சம்பவங்கள் நடைபெற்றன. அளுத்கமையிலும் வன்முறை வெடிப்பதற்கு முன்னர் கிட்டத்தட்ட ஒரு மாதமாகப் பதற்றம் நிலவியது. வன்முறையினைத் தடுப்பதற்கு உள்ளூர் சமுதாய உறுப்பினர்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த முயற்சிகள் வியர்த்தமாகிவிட்டன. அளுத்கமை சம்பவத்தினைப் பொறுத்தளவில், அளுத்கமை மற்றும் கொழும்பைச் சேர்ந்த முஸ்லிம் செயற்பாட்டாளர்கள் பொலிஸாருடன் சந்திப்புக்களை மேற்கொண்டு பொதுபல சேனாவினால் கூட்டப்பட்ட கிளர்ச்சியினைத் தூண்டும் சாத்தியத்தினைக் கொண்டிருந்த பொதுக்கூட்டத்தினைத் தடுப்பதற்கு முயற்சித்தனர். ஆனால் கூட்டத்தினை நடத்த அனுமதிக்க வேண்டும் எனப் பொலிஸாருக்கு மேலதிகாரிகளிடம் இருந்து உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் செயற்பாட்டாளர்களிடம் கூறப்பட்டது. கூட்டத்தின் பின்னர் எதிர்பார்த்தது போல் வன்முறை வெடித்தது. திகனவைப் பொறுத்தளவில், வன்முறைக்குத் தீனி போட்ட சம்பவமாக, போதையில் இருந்த நான்கு பேருடன் (முஸ்லிம்கள்) ஏற்பட்ட கைகலப்பினால் இறந்த குமாரசிங்கவின் இறுதிக்கிரியை அமைந்திருந்தது. நிலவிய பதற்றத்தினைத் தணிக்கக் கண்டி பள்ளிவாயல் நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் ஏனைய சமுதாயத் தலைவர்கள், பொலிஸார் மற்றும் கிராமத்து விஹாரையின் பிக்கு ஆகியோர் முயற்சி செய்தனர். பொது நிகழ்வொன்றை நடத்துவதைத் தடுப்பதற்கான நீதிமன்றக் கட்டளையைப் பொலிஸார் பெற்றதன் மூலம் இறுதிக்கிரியையினை ஒரு பொது நிகழ்வாக ஊதிப் பெருக்கும் முயற்சி நிறுத்தப்பட்டது. ஈமச் சடங்கு நடத்தப்படவிருந்த கிராமத்து விஹாரையின் பிக்குவான சங்கைக்குரிய உபாலி ஞானிஸ்ஸர தேரர், முஸ்லிம் வீடுகளைத் தாக்க ஒன்று கூடிய கும்பலைத் தடுப்பதற்கு பலவந்தமாகத் தலையீடு செய்தார். குமாரசிங்கவின் கிராமமான அம்பலவில் வன்முறை அனுமதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் அண்மைய நகரமான தெல்தெனியவிலும் ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறை பரவுவதைத் தடுப்பதற்கு கிராம மட்டத்தில் போதிய தலையீடு மேற்கொள்ளப்படவில்லை. அச்சுறுத்தலின் மட்டத்தினை மதிப்பிட்டு, அதற்கமைய பதிற்செயற்பாடற்றிருந்த அதிகாரிகள் போதிய நடவடிக்கைகளை எடுத்தார்களா என்பது இன்னும் ஒரு கேள்வியாகவே உள்ளது. சில அரசியல்வாதிகளும் (கீழே பார்க்க)

சுட்டிக்காட்டியது போலபதற்றமானது தொடர்ந்து சிலகாலமாக உருவாகி வந்திருக்கின்றது என்பது தெளிவானது.

வன்முறை நடத்தப்பட்ட விதத்திலும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. கும்பல் முதலில் சிசிடிவி கமராக்களை உடைத்தழித்து அதன் பிறகே வீடுகளையும் கடைகளையும் சேதப்படுத்தியுள்ளனர். வெவ்வேறு குழுக்களுக்கு வெவ்வேறு பணிகள் ஒப்படைக்கப்பட்டது போல் தென்படுகின்றது. ஒரே விதமான முறைகள் பயன்படுத்தப்பட்டதாக வெவ்வேறு இடங்களிலும் இருந்தும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அளுத்கமை கதைக்கு அமைவாக, தாக்குதல்கள் நடைபெற்ற போது பெரும் எண்ணிக்கையில் பொலிசார் சமூகமளித்திருந்தனர் எனப் பாதிக்கப்பட்டவர்கள் (குறிப்பாக, திகன சந்தை மற்றும் வெலேகட) முறைப்பாடு செய்திருந்தனர். தாக்குதல் நடத்தியவர்களைத் தடுக்கப் பொலிசார் பெரிதாக எதையும் செய்யவில்லை.

அளுத்கமை சம்பவத்துடனான ஒற்றுமைக்கான மேலதிகச் சான்றினுள் மிகச் சொற்பமானவர்கள் தாக்கப்பட்டமை அடங்குகின்றது. தாக்குதல் சிறிய, கீழ், நடுத்தர வகுப்பு வீடுகள் முதல் செல்வந்தர்களினதும் மேல் நடுத்தர வகுப்பு மக்களினதும் மாளிகைகள் வரை இலக்குவைக்கப்பட்டன. மேலும் சிறு பலசரக்குக் கடைகள், ஆடம்பரத் தளபாடக் களஞ்சியங்கள் மற்றும் பல உள்ளூர் மக்கள் தொழில்புரிந்த தொழிற்சாலைகள் என 163 பெரிய மற்றும் சிறிய வியாபாரத் தலங்கள் தாக்கப்பட்டன. அளுத்கமை மற்றும் கண்டி ஆகிய இரண்டு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளில் ஒரு நபரிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அதிர்ச்சிதரும் வன்முறைச் சம்பவம் குறைந்தது ஒன்றாவது நிகழ்ந்துள்ளது. அளுத்கமையில் ஒரு மனிதர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட முறைப்பாடு எமக்குக் கிடைத்திருக்கின்றது. திகனயில் ஒரு வயதான நபர் பஸ்ஸிலிருந்து இழுத்தெடுக்கப்பட்டு நினைவிழக்கும் வரை தாக்கப்பட்டுள்ளார். நினைவிழந்த அந்த நபர் நினைவு திரும்பாமலேயே காயங்களினால் 2018 இல் இறந்துவிட்டார். இவ்வகையான சம்பவங்கள் நடக்கவில்லை என்பதன் அர்த்தம் வன்முறைக்கான சாத்தியங்கள் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன என்பதேயாகும். இச்சம்பவங்கள் விதிவிலக்கான சம்பவங்களாகவும் உள்ளன. பல்வேறு பொறிமுறைகளைப் பயன்படுத்தி மக்களை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றி சொத்துக்களைத் தாக்கி அழிப்பதே முறையாக இருந்திருக்கின்றது. அளுத்கமை மற்றும் திகன ஆகிய இடங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பல முஸ்லிம்கள் தாக்குதல்களைப் பற்றி விபரிக்கையில் அவை தமது வியாபாரங்களை அழிப்பதற்கும் முஸ்லிம்களின் பொருளாதாரத்திற்கான ஆதாரங்களை அழிப்பதற்கும் என மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட முயற்சி எனக் குறிப்பிட்டனர்.

**நிகழ்வுகள் பற்றிப் பாதிக்கப்பட்ட சமுதாயங்களின் புலனுணர்வுகள்**

வன்முறை நிகழ்ந்த மாவட்டத்திலுள்ள பட்டினங்கள் மற்றும் கிராமங்களிலுள்ள பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் வெவ்வேறு குழுக்களுடன் நாம் பேசினோம். பாதிக்கப்பட்டவர்களின் மத்தியிலான பல்வகைமை கணிசமானதாக இருந்தது. இவர்களுள் மிகக் குறைவான சொத்துக்களைக் கொண்ட சிறு கிராமியச் சமுதாயங்கள் மற்றும் செல்வந்த நகர்சார் பிரதேசங்களைச் சேர்ந்த நடுத்தர மற்றும் மேல் நடுத்தரக் குடும்பங்கள் உள்ளடங்குகின்றனர். திகன சந்தையினைச் சேர்ந்த வியாபாரிகளுடனும் நாம் பேசினோம். சேதத்தின் அளவும் பொலிஸாரின் பதில்களும் வித்தியாசப்பட்ட போதிலும் வெவ்வேறு சமுதாயத் தலைவர்கள் அவர்களின் அனுபவத்தினை எவ்வாறு விபரித்தனர் என்பதில் உறுதியான ஒற்றுமை காணப்பட்டது. பொலிஸாரினதும் விசேட அதிரடிப் படையினரதும் (STF) நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி காணப்பட்டதுடன் அயலவர்கள் உடந்தையாக இருந்தமை தொடர்பிலும் சந்தேகம் காணப்பட்டது. அரச அதிகாரிகள் பாகுபாடு காட்டியமை தொடர்பிலும் சந்தேகம் காணப்பட்டது. நட்டஈடு மற்றும் உதவி ஆகியவற்றினை அணுகுகையில் தாம் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்ததாகப் பலர் முறைப்பாடு செய்தனர். மேலே விபரிக்கப்பட்டவாறாக, தாக்குதல் நடத்தியவர்கள் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்குக் கடும் சேதத்தினை ஏற்படுத்தியதுடன் பல பள்ளிவாயல்களை எரித்து அவற்றின் புனிதத்திற்கு கேடு விளைவித்தனர். தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது காட்டப்பட்ட வெறுப்பினை பள்ளிவாயலின் உட்புறங்கள் சேதப்படுத்தப்பட்ட விதத்திலும் புத்தக அலுமாரிகள் உடைக்கப்பட்ட விதத்திலும் புனித குர்ஆன் பிரதிகளும் ஏனைய சமய நூல்களும் கிழிக்கப்பட்டு எரிக்கப்பட்ட விதத்திலும் காணக்கூடியதாக இருந்தது.

மாவட்டங்களில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் தொடர்பில் பாரிய அதிருப்தி காணப்பட்டது. தாக்குதல் மற்றும் அழிப்பின் பல்வேறு மட்டங்களில் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் உடந்தையாக இருந்துள்ளனர் எனக் கருதப்படுகின்றது. ஹிஜ்ராபுரம் பள்ளிவாயலினுள் விசேட அதிரடிப் படையினர் சப்பாத்துக்களுடன் நுழைந்து இரண்டு மௌலவிமார்களைத் தாக்கியிருக்கின்றனர். கும்புக்கந்துரவில் ஒரு நபரின் வீட்டினுள் நுழைந்த கும்பல் பதற்றத்தினைத் தூண்டிய குற்றச்சாட்டிற்காக அவரையும் அவரது நண்பரின் மகனையும் வீட்டுக்கு வெளியே இழுத்து வந்தனர். ஏ.எஸ்.எம்.பாசில் மற்றும் எம். பாசில் ஆகிய இரண்டு பேரை விசேட அதிரடிப் படையினர் கும்புக்கந்துரயில் இருந்து திகனவிற்கு இழுத்து வந்தனர். ஏ.எஸ்.எம் பாசில் மாகாண சபை உறுப்பினராவார். இவர் தெல்தெனிய கலந்துரையாடல்களில் பங்குபற்றியிருந்தார். அம்பதன்னையிலும் வெலேகடையிலும் கும்பல்கள் சில வீடுகளைத் தாக்கிய பின்னர் விசேட

அதிரடிப் படையினர் அக்குடும்பங்களிடம் அவர்களின் வீடுகளை விட்டு வெளியேறி அயல் கிராமங்களிலுள்ள அவர்களின் உறவினர்களின் வீடுகளில் புகலிடம் கோருமாறு கூறினர். அக்குடும்பங்கள் வெளியேறிய பின்னர் கும்பல் மீண்டும் திரும்பி வந்து சொத்துக்களுக்கு மேலும் சேதங்களை ஏற்படுத்தினர். பள்ளிவாயலுக்குள் செல்வதற்குத் தாக்குதல் நடத்துபவர்களை பொலிஸ் சீருடையில் இருந்த ஒருவர் அனுமதித்த சிசிடிவி காணொளி வட்ஸ்அப்பில் பரவலாகப் பகிரப்பட்டது. மற்றொரு காணொளியில் தாக்குதல் நடத்தியவர்கள் வீதியில் கடந்து சென்ற பொலிஸ் மற்றும் இராணுவ வாகனங்களை நிறுத்திக் கதைத்த காட்சி வெளியாகியுள்ளது.

பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் அதிருப்தி பொலிஸினைத் தாண்டி அனைத்து அரச சேவைகளுக்கும் அரசியல் நிறுவனங்களுக்கும் நீட்சியடைந்திருக்கின்றது. நாம் பேசிய சில தனிநபர்கள்,வன்முறை ஆரம்பித்த மார்ச் 4 ஆம் திகதி காலையில் தாம் அக்குரணையினைப் பிறப்பிடமாகக் கொண்ட கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான ஹலீமுடன் இருந்ததாகவும் அப்போது ஹலீம் உதவி கோரிக் கொழும்பிலுள்ள பொலிசுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தபோது ஹலீமுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அது போதுமானது என்றும் ஹலீமிடம் கூறப்பட்டதாகவும் எம்மிடம் கூறினர். என்ன நடக்கப் போகின்றது என்பதை நிறுத்த யாரும் முயற்சி எடுக்கப்போவதில்லை என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது என எம்மிடம் பேசியவர்களில் ஒருவர் குறிப்பிட்டார். பாதிக்கப்பட்டவர்கள் நிகழ்வினை விபரித்த விதத்தினைப் பார்க்கையில் சகல மட்டங்களிலும் கூட்டுச்சதி இடம்பெற்றிருப்பதை மக்கள் பார்த்துள்ளனர் என்பது தெளிவாகத் தெரிந்தது. கட்டிடங்கள் எரிந்தபோது பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் எதுவும் செய்யாது பார்த்துக்கொண்டிருந்ததாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அக்குரணைக்குத் தீயணைப்பு இயந்திரம் வந்தது. ஆனால் தான் அதில் நீர் நிரப்ப மறந்துவிட்டதாக அதன் சாரதி கூறியிருக்கின்றார். முதலில் வன்முறை நிகழ்ந்தபோது திகனவில் மின்சாரமும் நீர் விநியோகமும் இருக்கவில்லை. இதனால் தீயினை அணைக்க முடியாமல் போயுள்ளது. நிகழ்வின் பின்னர் சேதங்களை மதிப்பிடுவதற்கான பொறுப்பு வழங்கப்பட்ட உள்ளூர் அதிகாரிகள் இழப்பினை விட அதிக தொகையினை மக்கள் கோருவதாக மக்களைக் குற்றஞ்சாட்டினர். சேதங்கள் பற்றிய அரசின் சொந்த மதிப்பீடு சுபைர் மற்றும் ஏனையோரினால்[2] ஆவணப்படுத்தப்பட்டவாறு நகைப்புக்குரிய விதத்தில் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. 2019 இல் ஆய்வின் முடிவில் அரசினால் நட்டஈடாக அற்பத் தொகையான 19,000,000.00 ரூபா செலுத்தப்பட்டது.

2018 மார்ச் மாதத்தில் நடந்த நிகழ்வுகளின் தன்மையின் காரணமாக, பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமுதாயப் பிரதிநிதிகள் சந்தேகம் கொண்டுள்ளனர் என்பது புரிந்துகொள்ளக்கூடியதாகும். எவ்வாறாயினும், வன்முறையின் பின்னர், பிரதேசத்திலுள்ள சமுதாயங்கள் ஒருவர் மற்றவரைப் பகையுணர்வுமிக்க சொற்பதங்களால் மாத்திரமே குறிப்பிட முடிகின்றது என்பதுவும் தெளிவாகத் தெரிகின்ற விடயமாகவுள்ளது. இப்பிரதேசங்களில் முஸ்லிம்களும் சிங்கள பௌத்தர்களும் எவ்வாறு வாழ்ந்தனர் என்பது பற்றிய ஒரு பொதுவான உணர்வினை வெளிப்படுத்த கிட்டத்தட்ட வேறு ஒரு வழியும் இல்லை. பல அயல் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் பேசும்போது, தாக்குதல் நடத்தப்பட்ட போது சிங்கள நண்பர்களோ அல்லது அயலவர்களோ உதவி செய்வதற்குத் தலையிடவில்லை எனக் குறிப்பிட்டனர். அயலவர்கள் இதற்கு உடந்தையாக இருந்தனர் என்கின்ற உணர்வு காணப்படுகின்றது. தனது வீட்டில் இருந்து தப்ப முடியாமல் இறந்து மார்ச் 6 ஆம் திகதி உடல் கண்டுபிடிக்கப்பட்ட அப்துல் பாசித்தின் கதை இதற்கான உதாரணமாகும். தமது கடை எரிந்த போது அதைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அப்துல் பாசித்தைக் காப்பற்ற ஏதாவது செய்திருக்கலாம் என்றே குடும்பத்தினர் நினைக்கின்றனர். சில கிராமங்கள் உள்ளூர் கோயில்களுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளன. ''எதுவும் நடக்க விடமாட்டோம்'' எனத் துறவிகள் உத்தரவாதம் வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், கூட்டத்தினைத் துறவிகளால் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. இருந்தாலும் அவர்கள் இன்னும் ஏதாவது செய்திருக்கலாம் என முஸ்லிம் சமுதாயம் உணர்ந்தது. மற்றொரு சந்தர்ப்பத்தில் தாக்குதல் நடத்தியவர்கள் தனக்குச் சிறுபராயம் முதல் நன்கு தெரிந்தவர்கள் என ஒரு மௌலவி எங்களிடம் கூறினார். தமது நண்பர்கள் எனத் தாம் நினைத்த மற்றும் பஸ்ஸிலும் பாடசாலையிலும் அடிக்கடி கண்டு பழகிய சிங்களத் தாய்மார்களும் வன்முறையின் பின்னர் தம்மைப் புறக்கணிப்பதாகவும் அல்லது விலகிச் செல்வதாகவும் வெலேகடையிலுள்ள முஸ்லிம் பெண்கள் சோகத்துடன் குறிப்பிட்டனர்.

[2]இவ்வாறான நிகழ்வுகளுக்குத் தாமதித்து நட்டஈடுகளை வழங்குகின்றமை தொடர்பில் அரசு அவப்பெயரினைக் கொண்டுள்ளது. அளுத்கமையில் நடைபெற்ற வன்முறை தொடர்பாக 2014 இல் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கான நட்டஈட்டுக்கு மக்கள் காத்திருப்பது கண்டறியப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் அளுத்கமயில் நடைபெற்ற வன்முறைக்காக 2018 ஜுலையில் இல் நட்டஈடு வழங்கப்பட்டதாகக் கொழும்பிலுள்ள REPIA எமக்கு அறிவித்தது. இந்தத் தாமதங்களும் சிக்கல் வாய்ந்த கணக்கீடுகளும் முஸ்லிம் மக்களின் நிலைமை தொடர்பில் அரசு அக்கறையின்றி இருப்பதையே காட்டுகிறது என்றே புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. பார்க்க: எல். சுபைர் மற்றும் ஏனையோர்,''கண்டியில் கும்பல் வன்முறையினால் ஏற்பட்ட இழப்புக்களை அரசு ஒட்டுமொத்தமாகக் குறைத்து மதிப்பிடுகின்றதா?'' கிரவுண்ட் விவ்ஸ், 24 ஜுன் 2018, https://groundviews.org/2018/06/24/is-the-state-grossly-underestimating-the-losses-from-the-mob-violence-inkandy/

தாக்குதல்களில் எவ்வித வகிபாத்திரத்தினையும் வகிக்காத மற்றும் அதனைச் சிலவேளைகளில் அங்கீகரித்துக் கூட இருக்காத மக்களின் மத்தியில் இந்த வன்முறைச் சம்பவங்கள் உருவாக்கியுள்ள நீண்ட காலச் சேதத்தினையே இது சுட்டிக்காட்டுகின்றது. பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு அவர்களின் சிங்கள அயலவர்கள் உதவிய கதைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. பகைமை பற்றிய கதைகளையும் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகள் நிலவி வருவது பற்றியுமே சுட்டிக்காட்டப் பலரும் ஆர்வம் கொண்டிருந்ததுடன் அண்மைக் காலத்தில் சமுதாயங்களில் நடந்துள்ள விலகிச் செல்லல் பற்றியும் வலியுறுத்துகின்றனர்.

கிராமத்துத் துறவி ஒருவரும் சிங்களக் கிராம சேவகர் ஒருவரும் உடந்தையாக இருந்ததாக எமக்கு ஒரு கிராமத்தில் கூறப்பட்டது. கிராமசேவகர் தாக்குதலில் பங்குபற்றியதுடன் தாக்குதல் தொடங்க முன்னர் விஹாரையின் மணி சில நிமிடங்கள் ஒலித்திருக்கின்றது. கிராமசேவகர் உண்மையில் சேதத்தினைக் குறைக்கவே முயற்சி செய்திருக்கின்றார் எனப் பின்பு கூறப்பட்டது. தாக்குதல்கள் நடந்து முடிந்த உடனேயே பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமுதாயம், முஸ்லிம் அல்லாத அனைவரையும் எதிரிகளாகப் பார்த்தது என்பதைக் கூறப்பட்ட கதைகளில் இருந்து நாம் புரிந்துகொண்டோம். சிங்களப் பிரக்ஞையில் ஏற்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகள் ஏற்படத் தொடங்கியதும்,அதேபோன்று எப்போதும் தாக்குதலுக்கு உட்பட்டுள்ள உணர்வு முஸ்லிம்குளக்கு மத்தியில் பதிந்திருப்பதும் தெளிவாகத் தெரிந்தது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிராமசேவகரையும் துறவியினையும் நாம் நேர்கண்டபோது, முஸ்லிம்கள் பற்றிய அவர்களின் அனைத்துக் கலந்துரையாடலும் முஸ்லிம் எதிர்ப்பு இயக்கம் எனும் மொழியில் மாத்திரமே நடத்தப்பட்டதை நாம் கண்டோம். (இருவருமே *அடிப்படைவாதி* எனும் சொற்பதத்தினைப் பயன்படுத்தியதுடன் முஸ்லிம்கள் சிங்களவர்களில் இருந்து தூரமாகி வருவது பற்றியும் குறிப்பிட்டனர்). முஸ்லிம்கள் பற்றி இவ்வாறான கருத்துக்களைக் கொண்டிருப்பது தனிநபர்கள் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைக்கு ஆதரவு வழங்கினார்கள் என்பதை எப்போதும் குறிக்கவில்லை. வன்முறை பற்றியும் தமது சமுதாயங்களின் இக்கட்டான நிலை பற்றியும் முஸ்லிம் மற்றும் சிங்களச் சமுதாயத் தலைவர்கள் பேசும்போது அவர்கள் பரஸ்பர சந்தேகம் மற்றும் அவநம்பிக்கை தவிர வேறு எந்த மொழியினையும் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. (தனது கிராமத்தில் வன்முறையினைத் தடுக்கப் போராடிய அம்பலயைச் சேர்ந்த துறவி பேசும்போது கூட முஸ்லிம்களை *அடிப்படைவாதிகள் -அந்தவாதி* என்றே குறிப்பிட்டார்).

எந்தெருதென்ன கிராமத்தினைச் சேர்ந்த பெண்கள் கூறியதையும் வேறு ஒரு கிராமத்தைச் சேர்ந்த வயதானவர் ஒருவர் கூறியதையும் அறிக்கை ஆவணப்படுத்துகையில் பாதிக்கப்பட்ட பல முஸ்லிம்கள் வன்முறையினைத் தொடர்ந்து அச்சத்திலும் நிச்சயமற்ற தன்மையிலும் வாழ்ந்துவந்தனர். இவர்களின் வாழ்வு பழைய நிலைமைக்கு மாற்றப்பட முடியாதவாறு மாறிவிட்டது. வன்முறைகள் மீண்டும் தலைதூக்கும் சாத்தியமே தென்படுகின்றது.

**சட்ட அமுலாக்கல் பதிற்செயற்பாடு**

சிரேஷ்ட சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் தங்கள் தரப்பில் தவறாக பதிற்செயற்பாடு ஆற்றப்பட்டதாக ஏற்றுக்கொண்டனர். ஆனால் அவர்களின் பதில்களுக்கான காரணங்கள் உள்ளன என எம்மிடம் கூறப்பட்டது. அதாவது தாக்குதலில் பொலிஸாரின் உடந்தைக்கு அவர்களால் இறங்கி வரமுடியாது அல்லது முஸ்லிம்களைத் தாக்குவதற்கான சதிமுயற்சியிலும் பங்குபற்ற முடியாது. சூழ்நிலைகளுக்குப் பங்களிப்பு வழங்கிய காரணிகள் பின்வருவனவாகும்:

அ) அந்த நிகழ்வுகள் அரசியல்வாதிகள் தீர்த்து வைக்காத சமூகச் சீர்கேட்டின் விளைவாகும் என்பதுடன் இதற்கு பொலிஸ் மட்டும் பொறுப்பேற்க முடியாது.

ஆ) இவ்வகையான பிரச்சினைகளைக் கையாளுவதற்குப் பொலிஸார் தயாராக இல்லை. அவர்களுக்குப் போதிய பயிற்சி இல்லை, அவர்கள் போதிய தயார்நிலையில் இருக்கவில்லை, அவர்களிடம் சொற்பமான வளங்களே இருந்த நிலையில் போதிய ஏற்பாடுகள் இருக்கவில்லை.

இ) நேரடியான உத்தரவின்றி வன்முறைகளை நிறுத்துவதற்கான முன்னெடுப்பினை எடுக்க நிறுவன ரீதியான ஆதரவு இல்லாமை பொலிஸாரினைத் தடுத்தது. கடந்த காலத்தில் அத்துமீறிச் செயற்பட்டமைக்காக பொலிஸார் விமர்சிக்கப்பட்டமையினால் அவர்கள் பலத்தினைப் பிரயோகிப்பதில் ஜாக்கிரதையாக இருந்துள்ளனர்.

ஈ) கட்டுப்படுத்தல் எனும் கோட்பாடே பொருத்தமானது எனக் கருதப்பட்டது. எதிர்த்தாக்குதல் அல்ல. பொலிஸார் அவர்களின் செயற்பாட்டின் மூலம் நிலைமை மோசமாகிவிடக்கூடாது எனும் நிலைப்பாடு காணப்பட்டமை.

உ) 500 பேர் கொண்ட கும்பலை 5 பொலிசாரினால் கட்டுப்படுத்த முடியாது.

ஊ) இரண்டு இடங்களில் தாக்குதல் நடத்தப்பட ஓர் இடத்தில் மாத்திரம் எதிர்பாரக்கப்பட்டுத் திட்டமிடப்பட்டமை புலனாய்வுத் தோல்வியாகும்.

எ) சட்டவிரோத ஒன்றுகூடல் சட்டத்தின் கீழ் கும்பல் தாக்குதலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தண்டனைச் சட்டக்கோவையில் ஏற்பாடு உள்ளது. எவ்வாறாயினும் அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க உரிய தலைமைத்துவம் தேவைப்படுகின்றது.

ஏ) வழமையாகப் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் அப்பிரதேசத்தினைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் என்பதால் அவர்கள் குற்றத்தினை நிகழ்த்தியவர்களை நன்கு அறிந்திருக்கலாம் என்பது இவ்வகையான நிகழ்வுகளைக் கட்டுப்படுத்தத் தடையாக இருக்கின்றது.

எவ்வாறாயினும், கீழே பிரதான அறிக்கையில் கலந்துரையாடப்பட்டவாறு இவ்வாறான உத்தேச பங்களிப்புக் காரணிகளினால் இந்தக் காலகட்டத்தின் போது சட்ட அமுலாக்கலின் பக்கச்சார்பான தன்மையினை விளக்க முடியாது. அதேபோல குற்றத்தினை நிகழ்த்திய சில தெரிவுசெய்யப்பட்டவர்களுடன் சதிமுயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டினை விளக்க முடியாது. அதேபோல் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படை நிறுவனங்களினுள் உள்ளகக் கொள்கைத் தோல்விகளை விளக்க முடியாது.

**உள்ளூர் புத்திஜீவிகளின் பதில்**

நிர்வாகத்திலுள்ள (பிரதேச செயலகங்கள், அனர்த்த முகாமைத்துவ அலகின் பிரதிநிதிகள்) சிங்கள மற்றும் முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகள், கல்வியியலாளர்கள் மற்றும அதிகாரிகளுடன் நாம் பேசினோம். உள்ளூர்ப் புலமையாளர்கள் எனும் பகுதியில் நாம் அவர்களின் கண்ணோட்டங்களின் இணைந்த தொகுப்பினை வழங்குகின்றோம். கண்டியில் வன்முறையின் பின்னர் நாம் பேசிய உள்ளூர்ப் புலமையாளர்கள் நாட்டில் சீர்குலைந்து வரும் இன உறவுகள் தொடர்பாகத் தமது மனக்குறையினை வெளிப்படுத்தினர். நாட்டில் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளுக்குத் தீனி போட்ட மிகவும் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய தகவல்களை ஊடகங்கள் பரப்பியபோது அவ்வாறான வெறுப்பாரவாரப் பேச்சுக்களைப் புரிந்துகொள்ளக்கூடிய சரியான பதிலை அல்லது வித்தியாசமான பதிலை பொதுவெளியில் இருந்து வழங்க மதிக்கப்பட்ட எக்குரல்களும் இருக்கவில்லை என்ற பயன்மிக்க கருத்து சிங்களப் புலமையாளர் ஒருவரிடமிருந்து வெளிப்பட்டது. வன்முறையினை எதிர்த்த நல்லுள்ளம் கொண்ட சிங்கள நபர்களினால் கூட முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்தினால் 2012 இல் இருந்து பிரபல்யப்படுத்தப்பட்ட இனவாதப் பரப்புரைகள் பற்றிக் குறிப்பிடாமல் முஸ்லிம்களைப் பற்றிப் பேச முடியவில்லை என்பதும் எமது ஆய்வில் தெளிவாகியது. தமது சமயத்தினைப் பின்பற்றுவதற்கும் குறிப்பாகத் தமது சமயத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட புரிதலுக்கு ஏற்ப ஆடை அணிவதற்கும் தமக்கிருந்த சுதந்திரம் இறுக்கப்பட்டு வருவது குறித்து முஸ்லிம் புலமையாளர்கள் விமர்சனங்களை முன்வைத்தனர். தாம் ஓரங்கட்டப்பட்டு வருவது பற்றிய மற்றும் பிரதேசத்தில் தமது பற்றுறுதியின்மை பற்றிய முஸ்லிம்களின் உணர்வுடன் இணைந்துள்ள முஸ்லிம்களின் கல்வி வாய்ப்புக்களின் சீர்குலைவு பற்றியும் அவர்கள் பேசினர். மாவட்டத்தில் உள்ள சிறந்த பாடசாலைகளில் முஸ்லிம் மாணவர்களைச் சேர்ப்பது முன்பு இருந்ததை விட மிகவும் குறைந்துள்ளது. அவ்வாறு மாணவர்களைச் சேர்க்கும் பாடசாலைகள் பலவும் முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பாக அதிகரித்த அளவில் இனவாதக் கொள்கைகளைக் கொண்டுள்ளன. இதனால் முஸ்லிம் பாடசாலைகளை மட்டும் (இவையும் போதிய அளவில் இல்லை) நாடுவதற்கு முஸ்லிம்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் சர்வதேசப் பாடசாலைகளும் பொதுவாகச் சிறந்தவையாக இல்லை. ஆங்கில மொழிப் பாடசாலைகளை முஸ்லிம்கள் நாடுகின்ற காரணத்தினால் எதிர்காலத்தில் தொழில் சந்தைகளில் அது சிங்களவர்களுக்கு அச்சுறுத்தலாக மாறலாம் என்ற அச்சத்தினைச் சில சிங்களக் கருத்துரைஞர்கள் வெளிப்படுத்தினர்.

**பௌத்த பிக்குகளின் பதில்கள்**[3]

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நாம் பேசிய பௌத்த பிக்குகள் அனைவரும் வன்முறை தொடர்பான அவர்களின் கண்டனங்களைத் தெரிவிப்பதில் ஒரே விதமான கருத்தினைக் கொண்டிருந்ததுடன் வன்முறையினை நிறுத்த முடியாமல் போனது பற்றி அவர்களின் மனவருத்தத்தினை வெளிப்படுத்தினர். சில பௌத்த பிக்குகள் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்குத் தமது விஹாரைகளில்

[3]வன்முறைச் சம்பவங்களின் பின்னர் பௌத்த துறவிகளின் குழுக்கள் மௌன எதிர்ப்புப் போராட்டத்தினை ஏற்பாடு செய்தனர் என்பது குறிப்பிடப்படவேண்டும். கண்டி மாவட்டத்தில் உள்ளூர் மட்டத்தில் எமது நேர்காணல்களை மட்டுமே எமது அறிக்கை உசாவுகின்றது. பார்க்க "இலங்கை பௌத்த துறவிகள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையினைக் கண்டிக்கின்றனர்'' அல் ஜசீரா, 9 மார்ச் 2018, https://www.aljazeera.com/news/2018/03/sri-lanka-buddhist-monks-denounce-anti-muslim-riots-180309192840779.html

தஞ்சமளித்ததுடன் அவர்களுக்கு வேறு உதவிகளையும் வழங்கியிருக்கின்றனர். அம்பலவுக்கு வந்த ஆயுதக் குழுக்களுடன் சங்கைக்குரிய உபாலி ஞானிஸ்சர தேரர் நேரடியாக முரண்பட்டிருக்கின்றார். எவ்வாறாயினும் இவர்கள் அனைவரும் நடைபெற்ற சம்பவங்களுக்காக முஸ்லிம்களின் மீது பழிபோடும் சிங்கள மேலாதிக்கப் பகட்டாரவாரப் பேச்சுக்களையே ஒருசேரக் கடைப்பிடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முஸ்லிம்களின் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையே இன்று நிலவும் முஸ்லிம்களுக்கெதிரான வார்த்தைப் பிரயோகங்களை அணிதிரளச் செய்தமைக்கான காரணம் என விபரிக்கப்பட்டது. இதற்கான காரணங்களுள் காணப்படுபவை, முஸ்லிம்களின் பொருளாதார வல்லமை, சமய நடைமுறைகளில் அவர்களின் அதீத ஈடுபாடு, ஏனைய மக்கள் மீதான அவர்களின் மேலாண்மை மற்றும் அவர்களின் நோக்கத்தினை அடைவதற்காக கருத்தடை மாத்திரை போன்ற உபாயமார்க்கங்களைப் பயன்படுத்தியமை. (பௌத்த துறவிகள் இக்கருத்துக்களை நிரூபிக்கப்பட்ட உண்மைகள் போன்று குறிப்பிட்டனர் - பொதுபலசேனவினால் முதலில் பரப்பப்பட்ட இக்கருத்துக்கள் சமூகத்தில் வேரூன்றி காலத்திற்குக் காலம் வலம் வந்த அவர்களினால் வெளிப்படுத்தப்பட்டன. இதற்கான எதிர்க்கருத்துக்கள் முஸ்லிம் குழுக்களிடமிருந்தோ அல்லது சிவில் சமூகத்தில் இருந்தோ அல்லது அரசாங்கத்திடமிருந்தோ பெருமளவு வரவில்லை).இவ்வாறான சம்பவங்களைத் தவிர்க்க வேண்டுமாயின் முஸ்லிம்கள் தங்களின் நடத்தையினைக் கட்டாயம் மாற்றிக்கொள்ள வேண்டும் என பௌத்த துறவி ஒருவர் குறிப்பிட்டார்.

பௌத்த பிக்குகளுக்கு மிகுந்த மனவருத்தத்தினை அளித்த விடயம் ICCPR சட்டத்தின் கீழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையின்றித் தடுத்துவைக்கப்பட்டமையாகும். (மாவட்டம் முழுவதும் கிட்டத்தட்ட 100 பேர் கைதுசெய்யப்பட்டனர்). இவ்வாறான இளைஞர்களை விடுவிப்பதை வசதிப்படுத்த ''ஒத்துழைப்பு வழங்கவில்லை'' என அவர்கள் பல்வேறு முஸ்லிம் கிராமத் தலைவர்கள் மீதும் பள்ளிவாயல் குழுக்கள் மீதும் குற்றஞ்சாட்டினர். இளைஞர்கள் அறிவீனமான செயலில் ஈடுபட்டதாகவும் அவர்கள் (இளைஞர்கள்) அதன் பாராதூரத்தினைப் புரிந்திருக்கவில்லை என்றும் பௌத்த பிக்குகள் புரிந்திருந்தனர். இச்சட்டத்தின் கீழ் அனுபவிக்கக்கூடிய கடுமையான தண்டனையினைப் பற்றி அறிந்திருந்தால் அந்த இளைஞர்கள் அவ்வாறான செயல்களில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள் என ஒரு பௌத்த பிக்கு குறிப்பிட்டார். இவ்வாறான செயல்கள் குற்றமற்றவை என்பதும் இவ்வாறான கடுமையான சட்டங்களை அதற்குப் பயன்படுத்தத் தேவையில்லை என்பதுமே இவர்களின் கருத்தாக இருந்தது. இந்த இளைஞர்களின் விடுதலைக்கு உதவாததன் மூலம் முஸ்லிம்கள் பாரிய சமுதாயப் பிளவுக்கே அத்திவாரமிடுகின்றனர் எனவும் பௌத்த பிக்குகள் குறிப்பிட்டனர். இந்த இளைஞர்கள் ஈடுபட்ட இவ்வாறான செயல்களுக்காக அவர்களைக் கடுமையாக நடத்தத் தேவையில்லை என்றே பௌத்த பிக்குகள் நினைத்தனர்.

மக்கள் மிக அதிமான இழப்புக்களுக்கு உள்ளான இவ்வகையான நிகழ்வில் பௌத்த துறவியின் முழுக் கவனமும் குற்றத்தினை நிகழ்த்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இளைஞர்களின் துயரம் மீது என்கின்ற விடயமானது, அவர்கள் அந்த இளைஞர்களின் செயல்கள் தொடர்பாக அனுதாபம் கொண்டுள்ளனர் என்கின்ற மனப்பதிவினையே ஏற்படுத்தியது.

**பெரும்பாலான முஸ்லிம் சமுதாயத்தின் பதில்கள்**

தாக்குதலைத் தொடர்ந்து உடனடியாகப் பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு உதவி வழங்குவதற்காக சிவில் சமூக அமைப்புக்களும் அறக்கொடை அமைப்புக்களும் பொருட்களைச் சேகரித்து விநியோகித்த விதம் தொடர்பாகப் பல விபரங்கள் இருக்கின்ற அதேவேளை, சிவில் சமூக அமைப்புக்களும் பள்ளிவாயல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைகளும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பதில் செயற்பாடற்றியமையினை ஆவணப்படுத்துவது முக்கியமானதாகும். மார்ச் மாதம் 12 ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்காக முஸ்லிம் சிவில் சமூகக் குழுக்கள், பள்ளிவாயல் நிர்வாகசபைகள் மற்றும் ஜம்மியதுல் உலமா ஆகியவற்றின் பங்கேற்புடன் ஒரு குழு உருவாக்கப்பட்டது. கண்டி மாவட்ட நிவாரண ஒருங்கிணைப்புக் குழு நிவாரண விநியோகத்தினையும் மீள் நிர்மானத்திற்கான உதவி விநியோகத்தினையும் ஒழுங்குசெய்தது. பள்ளிவாயல் வலையமைப்புக்கள் மூலம் வளங்கள் பெருமளவுக்குத் திரட்டப்பட்டன. சேகரிக்கப்பட்ட பணம் வன்முறையின் பின்னர் உடனடியாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கப் பயன்படுத்தப்பட்டதுடன் அர்த்தமுள்ள அரச உதவி இல்லாத சந்தர்ப்பத்தில் சேதமடைந்த வீடுகளையும் வியாபாரங்களையும் கட்டியெழுப்பவும் உதவியது.

**அரசாங்கத்தின் பதில்**

அளுத்கமை சம்பவத்தினைப் போலன்றி[4], தேசிய அரசாங்கத்தின் தவறுகள் அரசாங்கத்தின் செயற்பாடு என்பதை விடப் பெருமளவுக்கு அரசாங்கத்தின் விடுபடல் என்பதாகவே காணப்பட்டது.

[4]விசேட அதிரடிப் படையினர் தாக்குதல் நடத்தியவர்களைத் தடுக்காமையில் இருந்தும் கொள்ளையடித்தவர்களைத் தடுக்காமையில் இருந்தும் அல்லது ஊரடங்கினை மீறியவர்களைக் கைது செய்யாமையில் இருந்தும் அளுத்கம வன்முறையின் ஒழுங்கமைக்கப்பட்ட தன்மையும் தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்ற பாங்கும் தெளிவாகப் புலப்பட்டது. தாக்குதல் நடத்தியவர்கள் ஆயுதங்களை

வன்முறை அச்சம் உருவாகி வரும்போது அதற்கு பதிற்செயற்பாடாற்றுவதில் அரசாங்கம் அசிரத்தையாக இருந்ததுடன் வன்முறை வெடித்ததும் பொலிஸாரையும் இராணுவத்தினையும் அணிதிரட்டுவதிலும் மந்தகதியிலேயே செயற்பட்டது. அளுத்கமை சம்பவத்தினைப் போலன்றி, வன்முறையின் பின்னர் அதனை மூடிமறைப்பதற்கு அரசாங்கம் முயற்சித்ததாகவோ அல்லது நிகழ்வு பற்றிய கூற்றுக்களைக் கட்டுப்படுத்தச் செயற்பட்டதாகவோ சான்றுகள் எதுவும் இல்லை. அரசாங்கத்தின் சொல்லாரவார பதில்கள் வன்முறையினைக் கண்டிப்பதாக அமைந்திருந்ததுடன் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து வருத்தம் தெரிவிப்பதாகவும் அமைந்திருந்தது. முஸ்லிம் புத்திஜீவிகளுடன் நடத்தப்பட்ட கூட்டத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்குப் பிரதமர் ஆதரவு தெரிவிக்காதிருந்ததுடன் முஸ்லிம்களுக்கெதிரான சித்தாந்தத்தினை எதிர்த்து மறுப்புப் பிரச்சாரத்தினை அரசாங்கம் நடத்தியிருக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டார்.தாக்குதலின் பின்னர் தாக்குதலை நடத்தியதாகச் சந்தேகிக்கப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு ICCPR சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டது. பலர் பிணை வழங்கப்படாது தடுப்புக் காவலில் வைக்கபட்டனர். இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் நடத்தப்படுவது அவர்கள் செய்த குற்றத்தினை விட மிகக் கடுமையானது என்ற எண்ணத்தின் அடிப்படையில் அவர்களின் குடும்பங்களும் அவர்கள் சார்ந்தசமுதாயமும் பெரும் இடருக்காளாயினர். வழக்கில் பெரிய முன்னேற்றம் எதுவும் ஏற்படாமல் கைதுசெய்யப்பட்ட அனைவரும் 2018 ஆம் ஆண்டின் முடிவில் விடுதலை செய்யப்பட்டனர். மஹாசொன் பலகாய தலைவர் சிறையில் இருந்து 2018 ஒக்டோபரில் விடுதலை செய்யப்பட்டபோது திகனயில் அவரை பட்டாசு கொளுத்தி வரவேற்றனர். பிரதேசத்திலுள்ள படைத் தளத்திலுள்ள இராணுவத் தளபதியினால் மீள்நிர்மானத்தில் இராணுவம் ஈடுபடும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டது. (அளுத்கமை போன்று). எவ்வாறாயினும், இராணுவம் பிரதேசத்தினைத் துப்பரவு செய்வதற்காக ஒரு நாளை மட்டுமே செலவிட்டது. எந்த ஓர் அரச நிறுவனத்தினாலும் எவ்விதமான புனர்நிர்மானப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. அரசாங்க அதிகாரிகள் பாதிக்கப்பட்ட நபர்களிடம் இருந்து கோரிக்கைகளைப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு விஜயம் செய்து சேத மதிப்பீட்டினை மேற்கொண்டு நட்டஈடுகளைப் பரிந்துரைத்தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்பக் கொடுப்பனவாக தாக்குதல் நடந்து சில வாரங்களின் பின்னர் 100,000.00 ரூபா வழங்கப்பட்டது.

2019 இல் கிடைக்கப்பெற்ற ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களை புனரமைத்தல் அதிகாரசபை (Rehabilitation of Persons, Properties and Industries Authority- REPPIA) பதிவுகளின் படி, தாக்குதல் நடத்தப்பட்டு ஐந்து மாதங்களினுள் சேதமாக்கப்பட்ட 249 வீடுகளுக்கு 10.4 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்பட்டது. 126 கடைகளுக்குக் கூட்டாக 5.46 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்பட்டது. சேதமாக்கப்பட்ட வாகனங்களுக்கு 2.45 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. ஆகவே தாக்குதல் நடத்தப்பட்டு 5 மாதங்களினுள் REPPIA இனால் மொத்தமாக 18.32 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 500,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட கோரிக்கைகளுக்கு நீண்ட காலம் எடுத்தது. சுபைரும் ஏனையோரும் வாதிட்டது போல், நிகழ்வுகள் நடந்த பின்பு அரசு மேற்கொண்ட நட்டஈட்டின் மதிப்பீடு முற்றுமுழுவதும் போதாததாகும். முஸ்லிம் சிவில் சமூகம் மற்றும் பள்ளிவாயல் நிர்வாக சபைகளினால் பற்றாக்குறை நிவர்த்திசெய்யப்பட்டது. (பார்க்க இணைப்பு 1: சிவில் சமூக அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்ட சேத மதிப்பீடுகள்)

தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு வருடமும் 7 மாதங்களும் கழிந்த நிலையில் அனைத்துக் கோரிக்கைகளிலும் 90 சதவிகிதமானவை வழங்கப்பட்டுவிட்டதாக REPPIA குறிப்பிட்டது. எஞ்சிய 10 சதவிகிதமானவை மிகப் பெரிய தொகையினைக் கொண்ட 16 கோரிக்கைகளாகும் என்பதால் அவை குழு அறிக்கைக்காகக் காத்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டது. மிகச் சரியான நட்டஈட்டுத் தொகையினை மதிப்பிட்டு அதனை REPPIA வுக்கு அறிவிப்பதற்காகவே அமைச்சரவையினால் இந்தக் குழு ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் தாமதங்கள் செயன்முறையினை நீடிக்கச் செய்துவிட்டன.

வன்முறை முடிவடைந்த உடனேயே சம்பவம் பற்றி விசாரிப்பதற்காக மூவரடங்கிய ஆணைக்குழுவினை நியமிக்கப்போவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். மூன்று ஓய்வுபெற்ற நீதிபதிகள் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படுவர் என்றும் அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், அவ்வாறான ஆணைக்குழு ஒருபோதும் நியமிக்கப்படவில்லை என்பதுடன் நிகழ்வு நடந்து பல வாரங்களின் பின்னர் முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்த பிரதமர் அரசாங்கம் ஆணைக்குழுவினை நியமிக்காது என்று குறிப்பிட்டார். அவ்வாறு ஆணைக்குழுவினை நியமிக்காமைக்கான காரணமாக செயற்திறனற்ற ஆணைக்குழுக்களைக் கொண்டிருந்த நாட்டின் நீண்ட வரலாற்றினை அவர் குறிப்பிட்டார்.

---

வைத்திருந்தமையும் அவர்களின் கவனம் முழுவதும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் சொத்துக்களை அழிப்பதாக இருந்தமையும் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களைக் கொண்டுசெல்ல வாகனங்கள் விசேடமாகக் கொண்டுவரப்பட்டமையும் தாக்குதல் ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்று என்பதற்கான மேலதிக ஆதாரங்களாகும். பார்க்க: *அயலவர்கள் எல்லோரும் எங்கே போய்விட்டனர்? அளுத்கமை கலவரமும் அதற்குப் பின்னர் நடந்தவையும்: அளுத்கமை தர்கா நகரில் உண்மையைக் கண்டறிவதற்கான பணி, வெலிப்பன்ன மற்றும் பேருவளை,* https://lstlanka.org/wp-content/uploads/2017/11/aluthgama-report-final-english.pdf

குற்றத்தினை நிகழ்த்தியவர்களுக்கு எதிராக வழக்கினை முன்னெடுத்துச் செல்வதிலோ அல்லது போதிய நட்டஈட்டினை வழங்குவதிலோ அரசு உறுதியானதும் நீடுறுதியானதுமான பதிற்செயற்பாட்டினைக் காட்டாதது, குற்றத்தினை நிகழ்த்தியவர்களின் செயற்பாடுகள் சகித்துக்கொள்ளப்பட மாட்டாது என்ற செய்தி அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதையே குறிக்கின்றது. முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதை உறுதிப்படுத்துவதில் அரசு கடப்பாடு கொண்டுள்ளது என்ற செய்தியும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு வழங்கப்படவில்லை. அரசாங்கத்தின் பதிற்செயற்பாடு முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையினை மேலும் சாதாரணமாக்குவதற்கே இட்டுச் சென்றது.

**இரு தரப்புமே குற்றமுடையதா?**

நாம் நேர்கண்ட பாதிக்கப்பட்ட மக்களில் பலர் அதிர்ச்சியில் இருந்தபோதும், நாம் அபிப்பிராயம் வழங்குமாறு கேட்ட பலரும் என்ன நடந்தது என்பது தொடர்பில் குறிப்பாக ஆச்சரியத்தினை வெளிப்படுத்தியதுடன் மேலும் வன்முறைகள் நிகழலாம் என்பது தொடர்பாக அவர்கள் உணர்ந்திருப்பது போல் தென்பட்டது. இவ்வாறான வன்முறைக்கான காரணம் அரசியல் என எம்மிடம் கூறப்பட்டது. ஆனால் கலந்துரையாடலில் பங்குகொண்ட சில சிங்கள நபர்கள் ‘இரண்டு தரப்புக்கள் மீதும் குற்றஞ்சாட்டப்பட வேண்டும்’’ என்றும் இவ்வாறான வன்முறைகளை எதிர்காலத்தில் தவிர்க்கவேண்டுமாயின் முஸ்லிம்கள் மாறவேண்டும் என்றும் குறிப்பிட்டனர். பொதுவில், பௌத்த துறவிகள் மத்தியிலும் பெரும்பான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்த சில உள்ளூர்த் தலைவர்கள் மத்தியிலும் பல்வகைமை/சமயச் சுதந்திரம் பற்றிய வெற்றுப் பேச்சுக்கும் பொதுவாழ்வின் அனைத்து அம்சங்களிலும் சிங்கள பௌத்தத்தின் மேம்பாட்டினை வலுப்படுத்துவதற்கும் இடையில் குறிப்பிடத்தக்க அளவு பொருந்தாமை நிலவுவதை நாம் கண்டோம். இங்குள்ள உள்ளார்ந்த அடிப்படை என்னவெனில், சிறுபான்மையினர் கட்டாயம் கடக்கக்கூடாத எழுதப்படாத கோடு ஒன்று உள்ளது. இக்கோட்டினைப் பெரும்பான்மையினால் மட்டுமே தீர்மானிக்க முடியும் மேலும் பெரும்பான்மையினால் மட்டுமே இதனைக் காவல்காக்க முடியும். இந்த வகிபாத்திரத்தினதும் பொறுப்புக்களினதும் மீறல் பின்விளைவுகளுக்கு இட்டுச்செல்வதுடன் வன்முறையும் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்துவதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாக இருக்கின்ற அதேவேளை, பெரும்பான்மை -சிறுபான்மை உறவுகளுக்கென ஒதுக்கப்பட்ட அதிகாரப் படிநிலையமைப்பு மீறப்படுவதே இதற்கான மூல காரணமாக இன்னும் கருதப்படுகின்றது.

# அத்தியாயம் 1

## அறிமுகம்

இனத்துவ யுத்தத்தினை 2009 இல் முடிவுக்குக் கொண்டு வந்த 10 வருடப் பூர்த்தியினை 2019 மே மாதத்தில் இலங்கை கொண்டாடியது.இலங்கையின் பல சமுதாயங்களின் மத்தியில் ஏற்கனவே நலிவுற்றிருந்த உறவுகளைக் கீழறுத்து நாட்டின் அரச சேவைகள் மீதும் அரச நிறுவனங்களின் மீதும் தாக்கம் ஏற்படுத்துகின்ற ஒரு புதிய இயக்கத்தின் தோற்றத்தினை யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து வந்த வருடங்களில் இலங்கையின் அரசியல் சமூகம் கண்டது. பௌத்த துறவியின் தலைமையிலான பொதுபலசேனா அமைப்பினால் 2012 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான புதிய இயக்கம் பல பதிலிக் குழுக்கள் முஸ்லிம்களுக்கெதிரான செய்திகளை எடுத்தாண்டு அதனைப் பல்வேறு பெயர்களின் கீழ் பல்வேறு அவைகளில் பரப்பியது முதல் நிலைமாறியது. இலங்கை முஸ்லிம் சமுதாயத்தினை ஏனையவர்களாக்கும் தமது சித்தாந்தத்தினைப் பரப்புவதில் இந்தக் குழுக்கள் வெற்றிபெற்றன. இதனால் யுத்தம் முடிவடைந்ததில் இருந்து பத்து வருடங்களில் முஸ்லிம்களுக்கெதிரான பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

கண்டி மாவட்டத்தில் 2018 மார்ச் 3 முதல் 9 வரை இடம்பெற்ற முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையினை இந்த அறிக்கை ஆவணப்படுத்துகின்றது. யுத்தம் முடிவடைந்த பின் நாட்டில் சிங்கள பௌத்த அடையாளப்படுத்தப்பட்ட குழுக்களால் திட்டமிட்டு நடத்தப்பட்ட முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையில் இந்த நிகழ்வு நான்காவது பாரிய அளவிலான மிகப் பெரிய கலவரமாகும். நான்கு நிகழ்வுகள், அளுத்கம 2014, ஜிந்தோட்டை 2017, அம்பாறை 2018 மற்றும் கண்டி 2018 என்பனவாகும்.

கண்டிச் சம்பவங்கள் பலருக்கும் ஆச்சரியத்தினை ஏற்படுத்தியது. குறிப்பாக நாட்டின் முஸ்லிம் சமுதாயத்திற்கு இது அதிர்ச்சியினை ஏற்படுத்தியது. 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் முஸ்லிம் மக்கள் பெருமளவில் வாக்களித்திருந்தனர். ஆட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டதற்கும் ''பொது வேட்பாளரான'' மைத்திரிபால சிறிசேன வெற்றியடைந்தமைக்கும் முன்னைய ஆட்சியினை அகற்ற முஸ்லிம்கள் ஒன்று திரண்டு வாக்களித்தமையும் பங்களிப்பு வழங்கியதாகவே பார்க்கப்பட்டது. முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்தினால் முஸ்லிம்களின் வாழ்க்கை முறையும் வியாபாரங்களும் தொடர்ச்சியாக இலக்குவைக்கப்பட்டதை அவர்களால் நிறுத்தக்கூடிய ஒரு செயன்முறையாகவே நல்லாட்சி அரசாங்கத்தில் இலங்கை முஸ்லிம் சமுதாயங்களின் வாக்களிப்பு நோக்கப்பட்டது. எவ்வாறாயினும் திகன வன்முறையும் வன்முறை அச்சுறுத்தலின் தெளிவான அதிகரிப்பு நிலவியபோது அரசாங்கத்தின் மெத்தனமான பதிற்செயற்பாடுகளும் வன்முறை வெடித்த பின்னர் அதனை நிறுத்துவதற்கு அரசாங்கம் உருப்படியான நடவடிக்கைகளை எடுக்காமையும் நாட்டின் முஸ்லிம்களில் பலரின் மன உரத்தைக் கெடுத்தது. முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகள் தொடர்ந்தும் ஒரு காரணியாக இருந்தது என்பதற்கும் வன்முறை ஒரு சாத்தியமாக இருந்தது என்பதற்கும் பல அறிகுறிகள் காணப்பட்டன. ஜிந்தோட்டை மற்றும் அம்பாறை நிகழ்வுகள் ஏற்கனவே இடம்பெற்றிருந்தன. எவ்வாறாயினும், இந்தச் சம்பவங்கள் அவற்றின் தீவிரத்தின் அளவில் குறைவானவையாக இருந்ததுடன் கட்டுப்பாட்டிற்குள்ளும் கொண்டுவரப்பட்டன. வன்முறைகள் பல நாட்களாக நடைபெறுவதற்கு உள்ளூர் மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் அதிகாரத்திலுள்ள வெவ்வேறு சக்திகளின் சதிமுயற்சிகளின் மூலமாக நிகழ்வதற்கு அனுமதியளிக்கப்படவேண்டும் என்பதையே இவ்வாறான வன்முறை நிகழ்வுகளின் வரலாறு சுட்டிக்காட்டுகின்றது. வன்முறை இடம்பெறுவதை அனுமதிப்பவர்கள் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியிலும் கூட அதிகாரத்தில் இருந்தார்கள் என்பதையே திகனயிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் பல நாட்களாக நீடித்த வன்முறை சுட்டிக்காட்டுகின்றது. முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்திற்கு முன்னைய ஆட்சியின் அரசியலைக் காரணமாகக் குறிப்பிட முடியாது. முஸ்லிம்களுக்கெதிரான ''கலகம்'' அல்லது முஸ்லிம்களுக்கெதிரான ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறை என்பது நாட்டின் எதிர்வரக்கூடிய காலத்திற்கு ஒரு யதார்த்தமாக மாறியுள்ளது என்பது திடீரெனத் தெளிவானதாக மாறியிருக்கின்றது.

நிகழ்வுகள் நடந்த பின்னரான காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட களப் பணியினைத் தொடர்ந்து தொகுக்கப்பட்ட இந்த அறிக்கை பின்வருவனவற்றினை நிறைவேற்ற முயற்சிக்கும்.

- கும்பல் வன்முறை மேற்கொள்ளப்பட்டது வரையிலான நிகழ்வுகளை விபரித்தல்.
- வன்முறை நிகழ்ந்த வெவ்வேறு நாட்களின் போது நிகழ்ந்த நிகழ்வுகளை விளக்கல்.
- அகுரணை 8 ஆம் கட்டை பற்றிய சம்பவக் கற்கையினை வழங்கல் (வன்முறையின் பின்னர் உறவுகளில் ஏற்பட்ட முறிவு பற்றிய உதாரணம்)
- தற்போதைய சட்ட அமுலாக்கல் அதிகாரிகளின் பதில்கள் பற்றிய அவர்களின் விபரிப்பு.
- வன்முறை பற்றிக் குற்றம் நிகழ்த்தியவர்கள் குறிப்பிடுவதைப் பகுப்பாய்வு செய்தல்.

- வன்முறையின் பின்னர் தற்போதைய அரசியல்வாதிகளினதும் சிவில் சமூக அமைப்புக்களினதும் பதில்கள்.
- சம்பவம் நடைபெற்ற சில வாரங்களின் பின்னர் சம்பவம் பற்றிய செய்திப் பத்திரிகை விவரணங்களின் தொகுப்புப் பகுப்பாய்வினை வழங்குதல்

திகன சந்தையில் இருந்த வியாபரிகள் என்ன நடந்தது என்பது தொடர்பில் ஆச்சரியமடையவில்லை என்பதுடன் இவ்வாறான ஏதாவது மீண்டும் நடக்கும் என்ற உறுதியுடன் இருப்பதாகவே தென்பட்டது. கண்டியில் சம்பவங்கள் நடைபெற்ற பின்னர் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை என்பது எதிர்வரும் காலங்களில் ஒரு யதார்த்தமாகவே இருக்கும் என்பது சான்றாகத் தெரிந்தது. 9 முஸ்லிம் தீவிரவாதிகளால் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களும் அதனைத் தொடர்ந்து பொதுவாக முஸ்லிம்கள் குற்றப்பொறுப்புடையவர்கள் என்ற விபரிப்புக்கள் மக்களின் மனங்களில் விதைக்கப்பட்டமையும் இச்சாத்தியத்தினை மேலும் மோசமாக்கியுள்ளது.

2019 ஏப்ரில் 21 ஆம் திகதி இஸ்லாமியத் தீவிரவாதத் தற்கொலையாளிகள் நாட்டில் ஆறு இடங்களில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தியதில் 269 பேர் கொல்லப்பட்டதுடன் பலரின் வாழ்வும் சமுதாயங்களும் அழிக்கப்பட்டு நாட்டின் அரசியல் முற்று முழுவதும் நிலைமாற்றப்பட்டது. யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து நாட்டில் முனைப்பாகச் செயற்பட்ட இயக்கம் ஒன்றினால் பரப்பப்பட்ட முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளுக்கு எதிராக எதுவும் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் அது பலமான ஆதரவைப் பெற்றுக்கொண்டது. முஸ்லிம்களின் துரோகம் பற்றிய இயக்கத்தின் ஆரவாரப் பேச்சுக்கள் குண்டுவெடிப்பினைத் தொடர்ந்து தேசிய சொல்லாடல் மட்டத்திற்கு உயர்த்தப்பட்டன. பின்வரும் அறிக்கை குண்டு வெடிப்புகளுக்கு முன்னர் நடந்த முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைச் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இன்று முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்பு குண்டுவெடிப்புகளுக்கான பதிலடி என்ற ரீதியில் சாதாரணமாக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் பல சிங்களவர்களின் மத்தியில் இப்போது பிரபலமாக இருக்கும் உணர்வுக்கு ஆட்பட்ட நிலைக்கும் ஒரு தசாப்தகாலமாக முனைப்பாகப் பரப்பப்பட்டுவரும் முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்தினுள் உள்ள சிந்தனைக்கும் இடையில் தொடர்ச்சிகள் இருக்கின்றன என்பதைக் கவனத்திற்கொள்வது முக்கியமானதாகும். ஏப்ரில் குண்டுவெடிப்புகளுக்கு முன்னர் நடந்த அவ்வாறான பல சம்பவங்களின் ஓர் உதாரணம் திகனவில் நடந்த வன்முறையாகும். இது குண்டுவெடிப்புக்களுக்குச் சில வாரங்களின் பின்னர் குருணாகல் மாவட்டத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையினை ஒத்ததாகக் காணப்படுகின்றது. குண்டுதாரிகள் தீவிரவாதிகளாக மாறியமை அளுத்கம மற்றும் திகன வன்முறையுடன் தொடர்புடையது எனக் காரணங்கள் கூறப்படுகின்றன. எவ்வாறாயினும் குண்டுவெடிப்புக்கு முன்னரான முஸ்லிம்களுக்கெதிரான அணிதிரட்டல்களுக்கும் குண்டுவெடிப்புக்குப் பின்னரான முஸ்லிம்களுக்கெதிரான அணிதிரட்டல்களுக்கும் இடையிலான தொடர்ச்சியின் கூறுகள் குண்டுதாரிகளின் நோக்கத்துடன் மாத்திரம் தொடர்புபடுத்திப் பார்க்கும் இணைப்புக்குச் சுருக்கக்கூடியவை அல்ல. எனவே,திகன நிகழ்வுகளின் உள்ளார்ந்த காரணங்கள் மற்றும் அதன் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார விளைவுகள் 2019 ஏப்ரில் குண்டுவெடிப்புக்களில் இருந்து மீளும் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு முக்கியமானவையாகும் என நாம் நம்புகின்றோம். அளுத்கம மற்றுத் திகனவில் வன்முறைகளை உருவாக்கவென மக்கள் மனங்களில் விதைக்கப்பட்ட முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகள் மீண்டும் மீண்டும் நிகழும் பாங்கு என்பதுவும் அதற்குப் பல்வேறு மட்டங்களில் பதிற்செயற்பாடு தேவைப்படுகின்றது என்பதுவும் அங்கீகரிக்கப்படுவது அவசியம் என நாம் நம்புகின்றோம்.

**முறையியல்**

அறிக்கைக்கான ஆய்வு பல தொடரான கள விஜயங்களைக் கொண்டிருந்தது. இதன்போது பல்வேறு பங்கீடுபாட்டாளர்களுடன் நேர்காணல்கள் நடத்தப்பட்டன. அணிக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி பர்சானா ஹனீபா தலைமை தாங்கினார் (அனைத்து விஜயங்களிலும் கலந்துகொண்டார்). அணியில் கலாநிதி விஜயா ஜயதிலக்க (பேராதனைப் பல்கலைக்கழகம்), சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம (பேராதனைப் பல்கலைக்கழகம்), பேராசிரியர் சுமதி சிவமோகன் (பேராதனைப் பல்கலைக்கழகம்) மற்றும் பேராசிரியர் சாமளா குமார் (பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். பௌதிக வள உதவியும் தொழில்நுட்ப உதவியும் மெகரா டெகால் மற்றும் நைஜல் நுகவல உள்ளிட்ட லோ அன்ட் சொசைட்டி டிரஸ்டின் அணியினால் வழங்கப்பட்டது. களப் பணிகள் நஜா மொஹமட் மற்றும் ஹலீம் இஷாக்கினால் வசதிப்படுத்தப்பட்டன. மேலும் எமது பணிக்காக நாம் கண்டி அரசாங்க அதிபரின் உதவியினையும் பெற்றுக்கொண்டோம். கள நேர்காணல்களை நடத்துவதில் திகனவிலுள்ள அனர்த்த சேவைகள் மையம் எமது அணிக்கு உதவி வழங்கியது.

நான்கு மாதங்கள் நடத்தப்பட்ட (2018 மார்ச் முதல் ஜூலை வரை) இரண்டு நாட்கள் அடங்கிய 5 கள விஜயங்களின் மூலம் கண்டி மாவட்டத்தின் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நேர்காணல்கள் நடத்தப்பட்டன. நேர்காணல்கள் இரண்டு பள்ளிவாயல்களில் பள்ளிவாயல் நிர்வாக சபை மற்றும்

சமுதாயத் தலைவர்களுடன் நடத்தப்பட்டன. தனிப்பட்ட நேர்காணல்கள் பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளில் நடத்தப்பட்டன. 5 பௌத்த பிக்குகளுடன் விஹாரைகளிலும் நேர்காணல்கள் நடத்தப்பட்டன. இதில் இறந்த குமாரசிங்கவின் கிராமத்து பௌத்த பிக்குவும் உள்ளடங்குகின்றார். விசேட அதிரடிப் படையினரால் தாக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்ட எம். பாசில் மற்றும் ஏ.எஸ்.எம். பாசில் ஆகியோருடனும் நாம் நேர்காணல் நடத்தினோம். கண்டி, திகன மற்றும அக்குரணை ஆகிய இடங்களிலுள்ள பள்ளிவாயல் நிர்வாக சபையினருடனும் நாம் பேசினோம்.

கண்டி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலுக்கு மேலதிகமாக, கொழும்பில் REPPIA அலுவலகத்தில் (இழப்பீட்டுக்கான அலுவலகம்) சிரேஷ்ட அதிகாரிகளுடனும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடனும் நாம் நேர்காணல் நடத்தினோம். முஸ்லிம்களுக்கெதிரான அணிதிரட்டல் பற்றிய தற்போதைய ஆவணங்களை மீளாய்வு செய்வதற்காகவும் நிகழ்வு பற்றிய செய்திப் பத்திரிகைகளின் அறிக்கையிடல்களை மீண்டும் நோக்குவதற்காகவும் நிகழ்வு பற்றிய பல்வேறு அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூகச் செயற்படுனர்களின் கருத்துக்களின் பகுப்பாய்வினைப் பெறுவதற்காகவும் இரண்டாம் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அறிக்கையினை பர்சானா ஹனீபா எழுதியுள்ளார். இதற்கான உதவியினை மெகரா டெகால் வழங்கியுள்ளார். தொகுப்பு அறிக்கை ஒன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு 2018 ஆகஸ்ட் மாதத்தில் வழங்கப்பட்டது ((HRCSL), பார்க்க இணைப்பு 2). அறிக்கை தயாரிக்கப்படுகையில் அணி உறுப்பினர்களுடன் ஐந்து சுற்றுக் கலந்தாலோசிப்பு நடத்தப்பட்டது.

2018 மார்ச்சில் நடைபெற்ற நிகழ்வுகளை வேறு பல நிகழ்வுகள் பொதுப் புத்தியில் இருந்து மறைத்துவிட்ட நிலையில் 2018 மார்ச் நிகழ்வுகள் நடந்து இரண்டு வருடங்களின் பின்னர் இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது என்பதை நாம் மனவருத்தத்துடன் குறிப்பிட விரும்புகின்றோம். எவ்வாறாயினும், இந்த அறிக்கையானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களையும் பகுப்பாய்வுகளையும் கொண்டுள்ளதுடன் இன்றைய செயற்பாட்டியத்தினையும் கொள்கையினையும் இது பாதிக்கும் என நாம் உணர்கின்றோம். அறிக்கையானது திகன நிகழ்வுகளை அவற்றின் நடப்புப் பொருத்தப்பாட்டுக்கு அமைவாக சூழமைவாக்குகின்றது.

## அத்தியாயம் 2

## திகன, தெல்தெனிய மற்றும் அக்குரணை வன்முறை

### பின்புலம்: தேசிய மற்றும் உள்ளூர் அரசியல்ஈடுபாடு

முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளைப் பரப்பவும் வன்முறையினைத் தூண்டவும் 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்கள் காரணத் தொடர்புடையவையாக இருந்தது என திகன மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த எம்மோடு பேசியவர்கள் குறிப்பிட்டனர். 2015 ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தோற்கடிக்கப்பட்ட ராஜபக்ச அரசியல் பரம்பரை ‘‘மீண்டும் வரும்’’ சமிக்ஞையினை வழங்கிய காரணத்தினால் உள்ளூராட்சித் தேர்தல்கள் முக்கியமானவையாக அமைந்திருந்தன. ராஜபக்சவுடன் தொடர்புடைய பொது ஜன பெரமுன அல்லது மொட்டு(பொஹொட்டுவ) சின்னத்தில் போட்டியிட்டவர்கள் முன்னெப்பொழுதும் அடைந்திராத வெற்றியினைப் பெற்றுக்கொண்டனர். கிட்டத்தட்ட 350[5] உள்ளூராட்சி சபைகளில் அவர்கள் 222 சபைகளில் வெற்றிபெற்றனர். அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி 41 ஆசனங்களையும் ஜனாதிபதி சிறிசேனவின் தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 7 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன. வெளிப்படையாகவே சிறுபான்மையினருக்கு எதிரான கொள்கைகளையும் சிங்கள மேலாதிக்கக் கொள்கைகளையும் உருவாக்கிய முன்னைய அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தேர்தலின் மூலம் வலுப்படுத்தப்பட்டு அவர்கள் பெற்றுக்கொண்ட அங்கீகாரத்தின் பின்விளைவாக வன்முறை நோக்கப்பட்டது. பின்னர் கைதுசெய்யப்பட்டவர்களின் மத்தியில் புதிதாகத் தேர்வுசெய்யப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்கள் இருந்தனர். மேலும், பல பகுப்பாய்வாளர்களுக்கும் தேர்தலானது நாட்டின் அரசியல் ஒழுங்கமைப்புக்களில் ஒரு முக்கியமான பிறள்வினைக் குறித்தது. பிரதமருக்கு எதிராக ஜனாதிபதி நம்பிக்கையில்லாப் பிரேரணையினைக் கொண்டுவர முயற்சித்தார். பாராளுமன்ற உறுப்பினர் ராஜபக்ச புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இந்த வன்முறையானது ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நன்மையளித்தது என ஏனைய பகுப்பாய்வாளர்கள் (ஜேவிபியின் தலைவர் உள்ளிட்ட, அவரின் நிலைப்பாட்டினை பின்னைய அத்தியாயத்தில் நாம் வழங்குவோம்) வாதிட்டனர். பிரதமருக்கு எதிரான உத்தேச நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மீதிருந்த கவனத்தினை நிகழ்வு அகற்றியதுடன் பொருளாதாரத் தோல்வி போன்ற அரசின் தெளிவான தோல்விகளைத் தற்காலிகமாக மூடி மறைப்பதற்கும் அது உதவியது. எதிரான வியாபாரங்களை அழித்தமையினால் உள்ளூர்ச் சிங்கள வியாபாரச் சமுதாயமும் உள்ளூர் அரசியல் மேட்டுச் சமுதாயத்தினரும் நன்மையடைந்ததாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் கருதினர். தேர்தலின் பின்னர் கூட்டணி அரசாங்கம் பாரிய சீர்குலைவுக்குள்ளாகி முழு நாட்டினையும் ஸ்திரமற்றதாக்கியுள்ளது என இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹகீம் சுட்டிக் காட்டினார் (கீழே பார்க்க). இச்சீர்குலைவு வன்முறையினைக் கட்டுப்படுத்துவதில் தாக்கம் செலுத்தியிருப்பதைக் காணமுடியும் என ஹகீம் குறிப்பிட்டிருந்தார்.

பல்வேறு குழுக்களினால் மேற்கொள்ளப்படும் முஸ்லிம்களுக்கெதிரான போராட்டங்களுக்குக் கண்டி மாவட்டம் தொடர்ச்சியாக முகங்கொடுத்து வருகின்றது. பொது பலசேன அதன் பிரதான கூட்டங்களில் ஒன்றினைக் கண்டியில் 2013 பெப்ரவரியில் நடத்தியது. இக்கூட்டத்தில் உரையாற்றிய சங்கைக்குரிய ஞானசார தேரர், பொது பலசேனவினையும் முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்தில் பங்குபற்றும் அனைத்துச் சிங்களவர்களையும் பிரித்தானியர்களை எதிர்த்த கண்டிய ஆட்சிவமிச உறுப்பினர்களுடன் உணர்வுகளைத் தூண்டும் வகையில் ஒப்பிட்டதன் மூலம் முஸ்லிம்களும் பிரித்தானியக் காலணித்துவவாதிகள்[6] போன்று வெளியாட்கள் என மறைமுகமாகச் சுட்டிக் காட்டினார். பின்னர் 2013 ஒக்டோபரில் கொழும்பிலிருந்து கண்டிக்கு மோட்டார் வாகன பவனி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் பவனியின் மூலம் முன்னைய வருடத்தில்[7] கையாளப்பட்ட ஹலாலுக்கு எதிரான போராட்டத்திற்கு மீண்டும் உயிரூட்டப் போவதாக பொது பலசேனா அச்சுறுத்தியது. சில வருடங்களின் பின்னர் மஹசொன் பலகாய எனும் குழு தர்கா நகரில் அலுவலகங்களை நிறுவியது. பின்னர், மிக அண்மையில்,கண்டியிலுள்ள மிகப் பழமையான பள்ளிவாயல்களில் ஒன்றில் மினாரத் (கோபுரம்) ஒன்றினை அமைக்கும் முன்மொழிவு தொடர்பாகவும் சர்ச்சைகள் எழுப்பப்பட்டன. 2016 ஜூன் 5 ஆம் திகதி, உத்தேச மினாரத் தலதா

---

[5] 2017 இல் 341 இருந்தன.

[6] ஹனிபா, பர்சானா (2017) *முரண்பாட்டு மரபுரிமைகளும் பன்மைவாத வரலாறுகளும்: இலங்கையின் எதிர்காலத்திற்கான சாத்தியங்கள் என்ன?* இலங்கையில் இடைமாற்ற நீதியில் இலங்கை: வாக்குறுதிகளுக்குஅப்பால் நகர்தல், வெளியீட்டுக்காகத் தயார்படுத்தியவர், பவானி பொன்சேகா, கொழும்பு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

[7] ‘‘பிபிஎஸ் ஹலாலுக்கெதிரான பிரச்சாரத்தினை மீண்டும் ஆரம்பிக்கின்றது” *டெய்லி பினான்சியல் டைம்ஸ்,* 23 ஒக்டோபர் 2013. http://www.ft.lk/news/bbs-re-launches-anti-halal-campaign/56-204356

மாளிகையை[8] விட உயரமானதாக இருக்கும் எனக் கூறி மலே இராணுவப் பள்ளிவாயலுக்கு எதிரே போராட்டம் நடைபெற்றது. கண்டியில் பொது பலசேனா மிக முனைப்பாகச் செயற்பட்ட போது, பிரதேசத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்துமாறு கோரி உள்ளூர் முஸ்லிம்கள் பல்வேறு அதிகாரிகளைச் சந்தித்தனர். இந்தச் செயற்பாடுகள் கண்டியிலுள்ள முஸ்லிம்களுக்கு ஓர் எச்சரிக்கை எனக் குறிப்பிட்டு அவர்கள் பிரதிப் பொலிஸ் மாஅதிபரையும் ஆளுநரையும் முதலமைச்சரையும் சந்தித்தனர். அதிகாரிகள் இவற்றினைக் கருத்திற் கொள்ளாது, பின்னோக்கிப் பார்க்கையில் தவிர்கமுடியாததாகத் தோன்றிய, வன்முறையினைத் தடுக்க எவ்வித காத்திரமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. வன்முறையின் பின்னர் இவ்வாறான பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறும் என எம்முடன் பேசிய முஸ்லிம்கள் உணர்ந்தனர்[9].

**அமித் வீரசிங்கவும் மஹசொன் பலகாயவும்**

அமித் வீரசிங்கவினாலும் அவரை இயக்கியதாகக் குற்றஞ்சாட்டப்படும் உள்ளூர் அரசியல்வாதி ஒருவரினாலும் நடத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான குழுவான மஹசொன் பலகாய முன்பு குறிப்பிடப்பட்டதைப் போல் கண்டி மாவட்டத்திலும் திகன தெல்தெனியவிலும் நிறுவப்பட்டது. சிங்களப் புராணத்தில் வரும் பிசாசான மஹசொனின் பெயரைக் கொண்டுள்ள மஹசொன் பலகாய உறுப்பினர்கள் தாம் புத்தரின் பிரசங்கத்தினைக் கேட்டு அல்லது போதனையைக் கேட்டு சாதுவானவர்கள் எனத் தம்மை அழைக்கின்றனர் *(நாங்கள் புத்தரின் பிரசங்கம் கேட்டு வசப்பட்ட பிசாசுக் கூட்டம்).* சிங்கள இளைஞர்களைச் சிறுபான்மையினருக்கு எதிராக அணிதிரட்டுவதை நோக்கமாகக் கொண்டு அவர்களை ஆயுதமேந்துமாறு கோரும் இவர்களின் அழைப்பினை முக நூலிலும் எண்ணற்ற யு டியுப் வீடியோக்களிலும் காணலாம்.

வன்முறை நடப்பதற்குப் பல வருடங்களுக்கு முன்னர் திகனவில் வீரசிங்கவைக் காட்டும் வீடியோ சமூக ஊடகங்களில் மிகப் பரவலாக வலம் வந்ததுடன் திகனவில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களால் இது மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டது. திகன நகரத்தில் நடந்து சென்று மஹசொன் பலகாய துண்டுப் பிரசுரங்களை வீரசிங்க விநியோகிக்கும் காட்சி அந்த வீடியோ காட்சியில் காணப்பட்டது. துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கச் சிங்களவர்களுக்குச் சொந்தமான இருபது கடைகளைக் கூடக் காண முடியவில்லை என்றும் அனேகமாக எல்லாக் கடைகளுமே முஸ்லிம்களுக்குச் சொந்தமானவையாகவே உள்ளன என்றும் வீரசிங்க கூறுவது வீடியோவில் பதிவாகியுள்ளது. "இந்த இடம் பறிபோய் விட்டது" என அவர் வீடியோவில் கூறுவது இடம்பெற்றுள்ளது. இன்னொரு வீடியோவில்[10], வர்த்தகர்களிடம் சிங்கள வியாபாரங்களை எவ்வாறு அவர்களின் நகரங்களில் பாதுகாக்கலாம் என்பதை அவர்களைக் கண்டறியுமாறு அவர்களிடம் வீரசிங்க வேண்டுகோள் விடுப்பதைக் காணலாம். வன்முறைக்கும் இந்த வீடியோவிற்கும் இடையில் ஓர் இணைப்பு இருப்பதை திகனவில் உள்ள முஸ்லிம்கள் பார்த்தனர். அமித் வீரசிங்க ஏப்ரல் மாதம் கைதுசெய்யப்பட்டு ICCPR சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுப் பல மாதங்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். ஏப்ரல் மாதத்தில் அவருக்கு வழக்கு விசாரணையின் போது பிணை மறுக்கப்பட்டது. ஆனால் 2018 ஒக்டோபரில் 25,000 ரூபா காசுப் பிணையிலும் 50,000 ரூபா சரீரப் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். திரும்பி வந்த வீரசிங்கவுக்கு திகன நகரத்தில் வைபவ ரீதியான வரவேற்பு வழங்கப்பட்டது.

2018 ஜூன் மாதத்தில் கொழும்பு டெலிகிராப் வெளியிட்ட வீடியோ ஒன்றில் பொது பலசேனாவின் செயலாளரான சங்கைக்குரிய ஞானசார தேரர் என அடையாளம் காணப்படக்கூடிய ஒருவரும் மஹசொன் பலகாயவின் தலைவரான அமித் வீரசிங்க என அடையாளம் காணப்படக்கூடிய ஒருவரும் இளைஞர்களும் நடுத்தர வயது ஆண்களும் அடங்கிய பெரும் கூட்டத்தினர் மத்தியில் முஸ்லிம் சமுதாயத்தினரைத் தாக்குவது தொடர்பான நுட்பங்களைப் பற்றிக் கலந்துரையாடுவதைக் காணக்கூடியதாக இருந்தது.முஸ்லிம்களைத் "தாக்குவது" தொடர்பிலேயே கலந்துரையாடல் அமைந்திருந்தது[11]. அவர்கள் இருந்த இடத்தில் (அம்பாறை) மேலதிக தாக்குதல்களை நடத்துவதற்காகக் கூட்டத்தினரையும் ஞானசாரவையும் தூண்டுவதற்கு அமித் வீரசிங்க முயற்சிப்பதை வீடியோவில் காண முடிந்தது. அவ்வாறான ஒரு முயற்சியினை ஒழுங்குசெய்வது

---

[8]மாஸ். எல். யூசுப், "கண்டியில் மலாய் இராணுவப் பள்ளிவாயலின் முன் ஆர்ப்பாட்டம்" *கொழும்பு டெலிகிராப்,* ஜூன் 9, 2016. https://www.colombotelegraph.com/index.php/protest-opposite-the-malay-military-mosque-in-kandy/

[9]உதாரணமாகப் பார்க்க, இந்த அறிக்கையில் தொகுத்து வழங்கப்பட்டுள்ள ஜேவிபி தலைவர் அனுர குமார திசநாயகவின் பகுப்பாய்வு மற்றும் பின்வரும் முகவரியில் பார்க்கக்கூடிய வலைப் பதிவாளரான இந்தி சமரஜீவவின் பதிவு https://medium.com/@indica/riots-will-happen-again-in-srilanka-a12510823a1d

[10]சஹீனா ரசீட், "இலங்கையில், வெறுப்புப் பேச்சும் சட்டக் காப்பும் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைக்குத் தீ மூட்டுகின்றன" அல் ஜசீரா, 13 மார்ச் 2018 https://www.aljazeera.com/news/2018/3/13/in-sri-lanka-hate-speech-and-impunity-fuel-anti-muslim-violence

[11]"பிரத்தியேகமானது: மஹசோன் பலகாயத் தலைவர் பிபிஎஸ் ஞானசாரவுடன் சேர்ந்து முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல்களைத் திட்டமிடுவது வீடியோவில் தெரியவந்துள்ளது," *கொழும்பு டெலிகிராப், 7 மார்ச், 2018*

மற்றும் அதற்கு நிதியுதவியளிப்பது (கூட்டத்திற்கு உணவுப் பார்சல்களை வழங்குமாறு அம்பாறை வியாபாரிகளிடம் வேண்டுகோள் விடுப்பது) தொடர்பிலான சாத்தியங்களையும் சிரமங்களையும் அவர்கள் கலந்துரையாடுவதைக் காண முடிந்ததுடன் அவ்வாறான வேலையினைச் செய்யும்போது பொலிஸாரினால் பிடிபடும் சாத்தியம் பற்றியும் அவர்கள் கலந்துரையாடுவதைக் காண முடிந்தது. பொலிஸார் கண்ணீர்ப் புகையினைப் பயன்படுத்துவதற்கான சாத்தியம் பற்றியும் அதனால் தங்களின் குழுவினர் அகப்படும் சாத்தியம் அதிகமானது எனவும் அதனால் பிடிபடுபவர்களுக்கு உதவிசெய்து அவர்களுக்குப் பிணையும் சரீரப் பிணையும் வழங்குவது கடினமானதாக இருக்கலாம் என வீரசிங்க குறிப்பிடுகின்றார். அவர்கள் இப்போதைக்கு விலகியிருக்க வேண்டும் எனவும் அவர் கூறுகின்றார். ''*கண்டியில் அல்லது வேறு எங்காவது ஓரிடத்தில் தாக்குதல் நடத்துவோம்*'' என அவர் கூறுவதைக் கேட்க முடிகின்றது[12]. தாக்குதல் நடத்தப்பட்ட சில வாரங்களின் பின்னர் மஹசொன் பலகாயவின் தடத்தினைச் சான்றாகக் காண முடிந்தது. தாக்குதல் நடத்தப்பட்டு சுமார் 4 மாதங்களின் பின்னர் நாம் மக்களுடன் பேசுகையில், நிலவுகின்ற அவநம்பிக்கை மிக்க சூழல் பற்றியும் பாதுகாப்பற்ற உணர்வுகள் பற்றியும் எம்மிடம் கூறப்பட்டது. ஒரு குடும்பத்திற்கு மரண அச்சுறுத்தல் விடுத்து எழுதப்பட்ட ஒரு குறிப்பினையும் அவர்கள் எம்மிடம் காட்டினர். அக்குறிப்பில் *நாம் பிசாசுகள் (அபி யக்கு)* என எழுதப்பட்டிருந்தது.

**தூண்டிய நிகழ்வும் சமுதாய பதிற்செயற்பாடுகளும்**

கண்டி மாவட்டத்தின் அம்பல நகரத்தினை வதிவிடமாகக் கொண்ட குமாரசிங்க அவரது வீட்டில் இருந்து 25 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள திகன மஹாவலி நகரத்தில் உள்ள எரிபொருள் நிலையத்தில் குடிபோதையில் இருந்த நான்கு முஸ்லிம் இளைஞர்களுடன் ஏற்பட்ட கைகலப்பில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக 2018 மார்ச் 3 ஆம் திகதி இறந்தார். குடிபோதையில் முச்சக்கர வண்டியில் பயணித்த நான்கு முஸ்லிம் இளைஞர்கள் குமாரசிங்கவின் வேனை முந்திச் செல்ல முயற்சித்தபோது அவர்களுக்கு வழி கிடைக்காத காரணத்தினால் ஆத்திரமுற்றனர். இந்தக் கைகலப்பு குமாரசிங்க இறப்பதற்கு 9 நாட்களுக்கு முன்னர் நடைபெற்றது.

நாடு முழுவதும் முஸ்லிம்களுக்கெதிரான பதற்றம் நிலவிவந்த சூழமைவிலேயே குமாரசிங்கவின் மரணம் நடந்தது.கைகலப்பு நிகழ்ந்த நாள் முதல் சமூக ஊடகங்களில் முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புப் பேச்சுக்கள் வலுப்பெற்று வந்தன. குமாரசிங்கவின் மரணத்திற்குச் சில நாட்களின் முன்னர் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை நகரத்தில் ஒரு கலகம் ஏற்பட்டது. அம்பாறை நகரிலுள்ள உணவகம் ஒன்றின் உரிமையாளர் சிங்கள வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் உணவில் இனப்பெருக்க ஆற்றலை அழிக்கும் மாத்திரைகளைச் சேர்ப்பதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. குறிப்பிட்ட வாடிக்கையாளர் அவரின் நண்பர்களுடன் சேர்ந்து உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தி, உணவகத்தினைச் சேதப்படுத்தி அதற்கு தீ வைத்தனர். கும்பல் பெருகி பள்ளிவாயலைச் சேதப்படுத்தி அவ்விடத்தில் இருந்த நான்கு கடைகளையும் பல வாகனங்களையும் அன்றிரவு சேதப்படுத்தியது[13]. இந்தச் சம்பவம் 2018 பெப்ரவரி 26 ஆம் திகதி நடைபெற்றது. இதற்கு முந்தைய வருடத்தில் இருந்து இப்பிரதேசத்தில் பதற்றம் உருவாகி வந்திருக்கின்றது. இதற்கான காரணம் முஸ்லிம்கள் இஸ்லாத்திற்கு மதமாற்றம் செய்வதற்காக மக்களை பலவந்தப்படுத்துகின்றனர் என்றும் பௌத்த புராணத் தலங்களை நாசப்படுத்திவருகின்றனர்[14] என்றும் சில கடும்போக்கு பௌத்தக் குழுக்கள் முஸ்லிம்கள் மீது குற்றஞ்சாட்டி வந்தன. செவ்வாய்க்கிழமை (27 பெப்ரவரி), அமைச்சரவைக் கூட்டத்தின் போது, அமைச்சர் ரவூப் ஹகீம், மனோ கனேசன், தயா கமகே மற்றும் ரிசாத் பதியுதீன் ஆகியோர் அம்பாறையில் இன வன்முறைக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தினை வேண்டினர்[15]. அம்பாறை நகரில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டு அவர்களின் சொத்துக்கள் கும்பல்களினால் நாசமாக்கப்பட்ட பின்னர் இலங்கையில் நிலவும் சூழ்நிலை தொடர்பாக இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பு ஆழமான கரிசனைகளை வெளியிட்டுள்ளதாக சவூதி பிரெஸ் ஏஜன்சி

[12]இந்த வீடியோக் காட்சி கொழும்பு டெலிகிராபினால் 2018 ஜுன் 16 இல் வெளியிடப்பட்டது. தெளிவற்றதும் திகதியிடப்படாததும் கற்பித்துச் சொல்லாததுமான இவ்வகையான வீடியோவினை எவ்வளவு முக்கியமானதாகக் கருத முடியும் என்பது தெளிவற்றதாகும். ஆனால் இக்கூட்டத்தில் கூடியுள்ள இளம் சிங்களவர்களின் வயது 30 இனை விடக் குறைந்தது என்பதையும் ஞானசாரவும் அமித் வீரசிங்கவும் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையினைத் தூண்டும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் அவர்கள் தங்கள் திட்டத்திற்கு நிதியினைப் பெற வியாபாரிகளைச் சார்ந்துள்ளனர் என்பதையும் இந்த வீடியோ குறைந்த பட்சம் தெரியப்படுத்துகின்றது. இந்த வீடியோக் காட்சி 2015 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டது என்பது பின்னர் கண்டறியப்பட்டது.

[13]''அம்பாறையில் பள்ளிவாயல் நாசமாக்கப்பட்டது''*அல்ஜசீரா,* 27 பெப்ரவரி 2018
https://www.aljazeera.com/news/2018/02/mosque-vandalized-sri-lanka-ampara-180227144548660.html

[14] ''அம்பாறையில் பள்ளிவாயல் நாசமாக்கப்பட்டது'', அல்ஜசீரா, 27 பெப்ரவரி 2018
https://www.aljazeera.com/news/2018/02/mosquevandalized- sri-lanka-ampara-180227144548660.html

[15]கெளும் பண்டார,''நான்கு அமைச்சர்கள் அம்பாறை வன்முறைக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை'' *டெய்லி மிரர்*,
http://www.dailymirror.lk/article/Four-Ministers-want-action-against-Ampara-violence-146600.html

செய்தி வெளியிட்டிருந்தது.[16] சுமார் ஒரு வாரத்தின் பின்னர் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜயசிங்ஹ வெளியிட்ட அறிக்கையில் இனப்பெருக்கத் தடை மாத்திரை பயன்படுத்தப்பட்டமை ஒரு பொய்க் கதை என்றும் சத்திரசிகிச்சையின் மூலம் மாத்திரமே அதனைத் தடை செய்ய முடியும் என்பதையும் பொதுமக்களுக்கு வலியுறுத்தியிருந்தார்.[17] கண்டி மாவட்டத்தில் பதற்றம் உருவாகி வந்தவேளை பிரதமரும் சட்டம் மற்றும் பொது ஒழுங்கு அமைச்சருமான ரனில் விக்கிரமசிங்ஹ, பொலிஸினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப அறிக்கை பூர்த்தியற்றதாக இருப்பதனால் கிழக்கு மாகாணச் சம்பவத்தினை விசாரிக்குமாறு கட்டளையிட்டார்.[18]

இலங்கையில் இன வன்முறைச் சம்பவங்கள் நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளன.முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை நிகழ்வின் ஓரங்கமாக இருக்கும் திகன சம்பவங்கள் அவ்வாறான ஒரு வரலாற்றின் பகுதியாகவே அடையாளம் காணப்படவேண்டும். இவ்வாறான சம்பவங்களில் வன்முறையினைத் தொடர்புபடுத்தக்கூடிய ஒரு பொதுவான தூண்டல் நிகழ்வு காணப்படும். அளுத்கமையில் 2014 ஆம் ஆண்டு வேனில் சென்ற பௌத்த துறவி செல்லும் வழியினை முச்சக்கர வண்டியில் சென்ற முஸ்லிம் இளைஞர்களின் குழுவொன்று மறித்ததால் ஏற்பட்ட கைகலப்பே தூண்டல் சம்பவமாகும். திகன, தெல்தெனியவில் தனது உயிரினைக் கடைசியில் இழந்த குமாரசிங்கவின் மீதான தாக்குதலே தூண்டல் சம்பவமாகும். நிகழ்வுக்கு முன்னதாக இவ்வாறான தூண்டல் சம்பவங்களைத் தேடுவதற்கு அல்லது உருவாக்குவதற்குக் குழப்பம் விளைவிப்போர் முயற்சித்தமைக்கான சான்றும் உள்ளது. *மலட்டுத்தன்மையினை* (*வந்த பெத்தி*) உருவாக்கும் மருந்தினை அம்பாறை உணவகத்தில் வழங்கப்பட்ட உணவில் கண்டுபிடித்தமை என்ற பிரச்சினை திகன சம்பவத்திற்கான பீடிகை ஆகும். 2014 இல் அளுத்கமையில் கலகம் ஏற்பட முன்னர் இதேபோன்ற தூண்டல் சாத்தியமிக்க சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. சிங்கள வாடிக்கையாளர் ஒருவரின் பிள்ளையின் அங்கத்தினைத் தகாத முறையில் தடவினார் என முஸ்லிம் கடைக்காரர் ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டமையே அச்சம்பவமாகும். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பாரிய கூட்டம் ஒன்று கடையின் முன் திரண்டு பின்பு கடை எரிக்கப்பட்டது. பாரிய சம்பவம் நிகழ்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே மேற்குறிப்பிட்ட இச்சம்பவம் இடம்பெற்றது. பொது பலசேனாவின் செயலாளரான சங்கைக்குரிய கலபொடத்தே ஞானசார கூட்டத்தின் உணர்வுகளைத் தூண்டுவதற்காக[19] ஆத்திரமூட்டும் உரையினை ஆற்றிய பின்னரே அளுத்கமையில் பாரிய கலவரம் வெடித்தது.

அளுத்கமை மற்றும் தெல்தெனிய ஆகிய இடங்களில் வன்முறை வெடிப்பதைத் தணிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பதற்றங்களுக்கு மத்தியில் அளுத்கமையில் முஸ்லிம் செயற்பாட்டாளர்கள் உள்ளூர்ப் பொலிஸாரையும் கொழும்பிலுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரையும் சந்தித்து முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளைத் தூண்டுவதில் பெயர் பெற்ற சங்கைக்குரிய ஞானசாரவின் தலைமையில் நடத்தப்படத் திட்டமிடப்பட்டிருந்த கூட்டத்தினை இரத்துச் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் தமக்கு ''மேலிடத்தில்'' இருந்து கூட்டத்தினை நடத்த அனுமதி வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறி கோரிக்கையினை ஏற்க மறுத்துவிட்டனர். (தனிப்பட்ட தொடர்பாடல், பதியுதீன் ஹாஜியார், பிரதேச சபை உறுப்பினர், தர்ஹா நகர்). பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுள்ளதால் வன்முறை தடுக்கப்படும் என்ற உத்தரவாதம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. எனினும் வன்முறை நடந்தேறியது.

குமாரசிங்கவுக்கும் முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து திகன மற்றும் தெல்தெனியவில் பதற்றம் உருவாகத் தொடங்கியது. குமாரசிங்க வைத்தியசாலையில் கோமாவில் இருந்தபோது இப்பதற்றம் தீவிரமடையத் தொடங்கியது. அதிகரித்து வரும் பதற்றம் தொடர்பாக என்ன செய்யப்படவேண்டும் என பொலிஸாருக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் அம்பல விஹாரையின் பௌத்த பிக்குவுக்கும் இடையில் இச்சந்தர்ப்பத்தில் பல

---

[16]''இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல்கள் தொடர்பில் OIC கரிசனைகளை எழுப்பியுள்ளது'' சவூதி கெசட், 2 மார்ச் 2018
http://saudigazette.com.sa/article/529535/SAUDI-ARABIA/OIC-voices-concern-over-attacks-against-Muslimsin-Sri-Lanka

[17] "மேற்கத்தேய மருத்துவத்தில் மலட்டுத்தன்மையினை ஏற்படுத்தும் வில்லைகள் இல்லை: சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்,'' டெய்லி மிரர், 4 மார்ச் 2018
http://www.dailymirror.lk/article/No-infertility-tablets-in-western-medicine-Health-DG-146732.html

[18]யொஹான் பெரெரா, ''அம்பாறை சம்பவத்தினை விசாரிக்குமாறு பிரதமர் உத்தரவு'',*டெய்லி மிரர்*,4 மார்ச் 2018
http://www.dailymirror.lk/146738/PM-orders-to-probe-Ampara-incident

[19]பர்சானா ஹனிபா மற்றும் ஏனையோர்,*அயலவர்கள் எல்லோரும் எங்கே போய்விட்டனர்? அளுத்கமை கலவரமும் அதற்குப் பின்னர் நடந்தவையும்: அளுத்கமை தர்கா நகரில் உண்மையைக் கண்டறிவதற்கான பணி, வெலிப்பன்ன மற்றும் பேருவளை.* https://lstlanka.org/wp-content/uploads/2017/11/aluthgama-report-final-english.pdf. சட்டத்திற்கும் சமூகத்துக்குமான அறநிலையம் 2014, https://lstlanka.org/wpcontent/

கூட்டங்களும் கலந்துரையாடல்களும் நடைபெற்றன. குமாரசிங்க இறந்த செய்தி வெளியானதும், தவிர்க்க முடியாதது போலத் தென்பட்ட வன்முறை வெடிப்பினைத் தணிக்க ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. தெல்தெனியவில் அம்பலவில் நடைபெற்ற கூட்டத்தில் கண்டிப் பிரதிப் பொலிஸ் மாஅதிபர், தெல்தெனியவிலுள்ள பெரகெடிய விஹாரையின் உபாலி ஞானிஸ்சர ஹிமி மற்றும் தெல்தெனிய பொலிஸின் தலைமையக ஆய்வாளர் ஆகியோர் பங்குபற்றினர். கண்டி மற்றும் திகன முஸ்லிம்களின் பிரதிநிதிகளுள் பிரதேச சபை உறுப்பினரான பாசில் (கீழே பார்க்க), கண்டி பள்ளிவாயல் சம்மேளனத்தின் தலைவரும் திகன பள்ளிவாயல் சம்மேளனத் தவைருமான சித்தீக் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.


குமாரசிங்கவின் குடும்பத்திற்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும் எனக் கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது. குமாரசிங்கவின் மனைவியின் தகைமைக்கேற்ப அவருக்குத் தொழில் பெற்றுக் கொடுக்கப் பிரதேச சபை உறுப்பினர்கள் முயற்சிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. குடும்பத்திற்கு 15 லட்சம் ரூபாவினை வழங்கப் பள்ளிவாயல் தீர்மானித்துள்ளது எனவும் அதில் 2 லட்சம் ரூபா ஈமச்சடங்குச் செலவுகளுக்காக உடனடியாக வழங்கப்படும் எனவும் திரு சித்தீக் தெரிவித்தார். அம்பாறையில் ஆரம்பத்தில் கைகலப்பு நடைபெற்ற கடைகளும் அதனை அண்டியுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகளும் எரிக்கப்பட்ட வன்முறை போன்று அம்பலவில் நடப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என உள்ளூர்ப் பௌத்த பிக்கு குறிப்பிட்டார். வன்முறை வெடித்தபோது குமாரசிங்கவின் அயலவர்களான பிரதேசத்திலுள்ள 26 முஸ்லிம் குடும்பங்கள் தீங்கின்றிப் பாதுகாக்கப்பட்டனர்.

பௌத்த பிக்குவும் முஸ்லிம் சமுதாயங்களின் உறுப்பினர்களும் உள்ளூர்ப் பொலிஸாரும் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கவையாகும். குமாரசிங்க மீதான தாக்குதல் நடந்ததைத் தொடர்ந்து அவர்கள் சில நாட்களாகச் சந்திப்புக்களை மேற்கொண்டு வந்ததுடன் நாட்டில் உருவாகிவரும் பதற்றம் பற்றியும் குமாரசிங்கவின் மீதான தாக்குதல் பிரதேசத்தில் ஓர் இனப் பிரச்சினையாக மாற்றப்படுகின்றது என்பது பற்றியும் அவர்கள் அறிந்திருந்தனர். சம்பவமும் குமாரசிங்கவின் மரணமும் குமாரசிங்க வாழ்ந்த சமுதாயத்திற்கு அப்பால் பரவிவிட்ட முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளைத் தூண்டுவதற்கான பிரச்சாரமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன என்பது இச்சந்தர்ப்பத்தில் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். இவ்வாறான பிரச்சார உருவாக்கத்தினை அளுத்கமை பௌத்த துறவியின் சம்பவத்திலும் சான்றாகக் காணக்கூடியதாக இருந்தது. குமாரசிங்கவின் மீதான தாக்குதலுக்கும் (23 பெப்ரவரி) அவரின் இறப்புக்கும் (3 மார்ச்) இடையிலான காலப்பகுதியின் போது, உருவாகிவந்த பதற்றத்திற்கு மத்தியிலும் சமுதாயக் குழு தொடர்ந்தும் தொடர்பாடி வந்தது. குமாரசிங்கவின் கிராமத்தினைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் வன்முறையினைத் தடுப்பதில் குழுவினர் வெற்றி பெற்ற போதிலும் பரந்த அளவிலான வன்முறைப் பரவலைக் குழுவினால் தடுக்க முடியவில்லை. இவ்வாறான சூழமைவில் வன்முறை வெடிப்பதைத் தணிப்பது பற்றி உள்ளூர்ச் சமுதாயத் தலைவர்களின் தோல்வியுற்ற இடையீடுகள் எதனை உணர்த்தி நிற்கின்றன என்பதை உன்னிப்பாக அவதானிப்பது சுவாரஸ்யமானதும் மன உளைச்சலை ஏற்படுத்துகின்றதுமாகும். அளுத்கமையில் நடந்தது போலல்லாது, உள்ளூர்ச் சமுதாயத் தலைவர்களும் பொலிஸாரும் வன்முறை ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்த மிகவும் முனைப்புடன் செயற்பட்டனர். இருப்பினும், இவ்வாறான அனைத்து நடவடிக்கைகளையும் தாண்டி வன்முறை நிகழ்ந்துள்ளது என்பது அறிந்துகொள்ளப்பட வேண்டும். இந்த நிகழ்வில் இருந்து தெளிவாகும் விடயம் என்னவெனில், இனரீதியானதாக மாற்றப்பட்டஇவ்வாறான மோதல்களினால், தூண்டல் நிகழ்வுகளினால்,உண்மையாகப் பாதிக்கப்பட்ட சமுதாய உறுப்பினர்களின் மத்தியில் மாத்திரம் வெறுமனே இடையீடு மேற்கொள்வது போதாது என்பதேயாகும்.குமாரசிங்கவின் வீட்டினைச் சுற்றியுள்ள அயல் பகுதிகளில் வன்முறை இடம்பெறாமலும் அவரின் முஸ்லிம் அயலவர்கள் பாதிக்கப்படாமலும் காப்பாற்றப்பட்ட அதேவேளை, பரந்த அளவில் தெல்தெனியவும் திகனவும் (குமாரசிங்கவுக்கும் குடிகார முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையில் கைகலப்பு நடந்த இடம்) - உதாரணமாக அக்குரணை போன்ற - சம்பவத்துடன் சம்பந்தப்படாத இடங்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

பிரதேசத்திலுள்ள சக முஸ்லிம்களின் நடவடிக்கைகளினால் ஏற்பட்ட விளைவினைத் தணிப்பதற்கான பொறுப்பினை ஏற்று அதற்கான முன்னெடுப்பினைக் கண்டி மற்றும் திகன பள்ளிவாயல் நிர்வாக சபை பிரதிநிதிகளும் பிரதேசத்தின் முஸ்லிம் பிரதேச சபை உறுப்பினர்களும் மேற்கொண்டனர். இவ்வாறான சம்பவங்கள் வன்முறையாக மாறுகின்ற சாத்தியத்தினைக் கொண்ட ஒரு சூழமைவில்,உள்ளூர் முஸ்லிம் தலைமைத்துவம் பொதுவாக இவ்வாறுதான் இடையீடு மேற்கொள்கின்றது. இவ்வாறான முயற்சிகள் பாராட்டத்தக்கவையாக இருக்கின்ற அதேவேளை, தமது சில உறுப்பினர்களின் நடவடிக்கைக்கான பதிற்செயற்பாட்டில் அரசினைச் சம்பந்தப்படுத்தாது நிதி ரீதியான பொறுப்பினை ஏற்குமாறு உள்ளூர் முஸ்லிம் சமுதாயத்தினைக் கோரிய செயல் அபூர்வமானது என்பதுடன் மன உளைச்சலை ஏற்படுத்தும் ஓர் முன்னுதாரணத்தினையும் இது உருவாக்குகின்றது. சட்டம் மற்றும் ஒழுங்கிற்கான பொறிமுறைகள் அவை எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்து அதிகார அமைப்புக்களின் சார்பில் மத்தியஸ்தம் செய்யவேண்டியதை வலியுறுத்தாது, பரிகாரத்திற்காக நிதிப் பங்களிப்பினை வழங்குமாறு முஸ்லிம் சமுதாயத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குமாரசிங்க இறந்த இரவு, சங்கைக்குரிய ஞானசாரரும் நன்கறியப்பட்ட முஸ்லிம் எதிர்ப்பாளரும் நவ சிங்களே இயக்கத்தின் தலைவருமான டான் பிரியசாத்தும் மஹசொன் பலகாயவின் தலைவரான அமித் வீரசிங்கவும் மட்டக்களப்பு மங்களராமய விஹாராதிபதி அம்பிடியே சுமனரத்ன தேரரும் மரண வீட்டிற்குச் சென்றிருந்தனர். அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் அப்பிரதேசத்தில் பல தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வியாபாரங்களில் ஒன்றான எம்.கே.எம் குரோசரி தாக்கி அழிக்கப்பட்டது. பதற்றம் உருவாகத் தொடங்கியதும் தெல்தெனியவில் இறுதிக்கிரியை நடத்தப்படுவதைத் தடுப்பதற்கான நீதிமன்ற உத்தரவினைப் பெறப் பொலிஸார் தலையிட்டனர். இதனால், குமாரசிங்கவின் சொந்தக் கிராமமான அம்பலவுக்கு வெளியே பகிரங்கமாக ஈமச்சடங்கு ஊர்வலம் நடத்தப்படவில்லை. பகிரங்கமாக ஊர்வலம் நடத்துவதற்குச் சடலத்தினை விடுவிக்குமாறு பிரதேசத்தினைச் சேர்ந்த இளைஞர்கள் தன்னிடம் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்ததாகவும் தான் அதனை மறுத்துவிட்டதாகவும் சங்கைக்குரிய உபாலி ஞானிஸ்சர (குமாரசிங்கவின் கிராமத்தின் பெரகெடிய விஹாரையினைச் சேர்ந்தவர்) பின்னர் எங்களிடம் குறிப்பிட்டார். ஈமச்சடங்கிற்காகக் குடும்பத்தினரிடம் பணத்தினை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் பணத்தினைக் கையளிக்க ஈமச்சடங்கு மண்டபத்திற்குச் சென்ற நபர்கள் (முஸ்லிம்கள்) அங்கே பணத்தினைக் கொடுப்பதற்குத் தம்மால் குமாரசிங்கவின் மனைவியைக் காண முடியவில்லை என்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் பணத்தினை ஏற்க மறுத்துவிட்டனர் என்றும் எம்மிடம் தெரிவித்தனர். வன்முறை வெடித்த பின்னர் பணத்தினைப் பற்றிய மேலதிகப் பேச்சுக்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதுடன் குடும்பத்தினைப் பராமரிக்கப் பணம் வழங்குவதாகவும் குமாரசிங்கவின் மனைவிக்குத் தொழில் வழங்குவதாகவும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பற்றி அதற்குப் பின்னர் எதுவும் கலந்துரையாடப்படவில்லை.

**நிகழ்வுகளின் காலவரிசைத் தொகுப்பு**[20]




**மார்ச் 2 (நாள் 0):** எம்.ஜி குமாரசிங்க கண்டி போதனா வைத்தியசாலையில் இறப்பு. அவரது சடலம் அம்பலயிலுள்ள அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

**மார்ச் 3 (நாள் 1):** குமாரசிங்கஇறந்தமை அதிகாலையில் தெரியவருகின்றது. உதிஸ்பத்துவவில் தாக்குதல் மற்றும் தெல்தெனியவில் கும்பல் தாக்குதல்.

**மார்ச் 4 (நாள் 2):**மெதமஹநுவரவிலுள்ள எம்.கே.எம் ஸ்டோர்ஸ் எரிக்கப்படுகின்றது. திகனயில் முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் / எச்சரிக்கை. மெனிக்ஹின்ன மற்றும் தெல்தெனிய பொலிஸாரால் இருபத்து நான்கு தாக்குதலாளர்கள் கைது.மட்டக்களப்பு மங்களராமய அம்பிட்டிய சுமனரத்ன தேரர்,"சிங்களத்தின் மீட்பர்" டொன் பிரசாத், மஹசொன் பலகாயவின் அமித் வீரசிங்க மற்றும் பிபிஎஸ்சின் கலகொடத்தே ஞானசார தேரர் ஆகியோர் மரண வீட்டிற்குச் சென்றனர். முஸ்லிம்கள் உள்ளிட்ட அனைவரும் கடைகளிலும் வீடுகளிலும் இருந்து தூரமாகி இருக்குமாறும் பொலிஸாரை

[20]பார்க்க: கண்டி கும்பல் வன்முறையின் காலச் சட்டகம், முன்நிகழ்வுகள், நிகழ்வுகள் மற்றும் அதற்குப் பின்னர் நடந்தவை,https://disaster.lk/kandy-mobs-timeline/25 நவம்பர் 2020

நம்புமாறும் கண்டி ஜம்மியதுல் உலமாவின் தலைவரான பஸ்ருல் ரஹ்மான் ஆலோசனை வழங்கியிருந்தார்.

**மார்ச் 5 (நாள் 3):** அம்பலயில் காலையில் ஈமச்சடங்கு. 40 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலுள்ள திகனவுக்குக் கூட்டம் பயணம். திகனவிலும் மேலதிகக் கூட்டம் சேர்கின்றது. மாத்தறை, வவுனியா, மட்டக்களப்பு போன்ற பல்வேறு இடங்களிலிருந்து தீவிரவாதக் குழுக்களின் ஆதரவாளர்கள் கண்டியில் குவிகின்றனர் என்ற பேச்சு. தீக்குண்டுத் தாக்குதல்களும் நேரடித் தாக்குதல்களும் குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவில் (திகன, கெங்கல்ல, பலகொல்ல, குண்டசாலை, நத்தரம்பொத்த), வீடுகளுக்கும் 4 பள்ளிவாயல்களுக்கும் நெருப்புக் குண்டுத் தாக்குதல்கள், ஹிஜ்ராபுர பள்ளிவாயலில் ஒன்றுகூடியவர்கள் மீது விசேட அதிரடிப் படையினர் தாக்குதல். மௌலவி மீது ஆயுதங்களை வைக்க முயற்சித்தமை சிசிடிவியில் படம்பிடிக்கப்பட்டு பரப்பப்பட்டது. விசேட அதிரடிப்படையினரின் ரோந்துப் பிரிவினர் ஏ.எஸ்.எம் பாசில் மற்றும் எம். பாசில் ஆகியோரைக் கும்புக்கந்துரையிலுள்ள அவர்களின் வீடுகளில் இருந்து திகனவுக்கு இழுத்துச் சென்றனர். மௌலவிகளைத் தாக்குவதை துறவி ஒருவரினதும் குருவானவர் ஒருவரினதும் எதிர்ப்புப் போராட்டம் நிறுத்தியது. மௌலவிமார்கள் பொலிஸாரினால் உத்தியோகபூர்வமாகக் கைதுசெய்யப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். காயப்பட்டதையும் பொருட்படுத்தாது தெல்தெனிய வைத்தியசாலையில் கடமையில் இருந்த துஷ்பிரயோகமிக்க வைத்தியர் ஒருவர் அவர்களுக்குச் சிகிச்சையளிக்க மறுத்துவிட்டார். அடுத்த நாள் அவர்களுக்குக் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது.

**மார்ச் 6 (நாள் 4)**: தென்னக்கும்பர, ஹரிஸ்பத்துவ, மெனிக்ஹின்ன மற்றும் கண்டி ஆகிய இடங்களை இலக்குவைத்துத் தாக்குதல் நடக்கும் என்ற எச்சரிக்கை வதந்திகள். 11 ஏனைய பிக்குகளும் அமித் வீரசிங்கவும் தெல்தெனிய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். பல்லேகல பசாரில் அப்துல் பாசித்தின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. தேசிய ரீதியாக அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு கண்டியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

**மார்ச் 7 (நாள் 5):** பூஜாபிடிய பிரதேச செயலகப் பிரிவில் தாக்குதல் (முல்லேகம மற்றும் வெலெகட), ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில் தாக்குதல் (4 ஆம் கட்டை எண்டெரடென்ன, குருந்துகொல்ல, மதியம் 12 முதல்), அக்குரணை பிரதேச செயலகப் பிரிவு (8 ஆம் கட்டை, பிப 2 முதல் 2.30 வரை, தீகல, குருகொட, மல்வனஹின்ன), யடிநுவரவில் இரவில் தாக்குதல் (தந்துரே, எம்பில்மீகம, பிலிமதலாவ). வெலெகடேயில் கைக்குண்டு வெடித்ததில் குணரத்ன பண்டா மரணம். முகநூல் மற்றும் ஏனைய சமூக ஊடகங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

**மார்ச் 8 (நாள் 6):**ஜனாதிபதி கண்டியில் மதத் தலைவர்களைச் சந்தித்து அமைதி காக்குமாறு வேண்டுகோள். பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் வைத்து அமித் வீரசிங்கவும் ஏனைய 9 பேரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

**மார்ச் 9 (நாள் 7):** திகன, கெங்கல்ல மற்றும் அக்குரணையில் பாதிக்கப்பட்ட இடங்களுக்குப் பிரதமர் விஜயம் செய்து அவசர நிவாரணம் வழங்குமாறு பணிப்புரை. நத்தரன்பொத்தவில் உள்ள மஹசொன் பலகாய அலுவலகம் பயங்கரவாத விசாரணைப் பிரிவால் முற்றுகையிடப்பட்டு கணினிகளும் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன.

**வன்முறை நிகழ்வுகளின் விபரிப்பு**

**5 மார்ச் 2018 (நாள் 3)**

மெததும்பரவில் ஆரம்பித்த வன்முறை குண்டசாலைக்குப் பரவி அடுத்த நாள் பூஜாபிடிய, ஹரிஸ்பத்துவ, அக்குரண, பாததும்பர மற்றும் யடிநுவர ஆகிய இடங்களுக்குப் பரவியது. அயலிலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஆங்காங்கே நிகழ்வுகள் இடம்பெற்றன. முந்தைய இரவு தெல்தெனியவில் நடைபெற்ற வன்முறை தொடர்பாக தெல்தெனிய பொலிஸார் 24 பேரினைக் கைதுசெய்தனர் (எம்.கே.எம் டிரேடர்சுக்குத் தீ வைத்தபோது). இறுதிக்கிரியை நடைபெற்ற மார்ச் 5 ஆம் திகதி குண்டசாலை மற்றும் மெததும்பர பிரதேச செயலகப் பிரிவுகளில் முஸ்லிம்களின் கடைகளும் வீடுகளும் தாக்கப்பட்டன. குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவில் கெங்கல்ல, பலகொல்ல, குண்டசாலை, நத்தரம்பொத்த, திகன பிரதேசங்கள் பாதிக்கப்பட்டன. மெததும்பரயில், தெல்தெனிய நகரப் பிரதேசமும் அம்பலவும் வன்முறையினால் பாதிக்கப்பட்டன. கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி தெல்தெனிய பொலிஸ் நிலையத்தின் முன் மார்ச் 5 ஆம் திகதிஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. கைதானது மேலும் வன்முறையினைத் தூண்டும் எனக் கூறி பல துறவிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். திகனவில் (குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவு) ஒன்றாகச் சேர்ந்த கும்பலுடன் தெல்தெனிய மக்களும் சேர்ந்துகொண்டனர்.(குமாரசிங்கவைத் தாக்கியவரின் ஊரும் திகனவே. மஹசொன் பலகாய அலுவலகமும் திகனவிலேயே அமைந்துள்ளது). பொலிஸார் - திகனவுக்குக் கடைசியாக வந்தபோது - கூட்டத்தினைக் கலைப்பதற்காகக் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். கட்டுக்கடங்காத கூட்டம் கலைந்துசெல்கையில் முஸ்லிம் வீடுகளையும் வியாபாரத் தலங்களையும் தொடர்ந்தும் தாக்கியது.தாக்குதல் காலையில் ஆரம்பித்தது. அரசாங்கம் ஊரடங்கினை பி.ப 3.00மணிக்கு அமுல்படுத்தியது. திகனவில் தோன்றிய கூட்டத்தினைத் தாம் எதிர்பார்க்கவில்லை என்றும் தெல்தெனியவில் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தபோது கட்டுப்படுத்திய கூட்டத்தினை விட இது வித்தியாசமான கூட்டம் என்றும் பொலிஸ் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். இந்தக் கூட்டம் தோன்றுவதை எதிர்பார்க்காதது புலனாய்வின் தவறு என்றும் அவர்கள் கூறினர். ''புலனாய்வின் தவறு'' எனும் இச்சொற்பதம் ஊடகத்திலும் பயன்படுத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களின் இக்கட்டான நிலை பற்றிய அவர்களின் சொந்தப் பகுப்பாய்வு நுட்பத்திறன் மிக்கதாக இருந்தது.எதிர்காலத்தில் விடயங்கள் சிறந்ததாக அமையாது எனும் முன்னறிகுறி உணர்வினைக் கொண்டிருந்தனர். திகனவில் இதுபோன்ற ஒன்று நிகழும் என்ற எதிர்பார்ப்பு இருந்ததாக திகன பஜாரை (நகர சந்தை) சேர்ந்த ஒருவர் எம்மிடம் கூறினார். திகனவில் தமது அலுவலகத்தினைக் கொண்டுள்ள முஸ்லிம்களுக்கெதிரான குழுவான மஹசொன் பலகாயவின் தலைவரான அமித் வீரசிங்கவின் பல வீடியோக்களில் ஒன்றில் திகன பிரதேசம் முஸ்லிம்களினால் கைப்பற்றப்பட்டுவிட்டதாக உண்மையாகவே அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கூற்று கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக மக்களின் மனதினில் பதிக்கப்பட்ட ஒன்று என்பதையும் முஸ்லிம் வியாபாரிகள் குறிப்பிட்டனர். ''உள்ளூர் மட்டத்தில் அரசியல் இலாபத்திற்காகச் சிறிய அளவில் அவர்கள் இக்கருத்தை விதைத்திருக்கலாம்'' என அவர் கூறினார். ''ஆனால் இப்போது முழு நாட்டின் மீதும் பெற்றோல் ஊற்றியது போல் இருக்கின்றது. முழு நாடும் தீப்பற்றி எரிவதற்கு ஒரே ஒரு தீக்குச்சி போதுமானது.''இது மக்களுக்கிடையிலான பகைமையுடன் தொடர்புடையதல்ல ஆனால் அரசியல் இலாபம் தேடுவதற்காக அரசியல் ரீதியாகச் சதிமுயற்சியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டம் என்றும் இது பத்து வருட காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அவர் கூறினார். இது தெரிந்த விடயம் என்றும் இது வெளிப்படையான இரகசியம் என்றும் வர்த்தகர்கள் கூறினர். ''ஒரு நாடு என்ற ரீதியில் இதை விடப் பெரிய விடயங்களை எம்மால் நிறுத்தக்கூடியதாக இருந்திருக்கின்றது. பிரச்சினை தொடங்க 8 - 16 மணித்தியாலங்களுக்கு முன்னர் ஏதோ ஒன்று நடக்கப்போகின்றது என்று பிரதமரிடம் கூறப்பட்டது. ஆனால் அதை நிறுத்துவதற்கு அவர் எதையும் செய்யவில்லை''. இவ்வாறான சூழ்நிலைகளில் 21 முஸ்லிம்களும் எதற்கும் உதவாதவர்கள் என்று அவர்களை அவமானப்படுத்தும் விதத்தில் அவர் குறிப்பிட்டார். அவர்களின் கடமையினை அவர்கள் ஒழுங்காகச் செய்திருந்தால், இவ்வகையான பிரச்சினைகளைத் தவிர்க்க அவர்கள் தலையிட்டிருக்க வேண்டும் என எம்மிடம் கூறப்பட்டது.

பதற்றங்களுக்கு மத்தியிலும் இறுதிக் கிரியைகளின் போது மரியாதை செலுத்துமுகமாகக் கடைகளை மூடி வெள்ளைக் கொடிகளைப் பறக்க விடுமாறு ஜம்மியதுல் உலமா விடுத்த வேண்டுகோளை முஸ்லிம் கடை உரிமையாளர்கள் ஏற்றுச் செயற்படுத்தினர். கண்டி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபருடனான கலந்தாலோசிப்பின் பின்னரே உலமா சபையினால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. திகனவில் சில கடைகள் மஞ்சள் கொடிகளைப் பறக்க விட்டிருந்தன. தாம் முஸ்லிம்கள் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டவே பௌத்தக் கடைகளில் மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டதாகச் சில முஸ்லிம் வியாபாரிகள் குறிப்பிட்டனர். (இது உண்மைதானா என்பது தெளிவாகத் தெரியவில்லை. எவ்வாறாயினும் தமது அயலவர்கள் உடந்தையாக இருந்தமை தொடர்பாக உள்ளூர்வாசிகள் உருவாக்கிய இவ்வாறான பல பகுப்பாய்வுகளை இது சுட்டிக்காட்டுகின்றது).

நிகழ்வுகள் நடந்து மூன்று வாரங்களின் பின்னர் திகனவுக்கு நாம் முதலாவது தடவை விஜயம் செய்தபோது, பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் புதிய கடைகளை வாடகைக்குப் பெற்றுக்கொண்டதன் மூலமாக அல்லது தமது கடைகளுக்குச் சிறிய திருத்தங்களை மேற்கொண்டதன் மூலமாக தமது வியாபாரங்களை மீண்டும் தொடங்கியிருந்தனர். சில மோசமான சம்பவங்களில், முழுக் கடையும் எரிக்கப்பட்டிருந்தால் அல்லது தீயினால் சேதமாக்கப்பட்டிருந்தால்,தமது கடைகளின் சிதைவுகளுக்கு முன்னால் தமது பொருட்களை அட்டைப் பெட்டிகளில் வைத்து வியாபாரிகள் விற்பனை செய்தனர். புதுவருடத்துக்குச் சில நாட்களே இருந்த காரணத்தினால் பண்டிகைக் கால வியாபார வாய்ப்பினை அவர்கள் இழக்க விரும்பவில்லை. அச்சந்தர்ப்பத்தில் - மார்ச் மாதத்தின் பிற்பகுதியில் - தமது கடைகளை மீள நிர்மாணிப்பதா அல்லது மீள் நிர்மாணிப்புக்காக அரசாங்கத்தின் நட்டஈட்டுக்காகக் காத்திருப்பதா என்ற தீர்மானத்தினை அவர்கள் எடுக்கவிருந்தனர்.

பிரதேசத்தில் நிலவிய பதற்றம் மற்றும் வன்முறை பற்றிய திகன வியாபாரி ஒருவரின் விபரிப்பு கீழே வழங்கப்பட்டுள்ளது:

*''மார்ச் மாதம் 3 ஆம் திகதி (ஞாயிறு) மாலை பதற்றம் நிலவியது. மரண வீட்டுக்கு வாகனங்கள் தொடராக வந்தபடியே இருந்தன. கடைகளை மூடி வீட்டுக்குச் செல்லுமாறு பள்ளிவாயலால் எமக்கு அறிவிக்கப்பட்டது. இளைஞர்களும் சிறுவர்களும் கூட்டமாக வந்து எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதற்காகக் கடைகளை மூடுமாறு கூறினர். கோனவலயில் எங்கு பார்த்தாலும் பாரிய கூட்டம் காணப்பட்டது.(தெல்தெனியவில் இருந்து திகனவுக்குச் செல்லும் வழியில்).*

*அன்றைய இரவு (நள்ளிரவுக்குப் பின்னர், 4 ஆம் திகதி ஞாயிறு காலையில்) பிரதேசத்தில் உள்ள மிகப் பழமையான கடையான எம்.கே.எம் டிரேடர்சுக்குத் தீ வைக்கப்பட்டது. அதேபோல் அம்பல டிரேடர்சுக்கும் தீ வைக்கப்பட்டது. அவர்கள் கடையிலுள்ள பொருட்களைக் கொள்ளையடித்த பின்னர் கடைகளுக்குத் தீ வைத்தனர். உதிஸ்பத்துவவில் கடை ஒன்றுக்குத் தீ வைக்கப்பட்டதாக அதிகாலை 3 மணியளவில் நாம் கேள்விப்பட்டோம். நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒவ்வொருவருக்கும் அழைப்பு எடுக்க ஆரம்பித்தோம். ஜனாதிபதி, பிரதமர், அசாத் சாலி, பூஜித சேர் (பொலிஸ் மாஅதிபர்).*

*திங்கள் காலையில், பஜாரில் சன நெரிசல் காணப்பட்டது. மக்கள் சிறு சிறு குழுக்களாகக் கூடியிருந்தனர். நான் எது கடையில் இருந்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். அனைத்துக் கடைகளும் மூடப்பட்டன. என்னுடைய கடையிலுள்ள பொருட்களை அன்று மாலை அகற்றுவது என நான் தீர்மானித்தேன். பதற்றம் மோசமடைந்தது. முற்பகல் 11 மணியளவில் அவர்கள் கடைகளுக்குத் தீ வைக்க ஆரம்பித்தனர். அனைத்து இடங்களிலும் மக்கள் கூட்டம் காணப்பட்டது. தெல்தெனியவில் மக்கள் கூட்டம் மிகப் பெருமளவில் காணப்பட்டது. எமது கடைக்கு பிற்பகல் 2 மணிக்குத் தீ வைத்தார்கள். நீர் வழங்கலும் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்தன. அவர்கள் அழிவினை ஏற்படுத்திய விதத்தில் இருந்து அது நன்கு திட்டமிப்பட்ட செயல் என்பது தெளிவாகியது.*

*அவர்கள் சிசிடிவி கமராக்களுக்குக் கல்லெறிந்து அவற்றினை முதலில் அழித்தார்கள். பின்னர் கடையினை உடைத்துத் திறந்தார்கள். அவர்கள் பொருட்களை வெளியில் எடுத்தார்கள். இது நடக்கையில் எமது அயற் கடைக்காரர் இதனைப் பார்த்திருக்கிறார். பிரதேசத்திலுள்ள சகல கடைகளுக்கும் அவர்கள் இதனையே செய்தார்கள்.*

*பிரதேசத்தில் 2000 முதல் 3000 வரை பொலிஸாரும் இராணுவத்தினரும் நிலை கொண்டிருந்தனர். அவர்கள் இதில் தலையிடாது தங்களின் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எதனையும் செய்யவில்லை. அவர்கள் வானை நோக்கி ஒரு துப்பாக்கி வேட்டினைத் தீர்த்திருந்தாலும் அது போதுமானதாக இருந்திருக்கும். ஊரடங்கு அமுலில்தான் இருந்தது. ஆனால் அது எங்களுக்கு மட்டும்தான். கலகக்காரர்கள் மோட்டார் சைக்கிளில் சுற்றி வந்துகொண்டிருந்தார்கள் - இரண்டிரண்டாக. அது அவர்களுக்குக் கிறிஸ்மஸ் பண்டிகை போன்றிருந்தது''.*

பல்லேகல பஜார் பள்ளிவாயிலான மஸ்ஜித் லாபிர், பழைய தெல்தெனிய நகரம் மஹாவலி நீரில் மூழ்கிய போது நிர்மானிக்கப்பட்டது. இந்தப் பள்ளிவாயல் பல தசாப்தங்கள் பழமையானது. பள்ளிவாயல் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டது. பள்ளிவாயலில் இருந்த குர்ஆன்கள் வெளியில் வீதிக்கு எடுக்கப்பட்டன. சிலர் அவற்றிற்கு தீ வைத்தனர். ஏனையோர் அவற்றினைச் சாக்கடைக்குள் எறிந்தனர். தீயினால் கறுப்பாகிப் போன கட்டிடத்தினை எமக்குச் சுற்றிக் காட்டிய மௌலவி என்ன நடந்தது என்பதை எமக்கு விளக்கினார். தாக்குதலில் பங்குபற்றியவர்கள் தாம் சிறுவர்களாக இருந்தபோது தம்மோடு விளையாடியவர்கள் என்றும் தாம் ஒருவர் மற்றவரின் வீடுகளுக்கு வந்துபோனவர்கள் என்றும் மௌலவி கூறினார் - ''மின்சாரம் இல்லாதபோது எமது ஆடைகளை இஸ்திரி செய்ய நாம் அவர்களின் வீடுகளுக்குச் செல்வோம். நாம் அனைவரும் சிறுவர்களாக ஒன்றாகவே இருந்தோம். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது தலையில் குட்டிவிட்டார்கள்''

என அவர் கூறினார். ''இப்போது அவர்கள் எமது முகத்தினைப் பார்ப்பதில்லை. அவர்கள் குற்றவுணர்வுடன் இருக்கின்றனர் என்பது எமக்குத் தெரியும்'' என அவர் கூறினார். ''அவர்கள் இப்போது பேசுவதெல்லாம் முஸ்லிம்கள் தீவிரவாதிகள் என்பதைத்தான். அவர்கள் கூடாதவர்களல்ல. அவர்களுக்குப் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது'' என அவர் கூறினார். இப்பிரதேச முஸ்லிம்களுக்குச் சிறந்த மலைநாட்டுச் சிங்களப் பெயர்கள் உள்ளன. அவர்களில் சிலர் நடந்ததற்காக மனவருத்தமடைவதாகக் கூறியுள்ளனர்''. பல்லேகலயில் மஸ்ஜித் லாபிருக்கு அருகாமையில் ஒரு சிறிய கடைக்குத் தீ வைக்கப்பட்டதில் அப்துல் பாசித் எனும் ஓர் இளைஞன் இறந்து விட்டார். அவரது உடல் மார்ச் 6 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

ஊரடங்கு அமுலில் இருந்த மார்ச் 5 ஆம் திகதி இரண்டு மேலதிக சம்பவங்கள் நடைபெற்றன. பின்மதியப் பிரார்த்தனை (அஸர்) முடிவடைந்த உடனேயே ஹிஜ்ராபுரப் பள்ளிவாயலினுள் விசேட அதிரடிப் படையினர் (எஸ்டிஎப்) நுழைந்து பிரார்த்தனையினை முடித்த பள்ளிவாயலின் இரண்டு மௌலவிமார்கள் உள்ளிட்ட சில நபர்களைத் தாக்கினர். பள்ளிவாயிலுக்குள் சப்பாத்துக்களுடன் நுழைந்த படையினரால் தாங்கள் துன்புறுத்தப்பட்டுத் தாக்கப்பட்ட பின்னர் தம் மீது தற்காலிகமாகத் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களைத் திணிக்க முயற்சித்தனர் என மௌலவிமார்கள் குறிப்பிட்டனர். அவர்கள் பின்னர் பள்ளிவாயலில் இருந்து வெளியே அழைத்துவரப்பட்டனர். வீதியில் வைத்து பௌத்த துறவி ஒருவர் தலையிட்ட காரணத்தினால் இரண்டு மௌலவிமாரும் விடுவிக்கப்பட்டனர். பிரதான வீதியினைத் தாண்டியிருந்த பள்ளிவாயலுக்குள் எஸ்டிஎப் நுழையக் காரணம் பள்ளிக்கு வந்தவர்கள் ஊரடங்கினை மீறியமையினால் எனச் சிலர் குறிப்பிட்டனர். ஏ.எஸ்.எம் பாசில் மற்றும் எம். பாசில் ஆகிய இரண்டு நபர்கள் திகனவில் ஊரடங்கு அமுலில் இருந்த போது எஸ்டிஎப்பினால் தேடப்பட்டனர். இவர்களில் ஒருவர் பிரதேச சபை (உள்ளூராட்சி) உறுப்பினராவார். இவர் பொலிஸ் பிரதிநிதிகளுடனும் கண்டி பள்ளிவாயல் குழுவுடனும் சேர்ந்து குமாரசிங்கவின் கிராமத்தில் நடந்த கூட்டத்தில் பங்குபற்றியவர். எம். பாசிலின் வீட்டுக்குச் சென்ற எஸ்டிஎப் அவர்களை அச்சுறுத்தி கதவைத் திறக்குமாறு கூறினர். *''தம்பியா கதவைத் திறடா''!*ஏ.எஸ்.எம் பாசில் (பிரதேச சபை உறுப்பினர்) வீட்டில் இருந்து வெளியே வந்ததும் எஸ்டிஎப் அவரைத் தாக்க ஆரம்பித்தனர். தாக்குதலில் அவரின் தலையில் அடிபட்டு இரத்தம் பீறிட்டுப் பாயத் தொடங்கியது. பின்னர் அவர்கள் எம்.பாசிலின் வீட்டுக்குள் நுழைந்து அவரை அவரின் இளைய மகனின் கண் முன்னே வெளியே இழுத்து வந்தனர். இரண்டு பாசில்களும் குறிப்பிட்டதற்கு அமைய எஸ்டிஎப் பயன்படுத்திய மொழி அவமானப்படுத்துவதாகவும் துவேஷம் மிக்கதாகவும் அமைந்திருந்தது.தான் ஒரு பிரதேச சபை உறுப்பினர் என ஏ.எஸ்.எம் பாசில் அவர்களுக்கு அறிவித்தார். அவர்கள் பாசிலை நிகழ்வினை ஏற்பாடு செய்ததாகக் குற்றஞ்சாட்டினர்.(எதை அவர் ஏற்பாடு செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டார் என்பது தெளிவற்றதாக இருந்தது). அவர்கள் பாசியிடம் ஒரு சாக்கினில் போத்தல்களை நிரப்புமாறு கூறினர். பின்னர் அவரின் கைகளைக் கட்டி அந்தச் சாக்கினை அவரின் கட்டப்பட்ட கைகளால் தூக்குமாறு கூறினர். பாசிலுடன் சேர்த்து ஒரு பதின்பருவப் பையனும் சுற்றிவளைக்கப்பட்டு அவரின் கைகளும் கட்டப்பட்டன. நகரத்திற்குள் கூட்டிச் செல்லப்படுகையில் தங்களுக்குத் தொடர்ச்சியாக எஸ்டிஎப் அடித்ததாக பாசில் கூறினார். செல்லும் வழியில் பாதையில் கடந்து சென்றவர்களை எஸ்டிஎப் அதிகாரிகள் நிறுத்தி - அதிகமாக மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை - பிடிக்கப்பட்டுள்ள இந்த முஸ்லிம்கள் சிங்கள மக்களைத் தாக்குவதற்குக் குண்டுகளைத் தயார் செய்தனர் எனக் கூறினர். பாதையில் கடந்து சென்றவர்களிடம் கவனமாக இருக்குமாறு எஸ்டிஎப் உறுப்பினர்கள் அறிவுரை கூறினர். எஸ்டிஎப் உறுப்பினர்கள் இறுதியில் அவர்களைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று அவர்களை உத்தியோகபூர்வமாகக் கைதுசெய்தனர். பெற்றோல் குண்டுகளைத் தயாரித்தார்கள் என அவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. எஸ்டிஎப் பற்றி எம் பாசில் குறிப்பிடுகையில் அவர்கள் இனவாதிகள் போன்று செயற்பட்டார்களேயன்றி அதிகாரிகள் போல் செயற்படவில்லை என்று கூறினார்.

எம். பாசிலைத் தொடர்ச்சியாகத் தாக்கியதால் அவர் உணர்வு மங்கிப் பிதற்றல் நிலைக்காளாகினார். அவரால் பொலிசுக்கு முறையான வாக்குமூலத்தினை வழங்க முடியவில்லை. தாங்கள் இரண்டு பேரும் குண்டுகளைத் தயாரித்ததாக வாக்குமூலம் குறிப்பிட்டதால் பதியப்பட்ட வாக்குமூலம் பொய்யானது என்று அவர் கூறினார்.

இவர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்குச் சிகிச்சையளிப்பதற்காக தெல்தெனிய வைத்தியசாலைக்கு இவர்களை அழைத்துச் சென்றபோது அங்கு கடமையிலிருந்த வைத்தியர் இவர்களை அனுமதிக்க மறுத்துவிட்டார். தான் மிகவும் பலவீனமாக இருந்த காரணத்தினால் தன்னை அனுமதிக்குமாறு ஏ.எஸ்.எம் பாசில் கெஞ்சினார். வைத்தியர் தன்னிடம் என்ன கூறினார் என அவர் நினைவுபடுத்தினார். ''நீங்கள் ஒரு சிங்களவரைக் கொன்றுவிட்டீர்கள். இப்போது நீங்கள் அதிகமானவர்களைக் கொல்ல முயற்சிக்கின்றீர்கள்? உங்களை வைத்தியசாலையில் சேர்க்கக்கூடாது. சிறையில் தான் போடவேண்டும்''. வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றி இரண்டு பேரும் எஸ்டிஎப்பினால் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் ஏ.எஸ்.எம் பாசில் (பிரதேச சபை உறுப்பினர்) கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவரின் தலையில் எட்டுத் தையல்கள் போடப்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் தான் சிகிச்சை பெறுவதற்கு மிகவும் அச்சப்பட்டதாக எம். பாசில் குறிப்பிட்டார். நிலைமை

அமைதியடைந்து ஒரு வாரத்தின் பின்னரே தான் ஒரு வைத்தியரிடம் சென்றதாக அவர் குறிப்பிட்டார். தனது அனுபவத்தினை விபரித்த எம்.பாசில் பின்வருமாறு கூறினார்: ''என்னால் நம்ப முடியவில்லை. எம்மைப் பாதுகாக்கும் பொறுப்புடையவர்களே எம்மைத் தாக்கினர். இது எவ்வாறு நடக்கலாம். இந்த நாட்டின் சட்டமும் ஒழுங்கும் என்ன நிலையில் இருக்கின்றன. எனக்கு வெறுத்துப் போய்விட்டது''.

இரண்டு பாசில்களையும் எஸ்டிஎப் தேடிச் சென்றமை தொடர்ந்தும் ஒரு புதிராக இருப்பதுடன் உள்ளூர் மக்களுடன் நாம் நடத்திய பல கலந்துரையாடல்களிலும் இவ்விடயம் பேசப்பட்டது. சூழ்நிலை கட்டுக்கடங்காமல் போவதைத் தடுப்பதற்காகப் பிரதேச சபை உறுப்பினரான பாசில் அம்பலயில் நடந்த கூட்டத்தில் பங்குபற்றியதைச் சிலர் இதனுடன் தொடர்புபடுத்தி வன்முறையினைத் திட்டமிட்ட உள்ளூர் ஏற்பாட்டாளர்கள் இவரின் பெயரினை எஸ்டிஎப் உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கலாம் எனக் கூறினர். அல்லது பெற்றோல் குண்டுகளைத் தயாரிப்பதன் மூலம் வன்முறைக்கு பதிலடி கொடுக்க முஸ்லிம்கள் தயாராகின்றனர் என முஸ்லிம்கள் பற்றி யாராவது துப்புக் கொடுத்திருக்கலாம் எனச் சிலர் ஊகம் தெரிவித்தனர்.

இந்த நடத்தை தொடர்பாகப் பொலிஸாரிடமிருந்தோ அல்லது விசேட அதிரடிப் படையினரிடமிருந்தோ எந்த விளக்கமும் கிடைக்கவில்லை. இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் நாம் நடத்திய சந்திப்புக்களின் போது (கீழே பார்க்க) இச்சம்பவம் பற்றிய எத்தகவல்களும் கிடைக்கவில்லை. ஓர் அதிகாரி சம்பவத்தினை தவறுதலாக நடைபெற்ற செயல் எனக் குறிப்பிட்டார். இந்த அதிகாரிக்கு ஏ.எஸ்.எம் பாசில் (பிரதேச சபை உறுப்பினர்) தெல்தெனியவில் கூட்டத்தில் கலந்துகொண்டது தெரியும். மற்றைய சிரேஷ்ட அதிகாரி எம்மிடம் கருத்துத் தெரிவிக்கையில் - விபரங்களைக் குறிப்பிடாது - சண்டையில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரை யார் யார் எனப் பொலிசாரினால் பிரித்தறிய முடிவதில்லை என மறைமுகமாகக் குறிப்பிட்டார். முஸ்லிம்கள் தங்களைப் பாதிக்கப்பட்டவர்களாகப் பார்க்கலாம் என்கின்ற அதேவேளை, கைகலப்பினைத் தீர்க்கும்போது வலுச்சண்டைக்குப் போனவர் யாராக இருக்கலாம் என்பது எப்போதும் தெளிவாக இருப்பதில்லை. பொலிசாருக்குச் சம்பவத்தினைக் கட்டுப்படுத்தும் பொறுப்பே வழங்கப்பட்டுள்ளது. யார் எதைச் செய்தனர் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இரண்டு சம்பவங்களும் ஊரடங்கு வேளையில் நடைபெற்றுள்ளதால் ஊரடங்கு நேரத்தில் ஹிஜ்ராபுரப் பள்ளிவாயலில் முஸ்லிம்கள் நடமாடுவது பற்றி யாராவது பொலிஸாருக்குத் துப்புக் கொடுத்திருக்கலாம் என்றும் எம்மிடம் கூறப்பட்டது. எவ்வாறாயினும், இதில் தெளிவாகும் விடயமும் அதற்கு ஆதாரமாக (கீழே பார்க்க) சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் நாம் நடத்திய கலந்துரையாடலும் குறிப்பது என்னவெனில், நாட்டில் நிலவும் துவேஷத்தில் இருந்து பொலிஸார் விடுபட்டவர்கள் அல்ல என்பதேயாகும். பதற்றச் சூழ்நிலை எனும் சூழமைவில் விசேட அதிரடிப் படையினர் எடுத்த தீர்மானங்களின் யோக்கியதை எதுவாக இருந்தபோதிலும் அவர்களும் துவேஷ உணர்வுகளுக்கு ஆட்பட்டவர்கள் என்கின்ற உண்மை கண்கூடானதாகும். சம்பவங்களுக்கு எஸ்டிஎப் உள்ளடங்கலாகப் பொலிசார் பதிற்செயற்பாடாற்றிய விதத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. நாம் பொலிஸாரை 2018 ஜூலையில் நேர்கண்டபோது, பொலிஸாரின் பதிற்செயற்பாடு தொடர்பான விசாரணை நடைபெறுகின்றது என எம்மிடம் கூறப்பட்டது.

திகனவில் பெருமளவில் தாக்குதல்களை நடத்திய கும்பலைக் கலைக்கப் பொலிஸார் திங்களன்று (5 மார்ச்) கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்[21]. ஆரம்பத் தாக்குதல்கள் நடந்த பல நாட்களின் பின்னரே செயற்பட்ட ஜனாதிபதி சிறிசேன, இலக்குவைக்கப்பட்ட குழுக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் வன்முறையினை நிறுத்தவும் சம்பவங்கள் தொடர்பாகப் பக்கச்சார்பற்ற முறையில் சுயாதீனமான விசாரணைகளை நடத்துமாறு நிலைமை கட்டுக்கடங்காமல் போன பின்னர் ஒரு தடவை மாத்திரமே பொலிஸாரையும் ஆயுதப் படையினையும் வேண்டிக்கொண்டார்.[22] அம்பாறையிலும் திகனயிலும் நடைபெற்ற வன்முறைகளைக் கண்டித்து அரசாங்கம் உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டது.[23] இதனைத் தொடர்ந்தே அரச அதிகாரிகள் திடீரெனக் கரிசனைகளை அள்ளிக் கொட்ட ஆரம்பித்தனர்.சமூக ஊடகங்களில் முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வெறுப்புப் பிரச்சாரங்களையும் தீவிரமான முறையில் தவறான தகவல்களைப் பரப்பும் பிரச்சாரங்களையும் அரசாங்கம் கண்டித்து,அவ்வாறான பிரச்சாரங்களுக்கு இரையாக வேண்டாம் எனப் பொதுமக்களை வேண்டிக்கொண்டதுடன் இவ்வாறான குற்றத்தினை நிகழ்த்துவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்

---

21 ''திகனவில் மோதல்: பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம்'' டெய்லி மிர்ரர், 5 மார்ச் 2018 http://www.dailymirror.lk/article/Clash-in-Digana-Police-use-teargas-146773.html

22 ''திகன சம்பவங்கள் பற்றி பக்கச்சார்பற்ற விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவு'' , அததெரண, 5 மார்ச் 2018 http://www.adaderana.lk/news/46248/president-orders-impartial-probe-into-digana-incidents

23 ''வன்முறைச் செயற்பாடுகளை அரசாங்கம் கண்டிக்கின்றது,'' டெய்லி மிர்ரர், 5 மார்ச் 2018 http://www.dailymirror.lk/146797/Govt-condemns-acts-of-violence

கூறியது.[24] அன்றைய தினம் 13 பெற்றோல் குண்டுகளை வைத்திருந்த மூன்று சந்தேக நபர்கள் திகன, கும்புக்கந்துரவில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது எஸ்டிஎப்பினால் கைது செய்யப்பட்டனர்.

குமாரசிங்கவின் மரணத்தினைத் தொடர்ந்து திகன பிரதேசத்தில் பாதுகாப்பினை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினரான திலும் அமுனுகம மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மாஅதிபரிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறி அதனை நிராகரித்துவிட்டதாகவும் கூட்டு எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான விமல் வீரவங்ச தெரிவித்தார்.[25][26]அதேவேளை, இன வன்முறையினைத் தூண்டுவது பிணை வழங்கமுடியதாக குற்றச்செயலாக ஆக்கப்படவேண்டும் என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.[27]மாலையில் கண்டி நிர்வாக மாவட்டத்தில் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது[28]. சிங்கள முஸ்லிம் மோதல் நடைபெறுகையில் நாட்டின் தற்போதைய நிலை பற்றிய ஒத்திவைப்பு விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் படையினரதும் அரசாங்கத்தினதும் செயற்திறனின்மையினால் அதிருப்தியடைந்த பதினொரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், றிசாத் பதியுதீனின் தலைமையில் முஸ்லிம்களின் பாதுகாப்பினைக் கோரிச் சபையின் நடுப்பகுதியில் அமர்ந்துகொண்டனர்[29].

**6 மார்ச் 2018 (நாள் 4)**

தென்னக்கும்புர, ஹரிஸ்பத்துவ, யடிநுவர மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் பதற்றம் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்பட்டது. மடவலையில் மு.ப 11.30 மணியளவில் கடை ஒன்று எரிவது பற்றி அல் ஜசீரா அறிக்கையிட்டது. 6 ஆம் திகதி அதிகாலையில் பல்லேகல பசாரில் உள்ள கடை ஒன்றின் பின்பகுதியில் அப்துல் பாசித்தின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

அரசாங்கம் அவசரகால நிலையினை அறிவித்தது. விசாரணைகளை நடத்தப் பொலிஸ் மாஅதிபரினால் திகனவிற்கு சிஐடி அணி ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாகப் பத்திரிகைகள் தெரிவித்தன. திகனவிலும் தெல்தெனியவிலும் நடத்தப்பட்ட வன்முறைகள் தொடர்பில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு பௌத்தர்கள் முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என சபை முதல்வாரன பாரளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரிஎல்ல குறிப்பிட்டதாக டெய்லி மிரர் செய்தி வெளியிட்டது. முஸ்லிம் சமுதாய உறுப்பினர்களுடனான சந்திப்புக்கு அழைப்பு விடுத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வன்முறையானது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் தோல்வியின் அறிகுறியாகும் என அறிக்கை வெளியிட்டார். இதே கருத்தினையே பொது ஜன பெரமுனவின் தலைவரான ஜி.எல் பீரிசின் பத்திரிகை அறிக்கையும் பிரதிபலித்தது.

திகன வன்முறையின் போது புகையினால் மூச்சுத்தினறி உயிரிழந்த 27 வயதுடைய கணினித் தொழில்நுட்பவியலாளரான அப்துல் பாசித்தின் குடும்பத்தினரை நாம் எமது திகன கள விஜயத்தின் முதல் நாளன்று சந்தித்தோம். கடையின் பின்பக்கம் அமைந்திருந்த அவரின் வீட்டினுள் அவர் அகப்பட்டுக்கொண்டார். அந்த வீட்டுக்குப் பின்பக்கக் கதவு இருக்கவில்லை. புகையினால் இருண்ட கடையினையும் வீட்டினையும் அப்துல் பாசித் சுயநினைவிழந்த இடத்தினையும் கூட நாம் பார்த்தோம். நாம் அவரின் சகோதரருடனும் தந்தையுடனும் பேசினோம். அவரைக் காப்பாற்ற இன்னும் முயற்சி செய்யப்பட்டிருக்கலாம் என அவர்கள் ஆதங்கப்பட்டனர். கடுமையான எரிகாயங்களுடன் அப்துல் பாசித்தின் சகோதரர் ஓடிச் சென்று வெளியே கூடி நின்ற பொலிஸாரிடம் பாசித் உள்ளே மாட்டிக்கொண்டிருப்பதாகக் கூறியிருக்கின்றார். யாருமே அவரின் உதவிக் கோரிக்கையினைப் பொருட்படுத்தவில்லை. சகோதரரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுவிட்டார்கள். பக்கத்து வீட்டில் பாதுகாப்பாக மறைந்திருந்த தந்தையும் தாயும் சற்று நேரத்தின் பின்னர் வெளியே வந்தபோது அயலில் இருந்தவர்கள் அவர்களிடம் அவர்களின் மகன்மார் இரண்டு பேரும் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகக்

---

[24]யூசுப் அலி,"அம்பாறை மற்றும் திகன வன்முறைச் சம்பவங்களை அரசாங்கம் கண்டிக்கின்றது," Ada Derana, மார்ச்6, 2018
http://www.adaderana.lk/news/46253/govt-condemns-incidents-of-violence-in-ampara-and-digana

[25]அஜித் சிறிவர்தன மற்றும் யொஹான் பெரெரா,"அரசாங்கம் கவனத்தினைத் திசைதிருப்ப திகன வன்முறையினைப் பயன்படுத்தியது: விமல்," டெய்லி மிர்ரர், 6 மார்ச் 2018
http://www.dailymirror.lk/article/Govt-used-Digana-violence-to-divert-attention-Wimal-146845.html

[26]Ibid

[27]வாராந்த ஊடக இற்றைப்படுத்தல்கள்,"இன வன்முறையினைத் தூண்டுவது பிணை வழங்க முடியாத குற்றச் செயலாக ஆக்கப்படவேண்டும் - அமைச்சர் - உலக விவகாரங்களின் இந்தியா கவுன்சில், 5-11 மார்ச் 2018, https://www.news.lk/news/sri-lanka/item/19706-inciting-racial-violencemust-be-

[28] "கண்டி நிர்வாக மாவட்டத்தில் பொலிஸ் ஊரடங்கு," டெய்லி மிர்ரர், 5 மார்ச் 2018
http://www.dailymirror.lk/article/-Police-curfew-in-Kandy-administrative-district-146776.html

[29]http://www.ft.lk/Front-Page/Muslim-Ministers-protest-in-Well/44-650751

கூறியிருக்கின்றனர்.காலையில்தான் அப்துல் பாசித் இறந்துவிட்டது குடும்பத்தினருக்குத் தெரியவந்துள்ளது. எரிந்து எஞ்சிய வீட்டுக்குள் அடுத்த நாள் தானும் தனது மற்றைய மகனும் சென்று பார்த்தபோதுதான் பாசித்தின் உடலைக் கண்டதைப் பற்றி பாசித்தின் தந்தை கூறினார் (அதுவரை பாசித் வைத்தியசாலையில் இருப்பதாகவே அவரின் குடும்பம் நினைத்திருந்தது). இரண்டு மகன்மாரையும் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றுள்ளதாக அருகில் இருந்தவர்கள் குறிப்பிட்டமையால் பாசித்தின் தந்தை கோபமடைந்திருக்கின்றார். எல்லாம் என்னுடைய நேரம்தான் என அவர் கண்ணீர் மல்கக் கூறினார். ''அவரை வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்றுள்ளனர் எனக் கூறியிருக்காவிட்டால் நாம் அவரைத் தேடியிருப்போம்.''இவ்வாறான தாக்குதல்களை மக்கள் தாங்கிக் கொள்ளப் போவதில்லை. எவ்வளவு காலத்திற்கு நாம் தாங்குவது? நாம் எதிர்த்துச் சண்டையிட ஆரம்பித்தால் என்ன நடக்கும்? பதிலளிக்க ஆரம்பித்தால்? என அவர் மேலும் கூறினார்.

**7 மார்ச் 2018 (நாள் 5)**

வன்முறை மார்ச் 6 இல் ஓரளவுக்குத் தணிந்த அதேவேளை, 7 ஆம் திகதி காலையில் தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பித்தன.

**அம்பத்தென்னே – வெலெகடே**

பூஜாபிடிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அம்பத்தென்னே கிராமம் மார்ச் 7 ஆம் திகதி காலையில் தாக்கப்பட்டது. அம்பத்தென்னே விஹாரை முஸ்லிம்களால் தாக்கப்பட்டதாக வதந்தி பரப்பப்பட்டது. பல சிலைகளை உள்ளடக்கிய சிறிய செவ்வக வடிவிலான கண்ணாடிப் பெட்டி ஒன்று சேதமாக்கப்பட்டு கண்ணாடி உடைக்கப்பட்டிருந்தது. விஹாரையின் முன்னால் இருந்த தக்கியாப் பள்ளிவாயல் தாக்கப்படுவதற்கும் வெலெகட பிரதேசத்தில் வீடுகள் தாக்கப்படுவதற்கும் தூண்டுதலாக அமைந்தது இந்தச் சேதமாக்கலே என மக்கள் பேசிக்கொண்டனர். விஹாரையின் மணி ஒலிக்கப்பட்டு பெரும் மக்கள் கூட்டம் விஹாரை தாக்கப்பட்டுவிட்டது எனக் கூறி அங்கே கூடியது. ஆனால் பள்ளிவாயல் அமைந்திருந்த இடத்திலுள்ள காணித் துண்டு தொடர்பாக விஹாரையுடன் நீண்ட காலமாக ஒரு பிணக்குக் காணப்படுவது பற்றிப் பரவலாக அறிக்கையிடப்படவில்லை. 2013 டிசம்பரிலும் பள்ளிவாயல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது. 2013 நிகழ்வு தொடர்பில் பத்து பேர் கைது செய்யப்பட்டனர். பள்ளிவாயலுக்கும் விஹாரைக்கும் இடையிலான ''நல்லிணக்கப் பேச்சுக்களின்'' காரணமாக வழக்கினைக் கைவிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நீதிபதி அதற்கு அனுமதியளிக்கவில்லை. பிரதேசத்திலுள்ள மக்கள் பள்ளிவாயலுடன் கோபம் கொண்டிருப்பதாக நாம் பேசிய ஆலிமும் பள்ளிவாயல் நம்பிக்கைப் பொறுப்பாளரும் எம்மிடம் கூறினர். நிகழ்வு நடந்து பல வாரங்களின் பின்னர் நாம் தக்கியாவுக்கு விஜயம் செய்தபோது தாக்குதல்களின் அறிகுறிகளை அப்போதும் காணக்கூடியதாக இருந்தது. பள்ளிவாயலின் நம்பிக்கைப் பொறுப்பாளரும் ஆலிமும் இன்னும் அதிர்ச்சியுற்ற நிலையிலேயே காணப்பட்டனர். ஆனால் என்ன நடந்தது என்பதை மனதளவில் பொறுத்துக்கொள்ளும் நிலையில் அவர்கள் காணப்பட்டனர். வெலேகடவை உடன் அண்டியுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் உள்ளிட்ட நாம் பேசிய பல நபர்களும் இக்குறிப்பிட்ட தூண்டல் சம்பவம் ஒரு நாடகம் என்றும் எந்தவொரு முஸ்லிம் நபரும் இச்சிறிய கட்டமைப்பினைச் சேதமாக்க விஹாரையின் வளவுக்குள் நுழைந்தமைக்கான சான்று இல்லை என்றும் குறிப்பிட்டனர். பதற்றத்தினை நீட்டிப்பதற்கு பல்வேறு செயற்படுனர்கள் செயற்படுவதற்கான சான்றாக இந்தச் சம்பவம் பேசப்பட்டது.

தாக்குதல் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் விசேட அதிரடிப் படையினர் வகித்த வகிபாத்திரம் பற்றிப் பிரதேச மக்கள் அவதானத்தினை ஈர்த்தனர். விஹாரை தாக்கப்பட்ட செய்தி பள்ளிவாயலை எட்டியதும் என்ன செய்யப்படவேண்டும் என்பது தொடர்பான கலந்துரையாடல் (மசூரா) நடத்தப்பட்டது. எஸ்டிஎப்பும் பொலிஸாரும் வந்தனர். பள்ளிவாயலின் முன் இரண்டு four-wheel வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. ஒரு குழுவினர் எஸ்டிஎப் பார்த்திருக்கப் பள்ளிவாயலின் மீது கற்களை எறிந்தனர். எஸ்டிஎப் அந்தக் குழுவினைத் திருப்பியனுப்பிவிட்டனர். சில நிமிடங்களின் பின்னர் எஸ்டிஎப் அங்கிருந்து சென்றுவிட்டனர். சற்று நேரம் கழிந்த பின்னர் பெரிய குழுவொன்று வந்து வெலெகடே பிரதேசத்திலுள்ள பள்ளிவாயலையும் வீடுகளையும் தாக்கியது. இந்தத் தாக்குதல் பள்ளிவாயலின் சிசிடிவி கமராவில் பதியப்பட்டிருக்கின்றது. மீண்டும் எஸ்டிஎப் வந்தனர். ஆனால் கும்பலின் செயற்பாட்டினை நிறுத்த அவர்கள் எதனையும் செய்யவில்லை. கூட்டத்தினர் அதிகமாக இருந்ததால் பாதுகாப்புப் படையினால் எதையும் செய்ய முடியவில்லை என அச்சமயத்தில் ஊடக அறிக்கைகள் தெரிவித்திருந்தன. குணரத்ன பண்டா என்பவர் கையில் வைத்திருந்த கைக்குண்டு இச்செயற்பாட்டின் போது வெடித்ததால் அவர் இறந்தார். பொலிஸாருடன் நாம் நடத்திய கலந்துரையாடலின் போது கைக்குண்டினை வைத்திருந்த நபருக்கு அக்குண்டு எவ்வாறு செயற்படுகின்றது என்ற அறிவு இருக்கவில்லை என எமக்குக் கூறப்பட்டதில் இருந்து ''வெளிச் சக்திகள்'' சிலவற்றால் கைக்குண்டு வழங்கப்பட்டிருக்கின்றது என்பது தெரியவந்தது.

கும்பல் உள்நுழைந்ததும் மக்களை வீடுகளில் இருந்து விரைவாக வெளியேறுமாறு எஸ்டிஎப் வேண்டுகோள் விடுத்தனர். பள்ளிவாயலிலும் வீடுகளிலும் மக்கள் சேதங்களை அவதானித்து தீயினை அணைக்க முயன்றுகொண்டிருந்தனர். ஆனால் மக்கள் வெளியேற வேண்டுமென்று எஸ்டிஎப் நிர்ப்பந்தித்தது. வேறு பாதுகாப்பான இடத்திற்குக் கூட்டிச் செல்வதற்காகக் குடும்பங்களை எஸ்டிஎப் வாகனத்தில் ஏறுமாறு எஸ்டிஎப் கூறியதாக ஆபிரா நிவாஸ் செய்தி அறிக்கையிட்டிருந்தார். தங்களின் வீட்டுக் கதவுகளைப் பூட்டுவதற்குக் கூடச் சிலருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. மக்கள் வெளியேறியதும் மேலும் சேதமேற்படுத்தவும் கொள்ளையடிக்கவும் தீ வைக்கவும் கும்பல்கள் திரும்பி வந்தன[30]. தாங்கள் வீடுகளை விட்டு வெளியேறியிருக்கக் கூடாது எனப் பிரதேச மக்கள் பின்னர் குறிப்பிட்டனர். எஸ்டிஎப்பின் செயற்பாட்டினால் தமக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கப்பட்டுவிட்டதாகப் பலரும் உணர்ந்தனர்.

கடந்த காலத்தின் பிரச்சினைகளைத் தாண்டி, விஹாரைக்கும் பள்ளிவாயலுக்கும் இடையிலான உறவு பொதுவாகச் சிறந்ததாக இருந்ததாகவே பள்ளிவாயல் நம்பிக்கைப் பொறுப்பாளரும் ஆலிமும் எம்மிடம் கூறினர். விஹாரையில் ஐந்து பிக்குமார்கள் இருப்பதாகவும் அவர்களில் ஒருவர் மட்டுமே அவ்வளவு நல்லவரல்ல (முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளுக்கு ஆதரவு வழங்குபவர்) என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். ‘‘இவ்வாறான ஒரு தாக்குதல் நடக்கப்போகின்றது என நண்பர்கள் மூலம் நாம் கேள்விப்பட்டோம்’’ என அவர்கள் கூறினர். ‘‘அச்சந்தர்ப்பத்தில் அவ்வாறான வன்முறை நிகழ்வதைத் தடுப்பது பற்றி நாம் விஹாரையிலுள்ளவர்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்தோம்’’. தாக்குதல்களில் இருந்து அவர்கள் பெற்றுக்கொண்ட பாடங்கள் பின்வருவனவாகும்:

1. அவர்கள் நாட்டின் பாதுகாப்புப் படையினரில் நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனால் அரசாங்கப் படைகள் தாக்குதலை நிறுத்த எதையும் செய்யவில்லை. அந்த நம்பிக்கை இப்போது மங்கிவிட்டது.

2. உள்ளூர் பௌத்த சமுதாயத்துடனான அவர்களின் உறவுகள் சிறந்ததாக இருந்திருக்கவேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். தங்களுக்காகப் பேசியிருக்கக்கூடிய யாராவது இருந்திருந்தால் இந்த நிகழ்வுகளைத் தவிர்த்திருக்கலாம் என அவர்கள் உணர்கின்றனர்.

நாம் வெலேகடேயில் ஒரு வீட்டிலுள்ள குடும்பத்துடன் பேசினோம். அவர்களின் வீட்டுக்குப் பெற்றோல் குண்டு வீசப்பட்டு அவர்களின் மேல் மாடி எரிந்துபோயிருந்தது. நகைகள் மற்றும் பெறுமதியான ஆவணங்கள் உள்ளிட்ட அவர்களின் உடைமைகள் பல தீயில் கருகிவிட்டன. வாகனங்களும் கராஜில் இருந்து வெளியே எடுக்கப்பட்டுத் தீ மூட்டப்பட்டன.

விஹாரைக்கு வெளியே கூட்டம் கூடுவதைப் பார்த்தபோது தாம் அது பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என அவர்கள் கூறினர். பள்ளிவாயல் முன்பு தாக்கப்பட்டிருக்கின்றது. இது மீண்டும் நடக்கும் என அவர்கள் நினைத்தனர். ஆனால் வேறு இடங்களில் தாக்குதலை அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. தாக்குதல் நடத்தியவர்கள் விரைவில் சென்றுவிடுவார்கள் என அவர்கள் நினைத்தனர். ஆனால் அவர்கள் வீடுகளைத் தாக்க ஆரம்பித்தனர். வீட்டு உரிமையாளரொருவர் எம்மிடம் கூறினார்: ‘‘அவர்கள் இந்த வீட்டுக்கு வந்து ஜன்னல்களை உடைத்து வீட்டினுள் நுழைவதற்கு முயன்றிருக்கின்றனர். ஆனால் அவர்களினால் முடியவில்லை.வீதியில் 100 பேர் மட்டில் நின்றிருக்கின்றனர். 8 - 10 பேர் இந்த வீட்டினுள் நுழைய முயன்றிருக்கின்றனர்’’. மேல்மாடி வீட்டில் இருந்த மகள் தாக்குதல் நடக்க முன்னர் கீழ்மாடிக்கு வந்திருக்கின்றார். தாக்குதல் நடக்கும்போது பிள்ளைகள் பயத்தால் அழுதனர் என அவர்கள் கூறினர். அந்தச் சத்தம் காதுகளைச் செவிடாக்கியது. ‘‘ஒரு புறம் பிள்ளைகள் அழுதார்கள். மறுபுறம் உடைக்கும் சப்தம்.’’அவர்கள் பொலிஸார் அங்கே இருந்திக்கின்றார்கள் என்பதை அவர்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். ஆனால் தொலைபேசி அழைப்பு வந்ததும் தாக்குதல் நடக்க முன்னர் பொலிஸார் அங்கிருந்து வெளியேறியிருக்கின்றனர்.

> ‘‘நாங்கள் வீட்டை விட்டு 11.30 - 12.00 மணியளவில் வெளியேறினோம். எங்கள் பொருட்களைப் பாதுகாக்கும் நோக்கம் எங்களுக்கு இருக்கவில்லை. எங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்கும் நோக்கம் மட்டுமே எங்களுக்கு இருந்தது. முதலாம் வகுப்பில் படிக்கும் எனது மகனுக்கு இன்னும் கொடுங்கனவுகள் வருகின்றன. சுமார் 2 வாரங்களாக சிறு பிள்ளைகள் அனைவரும் இரவில் தூக்கத்தில் அழுவதை வழமையாகக் கொண்டிருந்தனர்’’.

---

[30]அப்ரா நிவாஸ்,‘‘எரிக்கப்பட்ட சட்டகங்களினூடு: வெலேகடேயில் நிகழ்வுகளின் பின்னர்’’ , கிரவுன்ட் விவ்ஸ், 03/20/2018
https://groundviews.org/2018/03/20/through-the-scorched-frames-the-aftermath-in-welekade/

இவர்களின் உறவினரான முல்லேகமவை (பூஜாபிட்டிய பிரதேச சபைப் பிரிவைச்) சேர்ந்த வீட்டில் இருந்த மற்றொரு பெண் தனது அனுபவத்தினைப் பகிர்ந்துகொண்டார். பின்வருவது அவரின் கதையில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

> ''எனது வீட்டுக்கு எதுவும் நடக்காது என்ற தைரியம் எனக்கிருந்தது. முல்லேகமவில் அவ்வாறான சிறந்த உறவு எங்களுக்குள் இருந்தது.''
>
> ''கும்பலில் 200 முதல் 300 பேர் வரை இருந்தனர். அவர்களில் பலர் தங்களின் முகங்களை மூடியிருந்தனர். எனது வீட்டுக்கருகில் பஸ் ஒன்று நிறுத்தப்பட்டிருந்ததையும் நான் கண்டேன். கறுப்புக் கண்ணாடியாலான ஜன்னல்களைக் கொண்ட பெரிய சுற்றுலாப் பயணிகளுக்கான பஸ்.''
>
> ''தீயினை அணைக்க எஸ்டிஎப் எம்மை அனுமதிக்கவில்லை. என்னால் தீயினை அணைத்திருக்க முடியும். உயிரைப் பறிப்பதை விட அது மோசமானது. அதனால்தான் அவர்கள் வீடுகளுக்குத் தீ வைத்துள்ளனர்.''
>
> ''இது மீண்டும் நிகழ முடியும் என நாம் உணர்கின்றோம். குற்றத்தினை நிகழ்த்தியவர்கள் எவ்விதமான பின்விளைவுமின்றித் தப்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டால் இது மீண்டும் நிகழ்வது 100% நிச்சயமானது. நாம் முன்பு இருந்த விதமும் அவர்கள் இப்போது எம்மைப் பார்க்கும் விதமும், இந்நிகழ்வு மீண்டும் நிகழும் என்றே என்னை நினைக்கச்செய்கின்றது.''

வீட்டின் மேல்மாடிக்கு நெருப்பு வைத்த நபர் அந்த மாடி வீட்டுத் தொகுதியினைக் கட்டிய மேசனுடைய மகன் எனக் குடியிருப்பாளர்கள் கூறினர். தாக்குதல் நடத்தியவர்களில் பலர் குடியிருப்பாளர்களுக்குத் தெரிந்த மேசன்மாரும் உள்ளூர் முச்சக்கர வண்டிச் சாரதிகளும் என்பதைப் பள்ளிவாயல் சிசிடிவி பதிவுகள் காட்டின.

விசேட அதிரடிப் படையினை வரச்செய்து வீதியின் எதிர்ப்பக்கம் இருந்த சிங்களக் குடும்பம் இவர்களுக்கு உதவியது. மேலும் பிரச்சினைகள் ஏற்படலாம் என அச்சப்பட்டு எஸ்டிஎப் இவர்களை வீட்டினை விட்டுச் செல்லுமாறு கேட்டனர். ''நீங்கள் ஏன் இவ்வளவு தாமதமாக வந்தீர்கள்? எங்களைப் பாதுகாக்கவே நீங்கள் இருக்கின்றீர்கள்'' எனத் தான் எஸ்டிஎப்பிடம் கேட்டதாகவும் அதற்கு அவர்கள் பதிலேதும் கூறாமல் புன்முறுவல் பூத்ததாகவும் அக்குடும்பத்தின் தந்தை எம்மிடம் கூறினார்.
இப்பிரதேசத்தில் தாக்கப்பட்ட இரண்டாவது வீடு இதுவாகும். முதலாவது வீடு முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. கும்பல் வீட்டில் இருந்த அனைத்தையும் கொள்ளையடித்துவிட்டனர்.

அயல் வீட்டில் இருந்த பெண்மனி இச்சம்பவங்களால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் சம்பவம் நடந்து இரண்டு வாரங்களின் பின்னர் அதிர்ச்சியினால் இறந்துவிட்டதாக எம்மிடம் கூறப்பட்டது.

சம்பவம் நடந்த பின்னர் அவர்களுக்கு முன்பு உதவிய அயலவர்களைத் தவிர சகபாடிகள் எவரும் இவர்களைப் பார்க்க வரவுமில்லை அல்லது எதையும் கூறவுமில்லை. நல்லிணக்கம் ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன: பள்ளிவாயலில் ஒரு நிகழ்ச்சித்திட்டமும் பொக்கவல விஹாரையில் ஒரு நிகழ்ச்சித்திட்டமும் நடந்தன. இவ்வாறான விடயங்கள் மீண்டும் நடப்பதைத் தடுப்பதற்காக இளையோருக்கு அறிவூட்டும் திட்டம் ஒன்றும் இருந்தது. ஆனால் நடந்த சம்பவம் பற்றி யாரும் பேசவில்லை.

பொலிஸார் முறைப்பாடுகளை எழுதும்போது ''வீடுகளை உடைத்து உள்ளே நுழைந்தவர்களை – திருடர்கள்'' எனப் பதிவுசெய்ததாக எம்மிடம் கூறப்பட்டது. ''நாம் முறைப்பாடு கொடுக்கையில் இன சமயப் பதற்றங்களை அடிப்படையாகக் கொண்ட தாக்குதல் எனக் குறிப்பிட்டோம். ஆனால் அவர்கள் அவ்வாறு எழுதவில்லை. சிஐடியினரும் டிஐடியினரும் வாக்குமூலங்களை எழுதினர்.''

பிரதேசத்தில் 12 பேர் கைதுசெய்யப்பட்டனர். நாம் விஜயம் செய்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு இரண்டு விஹாரைகளிலும் இருந்து வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்தன. அத்துடன் விடுதலைக்கு உதவுமாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களிடமும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்தன. ''இந்த விடயம் சமாதானமாக முடிக்கப்படவேண்டும் என அவர்கள் கேட்கின்றனர். கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் இப்போது எம்மிடம் வந்து எமக்குத் தொந்தரவு செய்கின்றனர்'' என எம்மிடம் கூறப்பட்டது.

வெலேகட பிரதேசத்தில், வன்முறையானது பல சமுதாயங்கள் அவற்றின் சொந்த ஊர்களுடன் கொண்டிருந்த உறவினையும் இலங்கையில் பிரசைகள் என்ற ரீதியில் அவர்களின் நிலை தொடர்பான அவர்களின் புரிதலையும் தலைகீழாக மாற்றியுள்ளது. வன்முறை வீடுகளையும் வாழ்வாதாரங்களையும் அழித்து சிறுவர்களில் மன அதிர்ச்சி வடுக்களையும் ஏற்படுத்தியுள்ளது.

நிகழ்வுகள் நடந்து நீண்ட காலத்தின் பின்னரும் தமது வீடுகளை ஆட்கள் தாக்குவதாகச் சிறுவர்கள் தொடர்ந்தும் கொடுங்கனவுகளைக் காண்கின்றனர். வன்முறை நடந்து ஐந்து மாதங்களின் பின்னர் நாம் விஜயம் செய்த நேரத்தில் கூட பிள்ளைகள் மன உளைச்சல் ஏற்படுத்தும் கேள்விகளை - ''இன்று அவர்கள் எம்மைத் தாக்க வருவார்களா?'' எனக் கேட்பதாக எம்மிடம் கூறப்பட்டது:

**எந்தரதென்ன**

எந்தரதென்ன ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சிங்களக் கிராமங்களால் சூழப்பட்ட மிகப் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழும் ஒரு சிறு கிராமமாகும். இதில் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன: அவை எந்தரதென்ன, உளண்டுபிடிய மற்றும் ரஜபிஹில்ல என்பனவாகும். இப்பிரதேசம் 168 முஸ்லிம்குடும்பங்களைக் கொண்டுள்ளது. இக்குடும்பங்கள் எந்தரதென்னயிலேயே வசிக்கின்றன. 20 குடும்பங்கள் அயலிலுள்ள உளண்டுபிட்டியில் வசிக்கின்றன. அதிகமான முஸ்லிம்கள் வியாபாரம் மற்றும் விவசாயம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அதேவேளை, சிலர் வாழ்வாதாரத்திற்காக மேற்கு ஆசியாவுக்குச் சென்றுள்ளனர். சிங்கள மக்கள் பிரதானமாக வாசனைத் திரவியங்களைப் பயிர்செய்வதிலும் மரவேலை மற்றும் சீமெந்து ஆகியவற்றினைப் பயன்படுத்தும் கைவினைஞர்களாகவும் இருக்கின்றனர். மார்ச் 7 ஆம் திகதி காலையில் இக்கிராமம் தாக்கப்பட்டது.

நிகழ்விற்கு முன்னர் பிரதேசத்தில் பதற்றம் நிலவவில்லை என்றும் தமது அயலவர்களினால் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகள் வெளிப்படுத்தப்படவில்லை என்றும் அவர்கள் கூறினர். அவர்கள் மத்தியில் அனைத்தும் சிறப்பாகவே காணப்பட்டன. ஒருவர் மற்றவரின் திருமணத்திலும் மரணச் சடங்கிலும் பங்குபற்றினர். மத்திய மாகாணத்தில் பல முஸ்லிம்களுக்கு இருப்பது போன்று, பிரதேசத்தில் சில முஸ்லிம்களுக்கு சிங்களப் பெயர்கள் காணப்படுகின்றன. ஒழுங்கமைக்கப்பட்ட முஸ்லிம்களுக்கெதிரான குழுக்களும் அவதானிக்கத்தக்க அளவில் பிரசன்னமாகியிருக்கவில்லை. துவேஷ உணர்வுடைய ஒன்றிரண்டு பேர் இருந்திருக்கலாம் என்ற போதிலும் அவ்வாறான கருத்துக்களின் அடிப்படையில் எந்த விதமான ஒழுங்கமைப்பும் இருந்ததற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. வன்முறையின் பின்னர் சிங்கள மக்கள் கிராமத்திற்கு அடிக்கடி வருகை தரவில்லை. இவ்வாறான தாக்குதல் இக்கிராமத்தில் நடந்தது இதுவே முதற் தடவையாகும். அண்மையிலுள்ள அம்புல்புர விஹாரையின் விஹாராதிபதி தனது பிரதேசத்திலுள்ள யாரையும் தாக்குதல் நடத்த அனுமதிக்கப் போவதில்லை என அவர்களுக்கு உத்தரவாதம் வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், தாக்குதலில் தமது அயலவர்களுக்கும் உடந்தை இருக்கின்றது என அவர்கள் சந்தேகப்பட்டனர். தாக்குதல் நடத்தியவர்கள் கண்டி மக்களை விட வித்தியாசமானவர்களாகத் தோன்றியதுடன் அவர்கள் நிச்சயமாக வெளியாட்களாகும். எனவே அவர்களுக்கு வழி காட்டப்படாமல் இருந்திருந்தால் யாராலும் கிராமத்தினைக் கண்டுபிடித்திருக்க முடியாது. இது பிரபலமான கிராமமோ அல்லது பெரிய கிராமமோ அல்ல. அத்துடன் கிராமம் பிரதான வீதியிலும் அமைந்திருக்கவில்லை.

மார்ச் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் கண்டியில் பிரச்சினை நடந்த காரணத்தினால் எந்தரதென்ன மக்கள் அவதானமாக இருந்திருக்கின்றனர். மேலும் மார்ச் 6 ஆம் திகதி அவதானமாக இருக்கவேண்டும் என்றும் அவர்கள் நினைத்திருக்கின்றனர். அன்றைய தினம் பல அம்பியுலன்ஸ் வண்டிகளின் சைரன் ஒலி (sirens) அவர்களுக்குக் கேட்டிருக்கின்றது. என்ன நடந்தது என அவர்கள் மக்களிடம் கேட்டபோது முஸ்லிம்கள் குண்டெறிந்துவிட்டனர் என அவர்களிடம் கூறப்பட்டுள்ளது. இச்சூழமைவில் தமது கிராமம் இரவில் தாக்கப்படலாம் என அவர்களில் பலர் அச்சப்பட்டிருக்கின்றனர். பள்ளிவாயலுக்கு அருகில் இரண்டு பொலிசார் காவலுக்கும் நின்றிருக்கின்றனர். மார்ச் 6 ஆம் திகதி இரவு, அல்லது பெரும்பாலும் அடுத்த நாள் அதிகாலை, பிரதான பள்ளிவாயலின் பின்பகுதியிலுள்ள சிறிய அடக்கத்தலத்தின் மீது இரண்டு பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன. ஆனால் எதுவும் நடக்கவில்லை. இரவில் எதுவும் பெரிதாக நடக்காத காரணத்தினால், நகரத்திலுள்ள ஆண்கள் பலரும் வேலைக்குச் செல்லத் தீர்மானித்தனர். தாக்குதல் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பித்தது. இது எதிர்பாராத தாக்குதல் என்ற காரணத்தினால் கிராமத்துப் பெண்கள் அதிர்ச்சியடைந்தனர். தாக்குதல் நடத்திய குழுவினர் ரஜவெல்ல பிரதேசத்தில் இருந்து வெலெகடயினை நோக்கிப் பயணம் செய்ததாக அவர்கள் குறிப்பிட்டனர். வெலெகடயில் அன்றைய தினம் முன்னதாகக் கைக்குண்டு ஒன்று வெடித்திருக்கின்றது. சுமார் 30 பேர் கொண்ட முதலாவது குழுவினர் மு.ப 10:30 மணிக்கு வந்திருக்கின்றனர். மற்றைய குழுவினர் பின்னர் பி.ப 1:00 மணியளவில் வந்திருக்கின்றனர். இரண்டாவது குழு பெரிய குழுவாகக் காணப்பட்டதுடன் அதில் 75 முதல் 80 பேர் வரை காணப்பட்டனர். இக்குழுவினரில் மிகவும் இளம் வயதினர் இருந்ததாகவும் அவர்கள் ஒன்றில் மது போதையில் இருந்ததாக அல்லது போதை மாத்திரையினால் ஏற்படும் போதையில் இருந்ததாகக் கிராமத்தவர்கள் விபரித்தனர்.

குன்றொன்றின் பக்கமாகவே கிராமம் அமைந்துள்ளது. குன்றின் அடிவாரத்தில் இருந்து உச்சியிலுள்ள பள்ளிவாயலுக்கு 93 படிகள் காணப்படுகின்றன. இந்த 93 படிகள் வழியேயும் வீடுகள் காணப்படுகின்றன. தாக்குதலாளர்கள் எவ்வித சிரமமும் இன்றி இப்படிகளில் மேலும் கீழும்

ஓடக்கூடியதாக இருந்தனர் எனக் கிராமத்தவர்கள் குறிப்பிட்டனர். ''அவர்கள் அனைவரும் நன்கு ஒழுங்கமைக்கப்படடவர்களாகக் காணப்பட்டனர்'' என அவர்கள் குறிப்பிட்டனர். ஏனெனில் வெவ்வேறு குழுக்கள் வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தனர் என அவர்கள் குறிப்பிட்டனர். உதாரணமாக, சிலர் ஜன்னல் கண்ணாடிகளை உடைக்கும்போது சிலர் நீர் மற்றும் மின்சார மீட்டர்களை உடைத்தனர். மேலும் சிலர் வீட்டின் உள்ளே பொருட்களை அழித்தனர்.

நிகழப்போகும் தாக்குதல் பற்றி அறிவிக்கப்பட்டதும், பெண்கள் அவர்களின் குடும்ப ஆவணங்களை எடுத்து வீடுகளை விட்டு வெளியேறினர். தமது வீடுகளின் எதிரேயுள்ள குன்றின் மீது பெண்கள் ஒன்றுசேர்ந்து அங்கிருந்து தமது வீடுகளினுள் கும்பல் நுழைவதைப் பார்த்திருக்கின்றனர். முதலாவது குழுவினர் இரண்டு முச்சக்கர வண்டிகளிலும் எல்ப் (Elf)வேனிலும் வந்திருக்கின்றனர். தாக்குதல் நடத்த வந்தவர்கள் மிகவும் வயதில் குறைந்தவர்களாக இருந்தனர் என்றும் அவர்களின் செயற்பாடுகளில் மிகவும் துடிப்புமிக்கவர்களாக இருந்தனர் என்றும் பெண்கள் விபரித்தனர். சிறுவர்கள் குழுவாக ஒன்றுசேர்கையில், அவர்கள் பலம் பெறுகின்றனர் என நேர்காணப்பட்டவர்கள் நினைத்தனர். ''அவர்களுக்கு உரமேற்ற யாரோ ஏதோ செய்திருக்கின்றனர்.''

அவர்கள் குன்றின் மேல் ஏறி பள்ளிவாயலை நெருங்கியபோது சக்தியையும் ஆயுதங்களையும் இழந்துவிட்டது போல் தென்பட்டனர். அதனால் அவர்கள் தாக்கவில்லை. ஆனால் குன்றின் அடிவாரத்தில் இருந்த சிறிய பள்ளிவாயல் தாக்கப்பட்டு குர்ஆன்கள் எரிக்கப்பட்டன. ''இந்தப் பள்ளிவாயலை அவர்கள் அடுத்த தடவைக்கென விட்டுவைத்துள்ளனர் என நாம் உணர்ந்தோம். அவர்கள் அங்கிருந்து செல்கையில் அவ்வாறுதான் கூறிச் சென்றனர்.''

இந்த மக்களைப் பார்க்க வருபவர்களின் பங்களிப்புக்களினால் தான் இவர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். பேருவளை, காலி, மடவலை, நீர்கொழும்பு மற்றும் அக்குரணை போன்ற இடங்களில் இருந்து வந்தவர்கள் பணம் வழங்கியிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் முஸ்லிம்கள். சில தேசிய மட்ட அரசியல்வாதிகளும் பிரதேசத்திற்கு வந்திருக்கின்றனர். அநுர குமார திசநாயக்க அவர்களில் ஒருவர். ஆனால் வன்முறைக்கு முன்னர் ஏதாவது செய்யப்பட்டிருக்க வேண்டுமேயன்றி எல்லாம் முடிந்த பிறகு அல்ல எனக் கிராமத்தவர்கள் குறிப்பிட்டனர். நிகழ்வு முடிந்த பின்னர் பொலிஸாரும் இராணுவமும் வந்து பிரதேசத்தில் 3 நாட்கள் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அவர்கள் பள்ளிவாயலில் ஓர் அறையில் தங்கியிருந்தனர். கிராம மக்கள் அவர்களுக்கு உணவு வழங்கினர். பெரிய மோட்டார் சைக்கிள்களிலும் இராணுவத்தினர் வந்தனர். அவர்களைப் பார்க்கவே பயமாக இருந்தது எனக் கிராமத்தவர்கள் குறிப்பிட்டனர். கடைசி வெள்ளிக்கிழமை, மிகப் பெரிய இராணுவ வாகனம் வந்தது. ஏதோ யுத்தத்திற்குப் போகப் போவதைப் போல என எம்மிடம் அவர்கள் கூறினர்.

இது மீண்டும் நடக்கும் என அவர்கள் நினைக்கின்றனரா என நாம் கேட்டபோது அவர்கள் அதற்கு ஆம் என பதிலளித்தனர். இது நடக்க முடியுமாக இருந்தால் இதை விடப் பெரிய அனர்த்தம் இங்கே நடக்கும் சாத்தியம் உள்ளது என அவர்கள் வாதிட்டனர். ''அது நடக்கும் என நாம் எதிர்பார்க்கவேண்டும்'' என அவர்கள் கூறினர். அவர்களில் ஒருவர் பெரும் உணர்வுடன் பின்வருமாறு கூறினார்:

> ''நாம் போதிய அளவு சகித்துவிட்டோம் என நாம் நினைக்கின்றோம். நாம் வெறுமனே நின்றுகொண்டு வீடுகளை மீளக் கட்டுபவர்களுக்கு வேலை கொடுக்க முடியாது. நாம் ஒளியவும் விரும்பவில்லை. அடுத்த தடவை நாம் பொறுமையாக இருக்க எண்ணவில்லை. இவ்வாறு வாழ்வதை விடச் சாவதே மேல். இதன் பிறகு இனிமேல் எமக்கு எதிர்காலம் இல்லை. அரசாங்கம் எமக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும். அது அவர்களின் பொறுப்பு. அதில் இருந்து அவர்கள் தப்ப முடியாது. தாக்குதல் நடக்க முன்னர் பள்ளிவாயல் அருகில் இரண்டு பொலஸார் நின்றனர். சிறிய பள்ளிவாயலுக்கு பெற்றோல் குண்டுகள் எறியப்பட்டதைக் கூட அவர்கள் பார்த்தனர். அவர்கள் நினைத்திருந்தால் அதனைத் தடுத்திருக்க முடியும். நாம் வெறுமனே ஓர் அரசியல் கட்சியினைக் குறைகூற முடியாது. முழு அரசும் ஆட்சியிலுள்ள அனைவரும் இதற்குப் பொறுப்பானவர்கள். இச்சூழ்நிலையில் இருந்து அனைவரும் அரசியல் இலாபம் தேடுகின்றனரே தவிர யாருமே மக்களுக்கான தமது கடமைகளைச் செய்யவில்லை. ஆயுதப் படையில் இருந்து 10 பேரை அனுப்பியிருந்தால் அது போதுமானதாக இருந்திருக்கும்''.

தாக்குதல் நடத்தியவர்களை எதிர்த்து முகங்கொடுத்ததாக தமது அனுபவத்தினை விபரித்த எந்தரதென்னயைச் சேர்ந்த சில பெண்களின் வாக்குமூலத்தில் பின்வரும் விடயங்களை அறியமுடிந்தது:

> ''சுமார் 1 மணியளவில் தக்கியாவுக்கு (குன்றின் அடியில் இருந்த சிறு பள்ளிவாயல்) பெற்றோல் குண்டு எறியப்படுவது எமக்குக் கேட்டது. நாம்

சுவாலையினைப் பார்த்தோம். அதன் பின்னர் 2 மணியளவில் வந்த பொலிஸார் 3 மணிக்குச் சென்றுவிட்டனர். எமது ஆண்கள்தான் இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்தனர். எல்லாம் முடிந்து விட்டது என நாம் நினைத்தோம். அடுத்த நாள் காலையில் ஆண்கள் வேலைக்குச் சென்றுவிட்டனர். தாக்குதல் நடத்தக் கும்பலாக வருகின்றனர் என மகன் காலை 10:30 மணியளவில் தொலைபேசி அழைப்பு எடுத்தார். பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு காட்டுக்குள் தப்பி ஓடுமாறு எம்மிடம் கூறப்பட்டது. எமது வீடுகளை உடைக்கும் சத்தம் எமக்குக் கேட்டது. அவர்கள் வரும்போது கத்திக்கொண்டு வந்ததும் எமக்குக் கேட்டது. *சோனவனே வாங்கடா (தம்பிலா வரெல்லா), வெட்டுவோம், கொல்லுவோம்* என அசிங்கமாகக் கத்தியபடி வந்தது கேட்டது.நாம் அங்கே 12 மணி வரை இருந்தோம். அதன் பின்னர் சிங்கள மக்கள் வந்து தாக்குதல் நடத்தியவர்கள் போய்விட்டனர் என்றும் எமக்குப் போக முடியும் என்றும் கூறினர். நாம் ஒரு சிங்கள வீட்டின் பின்னால் நின்றுகொண்டிருந்தோம். சுமார் ஐந்து பேரளவில் வீடுகளுக்குச் சென்று என்ன நடந்திருக்கின்றது என்று பார்க்கத் தீர்மானித்தோம்.

நாம் மீண்டும் சென்றுகொண்டிருக்கையில் அவர்கள் மீண்டும் வருவது எமக்குக் கேட்டது. நாம் ஓடவேண்டியேற்பட்டது. என்னுடன் வந்தவர்களை விட்டு நான் பிரிக்கப்பட்டு வேறு திசையில் செல்லவேண்டி நேரிட்டது. பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு தாழ்வான புற்களினூடு நான் முன்னோக்கித் தவழ்ந்து செல்லவேண்டியிருந்தது. அவர்கள் கத்துவது எமக்குக் கேட்டது. *சோனவனுகள் காட்டுக்குள் ஓடுறானுகள் (தம்பிலா கெலட பனினவா*). அவர்கள் கையில் ஆயுதங்களுடனும் கோபமான முகங்களுடனும் எம்மை நோக்கி அசிங்கமாகத் திட்டியதை நான் கண்டேன். *சளார் சளார்* என உடைக்கும் சத்தமும் *புசு புசுவென* தீப்பற்றி எரிந்த சத்தமும் எனக்குக் கேட்டது.

நாம் காட்டில் இருந்து பிரார்த்தித்துக் கொண்டிருந்தோம். குடிப்பதற்கு ஒரு துளி நீர் கூட இன்றி நாம் 4 மணி வரை காட்டில் இருந்தோம். 3 வயதுப் பிள்ளையினால் சிறுநீர் கழிக்கக்கூட முடியவில்லை.

பின்னர் நிர்க்கதியானவர்களாக மூன்று நாட்கள் பாடசாலை முகாமில் கழித்தோம். அதிர்ஷ்டவசமாக எம்மில் யாரின் உயிரும் காபிர்களிடம் போகவில்லை''.

ஏதோ ஒன்றில் அடித்து அதிக சத்தமேற்படுத்துவதற்காகப் பெரிய கம்புகளுடனும் அச்சுறுத்தும் வகையில் கத்தியவாறும் தூசன வார்த்தைகளால் ஏசியவாறும் கும்பல் எவ்வாறு பெரும் சத்தத்துடன் வந்தனர் என்பதைப் பெண்கள் விபரித்தனர். கும்பல் வரத் தொடங்கியதும் தாம் குன்றின் மறு பக்கத்தில் இருந்த பெரிய வீட்டினுள் ஓடியதாக மற்றொரு குழுவினர் கூறினர். பெண்கள், பிள்ளைகள் என நூறு பேர் வரையில் வீட்டுக்குள் அடைந்துகொண்டனர். அவர்கள் சகல கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிவிட்டுக் காத்திருந்தனர். தாக்குதல் நடத்தியவர்கள் வெளியில் நடந்து செல்வது தமக்குக் கேட்டதாக அவர்கள் எம்மிடம் கூறினர்: *''சோனகனுகள் காட்டுக்குள் ஓடிவிட்டதாக அவர்கள் கூறினர்''. எங்கே அவர்கள்? அவர்கள் இங்கே இல்லை.*

''கராஜில் பழைய கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. கும்பலில் இருந்தவர்கள் அந்தக் காரை வெளியே எடுத்து அதனை எரித்தனர். நாம் வீட்டுக்குள் இருந்துகொண்டு வெளியேயுள்ள அவர்களின் காலடி ஓசையினைக் கேட்டோம். அவர்கள் வீட்டைச் சுற்றிப் பல தடவைகள் நடந்தனர். நாம் எல்லோரும் வீட்டுக்குள்ளேயே இருந்தோம். பிள்ளைகளைச் சத்தம் போடாமல் வைக்கவேண்டியிருந்தது. வெளியே இருந்த வந்த எல்லா வகையான சத்தத்தினையும் - *சர சர சரவெண*எம்மால் கேட்க முடிந்தது. அவர்கள் நாங்கள் உள்ளே இருப்பதைக் கண்டிருந்தால் அல்லது வீட்டை உடைத்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை எம்மால் கற்பனை செய்ய முடியாதுள்ளது.''

கும்பல் கடந்துசென்ற போது பெண்களடங்கிய ஒரு குழுவினர் அவர்களின் தோட்டத்தினுள் அகப்பட்டுக்கொண்டனர். கும்பலில் இருந்த இளைஞர்கள் அவர்களிடம்,''எம்மால் தாக்க முடியாமல் போனவர்களைத் தாக்க மீண்டும் வருவோம் என உங்களின் ஆட்களுக்குக் கூறுங்கள்!'' எனக் கூறியுள்ளனர்.

அவர்கள் மீண்டும் வருவார்கள் என்றும் பிரதான பள்ளிவாயலை விட்டுவைத்தது எதிர்காலத்தில் தாக்குவதற்கு என்றும் கிராமத்தவர்கள் எண்ணுகின்றனர்.

அவர்களில் ஒருவர், எவ்வாறாயினும் தாம் தொடர்ந்தும் மீளும் திறன் உடையவர்களாக இருப்போம் என்று கூறினார். ''நான் உங்களைச் சோதிப்பேன், அல்லாஹ் கூறியுள்ளான். ஆனால் முஸ்லிம்கள் உறுதியாக இருந்தால் நாம் தப்பிப் பிழைப்போம்.''

படையினர் இருந்தும் ஊரடங்கு போட்டும் கூட வன்முறையினைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. மார்ச் 6 ஆம் திகதி நள்ளிரவில் இருந்து அரசாங்கம் அவசரகால நிலையினைப் பிரகனடப்படுத்தியது[31]. இந்த நடவடிக்கை மனித உரிமைகள் சட்டத்தரணிகளாலும் அபிவிருத்தியியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களினாலும் கடுமையாகக் கண்டிக்கப்பட்டது. அரசாங்கம் அதற்கெதிரான விமர்சனங்களைப் பொருட்படுத்தாது பல சமூக ஊடக வலையமைப்புக்களைத் தடைசெய்தது. இந்த நடவடிக்கை பலருக்கும் ஆறுதலளித்தது[32]. மேலதிகப் பாதுகாப்பு நடவடிக்கையாகக் கண்டி மாவட்டத்தில் பாடசாலைகள் காலவரையறையின்றி மூடப்பட்டன[33]. மூன்று விசேட பொலிஸ் அணிகளைப் பொலிஸ் மாஅதிபர் கண்டிக்கு அனுப்பிவைத்தார். இந்த அணியில் மூன்று பிரதிப் பொலிஸ் மாஅதிபர்களும் மூன்று பொலிஸ் அத்தியட்சகர்களும் உள்ளடங்கினர்[34]. சகல பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விடுப்புக்களை இரத்துச் செய்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன[35]. இந்த நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகையில் மெனிக்ஹின்ன பிரதேசத்தில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக ஏழு பேர் கைதுசெய்யப்பட்டனர்[36]. இதேவேளை,முஸ்லிம்களுக்கு எதிராககண்டியில் தலைவிரித்தாடும் வன்முறை உடனடியாக முடிக்கப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்தாவிட்டால், பிரதமர் ரனில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுமிடத்து அதற்கு ஆதரவாகத் தாம் வாக்களிக்கப்போவதாக முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அச்சுறுத்தினர்.[37]

மார்ச் 8 ஆம் திகதி காலையில் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார புதிய சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக நியமிக்கப்பட்டார்[38]. அன்றைய தினமே, அம்பாறையில் சிங்கள நபர்களுக்குப் பரிமாறப்பட்ட உணவில் கண்டெடுக்கப்பட்ட துணிக்கைகள் மாக்கட்டிகளே தவிர வேறெதுவும் இல்லை என அரசாங்கப் பகுப்பாய்வாளர்களினால் உறுதிப்படுத்தக்கூடியதாக இருந்தது[39]. பிப 6.30 மணியில் இருந்து ஆரம்பிக்கும் வகையில் 12 மணித்தியால ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதுடன் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட அதிரடியான நடவடிக்கைகளின் விளைவுகள் தென்பட ஆரம்பித்தன. தாக்குதல்களின் எண்ணிக்கைகள் குறைவடைய ஆரம்பித்து வன்முறைகளின் தீவிரம் தனிய ஆரம்பித்தது.''கண்டிக்கு வெளியே சில இடங்களில் நிறுவனங்களின் மீது மக்கள் கற்களை எறிந்தமை போன்ற சில சிறிய சம்பவங்களைத் தவிர'' நிலைமை கட்டுப்பாட்டினுள் உள்ளதாக

---

[31]யூசுப் ஆரிப்,''அரசாங்கம் 10 நாட்களுக்கு அவசரகால நிலையினை அமுல்படுத்துகின்றது'', அத தெரண, 6 மார்ச் 2018 http://www.adaderana.lk/news/46261/govt-to-declare-state-of-emergency-for-10-days

[32]ரோசி பெர்பர்,''அவசரகால நிலையினைப் பிரகனடப்படுத்திய பின்னர் இலங்கை பேஸ்புக், இன்ஸ்டகிரம் மற்றும் வட்ஸ்அப்பினைத் தடைசெய்துள்ளது,'' *பிஸ்னஸ் இன்ஸைடர்*, 8 மர்ச் 2018
http://www.businessinsider.com/sri-lanka-bans-facebook-to-stopviolence-2018-3

[33]யூசுப் ஆரிப்,''கண்டிப் பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன'' அத தெரண, 7 மார்ச் 2018 http://www.adaderana.lk/news/46279/kandy-schools-closed-until-further-notice

[34]யூசுப் ஆரிப், ''3 விசேட பொலிஸ் அணிகளை பொலிஸ் மாஅதிபர் கண்டிக்கு அனுப்புகின்றார்'' அத தெரண, 7 மார்ச் 2018
http://www.adaderana.lk/news/46275/igp-dispatches-3-special-police-teams-to-kandy

[35]யூசுப் ஆரிப்,''சகல பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விடுப்புக்கள் இரத்து,'' அத தெரண, 7 மார்ச் 2018 http://www.adaderana.lk/news/46285/leave-of-all-police-officers-cancelled

[36]மனுஷி சில்வா,''கண்டி நிர்வாக மாவட்டத்தில் பொலிஸ் ஊரடங்கு மீண்டும் அமுல்'' அத தெரண,7 மார்ச் 2018
http://www.adaderana.lk/news/46273/police-curfew-in-kandy-administrative-district-re-imposed

[37]யொஹான் பெரெரா மற்றும் அஜித் சிறிவர்தன,''வன்முறை கட்டுப்படுத்தப்படாவிட்டால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு எதிராக வாக்களிக்கலாம்: ஹரீஸ்,'' டெய்லி மிரர்,7 மார்ச் 2018 http://www.dailymirror.lk/article/Muslim-MPs-may-vote-against-PM-if-not-violencecontrolled-Harees-146915.html

[38]வன்முறை கட்டுப்படுத்தப்படாவிட்டால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு எதிராக வாக்களிக்கலாம்: ஹரீஸ்,'' டெய்லி மிரர்,7 மார்ச் 2018
http://www.dailymirror.lk/146915/வன்முறை கட்டுப்படுத்தப்படாவிட்டால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு எதிராக வாக்களிக்கலாம், ஹரீஸ்
''சரத் பொன்சேகா புதிய சட்டம் ஒழுங்கு அமைச்சர் நியமனத்தை கண்டிக்கிறார்'' டெய்லிமிரர்,8மார்ச் 2018

[39]இந்திக ராமநாயக்க மற்றும் தரிந்து ஜயவர்தன,''அம்பாறை: மாப்பொருள் கட்டிகள், கருத்தடை இரசாயனம் அல்ல – அரசாங்கப் பகுப்பாய்வாளர்'', டெய்லி மிரர்,8 மார்ச் 2018http://www.dailymirror.lk/article/Ampara-Carbohydrate-clumps-notsterilizing-chemical-Govt-Analyst-146954.htm

அன்றைய தினம் மாலை பிரதமர் ரனில் விக்கிரமசிங்க உறுதிப்படுத்தினார். கிரிஉல்ல, குருவிட்ட மற்றும் வெலிகம போன்ற இடங்களில் இருந்து சிறு சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்பட்டன.[40] இச்சந்தர்ப்பத்தில் மிகவும் அச்சம் நீக்கியது அமித் வீரசிங்கவின் கைதாகும்.[41] அமித் வீரசிங்கவும் ஏனைய 9 சந்தேக நபர்களும் திகனவிலும் பூஜாபிடியவிலும் வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டனர்[42]. இத்துடன் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 81 ஆகியது.[43] இவர்களுள் 10 பேர் படைப் பணியாளர்கள் (அனேகமாக எஸ்டிஎப் மற்றும் / அல்லது பொலிஸ்). இந்தப் பத்துப் பேரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார். வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 71 பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் நான்கு பேர் ஊரடங்கை மீறியதற்காகக் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.[44]

மார்ச் 9 ஆம் திகதியளவில் பதற்றம் தணிந்திருந்தாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. கண்டி மாவட்டத்தில் அமைதியினைப் பேணுவதற்காக 3,000 பொலிஸ் அதிகாரிகளும் 2,500 இராணுவத்தினரும் 600 கடற்படையினரும் குவிக்கப்பட்டனர். அத்துடன் பி.ப 8:00 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் 9 மணித்தியால ஊரடங்கும் அமுல்படுத்தப்பட்டது[45]. வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது சேதமாக்கப்பட்ட சொத்துக்களை மீளநிர்மாணிப்பதற்கு உதவுவதற்காகச் சிறு தொகை ஆரம்ப நட்டஈடு அவர்களுக்கு வழங்கப்படும் எனப் பிரதமர் ரனில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.பிரதமரின் விசேட கூற்றின் போது சமூக ஊடகத்தில் வேண்டுமென்று பரப்பப்பட்ட தவறான தகவல்களே வன்முறை பரவக் காரணமாக அமைந்தன என அவர் கூறினார்.[46] தவறான தகவல்களைப் பரப்புவோரைக் கண்டுபிடித்தல் தொடர்ந்தபோது, இவ்வாறான தகவல்களைச் சமூக ஊடகத்தில் பரப்பியதற்காக கொழும்பில் 17 மற்றும் 18 வயதுடைய இருவர் கைதுசெய்யப்பட்டனர்.[47] மார்ச் 9 ஆம் தகிதி வெள்ளிக்கிழமை, இறுதி ஊரடங்கு காலை 5 மணிக்குத் தளர்த்தப்பட்ட அதேவேளை சமூக ஊடகத்தினை அணுகுதலும் இணையத் தொடர்பும் தொடர்ந்தும் ஒழுங்கற்ற முறையில் காணப்பட்டன. ஆனால் வன்முறைச் செயற்பாடுகள் பூரணமாக நிறுத்தப்பட்டன.

---

40 "நிலைமை கட்டுப்பாட்டில், கலகம் பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது: பிரதமர்" டெய்லி மிரர்,8 மார்ச் 2018
http://www.dailymirror.lk/article/Situation-under-control-riots-have-dealt-a-huge-blow-to-economy-PM-146980.html

41"கண்டி இன வன்முறை: பிரதான சந்தேக நபர் கைது", டெய்லி நியுஸ், 9 மார்ச் 2018
http://www.dailynews.lk/2018/03/09/local/145064/kandy-communal-violence-main-suspect-arrested

42யூசுப் ஆரிப்,"கண்டிச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் கைது," அத தெரண, 8 மார்ச் 2018
http://www.adaderana.lk/news/46301/main-suspect-in-kandy-incident-arrested

43தர்ஷன சஞ்சீவ,"கண்டி வன்முறை தொடர்பில் 81 சந்தேக நபர்கள் கைது, நான்கு பேர் ஊரடங்கின் போது" டெய்லி மிர்ரர், 8 மார்ச் 2018
http://www.dailymirror.lk/article/-suspects-arrested-over-Kandy-violence-four-during-curfew-146962.html

44Ibid

45யூசுப் ஆரிப்,"கண்டி நிர்வாக மாவட்டத்தில் இரவு நேர ஊரடங்கு," அத தெரண, 9 மார்ச் 2018
http://www.adaderana.lk/news/46324/curfew-in-kandy-administrative-district-during-the-night

46பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் நட்டஈடு – பிரதமர்," அத தெரண, 9 மார்ச் 2018
http://www.adaderana.lk/news/46311/compensation-for-victims-soon-pm

47கேசல டயஸ், சமூக ஊடகத்தின் மூலம் சமூக உறவினைக் குலைத்தமைக்காக இரண்டு இளைஞர்கள் கைது" நியுஸ் பெஸ்ட், 9 மார்ச் 2018
https://www.newsfirst.lk/2018/03/09/சமூக ஊடகத்தின் மூலம் சமூக உறவினைக் குலைத்தமைக்காக இரண்டு இளைஞர்கள் கைது/

## அத்தியாயம் 3

## அக்குரணை, 8 ஆம் கட்டை பற்றிய சம்பவக் கற்கை (17 மார்ச் 2018)

அக்குரணை, 8 ஆம் கட்டைப் பிரதேசத்தில் நடைபெற்ற வன்முறை பற்றிய பல்வேறு கண்ணோட்டங்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. பிரதேசத்தில் அயல் கிராமமான கோணகலகலவைச் சேர்ந்த இரண்டு நபர்கள் வன்முறையில் பங்குபற்றியமைக்காகக் கைதுசெய்யப்பட்டனர். மேலும், பிரதேசத்தின் கிராம சேவையாளர் வன்முறையில் பங்குபற்றியமைக்காக அல்லது குறைந்தபட்சம் வன்முறைக்கு உதவி உடந்தையாக இருந்தமைக்காகப் பிரதேசத்தினைச் சேர்ந்த பல முஸ்லிம்கள் அவர் மீது குற்றஞ்சாட்டியிருந்தனர்.அக்குரணை முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பிரதேசமாக இருந்தபோதிலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் கோணகலகல விஹாரையினை அண்டியும் கணிசமான எண்ணிக்கையில் சிங்கள மக்கள் வாழ்கின்றனர். பிரதேசத்தின் சிங்கள மற்றும் முஸ்லிம் சமுதாயத்திற்குத் தான் சமமான முக்கியத்துவம் வாய்ந்தவர் என விஹாரையின் பிக்கு கருதுபவராகக் காணப்பட்டார். 8 ஆம் கட்டை சமுதாய மக்களையும் கோணகலகல விஹாரையின் பிக்குவினையும வன்முறையில் பங்குபற்றினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆராச்சியினையும் எம்மால் நேர்காண முடிந்தது. வன்முறை இரண்டு கிராமங்களிற்கும் அழிவினை ஏற்படுத்தி அவற்றின் நாளாந்த வாழ்வினைச் சீர்குலைத்திருக்கின்றது. மேலும் கிராமங்களின் இனத்துவ மற்றும் சமய உறவுகளில் காணப்படும் பல பிளவுகளை வெளிச்சமாக்கியிருக்கின்றது.

மேலே குறிப்பிட்டதைப் போல், மார்ச் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் வன்முறை ஆரம்பித்ததுடன் திகன மற்றும் அண்டியுள்ள பிரதேசங்கள் தாக்கப்பட்டுப் பள்ளிவாயல்களும் வீடுகளும் எரிக்கப்பட்டு வியாபாரங்கள் அழிக்கப்பட்டன. வெலெகடே விஹாரை தாக்கப்பட்டு அதன் பிக்கு *(ஹாமதுருவோ)* படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்ற வதந்தி மார்ச் 7 ஆம் திகதி பரப்பப்பட்டதாக 8 ஆம் கட்டை மக்கள் எம்மிடம் கூறினர். அம்பத்தென்னே பள்ளிவாயல் தாக்கப்பட்டதாக மற்றுமொரு வதந்தி பரப்பப்பட்டது. 8 ஆம் கட்டையில் பிரச்சினை ஏற்படலாம் என்ற வதந்தியும் நிலவியது. உண்மையில் மார்ச் 7 ஆம் திகதி அக்குரணை முழுவதும் பதற்றம் நிலவியது. மு.ப 11 மணியளவில் மக்கள் மெது மெதுவாகத் தங்கள் கடைகளை மூடத் தொடங்கினர். பி.ப 12:30 மணியளவில் அனைத்துக் கடைகளும் மூடப்பட்டுவிட்டன. கோணகலகல கிராமத்தில் இருந்து மக்கள் பஜாருக்கு வருவதும் போவதுமாக, வருவதும் போவதுமாக இருந்ததைத் தான் கண்டதாக ஒரு நபர் குறிப்பிட்டிருந்தார். ''பி.ப 12.45 மணியளவில் விஹாரையின் மணி ஒலித்ததை நாம் கேட்டோம்'' என எம்மிடம் கூறினர்.

8 ஆம் கட்டை மன்சூர் ஹாஜியாரின் வீட்டில் நாம் சந்தித்தவர்கள் எம்மிடம் கூறிய கதைகள், அச்சந்தர்ப்பத்தில் நிலவிய பதற்றத்தினையும் பிரதேசத்தின் முஸ்லிம்களுக்கு உண்மையாக இருந்த வன்முறையின் எதிர்பார்ப்பினையும் சுட்டிக்காட்டின.12:45க்கு மணி ஒலித்தமை அபாய முன்னறிவிப்பாகவும் வெடிக்கவிருந்த திட்டமிடப்பட்ட வன்முறை பற்றிய முன்னெச்சரிக்கையாகவும் கருதப்பட்டது. நிகழ்ந்த வன்முறையில் விஹாரை உடந்தையாக இருந்தது என இம்மக்கள் பார்த்ததை விஹாரையில் மணி ஒலித்த கதை சுட்டிக்காட்டுகின்றது.

மற்றொரு நபர் தானும் இன்னும் ஐந்து பேரும் கஸ்ஸாலி ஹாஜியாரின் வீட்டில் ஒன்றுகூடியதாகக் குறிப்பிட்டார். தனது பொலிஸ் பிரிவினில் எதுவும் நடக்கத் தான் அனுமதிக்க மாட்டேன் என அளவத்துகொட நிலையப் பொறுப்பதிகாரி ஜயதிலக்க கூறியதாக மற்றொரு நபர் குறிப்பிட்டார்:

> ''ஆனால் இதே கதைதான் திகனவிலும் சொல்லப்பட்டது. இதனால் நாம் இக்கதையினை நம்பவில்லை. கோணகலகல பிரதம விஹாராதிபதியினை நாம் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்தோம். ஆனால் அவர் அதற்கு பதிலளிக்கவில்லை. பொஹொடுவ கட்சியில் இருந்து புதிததாகத் தேர்வுசெய்யப்பட்ட உறுப்பினரான சமிந்த என்பவரை எமக்குத் தெரிந்திருந்தது. நாம் அவரை அழைத்தபோது அவர் எம்மிடம், பாயிஸ், மக்கள் எனக்கு வாக்களித்திருக்கலாம். ஆனால் நான் இந்த விடயங்களைப் பற்றி நான் பேசினால் அவர்கள் கேட்கப் போவதில்லை. என்னால் எதுவும் செய்ய முடியாது. அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் நாம் வீட்டில் இருந்தோம். இச்சந்தர்ப்பத்தில் எமக்கு வந்த தொலைபேசி அழைப்பில் கோணகலகல கிராமத்தின் எல்லையான குருகொடவில் கத்திகளுடனும் பெற்றோல் குண்டுகளுடனும் கும்பல் சேர்ந்து வருவதாக எம்மிடம் கூறப்பட்டது. அவர்கள் தங்கள் முகங்களை மூடிக்கொண்டு சத்தம் போட்டுக் கத்திக்கொண்டிருப்பதாக எம்மிடம் கூறப்பட்டது.''

புதிதாகத் தேர்வுசெய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளுக்கு அழைப்பு எடுத்தமை பற்றிய மற்றும் அவர்கள் தங்களால் உதவ முடியாமையினை ஒப்புக்கொண்டமை பற்றிய குறிப்புக்கள் அழுத்தமானவையாகும். இந்தக் கதைகளைக் கூறுகையில் மக்கள் சுட்டிக்காட்டியது என்னவெனில், பொதுவாக அமைதியினைப் பேணுவதற்குப் பங்களிப்பு வழங்கும் சிங்கள சமுதாய உறுப்பினர்களால் - உள்ளூர்ச் சமுதாய அரசியல் கட்சிக்காரர்களால் இச்சந்தர்ப்பத்தில் எப்பிரயோசனமும் ஏற்படவில்லை என்பதாகும்.இனச்சமய அடையாளத்திற்கு வெளியேயான உள்ளூர் வலையமைப்பு வன்முறை நிகழ்வினைத் தடுக்கச் செயற்திறன்மிகு முறையில் இயங்கவில்லை.

நாம் கலந்துரையாடல் நடத்திய வீட்டு உரிமையாளரான திரு மன்சூர் 8 ஆம் கட்டைச் சமுதாயத்தில் மிகவும் பிரபலமான ஒருவர் என்பதுடன் தனது சகோதரருடன் சேர்ந்து அக்குரணயில் உள்ள பாரிய தளபாடக் காட்சியறைகளில் ஒன்றின் உரிமையாளராக இருக்கும் வியாபாரியும் ஆவார். கோணகலகல விஹாரையின் பிரதம விஹாராதிபதியினைத் தாம் அழைத்ததாகவும் அவர் உடனடியாக வந்ததாகவும் திரு மன்சூர் குறிப்பிட்டார். திரு மன்சூரின் தளபாடக் காட்சியறையினைக் கும்பல் தாக்கி எரித்ததை அவர்கள் அவதானித்தனர். திரு மன்சூருக்கு உயர் இரத்த அழுத்தம் இருக்கின்றது என அவரின் உடல்நலக் குறைவினை அறிந்திருந்த சங்கைக்குரிய விஹாராதிபதி மன்சூரின் கைகளைப் பிடித்தபடி ''நெருப்பைக் கொண்டு நெருப்புடன் போரிட வேண்டாம்''எனக் கூறினார். திரு மன்சூர் விஹாராதிபதியுடன் நெருக்கமானவராகக் கருதப்பட்டார். எம்முடன் பின்பு பேசிய பிக்கு கும்பல் கடையினைத் தாக்கியதைத் தன்னால் தடுக்க முடியாமை பற்றி மனம் வருந்தினார். விலையுயர்ந்த மரத் தளபாடங்களை விற்கும் அந்தக் கடை முழுவதுமாக அழிக்கப்பட்டது.

அன்று நடந்த நிகழ்வுகளை விபரித்த ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> ''பஜாரில் உள்ள கடைகளைக் கூட்டத்தினர் தாக்கத் தொடங்கினர். அவர்கள் கற்களை எறிந்து ஜன்னல்களை உடைத்து பெற்றோல் குண்டுகளை உள்ளே எறிந்தனர். ஆனால் அவர்கள் பள்ளிவாயலுக்குள் வர முன்னர் நாங்களும் ஏற்பாடுகளைச் செய்துகொண்டு அவர்களுக்குக் கற்களை எறிந்து அவர்களைத் துரத்தினோம். சற்று நேரத்தில் அவர்களை மீண்டும் கோணகலகல நோக்கி நாம் பின்வாங்கச் செய்தோம். இச்சந்தர்ப்பத்தில் பொலிசார் வந்தனர். வாகனத்தில் இருந்து இறங்கிய நிலையப் பொறுப்பதிகாரி வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். அப்போது எல்லோரும் கலையத் தொடங்கினர். அங்கே வந்த விசேட அதிரடிப் படையினர் எமது இளைஞர்களையும் கலைந்து போகச் சொன்னது.''

பொலிசாரும் உதவி அரசாங்க அதிபரும் தீயணைப்புப் படையும் ஒரே நேரத்தில் வந்தனர். இச்சந்தர்ப்பத்தில் அதிகாரிகள் இரண்டு குழுக்களுக்கும் இடையில் தடையினை ஏற்படுத்தி அவர்களுக்கிடையிலான சண்டை உக்கிரமடைவதைத் தடுத்து குழுக்களை அமைதிப்படுத்திக் கலைந்து போகச் செய்தனர். தீயணைப்புப் படை வந்தபோதும் தீயினை அணைக்க தீயணைப்பு இயந்திரத்தில் நீர் இருக்கவில்லை. (வன்முறைக்கு உடந்தையாக இருந்தமைக்கான மேலதிக உதாரணமாகவே இதனை 8 ஆம் கட்டை மக்கள் பார்த்தனர். வாகனத்தில் நீர் இருக்கின்றதா எனப் பரிசோதிக்க மறந்துவிட்டதாகச் சாரதி குறிப்பிட்டார்).

8 ஆம் கட்டைக் குடியிருப்பாளர்களால் நடத்தப்பட்ட பதில் தாக்குதல் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். முஸ்லிம் கடைக்காரர்கள் கற்களையும் கம்புகளையும் கொண்டு தங்களைத் தயார்படுத்தி பஜாரில் முஸ்லிம் கடைகளைத் தாக்கிச் சேதப்படுத்த வந்த கும்பலை விரட்டக்கூடியதாக இருந்திருக்கின்றனர். இந்த எதிர்த் தாக்குதலில் முஸ்லிம் தனிநபர்கள் சிங்களவர்களுக்குச் சொந்தமான கடைகளுக்குத் தீ வைத்தனர் எனச் சாட்சிகள் குறிப்பிட்டனர். பொலிஸாரும் அதற்குச் சற்றுப் பின்னர் விசேட அதிரடிப் படையினரும் கூட்டத்தைக் கலைக்க வராதிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பது தெளிவற்றதாக இருக்கின்றது. எதிர்காலத்தில் இவ்வகையான நிகழ்வுகளில் முஸ்லிம்களின் தெரிவுசெய்யப்பட்ட பதிற்செயற்பாடு எதிர்த்துப் போராடுவதாகவே இருக்கும். பெரிய அளவிலானதும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான எதிர்த்தாக்குதலின் விளைவு என்னவாக இருந்திருக்கும்? தமது கிராமத்தில் ஏதாவது நடந்தால், பொலிஸாரினால் எப்பயனும் இருக்காது என்பது பற்றி மக்கள் உணர்ந்திருக்கின்றனர். மார்ச் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் திகன மற்றும் ஏனைய இடங்களின் உதாரணங்கள் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையின் போது பொலிஸாரின் செயற்பாடின்மைக்கான உதாரணங்களாகவே எம்மிடம் கூறப்பட்டன. 8 ஆம் கட்டையில் வன்முறையினை நிறுத்த விசேட அதிரடிப் படையினர் வருவதற்குத் தாமதமானது தொடர்பாக தாம் மகிழ்ச்சியடைவதாக அவர்கள் எம்மிடம் கூறினர். தமக்கு ஏற்பட்ட சேதம் 20 சதவிகிதமாக இருந்தால், விசேட அதிரடிப் படையினர் இருந்திருந்தால்

தமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சேதம் 80 சதவிகிதமாக இருந்திருக்கும் என அவர்கள் கூறினர். (வெலேகடே பிரதேசத்தில் முஸ்லிம்கள் அவர்களின் பிரதேசத்தில் இருந்து வெளியேற வேண்டும் என விசேட அதிரடிப் படையினர் வற்புறுத்தியமை அப்பிரதேசத்தில் வீடுகளுக்கும் வியாபாரங்களுக்கும் ஏற்பட்ட பாரிய சேதங்களுக்கான நேரடிக் காரணமாகப் பார்க்கப்படுகின்றது).

இரண்டு கிராமங்களுக்கும் இடையிலான உறவினைப் பற்றி நாம் விசாரித்தபோது,கோணகலகல கிராம மக்கள் தமக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என 8 ஆம் கட்டை கிராம மக்கள் முதலில் எம்மிடம் கூறினர். அவர்களில் பலர் தங்களின் வீடுகளிலும் கடைகளிலும் (8 ஆம் கட்டை) வேலை செய்ததாகவும் தம்மிடம் அடிக்கடி கடனுக்குக் காசு வாங்கியதாகவும் வேறு வகையான உதவிகளைப் பெற்றுக்கொண்டதாகவும் குறிப்பிட்டனர். மேலதிக தகவல்களை நாம் கோரியபோது, இரண்டு கிராமங்களுக்கும் இடையில் சாதி வித்தியாசங்கள் இருந்தமை தெரியவந்தது. அதாவது சிங்களக் கிராமத்தில் ஒதுக்கப்பட்ட சாதியினர் வாழ்கின்றனர். கடை எரிக்கப்பட்ட ஹாட்வெயார் உரிமையாளர் ஒருவர் குறிப்பிடுகையில், தனது கடையினைத் தாக்கியவரைத் தனக்கு நன்றாகத் தெரியும் என்றும் அவர்களுக்கு இடையிலான உறவு நன்றாகவே இருந்ததாகவும் கூறினார். தாம் இருவரும் ஒரே வியாபாரத்தினைச் செய்துவந்ததாகவும் சில காலம் தமக்குள் வியாபாரப் போட்டி இருந்ததாவும் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், தன்னுடன் போட்டியிட்டவரின் வியாபாரம் செழிக்கவில்லை என்றும் கடைசியில் அவர் வியாபாரத்தினைக் கைவிடவேண்டி வந்தது என்றும் குறிப்பிட்டார். அவருடன் போட்டியிட்டவருக்கு ஏன் அவ்வாறு நடந்தது என நாம் கேட்டபோது அவருக்குப் ''போதிய அறிவு இருக்கவில்லை'' என்றும் பாதிக்கப்பட்ட நபர் தனது வியாபாரத்தினைப் பல்வகைமைப்படுத்திய போது அவரின் போட்டியாளர் அவ்வாறு செய்யவில்லை என்றும் எம்மிடம் கூறப்பட்டது. சற்றுத் துருவிக் கேட்டபோது, வன்முறை வழமையானதுதான் என்றும் அவை இடைக்கிடை காலத்திற்குக் காலம் நடப்பவைதான் என்றும் அறியக் கிடைத்தது. ''நாட்டில் எங்கேயாவது முஸ்லிம்கள் தொடர்புபடும் ஏதாவது ஒன்று நடந்தால், நாம் அதனை இங்கே உணர்வோம்'' என ஒருவர் கூறினார். ''இது 60களில் இருந்து நடைபெறுகின்றது.''

இரண்டு கிராமங்களுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி முன்னாள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு நன்கு தெரியும் என்றும் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் அவர் கெட்டிக்காரர் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும் புதிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளூர்ப் பிரச்சினைகள் பற்றி அறியாதவராகவும் அல்லது அது தொடர்பாகக் கூருணர்வு அற்றவராகவும் இருந்தார். உதாரணமாக, கிராமத்தினை அணுகக்கூடிய கும்பலைத் தடுக்க 8 ஆம் கட்டைக்கும் கோணகலகலவுக்கும் இடையிலான எல்லையில் உள்ள சில முக்கியமான இடங்களில் சில பொலிஸ் அதிகாரிகளைக் கடமையில் நியமிக்குமாறு பௌத்த பிக்கு அவரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆனால் இந்த வேண்டுகோளுக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செவிமடுக்கவில்லை. வன்முறை நடக்கும்போது கூட கிராமத்திற்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வெறும் இரண்டு கான்ஸ்டபிள்களுடனேயே வந்தார்.

**கோணகலகல ரஜமஹ விஹாரய (அக்குரணை 8 ஆம் கட்டைக்கு அடுத்ததாக உள்ள கிராமத்தில் உள்ள விஹாரை)**

8 ஆம் கட்டை பள்ளிவாயல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் கோணகலகல விஹாரையின் பிரதம பிக்குவினை எமக்கு அறிமுகப்படுத்தினார். பிரதம பிக்குவை நாம் நேர்கண்டபோது எமது இன அடிப்படையில் எம்மை அறிமுகப்படுத்துமாறு எம்மிடம் கூறப்பட்டது. அவர் பல்கலைக்கழகத்தில் அதுரலிய ரத்தன தேரருடன் கற்றதாக எம்மிடம் பெருமையாகக் கூறினார். பேருவளை போன்ற இடங்களில் பெரிய குழப்பங்கள் ஏற்பட்ட போதிலும் அக்குரணையில் ''அவ்வாறான நிகழ்வுகள்'' ஒருபோதும் நடக்கவில்லை என குறிப்பிட்டார். (சங்கைக்குரிய தேரர் 8 ஆம் கட்டை மக்களினால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குக் காலம் நடக்கும் குழப்பங்கள் பற்றிக் குறிப்பிடவில்லை). இந்தத் தடவை, தவிர்த்திருக்கக்கூடிய பிரச்சினை நடப்பதற்கான காரணம் இரண்டு தரப்பினாலும் முன்னெடுக்கப்பட்ட இனவாத/ தேசியவாத அரசியல் என அவர் கூறினார். பொதுவாக இவ்வகையான பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க மாவட்டச் செயலாளரும் பொலிஸாரும் விஹாரையும் ஒன்றுசேர்வது வழக்கம். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க பொலிஸ் ஆலோசனைக் குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இப்பிரதேசத்திற்குப் புதியவர் என்றும் தான் கூறியதை அவர் செவிமடுக்கவில்லை என்றும் அத்துடன் அவர் சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் பிரதான பிக்கு எம்மிடம் கூறினார். பயப்பட வேண்டியதில்லை என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பள்ளிவாயலிலும் கூடக் கூறியிருக்கின்றார். வன்முறை அச்சுறுத்தலுக்கான அவரின் பதிற்செயற்பாட்டினை விபரித்த பௌத்த பிக்கு பின்வருமாறு கூறினார்:

> ''பிரச்சினை பற்றி நாம் மார்ச் 6 ஆம் திகதி கேள்விப்பட்டோம். மார்ச் 7 ஆம் திகதி மாலை 5 மணிக்கு ஊரடங்கு அமுல்படுத்தப்படவேண்டும் என

> நாம் விரும்பினோம். ஆனால் பி.ப 1.30 மணியளவில் வீடு ஒன்றுக்குத் தீ மூட்டப்பட்டது. எல்லையில் 3 அல்லது 4 பேரைப் போடுமாறு நான் ஓஐசியிடம் கூறினேன். ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை''

வன்முறைக்குக் காரணம் பொலிசாரின் *அறப்படித்த குணம்தான்* என அவர் ஒரு கட்டத்தில் கூறினார்.

முஸ்லிம் பிள்ளைகள் சில வேளைகளில் பள்ளிவாயலுக்குப் போவதை விட விஹாரைக்கு வருவதை விரும்பும் அளவுக்கு அக்குரணையில் உறவுகள் காணப்பட்டன என அவர் குறிப்பிட்டார்.''நான் ஒரு தொலைபேசி அழைப்பு எடுத்தால் போதும், பொருட்கள் விஹாரையில் வந்து குவிந்து விடும் என்று முஸ்லிம்களின் தாராள மனதினைப் பற்றிக் குறிப்பிட்ட அவர் அவ்வாறான தயாள குணத்திற்கு அவர் கொண்டிருந்த அணுகலையும் குறிப்பிட்டார். தான் ஓர் ஆயுர்வேத வைத்தியர் என்றும் ஏராளமான முஸ்லிம் நோயாளர்களுக்குத் தான் சிகிச்சை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார். பிரதேசத்தில் பெரும்பான்மைச் சமுதாயமாக வாழும் முஸ்லிம்கள் விஹாரையுடன் தொடர்புகொண்டிருந்த விதம் பற்றியும் ஒரு பௌத்த பிக்குவுக்கு உரிய விதத்திலும் தேசிய பெரும்பான்மையின் உறுப்பினர் என்ற விதத்திலும் அவர்கள் தன்னை நடத்திய விதம் பற்றியும் எமது மனங்களில் பதிவினை ஏற்படுத்த பிரதம பிக்கு கடும் பிரயத்தனம் மேற்கொண்டார்.

இந்தப் பிரதேசங்களுக்குப் பொது பலசேன வரவில்லை என்றும் அப்படி வந்திருந்தாலும் அவர்கள் நேரடியாக விஹாரைக்கே வந்திருப்பதாகவும் ''எது எப்படி என நாமே அவர்களுக்குக் கூறுவோம்'' எனவும் அவர் கூறினார்.

''முஸ்லிம்களும் எம்மைச் சந்திக்க வந்து பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்கின்றனர். அதன் அர்த்தம் அவர்கள் ஒரு பிரச்சினையின் போது நாம் இணங்காத முறையில் நடந்துகொண்டால் நாம் அதைப் பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்பதல்ல''

தாக்குதல் நடத்தியவர்கள் அனைவரும் வெளியிடத்தினைச் சேர்ந்தவர்கள் (எனவே அவர்கள் கோணகலகல விஹாரைப் பிரிவினைச் சேர்ந்தவர்களல்ல) என்றும் அவர்கள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தாக்குதல் நடத்துவதற்காகத் தங்களின் முகங்களை மூடியவாறு வந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார். திரு மன்சூர் தனக்கு அழைப்பு எடுத்ததாகவும் தான் உடனடியாகவே எரிக்கப்பட்டுக்கொண்டிருந்த அவரின் கடைக்குச் சென்றதாகவும் குறிப்பிட்டார். ''அப்போது அதனை என்னால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆனால் நான் சொன்னதைப் பொலிஸார் கேட்டிருந்தால் இது நடந்திருக்காது''என அவர் கூறினார்.

பிரதேசத்திற்கு விசேட அதிரடிப் படையினர் வந்தபோது பிரச்சினை தானாகவே தீர்ந்திருந்தது. பிரதேசத்தில் அதிகமாக எதுவும் நடக்கவில்லை என பிக்குக் கூறினார். ஏற்படுத்தப்பட்ட சேதத்தினைக் குறைத்துக் கூற அவர் முயற்சித்தார். மூன்று கடைகள் மட்டுமே எரிக்கப்பட்டதாகக் கூறினார். உண்மையில் இரண்டு ஹாட்வெயார் கடைகள், நான்கு தளபாடக் கடைகள், நான்கு ஆடைக் கடைகள், ஒரு பேக்கரி மற்றும் ஒரு சலூன் என ஒரு தொகுதிக் கடைகள் எரிக்கப்பட்டிருந்தன. ஆனால் எல்லாக் கடைகளும் முஸ்லிம்களுக்குச் சொந்தமானவையல்ல.

அக்குரணையில் 17,000 சிங்களவர்களும் 34,000 முஸ்லிம்களும் வாழ்கின்றனர். இரண்டு சமுதாயங்களும் ஒருவர் மற்றவரின்றி வாழ முடியாது என்றும் பிக்குக் கூறினார். சகல சமுதாயங்களின் மத்தியிலும் சிறந்த உறவினைப் பேணி பிரதேசத்தில் அபிவிருத்தியினை ஏற்படுத்தியமைக்காக ஏ.சி.எஸ் ஹமீட் வகித்த வகிபாத்திரத்தினைப் பாராட்டிய அவர் அவரைப் போல் இதுவரை ஒருவரும் வரவில்லை எனக் கூறினார். பிரதேசத்தின் பாராளுமன்ற உறுப்பினரான ஹலீமை விமர்சித்த அவர் ஹலீமின் மாமாவான ஹமீடின் செல்வாக்கிலேயே ஹலீம் இன்னும் தங்கியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

சகல சமுதாயங்களிலும் தீவிரவாதிகள் இருக்கின்றனர் என்றும் குறிப்பாக முஸ்லிம் தீவிரவாதிகள் இருக்கின்றனர் என்றும் விஹாரைக்கு அழைத்து வந்த அக்குரணை பள்ளிவாயல் நம்பிக்கைப் பொறுப்பாளரைப் பார்த்துத் தலையை அர்த்தத்துடன் அசைத்தவாறு பிக்கு அழுத்தமாகக் குறிப்பிட்டார். என்ன நடந்தது என்பது தொடர்பில் அவர் ஆழமான, சான்றாகக் காணக்கூடிய, உண்மையான மனவருத்தத்தினை வெளிப்படுத்திய அதேவேளை, முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையினைக் குறைத்துக் கூறவும் முயற்சித்தார். மேலும் சேதத்தினை ஏற்படுத்தியமைக்காகக் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரை விடுவிப்பதற்கான ஏற்பாட்டில் முஸ்லிம்கள் ஒத்துழைக்கின்றார்களில்லை என்பதையும் அவர் வலியுறுத்தினார். உண்மையில் குற்றமுடையவர்கள் கைதுசெய்யப்படவில்லை என்று குறிப்பிட்ட அவர் பொலிஸாருடன் சேர்ந்து

அவர்களை விடுவிக்கப் பணியாற்ற முஸ்லிம்களை நாங்களும் ஊக்குவிக்கவேண்டும் என வேண்டிக்கொண்டார்.

நாட்டில் சிங்கள - முஸ்லிம் அதிகார வரிசை தொடர்பான தனது சொந்தக் கருத்துக்களையும் பிக்கு எமக்குத் தெரியப்படுத்தினார். இலங்கைச் சமூகத்தில் முஸ்லிம்களின் இடம் பற்றிப் பேசும்போது சமயம் என்பது கட்டாயம் பள்ளிவாயலோடு நிற்கவேண்டும் என்றும் நாளாந்த வாழ்வினுள் அது வரக்கூடாது என்றும் அவர் கூறினார். எமது சமயம் மட்டும் வித்தியாசமாக இருக்கையில் நாம் அனைவரும் ஒரு சமுதாயமாகச் செயற்படவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

''கலாசார ரீதியாக நாம் அனைவரும் ஒரே விதமானவர்களாக இருக்கவேண்டும். எமது சமயத்தினை நாம் மற்றவர்களின் மீது திணிக்கக்கூடாது. உதாரணமாக, தொழுகைக்கான அழைப்பு - அவ்வாறு அழைப்பதற்கான தேவை ஏன் இருக்கின்றது? தொழுகை நேரம் ஒவ்வொருவருக்கும் தெரியும்தானே? பின் ஏன் அனைவரையும் அந்த சத்தம் தொந்தரவு செய்யவேண்டும்?''

நிகழ்வு பற்றிய அவரின் பகுப்பாய்வினை நாம் கேட்டோம். பகுப்பாய்வுகள் எவையாக இருப்பினும், காரணம் மொட்டு[48] என்பதே அவரின் எடுத்தெறிந்த பதிலாக இருந்தது. உள்ளூராட்சித் தேர்தலில் ராஜபக்சவின் தலைமையிலான கூட்டணியின் எதிர்பாராத வெற்றியினையே அவர் குறிப்பிட்டார். மேலே குறிப்பிட்டவாறு, அவர்கள் சிறுபான்மையினருக்கு எதிரான உணர்வுகளைத் திரட்டியே வெற்றிபெற்றனர். மேலும் தேர்வுசெய்யப்பட்ட பலரும் வன்முறையில் பங்குபற்றியமைக்காகப் பின்னர் கைதுசெய்யப்பட்டனர்.

**கிராமசேவகர் / ஆராச்சி**

நாம் முதலில் 8 ஆம் கட்டை மக்களை நேர்கண்டபோது அங்கே கூறப்பட்ட ஒரு கதைதான் கிராமசேவை உத்தியோகத்தர் அல்லது பிரதேசத்திற்குப் பொறுப்பான அரசாங்க உத்தியோகத்தர் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையில் பங்குபற்றினார் என்பதாகும். வன்முறையின் பின்னர் பிரதேசத்தில் உலாவந்த வதந்திகள், அவநம்பிக்கை, செயல்களின் தவறான அர்த்தப்படுத்தல்கள் ஆகியவற்றுக்கான உதாரணமாக கண்டி அரசாங்க அதிபரிடமிருந்து கிராமசேவையாளரின் கதையினையும் நாம் கேட்டோம். நாம் அவர்களுடன் முதலில் பேசியபோது கிராமசேவையாளர் வன்முறையில் பங்குபற்றியதாக 8 ஆம் கட்டையில் உள்ள மக்கள் வற்புறுத்திக் கூறினர். கடைகளுக்குச் சேதமேற்படுத்துவதற்காக எரிவாயு விநியோகிக்கும் கடையில் இருந்து எரிவாயு சிலிண்டர்களைத் தாக்குதல் நடத்தியவர்கள் எடுப்பதற்கு அவர் உதவினார் என அவர்கள் கூறினர். எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து மேலதிக சேதம் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே தான் அவற்றினை வெளியே எடுத்ததாகக் கிராமசேவையாளர் கூறினார். இதே கதையினையே அரசாங்க அதிபரும் கூறினார்.

தனது கடை எரிந்த நபர் ஒருவர் கிராமசேவையாளர் உண்மையிலேயே தனது கடையில் எரிவாயு சிலிண்டரை வைத்ததைத் தான் கண்டதாகவும் அது பற்றித் தான் பொலிஸில் முறைப்பாடு செய்யவிருந்ததாகவும் கூறினார். எவ்வாறாயினும் அவ்வாறு செய்யாதிருக்கும்படி உதவி அரசாங்க அதிபர் தன்னைத் தூண்டியதாக அவர் கூறினார். நாம் 8 ஆம் கட்டையில் உள்ள மக்களுடன் முதலில் பேசியபோது, வன்முறையின் சகல பக்கங்களிலும் அரச பிரதிநிதிகள் உடந்தையாக இருந்ததையே அவர்கள் பார்த்தனர். அவர்கள் கிராமசேவை அதிகாரியின் செயற்பாடு பற்றி மட்டும் அறிந்திராது உடந்தையாயிருத்தல் உயர் மட்டங்களுக்கும் நீட்சியடையலாம் என்பதையும் உணர்ந்திருந்தனர். ஒவ்வொருவரும் கலாசார ரீதியாக ஒரேவிதமானவர்கள் (அதாவது சிங்கள) எனும் கோணகலகல விஹாரையின் விஹாராதிபதியின் பகட்டாரவாரப் பேச்சு 8 ஆம் கட்டையில் வன்முறையினை உருவாக்குவதற்கு அவர் உடந்தையாக இருந்தமையாகவே பார்க்கப்பட்டது.

எமது முதலாவது விஜயத்தின்போது கிராமசேவை உத்தியோகத்தரின் உடந்தை தொடர்பாக எமக்குக் கூறப்பட்டது. மேலும் அவரின் தொடர்ச்சியான துவேஷத்திற்கு கிராம மக்கள் எவ்வாறு பதிலளித்தனர் என்பதும் எமக்குக் கூறப்பட்டது. கிராம மக்கள் இரண்டு பிரிவினராக உள்ளனர் எனக் கிராமசேவையாளர் குறிப்பிட்டார். சிங்களவர்களுடன் நல்ல உறவினைப் பேணக்கூடிய அனைவருடனும் நல்ல முறையில் பழகுகின்ற ''பாரம்பரிய'', ''பழமையான'' முஸ்லிம்கள் ஒரு தரப்பினர் எனவும் அவர்கள் தமது உணவினைத் தன்னுடன் பகிர்ந்து உண்பவர்கள் என்றும் கூறினார். இரண்டாவது பிரிவினைப் பற்றிக் கூறிய அவர், அவர்கள் இளம் நபர்கள் என்றும் வித்தியாசமானவர்கள் என்றும் சிங்கள மக்களிலிருந்து முஸ்லிம்களைத் தூரமாக்குவதில் ஈடுபட்டுள்ளவர்கள் என்றும் கூறினார். அவ்வாறு தூரமாக்குவதற்காக அவர்கள் சிங்களவர்களுக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியில் போகவேண்டாம் என்றும் சிங்களவர்களுக்குச் சொந்தமான

[48] பொஹொட்டுவ அல்லது மொட்டுச் சின்னம் இலங்கை பொதுஜன பெரமுன அரசியல் கட்சியினால் 2018 உள்ளூராட்சித் தேர்தலின் போது பயன்படுத்தப்பட்டது.

கடைகளுக்குப் போகவேண்டாம் என்றும் மக்களுக்கு ஆலோசனை வழங்குகின்றனர் என அவர் கூறினார்.

நிகழ்வு நடந்து மூன்று மாதங்களின் பின்னர் நாம் கிராமசேவை உத்தியோகத்தரை நேர்கண்டோம். இக்கட்டத்தில் வன்முறையில் கிராமசேவை உத்தியோகத்தர் வகித்த பங்கு பற்றிய கதை சமுதாயத்தில் நன்கறியப்பட்டிருந்தது. தன் மீதான குற்றச்சாட்டுப் பற்றிய கதையினை அவர் எம்மிடம் கூறினார். அவர் சம்பவம் பற்றி அதிர்ச்சியடைந்ததுடன் தான் 15 வருடங்களாகப் பணியாற்றிய முஸ்லிம் சமூகத்திலுள்ளவர்கள் தமக்கெதிராக வன்முறை ஏற்படுத்தக்கூடியவராகத் தன்னைப் பற்றி நினைத்தது தன்னை உலுப்பிவிட்டது என்றும் தனக்கு அதிர்ச்சி ஏற்படுத்திவிட்டது என்றும் கூறினார். தான் அவ்வாறு செய்திருந்தால் தான் ஒரு மிருகம் என அவர் கூறினார். வன்முறை நடந்த பின்னர் இரண்டு மாதங்களாக மக்கள் அவரின் முகத்தினைப் பார்க்கவில்லை என்றும் தன்னுடன் முன்பு நல்லுறவுடன் இருந்தவர்கள் இப்போது தன்னுடன் பேசுவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறையில் தான் பங்குபற்றியதாக முதலில் பகிரங்கமாக அறிவித்தது அமைச்சர் ஹலீம்தான் என்றும் அவ்வாறான கூற்றினை ஹலீம் வெளியிடும் வீடியோ யுடியூபில் சில காலம் இருந்ததாகவும் இப்போது அது அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தனது கிராமத்து மக்கள் என்ற உணர்வினைத் தான் கொண்டிருந்த மக்களே தன்னை வன்முறை நிகழ்த்தியவன் என நினைக்கின்றவிடயம் கிராமசேவை உத்தியோகத்தரைப் பெரிதும் பாதித்துள்ளது. அரசாங்க ஊழியர் என்ற ரீதியில் இந்த மக்களுக்குச் சேவையாற்ற இவர் 1 வருடத்திற்கு நியமிக்கப்பட்டு தான் சேவையாற்றிய மக்களின் தலைமைத்துவத்தினை ஏற்றுக்கொண்டுள்ளவர். தன்னை மக்கள் எவ்வாறு நினைத்துள்ளனர் என்பது இவருக்குப் பெரிய மனவருத்தத்தினை ஏற்படுத்தியுள்ளது. தனது முஸ்லிம் வட்டாரங்களுடன் தான் உருவாக்கிய நீண்டகால நெருங்கிய உறவினைப் பற்றிப் பேசிய கிராமசேவை உத்தியோகத்தர் வன்முறையில் தான் பங்குபற்றியதாகக் கூறப்படும் செய்தி பகிரங்கப்படுத்தப்பட்டதும் உலகம் முழுவதிலும் உள்ள அக்குரணை மக்களிடமிருந்து தனக்கு எவ்வாறு தொலைபேசி அழைப்புக்கள் வந்தன என்பதைக் கூறினார்.

முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்தின் ஆரவாரப் பேச்சுக்களின் ஆழமான செல்வாக்குக்கு அவர் உட்பட்டிருந்த விடயம் மிகத் தெளிவானதாகும். முஸ்லிம்களின் கறுப்பு ஆடையும் முகத்திரையும் பிரதேசத்தின் சிங்கள மக்களின் அதீத ஆட்சேபனைக்குரியது என அவர் ஆய்வாளர்களில் ஒருவரிடம் கூறியுள்ளார். அண்மைக் காலத்தில் மனிதர்களுக்கிடையிலான உறவுகளில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது மட்டுமன்றி சில முஸ்லிம்களின் நடத்தை தொடர்பாக அதிகரித்த கரிசனைகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அக்குரணையில் ஜிஹாத் குழு உருவாக்கப்பட்டுள்ளது என அவர் நம்பவைக்கப்பட்டுள்ளார். கடைகளைத் தாக்கிய சிங்கள மக்கள் யாரென்பது தனக்குத் தெரியாதென அவர் வலியுறுத்தினார். எவ்வாறாயினும், தாக்குதல்களை முஸ்லிம்கள் எதிர்த்ததைத் தான் கண்டதாகவும் தனக்குத் தெரிந்த ஒருவர் அதே கடைத்தெருவில் சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமான கடைக்குப் பெற்றோல் குண்டு எறிந்ததைத் தான் கண்டதாகவும் குறிப்பிட்டார். தாக்குதல் நடத்திய சிங்களவர்கள் வெளி இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் முகங்களை மூடிக்கொண்டு வந்தனர் என்றும் அவர் கூறினார். (எவ்வாறாயினும் தாக்குதல் நடத்தியவர்கள் தங்களுக்குத் தெரிந்த கோணகலகல மக்கள் என 8 ஆம் கட்டை முஸ்லிம்கள் வலியுறுத்திக் கூறினர்). பாயிஸ் எனும் ஒருவர் அக்குரணையில் ''ஜிஹாத்'' குழு ஒன்றினை ஒழுங்கமைத்துள்ளார் எனக் கிராமசேவை உத்தியோகத்தர் நம்பியுள்ளார். 8 ஆம் கட்டையில் நடந்ததை எண்ணி ஒரு கட்டத்தில் துக்கப்பட்ட அவர்,''அநியாயம், அவர்களுக்குத் தேவையாக இருந்தால் பாயிசை மட்டும் தாக்கியிருக்க வேண்டும் எல்லோரையும் அல்ல'' எனக் கூறினார்.

கிராமசேவை உத்தியோகத்தர் மற்றும் கோணகலகல விஹாரையின் பிக்கு ஆகியோர் தொடர்பான சம்பவங்கள், முஸ்லிம் பெரும்பான்மை நகரத்தில் குடியிருப்பாளர்களுக்கு இடையிலும் அவர்களின் சிங்கள நிர்வாகஸ்தர்களுக்கு இடையிலும் உரையாடியவர்களுக்கு இடையிலும் உள்ள உறவில் விரிசலையும் தாக்கத்தினையும் ஏற்படுத்திய விதத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது.வன்முறையினைக் கட்டுப்படுத்துவதற்கு சமுதாயத் தலைவர்கள் தலையிட முடியாத ஒரு சந்தர்ப்பமாக இது அமைந்திருந்ததுடன் இக்காரணத்தினால் சமுதாயங்களின் நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. மேலும் வன்முறையில் கிராமசேவை உத்தியோகத்தர் உடந்தையாக இருந்தார் என்பதைத் தவிர வேறு எதனையும் 8 ஆம் கட்டை முஸ்லிம் குடியிருப்பாளர்களால் எண்ண முடியவில்லை.

ஓரளவு செல்வமான முஸ்லிம் கிராமத்துக்கும் விஹாரைக்கும் இடையில் நெருக்கமான உறவு காணப்பட்டது. பதற்றம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது திரு. மன்சூரின் வீட்டுக்கு பிக்கு வந்திருக்கின்றார். நல்லுறவுக்கு முன்மாதிரியான இடம் எனப் பிரகடனப்படுத்தித் தான் பெருமிதப்பட்ட ஒரு இடத்தில் வன்முறை நடந்துவிட்டதே என பிக்குக் கவலையடைந்திருந்தார். அக்குரணையில் சிறந்த உறவு நிலவுகின்ற காரணத்தினால் அங்கு நல்லிணக்க முயற்சிகளுக்கு

எத்தேவையும் இல்லை எனச் சில மாதங்களுக்கு முன்புதான் பிக்குக் குறிப்பிட்டிருந்தார்.[49] இன்று பொதுவெளியில் ஊடுருவுகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான சிங்கள மேலாதிக்கச் சித்தாந்தத்திற்கு பிக்குவும் கிராமசேவை உத்தியோகத்தரும் பூரண ஆதரவு வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், இருவருமே தாக்குதலில் சம்பந்தப்படவில்லை என்பது தெளிவானதாக இருந்தது. வன்முறை நடந்த பின்னர் இந்த இரண்டு சிங்களத் தனிநபர்களும் சமுதாயத்தில் தங்களின் நிலைப்பாட்டினைத் தக்கவைத்து நிகழ்ந்த வன்முறையினால் அவர்களின் அந்தஸ்து கணிசமாக இழக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். எவ்வாறாயினும், முஸ்லிம் சமுதாய உறுப்பினர்கள் அவர்களின் உடந்தை பற்றி உணர்ந்துகொண்டனர். அவர்கள் தாக்குதலை வசதிப்படுத்தினர் எனவும் நம்பினர். முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் தாக்குதலின் பின்னர் அவர்களின் நெருங்கிய சிங்கள நண்பர்களும் சிங்கள அயலவர்களும் உடந்தையானவர்களாகவே தென்பட்டனர். வன்முறைக்கு ஆதரவு வழங்கிய இனவாதச் சிங்களவர்களுக்கும் அவ்வாறு ஆதரவு வழங்காத இனவாதச் சிங்களவர்களுக்கும் இடையில் வித்தியாசம் காண முடியவில்லை. அம்பலவின் விடயடத்தினைப் போன்று, சமுதாய உறுப்பினர்களினால் இவ்வாறான வன்முறை நிகழ்வுகளை இனிக் கட்டுப்படுத்த முடியாது என்பதை கோணகலகல சம்பவம் காட்டுகின்றது. அம்பலவிலுள்ள குமாரசிங்கவின் கிராமத்து பிக்குவினால் அவரது கிராமத்து இளைஞர்களைக் கட்டுப்படுத்த முடிந்தாலும் வன்முறையின் பரந்த பரவலை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. கோணகலகல வன்முறையினைத் தடுத்திருக்க முடியாது. கிராமசேவை உத்தியோகத்தரும் பிக்குவும் வன்முறையினைத் தடுப்பதற்கு முன்பு கொண்டிருந்த அதிகாரத்தினை இழந்துவிட்டமைக்கான சாத்தியமே உண்டு. ஆரம்பத்தில் பொது பலசேனவினால் பிரச்சாரம் செய்யப்பட்டுத் தற்போது அனைத்து ஊடக நிறுவனங்களிலும் தயாராக இருக்கின்ற முஸ்லிம்களுக்கெதிரான சித்தாந்தத்திற்கு சிங்கள மக்கள் பரந்த அளவில் கடப்பாடு கொண்டுள்ளனர் என்பதையும் உதாரணம் காட்டுகின்றது. எவ்வாறாயினும், வன்முறையின் இலகுவான நியாயப்படுத்தலை அது அவசியம் சுட்டிக்காட்டவில்லை. துரதிர்ஷ்டவசமாக, சிங்கள மற்றும் முஸ்லிம் சமுதாயங்கள் ஒன்று மற்றொன்றுடன் ஈடுபடக்கூடிய மாற்றுக் கதையினை வழங்கக்கூடிய சிங்கள ஊடக்தின் வழியேயான இனவாதத்திற்கு எதிரான மொழி என்பது தயாராக இல்லை. 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் பின்னர், அவ்வாறான மொழியினை நிர்மாணிப்பதை நோக்கிய ஒரு பாதை விரைவில் இடப்பட முடியுமா என்பது தெளிவற்றதாக உள்ளது.

[49]பிக்கு எமக்குக் காட்டிய ஒரு செய்திப் பத்திரிகைக் கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

## அத்தியாயம் 4

## நிகழ்வுக்குப் பின்னரான குறிப்புக்கள்

### வன்முறை பற்றிய குற்றம் நிகழ்த்தியோரின் கருத்துக்கள்

குற்றம் நிகழ்த்தியவர்களின் கண்ணோட்டங்களை எம்மால் பூரணமாகப் பதிவுசெய்ய முடியவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. பாதிக்கப்பட்ட நபர்களை அணுகுவதற்கு எமது ஆய்வணியினர் களத்தில் முஸ்லிம் தொடர்புகளையே சார்ந்திருந்தனர். பிரதேசத்தில் சிங்களச் சமுதாய உறுப்பினர்களுடனான எமது இணைப்புக்கள் அவ்வளவு உறுதியானதாக இல்லை. நீதவான்கள் மூலமாகச் சிறையில் உள்ளவர்களைச் சந்திப்பதற்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பின்தொடரலுக்கான பல வழிகள் எமக்குக் கிடைத்தன. இது கடினமானதாக இருந்தது. சிங்களச் சமுதாயத் தொடர்புகளையே நாம் முயற்சி செய்தோம். ஆனால் எம்முடன் பேசுவதாக வாக்குறுதியளித்தவர்கள் இறுதியில் வரவில்லை. கட்டுக்காவலில் ஓரிரவு வைக்கப்பட்ட குற்றமிழைத்தவர் ஒருவரை அடையாளம் காண ஒரு சந்தர்ப்பத்தில் எமது முஸ்லிம் தொடர்புகள் உதவினர். அவரும் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி சபைப் பிரதிநிதியாவார். அவரை எம்முடன் பேசுமாறு அவரின் அயலவர் ஊக்கப்படுத்தினார். எமது முஸ்லிம் தொடர்புகளுடனான அவரின் தொடர்பின் அடிப்படையில் அவர் எம்முடன் பேச இணங்கினாலும் தான் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர் என்ற ரீதியில் தனது கருத்துக்களை அவர் வெளியிடவில்லை என்பதுடன் தனது கைது பற்றியும் அவர் குறிப்பிடவில்லை.

ஒரு தொடர்பு பயனளித்த காரணத்தினால் வன்முறை நடந்த தினத்தில் திகனவில் இருந்த 26 வயது ஆண் ஒருவருடன் நாம் நேர்காணலை நடத்த முடிந்தது. முஸ்லிம்களால் பௌத்தர் ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருந்து பாதுகாக்க வருமாறு இணையம் மூலம் மக்களால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு இவர் பதிலளித்திருக்கின்றார்.அணி உறுப்பினர்களில் ஒருவரான கலாநிதி விஜய ஜயதிலகவினால் நேர்காணப்பட்டபோது இந்த நபர் கூறிய சில விடயங்கள் திகனவில் என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்வதில் மிகவும் சுவாரஷ்யம் மிக்கதாக இருந்ததை நாம் கண்டோம், வன்முறைக்காக சமூக ஊடகத்தின் மூலம் ஆட்கள் ஒன்று திரட்டப்பட்ட விதம், மேலும் சமூக ஊடகத்தின் மூலம் முஸ்லிம்கள் தொடர்பான அபிப்பிராயங்கள் உருவாக்கப்பட்டு பிரபல்யமாக்கப்பட்ட விதம்.

தனது ஊர் திகன என்ற போதிலும் தான் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் ஒப்பந்தத் தொழிலாளராகப் பல்வேறு வேலைகளைப் பார்த்து வந்ததாகவும் தான் திருமணமானவர் என்றும் தனக்கு ஒரு பிள்ளை உண்டு என்றும் இந்த இளநபர் குறிப்பிட்டார். வன்முறை நடந்த தினத்தன்று திகனவில் நடந்த ''ஆர்ப்பாட்டப் பேரணி'' பற்றி இவரின் கவனம் ஈர்க்கப்பட்டது. பின்வருவது இவர் கூறியவற்றின் சுருக்கமாகும்.

> ''திகனவில் ஒரு மனிதர் தாக்கப்பட்டுக் கொல்லப்படும் வீடியோ ஒன்றினை நான் பார்த்தேன். கொல்லப்பட்டவர் சிங்களவர். கொன்றவர் முஸ்லிம். பாதிக்கப்பட்டவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த காட்சிகளும் காட்டப்பட்டன. இவை இணையத்தில் காட்டப்பட்டன. எனது தொலைபேசியிலும் அவை எனக்கு அனுப்பிவைக்கப்பட்டன.அன்று எதிர்ப்புப் போராட்டம் நடப்பது பற்றி எனக்கு அறிவிக்கப்பட்டது. நான் காலையிலேயே சென்றுவிட்டேன்.''

சமூக ஊடகத்தில் தனக்குக் கிடைத்த தொடர்பாடலின் அடிப்படையிலேயே தான் திகனவுக்குச் சென்றதாக அந்த நபர் உறுதிப்படுத்தினார். மக்கள் கூட்டத்துடன் சேர்ந்த அவர் பிரதேசத்தில் பல மணித்தியாலங்கள் இருந்திருக்கின்றார். திகனவில் ஒன்றுகூடுமாறு சமூக ஊடகங்களில் அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் 3000 ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுசேர்ந்ததாகவும் மற்றொரு மூலத்தில் இருந்து நாம் கேள்விப்பட்டோம். இந்த எண்ணிக்கை சரியானதா என்பது தெளிவற்றதாக இருந்த போதிலும் தெளிவாகத் தெரிந்த விடயம், திகனவில் நடைபெற்ற வன்முறைக்கு மக்கள் ஒன்று திரட்டப்பட்டமையில் சமூக ஊடகம் பெரும் பங்காற்றியிருக்கின்றது என்பதேயாகும். திகனவில் கூடிய கூட்டம் சிறப்பாக ஒழுங்கமைக்கப்படாததாக இருந்த போதிலும் அதிகமானவர்கள் ஹெல்மெட் அணிந்தவர்களாக அல்லது தங்கள் முகங்களை மூடியவர்களாகக் காணப்பட்டனர்.

அவர் மேலும் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> ''நான் அதிகாலையிலேயே பங்குபற்றச் சென்றுவிட்டேன். அதிகமானவர்கள் தங்கள் முகங்களை மறைக்க முகமூடி அணிந்திருந்தனர். நானும் அதனையே செய்தேன். சிலர் கட்டிடங்களின் முன் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவிக்களை உடைத்தனர். பேரணியும்

பலத்த சப்தத்துடனான ஆர்ப்பாட்ட ஆர்ப்பரிப்பும் ஐந்து மணித்தியாலங்கள் நீடித்தன. அங்கே பொலிஸ் இருக்கவில்லை. அப்போதுதான் இதில் ஏதோ தப்பு இருக்கின்றது என்பதை நான் உணர ஆரம்பித்தேன். இது இயல்பானது அல்ல ஏதோ ஓர் அமைப்பினால் திட்டமிடப்பட்ட ஒன்றாக இருக்குமோ என நான் சந்தேகப்பட ஆரம்பித்தேன். பொதுவாக இவ்வாறான விடயங்களில் பொலிசார் சற்று நேரத்திலேயே வந்துவிடுவார்கள். நான் இதில் ஈடுபடுவதில்லை எனத் தீர்மானித்தேன். எனது நண்பர்கள் என்னை இணையுமாறு கூறினார்கள். ஆனால் விலகிச் செல்லத தீர்மானித்தேன்.''

தான் கண்கூடாகக் கண்டு பங்குபற்றிய திகன கலவரம் போன்ற இவ்வாறான வன்முறைகளுக்கு இட்டுச் செல்கின்ற நாட்டினுள் நல்லுறவு சீர்குலைந்தமை பற்றிய தனது சொந்தப் பகுப்பாய்வினை இளம் நபர் தொடர்ந்து வழங்கினார்.

''மக்கள் சமாதானமாகவே வாழ விரும்புகின்றனர். நாம் உயிர்பிழைத்து வாழ்வதற்கு இந்த ஒத்துழைப்பு இன்றியமையாதது. நாம் பல்வேறு இன மக்களைச் சுற்றி வாழ்கின்றோம். நாம் ஒருவருக்கு ஒருவர் உதவுகின்றோம் மேலும் ஒருவர் மற்றவருக்குத் தேவை. எமது அயலாண்மையில் நாம் ஒருவர் மற்றவரை ஏசுவதில்லை,அவமானப்படுத்துவதில்லை, அடிப்பதில்லை அல்லது சொத்துக்களுக்குச் சேதமேற்படுத்துவதில்லை. அரசாங்கமும் கூட்டு எதிர்க்கட்சியும் பிபிஎஸ்சும் ஜாதிக ஹெல உருமயவும் புறக் குழுக்களுமே கோபத்தினையும் வெறுப்பினையும் தூண்டி உசுப்பேற்றிவிடுகின்றனர். இந்தக் கட்சிகள் முகவர்களைக் கொண்டுள்ளன - இந்தப் பாவப்பட்டவர்களுக்கு அவர்கள் சம்பளம் வழங்குகின்றனர். சிலர் சம்பளமும் அதிக பணமும் பெறுகின்றனர் - அவர்கள் சொத்துக்களும் வாகனங்களும் வாங்கி சிறந்த வாழ்க்கை வாழ்கின்றனர். இதனால் தங்களின் இந்த வாழ்வினைப் பேணிக்கொள்ள உதவும் கட்சிகளுக்குக் கடப்படுகின்றனர்.''

எல்லாவற்றிற்கும் மத்தியில், இந்த வன்முறைகளில் குற்றம் நிகழ்த்தியவர்களாக மக்களை அவர்களின் வகிபாத்திரங்களில் அனுசரணை அரசியல் பிணைத்துவைத்திருக்கும் விதம் பற்றி இந்தத் தனிநபர்கள் மறைமுகமாகக் குறிப்பிட்டது முக்கியமானதாகும். செயன்முறையின் தற்போது வெறுக்கத்தக்க சித்தாந்தங்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக மற்றவர்களைப் பயன்படுத்துகின்றமை ஆகியவற்றின் பிரகடனப்படுத்தப்பட்ட நிலைப்பாட்டின் பகுதியொன்றினையும் அவர் குறிப்பிட்டார். அரசியலில் அவரின் ''அதிருப்தியினையும்'' அவர் குறிப்பிட்டார்.

''நான் கிராம மட்டத்தில் அனேகமாக சகல அரசியல் கட்சிகளுடனும் வேலை செய்திருக்கின்றேன். உள்ளூர் அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட மட்ட மற்றும் தேசிய மட்டத் தலைவர்கள் - சிலர் எப்போதும் தொலைக்காட்சியில் தோன்றுபவர்கள் - சிங்கள மக்களைப் பற்றி உண்மையான கரிசனை கொண்டவர்கள் என நான் நம்பினேன். ஆனால் இவர்கள் ஒவ்வொருவமே தாம் சுயநலவாதிகள் என்பதையும் செல்வத்தினைச் சேர்ப்பதிலும் பணம் உழைப்பதிலும் ஆர்வமுள்ளவர்கள் என்பதையும் நிரூபித்துள்ளனர். எனவே இவர்களுடன் சேர்ந்திருந்த நான் அதிருப்தியுற்று இப்போது இவர்களை விட்டு விலகிவிட்டேன். ஆனால் சிங்கள மக்களுக்கு நெருக்கடி அல்லது அச்சுறுத்தல் என்றால் அந்த அழைப்புக்கு நான் பதிலளிப்பேன்''

சிங்களே மற்றும் மஹசொன் பலகாய ஆகிய குழுக்களின் செல்வாக்குமிக்க தலைவர்களான டான் பிரியசாத் மற்றும் அமித் வீரசிங்க ஆகியோருடனான நேர்காணல்களில் இருந்து அவர்கள் அரசியலில் ஆர்வமற்றவர்களாகவே தம்மை முன்னிலைப்படுத்துவது தெரியவந்தது. மேலும் தாம் ஆற்றுகின்ற பணி எவ்வகையிலும் அரசியலற்றதாகவே பார்க்கப்படுகின்றது என வலியுறுத்தினர்.[50]தமது மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைப் பார்ப்பதற்கான ஒரு புதிய

[50]கண்டியில் வன்முறை நடைபெற்ற பின்னர் அமித் வீரசிங்கவையும் டான் பிரியசாத்தினையும நேர்கண்ட இரோமி பெரெராவின் ஆவணங்களில் இருந்து நாம் இத்தகவலையும் நுழைபுலத்தினையும் பெற்றுக்கொண்டோம்.

வழியினைக் கண்டுபிடித்து அவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண அவர்கள் கடப்பாடு கொண்டுள்ளனர். இவர்களின் கருத்திட்டத்தின் புதியதன்மையினால் ஊக்கப்படுத்தப்படும் இளைய தலைமுறையினரே இவர்களின் இலக்குக் குழுவினர். அமித் வீரசிங்கவின் அமைப்பிற்கான பெயரினைத் தெரிவுசெய்தமை பற்றி பல சமூக ஊடகக் கருத்துக்கள் காணப்பட்டன. இந்த அமைப்பு மஹசொன் பிசாசின் சேனை (மஹசொன் பலகாய) என அழைக்கப்படும் விடயமும் அதன் காப்பு வசனமாக புத்தரின் போதனைகளால் சாந்தப்படுத்தப்பட்ட பிசாசுகள் என்பது அமைந்திருப்பதும் கொண்டாடப்பட்டது. வன்முறைச் செயற்பாட்டிற்கான சாத்தியத்தினைக் கோருவதற்கும் முன்னெப்பொழுதும் இல்லாத எதிர்வினையினைக் கொண்டுவருவதற்குமான வழியாக இருப்பது போல் இது தென்படுகின்றது.

**சமூக ஊடகத்தின் முக்கியத்துவம்**

*இலங்கையில் நடந்த வன்முறையில் தாம் வகித்த வகிபாத்திரத்திற்காக பேஸ்புக் மன்னிப்புக் கேட்கின்றது*எனும் தலைப்பிலான ஒரு செய்தியினை புளும்பேர்க் நியூஸ் (Bloomberg News) 2020 மே 13 ஆம் திகதி வெளியிட்டது. 2018 மார்ச் 7 ஆம் திகதி, வன்முறையினைக் கட்டுப்படுத்துவது கடினமானதாக மாறிக்கொண்டிருக்கின்றது என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டபோது, மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பிரதேசத்திற்கு மேலதிக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளை அனுப்பியதுடன் அரசாங்கம் முதற்தடவையாக இணைய வேகத்தினைக் குறைத்து, அதன் பின்னர் சில ஊடகத் தளங்களையும் முடக்கியது. சமூக ஊடகம் வன்முறையினைத் தூண்டுவதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மார்ச் 6 ஆம் திகதி பின்வருமாறு அறிக்கையிட்டிருந்தது.

> “முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிராக வன்முறையினைத் தூண்டும் வீடியோ கிளிப்புகள் வைரலாகப் பரவுவதைப் பற்றி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆழமான கரிசனை கொண்டுள்ளது. பௌத்த துறவி எனக் கூறிக்கொள்ளும் ஒருவர் வெளியிட்ட வீடியோ கிளிப் உள்ளிட்ட அவ்வாறான பல கிளிப்புக்களை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன் வசம் வைத்துள்ளது. வீடியோவில் வரும் நபர் முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிரான வன்முறைகளைத் தூண்டுவதற்காக திட்டவட்டமாகப் பொய்யான தகவல்களை உண்மை எனப் பயன்படுத்துவதுடன் பௌத்தர்களை விட முஸ்லிம்களுக்குப் பரிவு காட்டுவதாகப் பிரதம மதகுருக்கள் மீதும் குற்றஞ்சாட்டுகின்றார்”[51].

இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான இயக்கம் அதன் சமூக ஊடகப் பயன்பாட்டில் மிகவும் வெற்றியடைந்திருக்கின்றது. 2012 இல் ஆரம்பிக்கப்பட்டது முதல், இலத்திரனியல் ஊடகங்களிலும் பெருமளவுக்குப் பொதுக்கூட்டங்களிலும் பிக்குகளின் பரப்புரைகளுடன் சேர்த்து பேஸ்புக்கில் வெறுப்புணர்வுகளை ஒருங்கிணைத்துப் பரப்புவதில் குழு மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வந்திருக்கின்றது.

கள மட்டத்தில் நாம் மேற்கொண்ட ஆய்வில், சமூக ஊடகம் பற்றிய விடயம் வெவ்வேறு வகையான சில வழிகளில் வெளிவந்தது. மஹசொன் பலகாயவின் தலைவராக அமித் வீரசிங்க வகிக்கும் பதவி தொடர்பில், அமித் அவரின் வீடியோ கிளிப்பில் சிறுபான்மையினரின் ஆக்கிரமிப்பின் கீழ் சிங்களவரின் நிலையினைச் சுட்டிக்காட்ட “சிங்களவர்களின் வியாபாரத்தின் இழப்புக்கான” இடமாக எவ்வாறு திகனவைப் பயன்படுத்தியுள்ளார் என எம்மிடம் கூறப்பட்டது. இணையத் தளத்தில் அவர் பிரபலமாக இருந்த போதிலும் சமுதாயத்தில் அவருக்குச் சொற்பமாகவே உண்மையான செல்வாக்கு இருப்பதாக எம்மிடம் கூறப்பட்டது. எம்மால் நேர்காணக் கூடியதாக இருந்த குற்றம் இழைத்தவர்களில் ஒருவர் பேசும்போது அவர் சமூக ஊடகத்தில் விடுக்கப்பட்ட அழைப்புக்கே பதிலளித்ததாகக் குறிப்பிட்டார். குறிப்பாக, நான்கு முஸ்லிம் இளைஞர்களுடன் ஏற்பட்ட கைகலப்பினைத் தொடர்ந்து தெல்தெனிய பிரதேசவாசியான குமாரசிங்க மரணமடைந்ததைத் தொடர்ந்து விடுக்கப்பட்ட குரோதத்தினைத் தூண்டும் முறைப்பாட்டிற்கே அவர் பதிலளித்துள்ளார் எனக் கூறினார். வன்முறை பரவுவதைத் தடுப்பதற்கு சமூக ஊடக முடக்கம் அவசியமானது என்ற கருத்தினையே நாம் நேர்கண்ட பொலிஸாரும் கொண்டிருந்தனர். எவ்வாறாயினும், சமூக ஊடகத்தினை முடக்கியது பேச்சுச் சுதந்திரத்தினை மீறுகின்ற செயலாகும் என்ற கருத்தினையே சிவில் சமூகக் குழுக்கள் கொண்டிருந்தன.

---

[51]பின்வரும் முகவரியில் கண்டி வன்முறையின் பின்னரான நிலை பற்றிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கையினை வாசிக்க முடியும்., 15 ஆகஸ்ட் 2020 https://www.cpalanka.org/cpa-callsauthorities-to-take-swift-action-to-prevent-further-violence-and-to-arrest-and-prosecute-individuals-advocatingnational-racial-and-religious-hatred/

**சிங்களக் கிராமச் சமுதாயத்தினரின் பதில்கள்: பலகொல்ல விஹாரை அபிவிருத்திச் சங்கம் - பலகொல்ல பௌத்த நிலையத்தில் சந்திப்பு**

வன்முறை நடந்த பின்னர் பிரதேசத்திலுள்ள பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு நிவாரண உதவியினை வழங்குவதற்கான ஏற்பாடுகளை பலகொல்ல விஹாரை அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டது. பலகொல்லயில் பள்ளிவாயல் எரிக்கப்பட்ட காரணத்தினால் அப்பிரதேச முஸ்லிம் மக்கள் தாக்குதல்கள் நடத்தப்பட்ட பின்னர் வந்த முதலாவது வெள்ளிக்கிழமையன்று தொழுவதற்காக அருகிலுள்ள ஒரு திறந்த வெளியில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தொழும்போது வன்முறை ஏற்படலாம் என்ற அச்சத்தில் தொழுது முடிக்கும் வரை பிக்குகளும் பொதுமக்களும் பிரதேசத்தினைச் சுற்றிக் காவல் நின்றனர். சமூகத்தின் செயற்பாட்டினைப் பிரதேசத்தின் முஸ்லிம் மக்கள் பெரிதும் மெச்சினர். வன்முறை பற்றியும் அதன் பின்னரான நிலை பற்றியும் எமது அணி உறுப்பினர்களில் ஒருவரான விஜய ஜயதிலக சமூக உறுப்பினர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் இருந்தே இந்தக் குறிப்புத் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்க சுவாரசியமான சில நுழைபுலங்கள் கலந்துரையாடலின் போது வெளிப்படுத்தப்பட்டன. பின்வரும் காரணங்களினால் முஸ்லிம்கள் மீது சிங்களவர்கள் கொண்டிருந்த பகைமையே வன்முறைக்கான காரணமாகக் குறிப்பிடப்பட்டது.

1. முஸ்லிம்கள் முன்பு கலவன் பாடசாலைக்குச் செல்வதை வழமையாகக் கொண்டிருந்தனர். மாவனல்லையில் ஒரு குறிப்பிட்ட பாடசாலையில் விளையாட்டில் மிகவும் வெற்றிபெற்றவர்களாக இருந்தது முஸ்லிம்கள் தான் எனக் குறிப்பிடப்பட்டது. ஆனால் இந்த நிலைமை இப்போது இல்லை. அவர்கள் இப்போது முஸ்லிம் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். சிங்களச் சமுதாயத்துடனான தொடர்பு அறுந்துவிட்டது. புதிய முஸ்லிம் தலைமுறையினர் இஸ்லாமியத் தீவிரவாதிகள் ஆடையணியும் விதத்தில் ஆடையணிகின்றனர். இது சிங்கள மக்களின் மனதில் சஞ்சலத்தினை ஏற்படுத்தியுள்ளது.''புர்கா'' அண்மையில் புழக்கத்திற்கு வந்த ஒன்று என்பதாகக் குறிப்பிடப்பட்டது. அரசியல்வாதிகள் தங்களின் ஆதாயத்திற்காக மக்களைக் கருவிகளாகப் பயன்படுத்துவதே இவை நடக்கின்றன எனக் கலந்துரையாடலின் போது குறிப்பிடப்பட்டது.

2. புதிய முஸ்லிம் தலைமுறையினர் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் தென்னக்கும்புர, மடவலை மற்றும் அக்குரணை நகரங்களில் தவறாக நடந்துகொண்டமையே வன்முறை வெடிப்பதற்கான காரணம் எனக் குறிப்பிடப்பட்டது. அப்பிரதேசங்களில் முஸ்லிம் மக்கள் வீதி ஒழுங்குகளை மதிப்பதில்லை. அவர்கள் தங்களின் வாகனங்களை வீதியின் குறுக்காக நிறுத்தி, மக்களுக்கு, குறிப்பாகச் சிங்கள மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தி வீதியினைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். இதனைக் கண்டித்தால் அவர்கள் தனிப்பட்ட தாக்குதலாக எடுத்துக் கொள்கின்றனர். முஸ்லிம்கள் போக்குவரத்து விதிகளை மீறுவதைப் பொலிசாரும் கண்டுகொள்வதில்லை என மேலும் குறிப்பிடப்பட்டது. இதனைப் பார்த்துக்கொண்டிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட சிங்கள மக்களை இவை கோபப்படுத்தியுள்ளன.

3. முஸ்லிம்கள் அதிகமான எண்ணிக்கையில் சர்வதேச பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். இதனால் முஸ்லிம்கள் மொழிப் பாண்டித்தியம் பெற்று அதனால் எதிர்காலத்தில் தொழில் சந்தையில் அவர்கள் சிங்கள மக்கள் தொழில் பெறுவதற்கு அச்சுறுத்தலாக மாறலாம் எனவும் குறிப்பிடப்பட்டது.

4. முஸ்லிம் பள்ளிவாயல்கள் தீவிரவாதத்தினைப் போதிக்கின்றன என்பதற்கான சான்று உள்ளது என்றும் ஐஎஸ்சில் சேர்வதற்காகச் சிரியாவுக்குச் சென்றுள்ள கலேவல குடும்பம் இதற்கான சான்று என்றும் குறிப்பிடப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கலந்துரையாடலில் தெல்தெனியவில் உள்ள சிங்ஹ எரிபொருள் நிலையத்தில் நடந்த சம்பவம் தொடர்பில் அச்சம் கலந்த மலைப்பும் மனவருத்தமும் வெளிப்படுத்தப்பட்டன. இளைஞர்களுக்கு இடையிலான இவ்வாறான ஒரு கைகலப்பு ஒரு நபர் கொல்லப்படுமளவுக்கான இவ்வாறான வன்முறைக்கு இட்டுச் செல்லலாம் என்ற விடயத்தினையிட்டுக் குழுவினர் வியப்புத் தெரிவித்தனர். அந்த இடத்தில் குமாரசிங்கவை அறிந்த மேலும் 8 பேர் இருந்தபோதிலும் அவர்கள் தலையிடவில்லை என்றும் குறிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும், வன்முறை பற்றியும் தாக்குதல்கள் ஏன் நடத்தப்பட்டன என்பது பற்றியும் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில், ஒரு சமுதாயத்திற்கு எதிரான வன்முறையினை மேற்குறிப்பிட்ட சொற்பதங்களில் விபரிக்கக்கூடிய அளவுக்கு உறவுகள் எவ்வாறு இந்த அளவுக்குச் சீர்குலையலாம் என்பது பற்றி எதுவும் கூறப்படவில்லை. முஸ்லிம்களின் கிராமத்தில் அவர்களின் தவறான நடத்தைகளும் அவர்களின் இறுமாப்பும் சமுதாய உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்படும் வன்முறைத் தாக்குதல் வடிவிலான பதிலடியைப் பெறுமளவுக்குத் தகுதியானவையா என்ற கேள்வி எழுப்பப்படவில்லை.

அம்பலவில் பலசரக்குக் கடை (எம்.கே.எம் குரோசரிஸ் - 3 ஆம் திகதி இரவு தாக்கப்பட்டது) ஒன்றினைத் தாக்கிய''கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த ஒரு துறவியே'' வன்முறைக்குக் காரணம் என அவர்கள் கூறினர்.

திகனவுக்கு குமாரசிங்கவின் சடலத்தினைக் கொண்டு வருவதன் மூலம் அவரின் மரணத்திற்காகப் பகிரங்கமாகத் துக்கம் அனுஷ்டிப்பதற்குத் தமக்கு அனுமதி வழங்கப்படாத காரணத்தினால் கூட்டத்தினர் கோபமடைந்ததாலேயே கோணவல, திகன மற்றும பலகொல்ல ஆகிய இடங்களில் மார்ச் 5 ஆம் திகதி தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் அவர்கள் கூறினர். வன்முறை பற்றிக் கலந்துரையாடும் போது, தேசியவாத உணர்வுகளால் சிலர் தூண்டப்பட்ட அதேவேளை பலர் கலகத்தின் மூலம் தனிப்பட்ட கோபங்களையும் பகைமைகளையும் தீர்த்துக்கொண்டனர் என அவர்கள் கூறினர்.

இவ்வாறான வன்முறைகளுக்கு இட்டுச்சென்ற சமுதாய மோதல்களைத் தீர்த்துவைக்கும் ஒரு மையமாகக் கிராமத்தின் விஹாரை செயற்பட முடியுமா எனக் கேட்டபோது, தற்போது அதிமான விஹாரைகள் அரசியல்மயமாகியுள்ளன என்றும் வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டவர்கள் இக்காரணத்தினால் ஒன்றில் விஹாரைகளுடன் தொடர்புகளைப் பேண விரும்புவதில்லை அல்லது அவர்களால் தொடர்புகளைப் பேண முடியாதுள்ளது எனக் குறிப்பிடப்பட்டது. எனவே இவ்வாறான பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடி அவற்றினைத் தீர்த்துவைக்கும் ஒரு மையமாக விஹாரைகளினால் இனிமேலும் செயற்பட முடியாது. இவ்வாறான தன்மையுடைய செயல்களுக்கு கிராம மட்டத்தில் பரந்த அளவிலான ஆதரவு கிடைக்காமல் இருக்கலாம் என்றும் கூறப்பட்டது. (ஆரம்பத்தில் தமது சொந்தப் பணிகளுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தாலும் பின்பு மிகவும் சொற்பமான கிராம மக்களே பங்குபற்றினர் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்).

மஹசொன் பலகாய போன்ற குழுவின் செயற்பாடுகளை விமர்சித்த குழுவினர் திகன நகரம் முஸ்லிம் வியாபார நிறுவனங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்ற மஹசொன் பலகாயவின் வலியுறுத்தலையும் விமர்சித்தனர். ''முதல் இருந்தால் சிங்களவர்களினாலும் வியாபாரம் தொடங்க முடியும்'' என அவர்கள் குறிப்பிட்டனர். அரச ஊடகங்கள் பௌத்தம் பற்றிய கருத்துக்களையும் தகவல்களையும் மட்டுமே பரப்புகின்றனவே தவிர ஏனைய சமயங்களைப் பற்றிக் கூறாத காரணத்தினால் ஏனைய சமுதாயங்கள் தூரமாக்கப்பட்டுள்ளதாக உணர்கின்றன என்பதையும் அவர்கள் கலந்துரையாடினர். ஊடகத்தின் மூலம் அனைத்து மக்களுக்கும் அனைத்து மதங்களையும் பற்றி விழிப்பூட்டப்படவேண்டும் என ஆலோசனை முன்வைக்கப்பட்டது. அனைவரும் தாம் தேவை என நினைக்கும் போது நுழையும் வகையில் விஹாரைகளைப் போன்று பள்ளிவாயல்களும் திறந்திருந்தால், மேலும் இஸ்லாம் மதத்தினைப் பற்றி மக்களுக்கு விழிப்பூட்டப்பட்டால், பள்ளிவாயலினுள் என்ன நடக்கின்றது என மக்களுக்கு விழிப்பூட்டப்பட்டால் அது சிங்கள மக்களின் மனதில் உள்ள தப்பான கருத்தியல்களை அகற்றுவதில் பெரும் பங்காற்ற முடியும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

பலகொல்ல குழுவினர் விபரிக்கையில், நிகழ்வுகளின் விபரத்திற்கும் வன்முறைக்கான காரணத்திற்கும் இடையில் நுட்பமான வித்தியாசங்கள் இழையோடுவதை நாம் அவதானித்தோம். எமது விசாரணைகளின் போது நாம் அவதானித்த ஒரு சுவாரஷ்யமான விடயம் என்னவெனில், வன்முறை பற்றிக் குறைகூறி, வன்முறையின் பின்னர் நிவாரணம் வழங்குவதில் ஈடுபட்ட நல்லுள்ளம் கொண்ட சிங்களக் குழுக்கள் கூட, பிரதேசத்தின் எல்லா இடங்களிலும் பேசப்படுகின்ற மேலும் தேசிய ஊடகங்களிலும் பேசப்படுகின்ற முஸ்லிம்கள் பற்றிய துவேஷக் கதைகளை இன்னும் ஏற்றுக்கொள்கின்றனர் என்பதுவும் அவற்றினை ஆராயாது பயன்படுத்துகின்றனர் என்பதுமாகும்.

**நிகழ்வின் பின்னரான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட சமுதாயங்கள்: பதற்றம் தொடர்ந்து நிலவுகின்றது**

தாக்குதல்கள் நடத்தப்பட்டு ஐந்து மாதங்களின் பின்னர் நாம் மேற்கொண்ட எமது கடைசி விஜயத்தின் போது நாம் நேர்கண்ட முஸ்லிம்கள் மிகவும் பயந்தவர்களாகக் காணப்பட்டனர். சிங்கள அயலவர்களுடன் சிறந்த உறவினைக் கொண்டிருந்ததாகப் பெருமிதப்பட்ட தென்னக்கும்புரவினைச் சேர்ந்த நபர் ஒருவர், அவர் அயலாண்மை சங்கத்தின் தலைவரும் ஒரே ஒரு முஸ்லிம் உறுப்பினருமாவார், குறிப்பாகக் கரிசனை கொண்டவராகக் காணப்பட்டார். வன்முறையின் பின்னர் தன்னோடு முன்பு இணைந்திருந்தவர்கள் யாரும் தன்னோடு பேசவில்லை எனக் குறிப்பிட்டார். இவர் கண்டி மாவட்டத்தில் நீண்ட காலமாக என்ஜிஓவில் பணியாற்றியவர். இப்போது மதக் கடமைகளைத் தவறாது பின்பற்றும் முதியவராக இருக்கின்றார். இவர் நீண்ட அங்கி அணிந்து நீண்ட தாடியும் வைத்துள்ளார். சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அச்சத்தினாலும் பதற்றத்தினாலும் தனது நீண்ட அங்கியினை தனது நீளக் காற்சட்டையினுள் இட்டு தொப்பியை அணியாது தனது ஆடைகளை மாற்றியிருப்பதாகவும்இது வாழ்வதற்கான ஒரு வழியல்ல எனவும் அவர் குறிப்பிட்டார். *''நான் ஒரு சோனகன்தான், ஆனால் சோனகன் போல் வாழ நான் பயப்படுகின்றேன்.''* எனஅவர் மேலும் குறிப்பிட்டார்.

வன்முறை தொடர்பாக ஜாக்கிரதையாகவும் கட்டுப்பாட்டுடனும் இருப்பது சில இடங்களில் முஸ்லிம்களைச் சோர்வடையச் செய்திருக்கின்ற காரணத்தினால் அவர்கள் இன்றுஇவ்வாறு பயந்து வாழ்வதைப் போல் வாழ்வதை விட எதிர்த்துச் சண்டையிட்டு மரணிப்பது சிறந்தது என நினைக்கின்றனர். சிங்களப் பெரும்பான்மைக் கிராமத்தில் உள்ள ஒரேயொரு முஸ்லிம் குடும்பத்தின் அனுபவம் பற்றி எமக்குக் கூறப்பட்டது. வன்முறை நிகழ்வுகள் நடந்து சில மாதங்களின் பின்னர் அவர்களுக்கு ஒரு சிறு அறிவித்தல் வழங்கப்பட்டது. அப்பியாசப் புத்தகம் ஒன்றில் இருந்து கிழித்தெடுக்கப்பட்ட தாளில் மஞ்சள் ஹைலைட்டரால் சிங்களத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

> *அடேய், நீயெல்லாம் பிள்ளை பெறுவதை நிறுத்துங்கடா. இல்லாட்டி உங்க எல்லாரையும் மாடறுக்கிற மாதிரி வெட்டிப்போடுவம்.*

அக்கடிதத்தின் பின்பக்கத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

> *ஹம்ப கெரியா ('ஹம்பயா' என்ற வெறுக்கத்தக்க சொல்லுக்கு மேலதிகமாக சிங்களத்தில் ஆண்களை மிக மோசமான தூஷன வார்த்தைகளால் பேசப் பயன்படுத்தப்படும் சொல்லான'கெரியா' என்பதன் சிங்கள அர்த்தம் விந்து என்பதாகும்),உங்களையெல்லாம் கொல்லுவண்டா பறையங்களா. நாங்கள் சிங்களப் பிசாசுகள்*

உடனடியாகத் தமது கிராமத்தினை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட முஸ்லிம் குடும்பம் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் ஒரு கிராமத்திற்கு இடம் பெயர்ந்தது.(இருப்பினும் அங்கேயும் பதற்றம் நிறைந்தே காணப்படுகின்றது).

இவ்வாறான பல சந்தர்ப்பங்களில் காணப்படுவது போல், சமுதாயங்களில் பதற்றங்களில் ஏற்படும் அதிகரிப்பும் அனுதாபம் இல்லாமல் இருப்பதும் சமச்சீரானதாக இல்லை. ஒரு சந்தர்ப்பத்தில், திகன பிரதான வீதியில் சிறு பலசரக்குக் கடையினை நடத்தும் ஒரு குடும்பம் எம்முடன் பேசுகையில்,ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் கணவர் ஒருவருக்கு நீரிழிவு உள்ளது என்பதை அறிந்திருந்த அயலிலுள்ள வைத்தியர் ஒருவர் வன்முறையின் பின்னர் அந்த வீட்டிற்குச் சென்று அவரது காயங்களுக்கு மருந்து கட்டி அவருக்கு மருந்தும் கொடுத்திருக்கின்றார் எனத் தெரிவித்தது. மற்றொரு முஸ்லிம் நபர் எம்முடன் பேசுகையில் தனது வீட்டினைச் சாதாரன நிலைக்குக் கொண்டுவருவதற்கு முயற்சித்தவேளை தனது நண்பர்கள் தன்னையும் தன் குடும்பத்தினையும் கவனித்ததாகக் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், கூறப்பட்ட கதைகளில் மிகப் பெரும்பான்மையானவை நலிவடைந்த உறவுகள் பற்றியவையாகவே இருந்தன.

**வன்முறையின் ஒழுங்கமைக்கப்பட்ட தன்மை**

வன்முறையின் ஒழுங்கமைக்கப்பட்ட தன்மையினை எடுத்துக்காட்டும் விடயங்களை கோடிட்டுக்காட்டுவது முக்கியமானது என நாம் நினைக்கின்றோம். சமூக ஊடகங்கள் கூட்டங்களைக் கூட்டி உணர்வுகளைத் தூண்டும் தகவல்களைப் பரப்புகின்ற முறையில் இருந்து பதற்றத்தினை உச்சப்படுத்தி வன்முறைக்கான சாத்தியத்தினைப் பேணுவதற்கான திட்டம் ஒன்று இருந்தது என்பது தெளிவாகின்றது. உதாரணமாக, மார்ச் 6 ஆம் திகதி தாக்குதல்களில் ஒரு மந்த நிலை காணப்பட்டது. ஆனால் தாக்குதல்கள் மீண்டும் மார்ச் 7 ஆம் திகதி ஆரம்பித்தன. எம்முடன் பேசிய பொலிஸினைச் சேர்ந்தவர்கள் இதற்குப் பொறுப்பு சமூக ஊடகம் எனத் தெரிவித்தனர்.(அம்பத்தென்னையில் உள்ள விஹாரை தாக்கப்பட்டது என்கின்ற வதந்தி பரவியமை). சமூக ஊடகத்தினால் அனுப்பப்பட்ட வதந்திகளின் பலனாகவே கூட்டம் சேர்ந்தது என்கின்ற விடயம் நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும். எவ்வாறாயினும், ஒன்றுகூடிய கூட்டத்தின் மத்தியில் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் சொத்துக்களை அழிக்கும் பணி ஒப்படைக்கப்பட்ட நபர்களைக் கொண்ட குழுக்கள் இருந்ததாகவும் தோன்றியது. உதாரணமாக, எந்தரதென்ன கிராமத்தினைத் தாக்குவதற்கு வந்த குழுக்கள் ஒரு தெளிவான நோக்கத்துடனேயே கிராமத்தினுள் நுழைந்தனர். அவர்கள் இரண்டு முச்சக்கர வண்டிகளிலும் ஒரு எல்ப் வேனிலும் வந்ததாகக் கண்ணால் கண்ட சாட்சிகள் குறிப்பிட்டன. அவர்கள் அனைவரும் மிகவும் இளமையானவர்களாக இருந்ததுடன் போதையிலும் இருந்தனர். அவர்களை விபரித்த ஒருவர் வந்தவர்கள் தமது பணியினை நிறைவேற்றுவதற்கு ''*நன்கு ஆயத்தப்படுத்தப்பட்டவர்கள்*'' எனக் குறிப்பிட்டார்.

இளம் நபர்கள் வரும்போது பெரும் சத்தத்துடன் வந்ததுடன் தாம் வந்திருப்பதை மக்களுக்கு உணர்த்தியவர்களாகசொத்துக்களை திட்மிடப்பட்ட ஒழுங்கு முறைமையில் தாக்கத் தொடங்கினர். கண்ணால் கண்ட சாட்சியின் படி ஒரு குழுவினர் மின்சார மீற்றர்களையும் நீர் மீற்றர்களையும் சேதமாக்கினர். ஏனையோர் ஜன்னல்களின் கண்ணாடிகளைச் சேதமாக்கினர். அதேவேளை மற்றைய குழு வீட்டினுள் நுழைந்து தளபாடங்களைச் சேதமாக்கத் தொடங்கினர். மெத தும்பர பிரதேச செயலாளர் பேசும்போது வன்முறை நன்கு ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று எனக் கூறினார். ஏனெனில் கிடைத்த குறுகிய நேரத்தினுள் பெரும் பிரதேசம் தாக்கப்பட்டுப் பாரிய சேதம் விளைவிக்கப்பட்டது. இது அளுத்கம சம்பவத்திற்கு ஒப்பானதாகும். தாக்குதல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு குறுகிய

நேரத்தினுள் முடிக்கப்பட்டன. நாம் பேசிய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுள் ஒருவர் தாக்கப்பட்ட பிரதேசம் முழுவதும் எவ்வாறு குமாரசிங்கவின் ஈமச்சடங்கிற்காகக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது என்பதை விபரித்தார். எவ்வாறாயினும் அவரின் கிராமத்திற்குச் செல்லும் பாதையும் பிரதான வீதியில் இருந்து விலகியிருந்த அவரின் வீடும் அலங்கரிக்கப்பட்டிருக்கவில்லை. நோக்கம் குமாரசிங்கவுக்காக துக்கம் அனுஷ்டிப்பதல்ல மாறாக இனச் சமய உணர்வுகளைத் தூண்டி வன்முறையினைக் கிளப்புவதே என்பதை அலங்கரிப்புச் சுட்டிக்காட்டியது. திகன சந்தையினைச் சேர்ந்த வர்த்தகர்கள் எம்மிடம் தாக்குதல் பற்றி விபரிக்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் குறிப்பிட்ட குழுக்களுக்கென ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட பணிகளுடன் குழுக்களாகத் தாக்குதல் நடத்தின எனக் குறிப்பிட்டனர். சந்தையில் இருந்த கண்ணால் கண்ட சாட்சிகள் குறிப்பிடுகையில் தாக்குதல் நடத்தியவர்கள் முதலில் சிசிடிவிக்களை அகற்றி அதன் பின்னர் கண்ணாடிகளை உடைக்க ஆயுதங்களைப் (கம்பிகள்) பயன்படுத்தினர் எனக் குறிப்பிட்டனர் - ஜன்னல்களையும் காட்சிப்படுத்தல் அலுமாரிகளையும் - அதேவேளை மற்றொரு குழு ஒன்றாகச் சேர்ந்து கடையில் இருந்த பொருட்களை எரித்தனர். பல சந்தர்ப்பங்களில் - திகனயில் அம்பதென்னயிலும் ரஜவெல்லயிலும் வன்முறை நடக்கும் என்பதைத் தாக்குதல் நடப்பதற்கு முன்னைய தினமே சகவியாபாரிகள் சுட்டிக்காட்டினர்.

**வன்முறையின் பொருளியில்**

கண்டி மாவட்டத்தில் வன்முறையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செலுத்தப்பட்ட நட்டஈட்டின் மொத்தத் தொகை 19,000,000.00 ரூபாவாகும். பாரிய தொகையுடைய கோரிக்கைக்கே அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எமது ஆய்வு பூர்த்திசெய்யப்பட்டபோது இவை செயன்முறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அளுத்கமவைப் பொறுத்த அளவில் சேதமாக்கப்பட்ட அனைத்துக் கட்டிடங்களையும் இராணுவம் மீள நிர்மாணித்தது. கண்டியில் மீள் நிர்மாணம் நடத்தப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் அரசாங்கம் அந்தக் கடப்பாடுகளை மீறியுள்ளது.[52]

அரசாங்கம் மாறியுள்ள காரணத்தினால் எஞ்சியுள்ள கோரிக்கைகள் பூர்த்திசெய்யப்படுமா என்பது தொடர்ந்தும் தெளிவற்றதாக உள்ளது. அரசாங்க மதிப்பீட்டாளர்களினால் தயாரிக்கப்பட்ட எண்ணிக்கையினை விட சேதங்களுக்கான செலவு மிக உயர்வானது எனச் சிவில் சமூக மதிப்பீடுகள் கணக்கிட்டுள்ளன. ஜுபைரின் ஜுன் 2018 கட்டுரையில் சிவில் சமூக மதிப்பீடு 1 பில்லியனை அண்மித்த தொகையாகக் குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை,அரச மதிப்பீடு 28 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகக்கூடிய இழப்புக்களைக் கொண்ட பிரதேச செயலகப் பிரிவு குண்டசாலையாகும். இங்கே 71 வியாபாரத் தலங்கள் தாக்கப்பட்டதுடன் ஏற்பட்ட சேதம் 689,000,000ரூபாவாகும். இதில் இரண்டு மிகப் பெரிய வியாபார நிறுவனங்களான ஒரு அரிசி ஆலையும் ஒரு மர ஆலையும் அம்பதென்ன பிரதேசத்தில் தாக்கப்பட்டன. இந்த வியாபார நிறுவனங்களுக்கு ஏற்பட்ட சேதமே பல நூறு மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளன. நாடு முழுவதுமான தாக்குதல்களின் கவனிக்கத்தக்க பாங்கின் பாகமாகவும் இது இருந்தது. (அளுத்கமைவிலும் 100 ற்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட பாரிய ஆடைத் தொழிற்சாலை அழிக்கப்பட்டது). தெல்தெனிய பிரதேசத்தில் நிறுவப்பட்ட முதல் வியாபார நிறுவனங்களில் ஒன்றான அம்பலவிலுள்ள பாரிய பலசரக்கு நிறுவனம் முற்றாக அழிக்கப்பட்டு அதன் பொருட்கள் சூறையாடப்பட்டன. திகன சந்தையில் பல முஸ்லிம் கடைகள் அழிக்கப்பட்டன. சிங்களவர்களுக்குச் சொந்தமான கடைகள் விட்டுவைக்கப்பட்டன. முஸ்லிம் வியாபாரங்களால் திகன எவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது என்கின்ற அமித் வீரசிங்கவின் வீடியோவின் காரணமாக அது நடந்தபோது தாம் ஆச்சரியப்படவில்லை என திகன வியாபாரிகள் குறிப்பிட்டனர். நிகழ்வின் பின்னரும் பிரதேசத்தில் முஸ்லிம்களின் கடைகளைப் பகிஷ்கரிக்குமாறு பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. முன்பு குறிப்பிட்டதைப் போல், ஆட்களுக்கான சேதங்களைக் குறைத்து சொத்துக்களுக்கான சேதங்களை உச்சப்படுத்துவதற்கான ஒரு திட்டம் இருந்துள்ளது போல் தெரிகின்றது. உள்ளூர் மட்டத்தில் வியாபாரப் போட்டி நிலவியமைக்கான சான்றும் காணப்பட்டது. அக்குரணை 8 ஆம் கட்டையில் ஒரு ஹாட்வெயார் கடை உரிமையாளர் குறிப்பிடுகையில் தனது கடையினைச் சேதமாக்கிய நபர் தனது வியாபாரத்தினைப் போன்ற ஒரு வியாபாரத்தினைச் செய்தபோது தன்னுடன் நல்ல தொடர்பினைக் கொண்டிருந்த ஒருவர் எனவும் ஆனால் அவரின் வியாபாரம் வெற்றியளிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார். திகனவில் தாக்குதல் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவர் திகன சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

---

[52]அரசாங்கத்தினாலும் சமுதாய அமைப்புக்களாலும் தயாரிக்கப்பட்ட தொகைகளின் ஒப்பீட்டிற்காக, பார்க்க எல் ஜுபைர் மற்றும் ஏனையோர்,“கண்டியில் நடைபெற்ற கும்பல் வன்முறையினால் ஏற்பட்டஇழப்புக்களை அரசு ஒட்டுமொத்தமாகக் குறைத்து மதிப்பிடுகின்றதா” கிரவுண்ட் விவ்ஸ், 24 ஜுன் 2018 https://groundviews.org/2018/06/24/is-the-state-grossly-underestimating-the-losses-from-the-mob-violence-inkandy/

ஒவிஸ்ச கிராமத்தில் சிறிய தொழிற்சாலை ஒன்றில் ஹேன்ட் பேக்குகளைத் தயாரிக்கும் சில பெண்களை நாம் சந்தித்தோம். அந்தத் தொழிற்சாலை முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமானது. நகரத்திலேயே முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான வியாபாரம் அது மட்டும்தான் என எம்மிடம் கூறப்பட்டது. அக்கட்டிடம் மார்ச் 7 ஆம் திகதி எரியூட்டப்பட்டது. ஒவிஸ்சவில் வாடகைக்கு எடுத்திருந்த தொழிற்சாலையினை மூடிவிட்டு இயந்திரங்களை அகற்றி முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிக்கு அவற்றினை எடுத்துச் செல்வது என உரிமையாளர் தீர்மானித்துள்ளார். அவரிடம் வேலை பார்த்த பெண்கள் அவரைப் போகவேண்டாம் என்று கெஞ்சியதுடன் கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதத்தினைத் தமது சொந்தச் செலவில் திருத்தியிருக்கின்றனர். தொழிற்சாலை ஒவிஸ்சவில் தொடர்ந்தும் இயங்கவேண்டும் என்று தாம் வேண்டியதற்கான காரணம் அதுவே தங்களின் ஒரே ஒரு வாழ்வாதாரம் என்பதால் ஆகும் என்பதுடன் தேவையெனின் தமது பிள்ளைகளைக் கூட்டிவரக் கூடிய இடமாக அது இருக்கின்றது என்பதுமாகும் என எம்மிடம் கூறினர். முஸ்லிம் வியாபாரங்கள் இலக்குவைக்கப்பட்ட விதத்தினை ஒவிஸ்ச தொழிற்சாலை சுட்டிக்காட்டுகின்றது என்பதுடன் சமுதாயங்கள் அனைத்திலும் பொருளாதாரத் தாக்கங்கள் எவ்வாறு உணரப்பட்டன என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

**உள்ளூர்ப் புத்திஜீவிகளின் நுழைபுலங்கள்**

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு பற்றிய கண்ணோட்டங்களை வழங்குமாறு நாம் கேட்டபோது சிவில் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் இருந்தும் அரசாங்க அதிகாரிகளிடம் இருந்தும் உள்ளூராட்சி சபைகளின் அரசியல்வாதிகளிடம் இருந்தும் பெற்ற கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளின் கலவையினையே இந்தப் பகுதி வழங்குகின்றது. இன உறவுகள் சீர்குலைந்தமை பற்றிய மக்களின் மதிப்பீட்டில் பல பொதுவான தன்மைகள் காணப்படுகின்றன. சிங்களத் தேசியவாதம் மற்றும் அரசியல் இலாபத்திற்காக இனப் பகைமையினைத் தூண்டுகின்றமை பற்றி அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களின் பெரும்பான்மையினால் திறனாய்வுடன் கலந்துரையாடப்படுகின்றன. நாம் பேசியவர்களில் அதிகமானவர்கள் நாட்டில் அரசியல் நிலை பற்றிக் கவலை தெரிவித்ததுடன் சமூகத்தில் நெறிகளும் அறங்களும் சீர்குலைந்துள்ளமை பற்றியும் கவலை தெரிவித்தனர். எவ்வாறாயினும், சிங்கள மற்றும் முஸ்லிம் அடையாளம் காணப்பட்ட நபர்களினால் முஸ்லிம்களின் தன்மை என்பது கலந்துரையாடப்பட்ட விதத்தில் வித்தியாசங்கள் காணப்பட்டன. பின்வரும் வழிகளில் அதிகரித்து வரும் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகள் பற்றி இரண்டு சிங்கள அரசாங்க அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர். எமது கடந்த காலத்தில் நாம் (இலங்கையில்) ஒருவர் மற்றவரின் சமய நம்பிக்கைகளை விமர்சிப்பது உகந்தது என நினைக்கவில்லை. அவ்வாறு விமர்சிப்பது ஒரு விதியாக மாறிவிட்டது. முஸ்லிம்களை ஊடகங்கள் சித்தரிப்பது பற்றிக் குறிப்பாகப் பேசிய மற்றொரு நபர், ஊடகங்களின் சித்தரிப்புக்களைப் பொதுமக்கள் எவ்வாறு திறனாய்வுடன் புரிந்துகொள்ளவேண்டும் என்பது பற்றிய நெறிப்படுத்தல்களை வழங்கக்கூடிய மதிக்கப்பட்டதும் நிதானமானதுமான குரல் இல்லை எனக் குறிப்பிட்டார். உதாரணமாக, வில்பத்து வன சீவராசிகள் புகலிடம் பற்றிய பிரச்சினையினை ஹிரு தொலைக்காட்சி உள்ளடக்கியமை பற்றிக் குறிப்பிடப்பட்டதுடன் அது ஒரு முஸ்லிம் அமைச்சரின் நடவடிக்கைகளைக் கோடிட்டுக்காட்டி புகலிடத்தினை அவர் அத்துமீறியதாக அவர் மீது குற்றஞ்சாட்டிய விதம் பற்றியும் குறிப்பிடப்பட்டது. இச்சித்தரிப்புக்களின் உண்மையினை பொதுமக்கள் எவ்வாறு தீர்மானிக்கவேண்டும் என்பது பற்றியோ அல்லது அது உண்மையான ஒரு கூற்றுத்தானா என்பது பற்றியோ தகவல்கள் இருக்கவில்லை. முஸ்லிம் தனித்தன்மையினை ஒரு பிரச்சினை என ஏனையோர் பேசினர். ஏனைய மதத்தினைச் சேர்ந்தவர்கள் பள்ளிவாயலுக்குள் செல்ல அனுமதிக்கப்படாமை அவநம்பிக்கைக்கு இட்டுச் சென்ற ஒரு பிரச்சினையாக எழுப்பப்பட்டது. முஸ்லிம்களின் மத்தியில் ''தீவிரவாதிகள்'' இருக்கின்றமை பற்றி இன்னொருவர் குறிப்பிட்டார். தீவிரவாதி என்றால் என்ன என்று விளக்குமாறு நாம் அழுத்தம் கொடுத்தபோது, முஸ்லிம் வியாபார நிலையங்களுக்கு மட்டும் செல்லும் அக்குரணை மக்கள் தொடர்பாகவே அவ்வாறு குறிப்பிடப்பட்டது என எம்மிடம் கூறப்பட்டது. அண்மைக் காலங்களில் முஸ்லிம் மக்கள் அனுபவித்த அந்தஸ்துச் சீர்குலைவு பற்றி முஸ்லிம் புலமையாளர்கள் கலந்துரையாடினர். கல்விக்கான அணுகல் பற்றிப் பேசும்போது, கண்டியின் மேட்டுக்குடியினர் நகரத்தின் மிகச் சிறந்த பாடசாலைகளுக்குச் செல்ல முடியாதிருக்கும் விதம் பற்றி அவர்கள் மனவருத்தம் தெரிவித்தனர். கிங்ஸ்வூட் மற்றும் புனித சில்வெஸ்டர் ஆகிய பாடசாலைகளில் கடந்த காலத்தில் முஸ்லிம் மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் கல்வி கற்றனர். எவ்வாறாயினும், இந்த எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது. முஸ்லிம்கள் தங்களின் பிள்ளைகளை ''75% சாதாரண தரம் பெயில்'' என வர்ணிக்கப்படுகின்ற தரம் குறைந்த அரசாங்கப் பாடசாலைகளுக்கு அல்லது தரம் குறைந்த சர்வதேசப் பாடாசலைகளுக்கு அனுப்புவதற்கு இப்போது நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். செல்வந்த முஸ்லிம்கள் அவர்களின் பிள்ளைகளுக்கு மிகச் சிறந்த கல்வி வாய்ப்புக்களை வழங்கும் அதேவேளை (நாட்டில் அனைத்து இனச் செல்வந்தர்களும் போல்), நடுத்தர வருமானம் பெறும் முஸ்லிம்களும் வறிய முஸ்லிம்களும் தங்களின் பிள்ளைகளைத் தரம் குறைந்த பாடசாலைகளில் படிப்பிக்க நிர்ப்பந்திக்கப்படுவதால் இப்பிள்கைளிள் எதிர்காலம் ஆபத்தில் இருக்கின்றது. கண்டியில் மிகச் சிறந்த பெண்கள் பாடசாலைகளாகத் தரமிடப்பட்டுள்ள பாடசாலைகளில் இன்னும் முஸ்லிம் மாணவிகள் கல்விகற்கின்றனர். எவ்வாறாயினும், இவ்வாறான பாடசாலைகளில் கல்விகற்கையில் முஸ்லிம் மாணவிகளும் அவர்களின் பெற்றோர்களும் முகங்கொடுக்கும் துவேஷம் அதீதமானதாகக் காணப்படுகின்றது. கரிசனைக்குரிய ஒரு விடயமாக முஸ்லிம் பெண்களின் ஆடை பற்றிக்

கலந்துரையாடப்பட்டது. தனது மகள் அவரின் திருமண அழைப்பிதழை அவரின் ஆசிரியருக்குக் கொடுப்பதற்கு இயலாமல் இருந்தது பற்றி ஒருவர் குறிப்பிட்டார். முதலில் தனது மகளைப் பாதுகாப்பு அதிகாரி பாடசாலையின் உள்ளே அனுமதிக்கவில்லை. ஒருவாறு சமாளித்து உள்ளே அலுவலகத்தினுள் சென்ற மகளிடம் பாடசாலையின் புதிய அதிபர் பேசவில்லை. அதற்கான காரணம் மகள் தனது தலையினை மறைத்திருந்தமையே ஆகும். முஸ்லிம்கள் கலப்புப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு ஊக்குவிக்கப்படவேண்டும் என மற்றொரு நபர் குறிப்பிட்டார். தான் அவ்வாறான ஒரு கலப்புப் பாடசாலையில் கற்றவர் என்பதால் தன்னால் மற்றைய சமூகத்துடன் நன்கு கலந்து பழக முடிகின்றது என்றும் அவ்வாறான அனுபவம் இல்லாத சக முஸ்லிம்களினால் அவ்வாறு செய்ய முடிவதில்லை என்றும் அவர்களிடம் நம்பிக்கை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அத்தியாயம் 5

## சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களின் வாக்குமூலங்கள்

வன்முறையின் போது பொலிஸார் பாரதூரமான முறையில் பதிற்செயற்பாடாற்றியதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்களும் அரசியல்வாதிகளும அவர்கள் மீது குற்றஞ்சாட்டினர். ஒரு சந்தர்ப்பத்தில் பள்ளிவாயலுக்குத் தீ வைப்பதற்குப் பொலிசார் உண்மையில் உதவியமைக்காகவும் அவர்கள் மீது குற்றஞ்சாட்டினர். மிகவும் மனவருத்தத்தினை ஏற்படுத்தும் ஓர் உதாரணத்தில் (நாம் மேலே ஆவணப்படுத்தியவாறு), விசேட அதிரடிப் படையினர் சப்பாத்துக் கால்களுடன் பள்ளிவாயல் ஒன்றினுள் நுழைந்து அங்குள்ள இரண்டு மௌலவிமார்களை தாக்கியமை சிசிடிவியில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான கண்கூடான சாட்சிகளும் உள்ளனர். மற்றொரு சந்தர்ப்பத்தில் ஓர் உள்ளூராட்சி சபை அரசியல்வாதியான பாசில் என்பவரையும் அவரின் நண்பரான பாசில் என்பவரையும் தீவிரமாகத் தேடிச் சென்று அவர்களின் வீட்டினுள் நுழைந்து அவர்களை வெளியே இழுத்து அவர்கள் மீது பெற்றோல் குண்டுகளை வைத்ததமையும்[53] சிசிடிவியில் பதியப்பட்டுள்ளதுடன் அதற்கான நேரடிச் சாட்சிகளும் உள்ளன. குறைந்தது ஒரு சிசிடிவி பதிவில் பொலிஸ் சீருடையில் இருக்கும் நபர் ஒருவர் ஒரு கட்டிடத்தின் கதவினை உடைத்துத் திறக்க அக்கதவினூடு கும்பல்கள் உள்நுழைவதைக் காண முடிகின்றது.

கண்டி நிகழ்வில் சம்பந்தப்பட்ட இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒரு பிரதேசத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பெயர் அடையாளாப்படுத்தப்படக் கூடாது எனும் நிபந்தனையின் பேரில் எம்முடன் பேசினர். சட்ட அமுலாக்கல் முகவர்களின் கண்ணோட்டத்தில் அந்த நாட்களில் என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ளும் ஒரு முயற்சியில் அமைந்த அந்தக் கலந்துரையாடல்களில் இருந்து நாம் கண்டறிந்தவை பற்றிய மிகப் பொதுவான கூற்றுக்களை மட்டுமே நாம் வழங்குகின்றோம்.

நேர்கண்ட மூன்று உத்தியோகத்தர்களும் பொலிஸாரின் பதிற்செயற்பாடு போதாதது என்பதையும் திருப்தியற்றது என்பதையும் ஏற்றுக்கொண்டனர்.

வன்முறையின் சூழ்நிலை மற்றும் சூழமைவு ஆகியவற்றுக்கான மேற்பார்வைப் பொறுப்பினைக் கொண்ட உயர் பதவி வகிக்கும் பொலிஸ் அதிகாரிகள் வழங்கிய இரகசியமான விளக்கங்களும் பகுப்பாய்வுகளும் மிகவும் பயன்மிக்க வகையில் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், பொலிஸாரின் பதிற்செயற்பாட்டின் தரம் என்பது இந்த மூன்று வகைகளையும் ஒன்றுசேர்ப்பதன் மூலமே தீர்மானிக்கப்படுகின்றது. எமது பேச்சாளர்களினால் வழங்கப்பட்ட சார்பளவிலான முக்கியத்துவத்தினை கீழேயுள்ள பிரிவு பிரதிபலிக்கின்றது.

### 1) தொழில்நுட்ப மற்றும் நிர்வாகத் தடைகளை அடிப்படையாகக் கொண்ட விளக்கங்கள்

இருக்கவேண்டிய எண்ணிக்கையில் பணியாளர்கள் இல்லாமை மற்றும் இவ்வாறான சமுதாய மட்ட வன்முறையினைக் கையாளுவதற்குப் போதிய அளவில் பயிற்றப்பட்ட பணியாளர்கள் இல்லாமை என்பதற்கான சான்றடிப்படையிலான விளக்கத்தினை நியாயப்படுத்தும் வாதாடல் உள்ளடக்குகின்றது. பயணம் செய்யக் கடினமான நிலப்பாங்கினைக் கொண்ட பிரதேசம் மற்றும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் கிராமங்கள் மோசமான புற அணுகல் உட்பிரதேசங்களில் அமைந்திருந்தன என்பன போன்ற காரணங்களும் தாமதமான மற்றும் போதிய அளவில் அமையாத பதிற்செயற்பாட்டிற்கான பிரதான தீர்மானக் காரணிகளாகப் பார்க்கப்பட்டன. இன மற்றும் சமயச் சிறுபான்மையினைச் சேர்ந்த சொற்பமானவர்களே பணியில் அமர்த்தப்பட்டு மத்திய மாகாணத்தில் நிலைப்படுத்தப்பட்டமையும் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கான மற்றும் நல்லுறவினைக் கட்டியெழுப்புவதற்கான தடையாக அடையாளம் காணப்பட்டது. இவ்வாறான நெருக்கடிமிக்க சூழ்நிலையில் சமுதாயங்களுக்கு இடையிலான தொடர்பாடலிலும் செயற்திறன்மிக்க கட்டுப்பாட்டிலும் இவ்வாறு நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவது அளப்பரியதாக அமைந்திருக்கும். இந்த விடயங்கள் அனைத்தும் உண்மையென உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, பொலிஸார் சம்பந்தப்படும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் (குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது மற்றும் போக்குவரத்துக் குற்றங்களைக் கட்டுப்படுத்துவது போன்ற) இது சமமான முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

[53]இந்தச் சம்பவங்களின் நேரடிச் சாட்சிகளின் விளக்கத்திற்கு 2018 மார்ச் 24 ஆம் திகதிய பிபிசி செய்தியினைப் பார்க்க. ரொம் ஆல்லார்ட், ஷிஹார் அனீஸ், ‘‘இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையில் இணைந்தமைக்காகப் பொலிசார் மீதும் அரசியல்வாதிகள் மீதும் குற்றச்சாட்டு’’ ராய்ட்டர், 25 மார்ச் 2018 https://uk.reuters.com/article/uk-sri-lanka-clashes-insight/police-politicians-accused-of-joining-sri-lankas-antimuslim-riots-idUKKBN1H102O

தற்போதைய சந்தர்ப்பத்தினை விட இவற்றில் பொலஸாரின் செயலாற்றுகை குறிப்பிடத்தக்க விதத்தில் சிறந்ததாக அமைந்துள்ளது.

இந்த விடயம் குறிப்பிடத்தக்க அளவுக்கு நேரடியானதாகும். ஆனால் இத்தடைகளை நிவர்த்தி செய்வது செயற்திறன்மிக்க நடவடிக்கைக்கு இட்டுச் செல்லுமா என்பது தெளிவற்றதாகும். ஏனெனில் பொலிஸார் வகித்த வகிபாத்திரமும் செலுத்திய செல்வாக்கும் கீழேயுள்ள மேலும் இரண்டு அரசியல்மயமாக்கப்பட்ட காரணிகளினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன:

2) **அக்கறையின்மைக்கு இட்டுச்சென்றுள்ள இவ்வாறான சம்பவங்கள் மற்றும் இதேபோன்ற கடந்த காலச் சம்பவங்களைச் செயற்திறனுடன் கையாள்வதற்கு பொலிஸார் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் அரசியல் ஆர்வமின்மையினை அடிப்படையாகக் கொண்ட விளக்கங்கள்**

செயற்பாடின்மைக்கும் அக்கறையின்மைக்கும் காரணமாகக் கூறப்பட்ட பிரதான தீர்மானக் காரணிகள் அரசியல்வாதிகளிடம் இருந்தும் பொலிஸாரிடம் இருந்தும் தெளிவான அறிவுறுத்தல்கள் இல்லாமையாகும். மேலும், வன்முறையினை நிகழ்த்துகின்ற பிரதான குற்றவாளிகள் பெரும்பான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற இவ்வாறான இனச் சமய மோதல்களில் அச்சமும் பரிவும் இன்றித் தமது கடமையினை நிறைவேற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்காகத் துணை நிற்கும் என்ற நம்பிக்கை நிறுவனத்தின் மீது இல்லாமல் இருந்தது. இந்தச் சூழ்நிலையினை விளக்க அளுத்கமை சம்பவத்தில் இருந்து உதாரணங்கள் வழங்கப்பட்டன. தமது அரசியல் வீழ்ச்சிக்குக் காரணமாக அமையக்கூடிய மக்கள் விரும்பவே விரும்பாத செயல்களைச் செய்வதில் ஈடுபட அரசியல்வாதிகளும் ஏனைய தலைவர்களும் விரும்பாத மனப்பாங்கின் காரணமாகவே அடையாளம் காணப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்காமையும் சட்டவிரோத ஒன்றுகூடலை ஆரம்பத்திலேயே கலைப்பதற்குச் செயற்படாமையும் நிகழ்கின்றன.

இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின், பெரும்பான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்த குற்றவாளிகளைத் (இவர்கள் அரசியல் அனுசரணையினைப் பகிரங்கமாகக் கோருபவர்கள்) தடுத்து நிறுத்தக்கூடிய பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கான உதவி உண்மையிலேயே (மேலும் மிக உறுதியாகப் புலனுணரப்பட்டதும் கூட) இல்லாமல் இருந்தமை, வலிமையான நடவடிக்கைகளைத் தடுக்கின்றன. இவ்வாறான உள்ளூர்மயமாக்கப்பட்ட சூழ்நிலைகளில் நாளாந்த அடிப்படையில் நேரடியான அணுகலைப் பெரிதும் கொண்டிராத தேசிய அரசியல் தலைவர்களை விடக் களத்தில் உள்ள அரசியல்வாதிகள் அதிகமான உடனடி அதிகாரத்தினைக் கொண்டுள்ளனர். பெருநகர மட்டத்தில் நிலவும் உறுதியான கூற்றுக்கள் களத்திலே மக்கள் விரும்பாத தண்டனைச் செயற்பாடுகளாகத் தானாகவே மாற்றம் பெறாது.

3) **சித்தாந்த ரீதியான மற்றும் இன சமய ரீதியாக மையப்படுத்தப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்ட விளக்கங்கள்**

திகன சம்பவம் பற்றிப் பல்வேறு முகவர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இதுவே மிகவும் சிக்கல் வாய்ந்ததும் சார்பளவில் ஆராய்ச்சி செய்யப்படாததுமான பரப்பாகும். ஆனால் இதன் முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடப்படலாகாது. ஏனெனில், இதுதான் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நியாயப்படுத்தும் வாதாடலின் இரண்டு வகைகளையும் இயலுமாக்கி நியாயப்படுத்துகின்றது. முதலாவது, பெரும்பாலும் அடையாளம் காண இலகுவானதாக இருப்பது, சிங்கள பௌத்தப் பேரினவாதத்தின் இனச் சமய ஆதிக்கமாகும். இருப்பினும் இது பொலிஸ் அதிகாரிகளினால் அவ்வாறு ஒன்றும் வெளிப்படையாக அடையாளம் காணப்படவில்லை. சிங்களத் தேசியவாதம் என்பது இந்தப் போக்கிற்கான மிகவும் விரும்பப்படுகின்ற மற்றும் பெரிதும் சர்ச்சையற்ற பெயராக இருந்தது. ஆனால் சிங்கள இனக் குழுமத்திற்கு (மற்றும் பௌத்த சமயத்திற்கு) விசேட அந்தஸ்தினைக் கோருதல் மற்றும் அனைத்துச் சிறுபான்மையினரையும் பெரும்பான்மையினரின் அங்கீகாரத்துடன் இயங்கும் நிலைக்கு ஒதுக்குதல் ஆகியவை இதன் பிரதான பண்புகள் எனத் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன.''தங்களின் நிலையினை அறிந்திருத்தல்'' மற்றும் ''எமது சகிப்புத்தன்மையினைத் துஷ்பிரயோகம் செய்யாதிருத்தல்'' ஆகியவையே இந்தச் சித்தாந்தத்தின் பிரதான கூறுகள் எனச் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் விளக்கினர். எனவே, பெரும்பான்மை அதன் பெருந்தன்மை காரணமாகக் கையறு நிலைக்குத் தள்ளப்படுகின்றது என்னும் உணர்வே இந்த உலகநோக்கிற்கு இன்றியமையாததாகும். இதன் மிகப் பொதுவான வடிவில், பௌத்த விஹாரைகளும் பிரதான விஹாராதிபதிகளும் இச்சிந்தாந்தத்தின் தரகர்களாக இருக்கின்றனர்.

அனைத்துப் பதவி மட்டங்களையும் சேர்ந்த அதிகமான பொலிஸ் அதிகாரிகள் பிரதேசத்தினைச் சேர்ந்தவர்கள் என்கின்ற விடயமும் அக்காரணத்தினால் அவர்கள் வன்முறையினை நிகழ்தியவர்களைத் தமது சகபாடிகளாக, நண்பர்களாகக் கூடக் கருதுகின்றனர் என்ற விடயமும்

அவர்கள் ஒரே விஹாரைகளின் மற்றும் ஏனைய சமூகக் குழுக்களின் உறுப்பினர்கள் என்ற ரீதியில் இதே சித்தாந்தத்தினை நம்புகின்றனர் என்ற விடயமும் திகன நகரில் கலகக்காரர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் எதிராகப் பொலிஸார் தடுப்பு நடவடிக்கைகளையும் தண்டனை விதிக்கும் நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு எதிரான தெளிவான மற்றும் உறுதியான தடையாக இருந்தது. அதிகாரங்களுக்கும் நியமங்களுக்கும் கட்டுப்படாதிருந்த முஸ்லிம்களுக்கு இது சிறந்த தண்டனை என அனைத்து மட்டங்களையும் சேர்ந்த சிங்களப் பொலிஸ் அதிகாரிகள் உண்மையில் சிந்திப்பதற்கு எத்தனித்தனர் எனும் கருத்துக் கூட வெளியிடப்பட்டது. இது அழுத்தமாகக் கோடிட்டுக் காட்டப்படாவிட்டாலும் கூட, சிங்கள வியாபார நலன்களுக்கும் பௌத்த தேசியவாதத்திற்கும் இடையிலான உடந்தையும் சுட்டிக்காட்டப்பட்டது. முஸ்லிம் கடைகளுக்கு அருகில் இருந்த சிங்களக் கடைகளின் பொருட்களுக்குச் சேதமேற்படுத்தாமல் முஸ்லிம் கடைகளை மட்டும் இலக்குவைத்ததில் இருந்து இது உறுதியாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

தவறுசெய்யும் ‘‘சிறுபான்மையினருக்குப் பாடம் புகட்டும் ஒரு வழியாக இவ்வாறான வன்முறைகள் நாட்டில் அடிக்கடி தோன்றாமல் இருக்கவேண்டுமாயின் இந்தச் சித்தாந்த ரீதியான காரணிகள் குறிவைக்கப்படவேண்டும். இவ்வாறான வன்முறையினையும் சட்டக்காப்பினையும் உடனடியாக நிறுத்தவேண்டிய தேவை பற்றி எம்முடன் பேசியவர்கள் மிகத் தெளிவாக இருந்த அதேவேளை, சிங்கள நடத்தையின் இந்த உள்ளார்ந்த சித்தாந்த ரீதியான அடிப்படை தொடர்ந்தும் சார்பளவில் ஆராயப்படாமலேயே இருந்து வருகின்றது என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும்.

பொலிஸாரின் பதிற்செயற்பாடு இதைவிட மிகச் சிறப்பானதாக அமைந்திருக்கலாம் மற்றும் பதிற்செயற்பாடு போதியதாக இருக்கவில்லை என்பதைப் பொதுமக்கள் அறிந்துகொண்டது சரிதான் என்கின்ற அதேவேளை, அப்பிரதேச முஸ்லிம் மக்களுக்கு எதிரான சதித்திட்டமோ அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட தாக்குதலோ இதற்கான காரணம் அல்ல, ஆனால் பல காரணிகளின் இணைப்பே இதற்குக் காரணம் என்பதுவும் அக்காரணிகளில் ஒன்றாகத் துவேஷம் உள்ளது என்பதுமே நாம் பேசிய உத்தியோகத்தர்களிடம் இருந்து நாம் கேள்விப்பட்டதாகும். கண்டியிலுள்ள சில பிரதேசங்களுக்குச் செல்வது கடினமானதாகக் காணப்படும் விதத்திலேயே கண்டியின் புவியியல் அமைவிடம் காணப்படுகின்றது. முஸ்லிம் பிரதேசங்களுக்குச் செல்வதற்கு சிங்களப் பிரதேசங்களினூடாகப் பயணிக்கவேண்டிய விதத்திலேயே உட்பகுதிகளில் உள்ள சில பிரதேசங்கள் காணப்படுகின்றன. சில முஸ்லிம் நகரங்கள் சிங்கள நகரங்களால் சூழப்பட்டுள்ளன. இனச் சமய வன்முறை ஏற்படும்போது அதற்கு பதில் நடவடிக்கை எடுக்கையில் இந்தச் சூழ்நிலை சவால்மிக்கதாக அமைந்துவிடுகின்றது. மேலும் உள்ளூர்ப் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் அதிகமான கான்ஸ்டபிள்கள் சுற்றியுள்ள பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் இவர்கள் தமது கிராமங்களில் நிலவும் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளையே பிரதிபலிப்பதற்கும் வன்முறையினை நிகழ்த்தியவர்களையும் அதற்கு ஆதரவானவர்களையும் அறிந்திருப்பதற்கும் கூட வாய்ப்பிருந்தது. இந்தச் சூழ்நிலைகளே பிரதேசத்தில் பொலிஸாரின் பதிற்செயற்பாடுகள் மந்தமானவையாக அமைவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

இனப் பாகுபாடு என்பது அரசின் கட்டமைப்பு ரீதியான அம்சமாக இருக்கின்றது எனும் விடயம் (உதாரணமாக, மோசமான பதிற்செயற்பாட்டினை இயலுமாக்குவதில் பொலிஸில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாக இருப்பது ஒரு தீர்மானகரமான காரணி என அடையாளம் காணப்பட்டுள்ளது) உள்ளிட்ட இனச் சமய வன்முறையின் பிரச்சினைகளை சகல அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டிருந்தனர். உள்ளூர் பொலிஸில் வழமையாகப் பிரதேசத்தினைச் சேர்ந்த மக்களில் 60% மானவர்கள் இடம்பெறுகின்றனர். எனவே, வன்முறையில் பங்குபற்றியவர்கள் பொதுவாகப் பொலிஸ் ஆளணியினரின் சொந்தக் கிராமத்தினை அல்லது நகரத்தினைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். சிலவேளைகளில் அவர்களின் உறவினர்களாகக் கூட இருந்தனர். மேலும் தற்போதுள்ள பொலிஸ் படையில் 1 சத விகிதத்திற்கும் குறைவாகவே முஸ்லிம்கள் உள்ளனர். சிறுபான்மையினருக்கு எதிரான உணர்வுகள் - இந்தச் சம்பவத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகள் - காலத்திற்குக் காலம் உருவாகி சமுதாயங்களின் மத்தியில் அழிவினை ஏற்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர். ராஜபக்சவின் ஆட்சியின் கீழ் இனவாத உணர்வுகளில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதைத் தான் அனுபவித்திருப்பதாக அவர்களில் ஒருவர் குறிப்பிட்டுக் கூறினார். ஒரு நாடு என்ற ரீதியில் நாம் சிங்களவர்களுக்கு *பாரிய உரித்தினைக் கோரும்* புராதனப் பழக்கத்தினைத் தவிர்க்கவேண்டும் என மற்றவர் குறிப்பிட்டார். *வரலாற்றினைக் காட்டிக் காட்டி நாங்களே உரித்துடையவர்கள்* என சிங்கள உரித்தினைக் காட்டுவது இனிமேலும் பயனளிக்கப் போவதில்லை என அவர் கூறினார். நாம் *ஒன்றுசேர்ந்து முன்செல்லவேண்டும்* என அவர் கூறினார். இந்தப் பகைமைகளின் நிலைபேறானதும் முறைமைவாய்ந்ததும் நன்கு நிதியிடப்பட்டதுமான உருவாக்கம் இருந்தது என்பதையும் அரசாங்கம் அதற்காக எந்தப் பொறுப்பினையும் ஏற்கவில்லை என்பதையும் வன்முறையின் தவிர்க்கமுடியாத உருவாக்கத்தினைத் தடுக்க எதையும் செய்யவில்லை என்பதையும் பற்றி அவர்கள் அனைவரும் தெளிவாக இருந்தனர். முஸ்லிம்களுக்கெதிரான செயற்பாடுகளை மேற்கொள்ள நிதியளிக்கப்படும் இயக்கங்களை அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதுடன் அவற்றிற்கு எதிராக நீடுறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மேலும் பொலிஸின் மீது மாத்திரம் சுமையினை விதிக்கக்கூடாது.

தண்டனைச் சட்டக்கோவையில் உள்ள சட்டவிரோத ஒன்றுகூடல் பற்றிய பிரிவு நியமமான செயற்பாட்டுச் செயல்விதிகளைக் குறித்துரைக்கின்றது என்றும் அளுத்கமையில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலையக் காரணம் அவ்வாறான செயல்விதிகள் பின்பற்றப்படாமையும் ஆகும் என எம்முடன் பேசிய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர் குறிப்பிட்டார். தெல்தெனியவிலும் திகனவிலும் நடந்த சம்பவங்களில் போதிய பதிற்செயற்பாடாற்றத் தவறியமைக்கான காரணம் பல்வேறு பொலிஸ் பங்கீடுபாட்டாளர்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு இல்லாமையாகும் என அவர் குறிப்பிட்டார். சட்டவிரோத ஒன்றுகூடல் இடம்பெறுகின்ற காரணத்தினால் சமாதானத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுகையில் என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதைப் பொலிஸ் படையில் உள்ள அனைத்து மட்ட உத்தியோகத்தர்களும் அறிந்திருக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார். இதில் கூடியுள்ள கூட்டத்தினைக் கலைக்க இராணுவத்தினை நீதவான் அழைக்கும் சாத்தியமும் உள்ளடங்குகின்றது. பொறுப்பான பல்வேறு கூறுகள் ஒன்றுசேர்க்கப்படவில்லை எனும் விடயம் செயற்படத் தவறியமையாகவே பார்க்கப்பட்டது. பிரதேசத்தினைச் சேர்ந்த கண்டியிலுள்ள சில சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பிரதேசத்திலுள்ள குடியிருப்பாளர்களுடனான அவர்களின் உறவின் காரணமாக எவ்வாறு பலத்தினைப் பிரயோகித்துச் செயற்பட வேண்டுமோ அவ்வாறு செயற்படும் நிலையில் இருந்திருக்க மாட்டார்கள்.

அளுத்கமையில் பொறிமுறை ஏன் தோல்வியுற்றது என்பதற்கான விளக்கம் எமக்கு வழங்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் பொலிஸார் இன உணர்வுமிக்கவர்களாக மாறியதாகவும் அதனால் முஸ்லிம்களுக்குச் சார்பானதாகத் தென்படக்கூடிய நடவடிக்கையினை வன்முறையின் போது நிறைவேற்றுவதன் மூலம் பலிக்கடாவாகுவதற்கு பொலிஸிலுள்ள எவருமே விரும்பவில்லை என்ற விளக்கமும் எமக்கு வழங்கப்பட்டது. அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பான தெளிவான கட்டளைகள் உயர் மட்டத்தில் இருந்து வரவில்லை என்பதுடன் உரிய அமுலாக்கலை அவர்கள் நிறைவேற்றுவதை உயர் மட்டம் விரும்பும் என்பதற்கான நம்பிக்கையும் இருக்கவில்லை. பொலிஸ் அதிகாரிகள் பொதுவாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி போன்ற அவர்களின் மேலதிகாரிகளின் நெறிகளையும் விழுமியங்களையும் பின்பற்றுவர் என்றும் சிரேஷ்ட அதிகாரிகளிடம் இருந்து முறையான அறிவுறுத்தல் வரவில்லை என்றும் அவர் கூறினார்.

பொலிஸாரின் தரப்பில் தவறு நடைபெற்றிருக்கின்றது என்பதை இரண்டு அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டனர். பொலிஸாரின் பதிற்செயற்பாட்டினை விபரிக்க ஒருவர் செயற்திறனின்மை என்ற சொல்லைப் பயன்படுத்தினார். எந்த ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலும் கடமையில் உள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை, துரிதமாக பதிற்செயற்பாடாற்றுவதற்கு வாகனங்கள் கிடைக்கக்கூடியமை, கையாளவேண்டிய கட்டாயத்தில் இருந்த அனைத்துக் கட்டுப்பாடுகள் போன்ற நடைமுறைப் பிரச்சினைகளையும் பொலிசார் எழுப்பினர். உதாரணமாக, வன்முறை நடந்த இடங்களுக்குச் செல்வது ஒரு பிரச்சினையாக இருந்தது. ஓர் இடத்தில் வன்முறை நிகழும் என எதிர்பார்த்து அங்கே பொலிஸின் அனைத்து வளங்களையும் குவித்து கடமையில் நிலைகொள்ளும்போது 30 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் வேறு ஓர் இடத்தில் வன்முறை வெடித்த விடயம் கோடிட்டுக்காட்டப்பட்ட ஒரு பிரச்சினையாகும். திகனவில் கூடிய கூட்டம் பற்றிப் பொலிஸார் போதிய அளவு அறிந்திருக்காமல் இருந்தது புலனாய்வுத் தவறு என விபரிக்கப்பட்டது.

சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவர் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டார்:

> ‘‘சூழ்நிலையினை மோசமாக்காத விதத்திலும் நாம் செயற்படவேண்டும். கைது செய்யப்பட்டவர்களும் சிங்களவர்கள் இறந்தவரும் ஒரு சிங்களவர் என இப்போது பேசிக்கொள்கின்றார்கள். நாம் (பொலிஸ்) சமநிலைக்குள் சடலங்களையும் அனுப்பினால், இந்த நிலைமைகளின் கீழ்தான் உண்மையான சிங்கள முஸ்லிம் மோதல்கள் இடம்பெறலாம். எனவே தாக்குதல் நடத்தியவர்களை நாம் ஊக்கப்படுத்தி தாக்குதலை வசதிப்படுத்தினோம் என்பதல்ல. பொலிசினால் என்ன செய்ய முடியும் என்பதற்கும் ஓர் எல்லை உண்டு’’.
>
> ‘‘தெல்தெனியாவில் நாம் மக்களைச் சுட்டிருந்தால், அது மிகையான எதிர்வினையாக இருந்திருக்கும். அவர்கள் கட்டுக்கடங்காதவர்களாக இருக்கவில்லை. அவர்கள் பின் மதியம் வரை அங்கே இருந்தனர். அக்கூட்டத்தினர் மத்தியில் பாடசாலைச் சிறுவர்களும் இருந்தனர் - பாடசாலை மாணவிகளும் சீருடையில் இருந்தனர். அவர்கள் வன்முறையினை நிகழ்த்துவதற்காகக் குழப்பமடைந்திருக்கவில்லை. அவர்கள் வீதியினைத்தான் மறித்திருந்தார்கள். நாம் 700 முதல் 800 வரையான பொலிஸார் இருந்தோம். நீர்ப் பீரங்கிகளும் கலகமடக்கும் பொலிஸ் பிரிவும் அங்கே கொண்டு வரப்பட்டன.
>
> வன்முறையினைக் கட்டுப்படுத்துவதுதான் நடைமுறை. கூட்டம் பல திசைகளிலும் சிதறியிருந்ததால், கட்டுப்படுத்துவது கடினாமானதாக இருந்தது.

> கூட்டம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். நாம் இதனைத் தெல்தெனியவில் செய்தோம். அந்தச் சந்தர்ப்பத்தில் அம்பலவில் இறுதிச் சடங்கும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அம்பலவிற்கு வெளியே இறுதிச் சடங்கு நடைபெறுவதைத் தடுப்பதற்குப் பொலிசார் தாமே நீதிமன்றக் கட்டளையினைப் பெற்றிருந்தனர். பின்பு திடீரென திகனவில் பெரும் கூட்டம் கூடியது. நாம் அதனை எதிர்பார்த்திருக்கவில்லை. அது ஒரு பாரதூரமான புலனாய்வுத் தவறு. திகன தெல்தெனியவில் இருந்து 30 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கின்றது. அது முற்றிலும் வித்தியாசமான கூட்டம். அவர்கள் இறுதிக் கிரியைகளில் கூடியவர்களல்ல.

துப்பாக்கிச் சூடு நடத்தாமல் 500 பேர் கொண்ட கும்பலை ஐந்து பொலிசாரால் கட்டுப்படுத்துவது சாத்தியமானதல்ல. மேலும், நேரடிக் கட்டளையின்றிக் கீழ் மட்டத்திலுள்ள எந்தவொரு பொலிஸ் கான்ஸ்டபிளும் துப்பாக்கிச் சூடு நடத்த மாட்டார். அவ்வாறு செய்தவர்கள் அதன் விளைவுக்கு அண்மையில் முகங்கொடுக்க நேர்ந்தமை மற்றவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகக் காணப்படுகின்றது. அவர்கள் சுட்டால், அவர்கள் தேவையின்றியே அவ்வாறு சுட்டிருக்கின்றார்கள் எனக் கருதப்பட்டால், அவர்கள் குற்றச்சாட்டுக்குள்ளாகி 8 முதல் 9 மாதங்கள் வரையில் சிறையில் அடைக்கப்படுவார்கள். இவ்வாறான குற்றத்தினைப் புரிபவர்களுக்கு பொலிஸிலிருந்து உதவி கிடைக்காது – அவர்கள் சட்டத்தினை மீறிய குற்றச்சாட்டுக்குள்ளாகி விசாரணை நடத்தப்பட்டால், அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்க வேண்டும். தமது சொந்தச் செலவில் சட்டத்தரணிகளை நியமிக்கவேண்டும். எனவே பொலிஸின் கீழ்நிலை உத்தியோகத்தர்கள் தமது கடமையைச் செய்யும்போது தமது குடும்பங்களின் எதிர்காலங்களை அபாயநேர்வுக்குட்படுத்த மாட்டார்கள். மனிக்ஹின்ன மற்றும் வத்தேகம ஆகிய இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. எனவே அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதல்ல. ஆனால் அவை நியமமான நடைமுறை அல்ல.

சிறிது நேரத்தின் பின்னர் பொலிஸார் திகனவுக்குச் சென்றுவிட்டனர் என்றும் அங்கே கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் நீர்ப் பீரங்கித் தாக்குதலும் இடம்பெற்றன என்றும் எம்மிடம் கூறப்பட்டது. எவ்வாறாயினும் கலைந்துசென்ற கூட்டம் பிரதேசத்தினை விட்டுச் செல்லும் வழியில் முஸ்லிம் வீடுகளைத் தொடர்ந்து தாக்கியவாறே சென்றது. அங்கே கட்டுப்படுத்தல் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதுவே பிரச்சினையாக அமைந்தது.

கண்டியில் சில பிரதேசங்களை அணுகுவதிலுள்ள சிரமம் காரணமாக மார்ச் 6 ஆம் திகதி பொலிஸ் மோட்டார் சைக்கிள்களைக் கொண்டுவரும் தேவை ஏற்பட்டது. மார்ச் 7 ஆம் திகதி உட்பிரதேசங்களில் 40 முதல் 50 மோட்டார் சைக்கிள்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டன. ஆரம்பத்தில் கண்டியில் களத்தில் காட்டப்பட்ட பதிற்செயற்பாடு போதியதாக இருக்கவில்லை என்றும் வன்முறையினை நிறுத்துவதில் தலையிடுமாறு கொழும்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது என்றும் அதிகாரிகளில் ஒருவர் குறிப்பிட்டார். பல்வேறு நடவடிக்கைகள் மூலம் இது மேற்கொள்ளப்பட்டது. இதில், பிரதேசத்திற்கு வெளியே இருந்து ஆளணியினர் கொண்டுவரப்பட்டமை, அனைத்துப் பிரதேச ஆளணியினருக்கும் அலுவலகக் கடமையினை ஒப்படைத்தமை, வாகனங்களுக்கு மாத்திரமே தவிர பெற்றோல் விற்பனை செய்யவேண்டாமெனச் சகல எரிபொருள் நியைங்களுக்கும் எச்சரிக்கை விடுத்தமை, கால வரையறையின்றி அனைத்து மதுபானக் கடைகளையும் மூடியமை போன்ற நடவடிக்கைகள் உள்ளடங்குகின்றன. கொழும்பில் இருந்துதான் வதந்திகள் பரப்பப்பட்டன என்றும் சமூக ஊடகங்களை முடக்கியமை வன்முறையினைக் கட்டுப்படுத்துவதில் பெரும் பங்காற்றியது என்றும் எம்மிடம் கூறப்பட்டது. இருந்தாலும், இவ்வாறான நடவடிக்கைகளை பேச்சு சுதந்திரக் கோட்பாட்டின் அடிப்படையில் தாம் தனிப்பட்ட முறையில் அங்கீகரிக்கவில்லை என இரண்டு அதிகாரிகளும் குறிப்பிட்டனர்.

சம்பவத்திற்கு அரசாங்கம் காட்டிய மந்தமான பதிற்செயற்பாட்டின் காரணமாக, இவ்வாறான ஒன்று மீண்டும் இடம்பெறாது எனக் கூறுவது கடினமானது எனச் சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவர் கூறினார்.

> "நாம் ICCPR பற்றி மக்களுக்குக் கட்டாயம் கூறியிருக்கவேண்டும்.[54] அவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். பெற்றோல் குண்டுகளுடன் தற்பாதுகாப்புக்குத் தயாராக முஸ்லிம்கள் இருந்திருக்கலாம். இதுவே பள்ளிவாயலில் மௌலவிகளைத் தாக்கியதன் பின்னாலுள்ள செயல்நோக்கமாக இருந்திருக்கலாம்.

வன்முறையின் ஒழுங்கமைக்கப்பட்ட தன்மை அனைவருக்கும் தெளிவானதாக இருந்தது என பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர் குறிப்பிட்டார். தெல்தெனியவில் உள்ள பிரதேச வீதிகள் பூரணமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் மொரஹக சந்தியில் இருந்து குமாரசிங்கவின் வீடு வரை

[54]இவ்வாறான சட்ட மீறல்களுக்காக ICCPR சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்குப் பிணை வழங்கப்படவில்லை. இது பிணை வழங்கப்படக்கூடிய குற்றச்செயலல்ல.

அலங்கரிக்கப்படவில்லை. இது கோபத்தினால் அல்லது துயரத்தினால் ஏற்பட்டதல்ல. இதுவே காரணமாக இருந்திருந்தால் அம்பல பள்ளிவாயல் தாக்கப்பட்டிருக்கவேண்டும். ஏனைய மூலங்களில் இருந்து நாம் எதைக் கேள்விப்பட்டமோ அதனை பொலிஸ் அதிகாரி உறுதிப்படுத்தினார்.

> ‘‘பாதிக்கப்பட்டவரின் குடும்பத்துடன் விரிவான கலந்துரையாடல் நடத்தப்பட்டது. சுற்றயல் பிரதேசங்களில் வன்முறை நடைபெறும் என நாம் எதிர்பார்த்தோம். ஆனால் எம்மால் அதனைத் தணிக்க முடிந்தது. இறுதிக்கிரியை கிராமத்தில் நடைபெறுமே தவிர திகனவிற்கு வெளியே நடைபெறாது என்பதை உறுதிப்படுத்த நாம் நீதிமன்றக் கட்டளையினைப் பெற்றுக்கொண்டோம். ஆனால் கடைகளுக்குத் தீ வைத்தவர்கள் உடுதும்பரவைச் சேர்ந்த சிங்கள மக்கள்.

பொலிசார் முகங்கொடுத்த நடைமுறைப் பிரச்சினைகளில் சிலவற்றினைப் பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர் குறிப்பிட்டார். அதில் ஒன்றுதான், பொலிசின் கடமைகளில் 80% மானவை உண்மையில் கண்காணிப்புடனோ அல்லது சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதுடனோ தொடர்புடையதல்ல. உதாரணமாக, கோயில் நிகழ்வுகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது, பயணம் செய்யும் மாவட்ட நீதிபதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது, அரசியல்வாதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது போன்ற அனைத்தும் உள்ளூர்ப் பொலிஸ் நிலையத்தினாலேயே நிறைவேற்றப்பட்டன. மேலும் அவற்றின் வளங்களும் வரையறுக்கப்பட்டவையாகும். ஒரு பொலிஸ் நிலையத்தில் பொதுவாக ஒன்று அல்லது ஆகக்கூடியது இரண்டு வாகனங்கள்தான் இருக்கும். பற்றாக்குறையான வளங்களுக்கான மற்றொரு உதாரணம் பொலிஸ் தலைமையகம் நிறுவியுள்ள முறைப்பாடுகளுக்கென வேறான தொலைபேசிச் சேவையாகும். இது முதலில் நிறுவப்பட்டபோது பதிலளிப்பதற்கான நேரம் 20 நிமிடமாகும். இன்று நாளொன்றிற்கு 3000 அழைப்புக்கள் வருகின்றன. இரண்டு வாகனங்களைக் கொண்ட அலகினால் இதற்கு பதிற்செயற்பாடாற்ற முடியாமல் இருக்கின்றது. அவர்கள் 48 மணித்தியால தாமதத்தின் பின்னர் பதிற்செயற்பாடாற்றுகின்றனர்.

பொலிசில் இணைபவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி பற்றியும் ஒரு பொலிஸ் அதிகாரி கவனத்தினை ஈர்த்தார். ஒரே தரத்தினைச் சேர்ந்த பொலிசுக்கும் இராணுவத்திற்கும் வழங்கப்படும் பயிற்சி மிகவும் வித்தியாசமானதாகும். இராணுவ அதிகாரி ஒருவர் நான்கு வருடப் பட்டத்திற்குச் சமமான பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை, பொலிஸ் அதிகாரிகள் ஒரு வருடத்திற்கும் குறைவான பயிற்சியினையே பெறுகின்றனர். மேலும் பொலிஸ் பயிற்சி வசதிகளும் தாமே கடந்த காலங்களில் முன்னேற்றப்படவில்லை. பொலிஸ் சேவையில் இருக்கும்போது மாஸ்டர்ஸ் பட்டத்தினைப் பெற்றுக்கொள்வதும் மிகக் கடினமானதாக இருக்கின்றது. இலகுவாக அணுகக்கூடிய விடுப்பு ஏற்பாடுகளும் இல்லாமல் இருக்கின்றன. இராணுவத்திலுள்ள ஒரே பதவிகளுடன் ஒப்பிடுகையில் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மிகக் குறைவானதாக இருக்கின்றன.

பொலிசார் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைப் பொறுத்த அளவில், தற்போது சேவையில் உள்ள பொலிஸ் படையின் பெரும் பகுதியினர் நாடு யுத்தத்திற்குள் தள்ளப்பட்ட 1983 ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள். இதனைத் தொடர்ந்து தற்கொலைக் குண்டுதாரிகளாக இருக்கக்கூடியவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கும் பாதிப்புறுநிலையில் உள்ள பொருளாதார நிலையங்களை எவ்வாறு பாதுகாப்பது என்பதற்குமே பொலிசார் பயிற்றப்பட்டனர். காலத்தின் தேவையாகக் குடிமக்கள் கண்காணிப்பு வலியுறுத்தப்படாத காரணத்தினால் அதனை நிறைவேற்றும் ஆற்றல் பொலிசாருக்குப் பொதுவாக இருந்ததில்லை. அவர்கள் யுத்தத்தில் சண்டையிட்டு இராணுவத்திற்கு உதவி வந்தனர். நாட்டிலுள்ள ஒரு பொலிஸ் மக்களினால் பயமுறுத்தப்படலாகாது. ஆனால் இலங்கையில் நிலைமை இதுவல்ல.

கைதுசெய்யப்பட்ட மௌலவிமார்கள் இருவரினதும் பிரச்சினை பற்றி நாம் இரண்டு சிரேஷ்ட அதிகாரிகளிடமும் பேசினோம். மேலே குறிப்பிட்டவாறு, பள்ளிவாயலில் விசேட அதிரடிப்படையினரின் தலையீடு சூழ்நிலை மோசமடையும் சாத்தியம் பற்றிய நம்பத்தகுந்த தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என அவர்களில் ஒருவர் தெளிவாக நம்பினார். முஸ்லிம்கள் தம்மைப் பாதுகாக்க ஏற்பாடு செய்திருக்கலாம். ஆனால் வன்முறையினைக் குறைப்பதே நோக்கமாக இருக்கும் பொலிஸாரின் கடமையினைப் பொறுத்த அளவில், நிகழ்வில் சம்பந்தப்படும் வெவ்வேறு தரப்பினருக்கிடையில் வித்தியாசம் என்பது இல்லை. பள்ளிவாயலில் மௌலவிமார்கள் கைதுசெய்யப்பட்டதும் இரண்டு பாசில்களும் கைதுசெய்யப்பட்டதும் அவர்கள் பெற்றோல் குண்டுகளை வைத்திருந்தனர் என்ற காரணத்திற்காகவே ஆகும். அவர்கள் குண்டுகளைத் தமது தற்பாதுகாப்புக்காகச் சிலவேளைகளில் வைத்திருந்திருக்கலாம். நீதி தவறிப்போனமைக்குப் பொலிஸார் எப்பொறுப்பினையும் ஏற்கவில்லை. ஆனால் கைது செய்யப்பட்டவர்களிடம் பள்ளிவாயலில் ஆயுதம் இருக்கின்றது என்ற நம்பத்தக்க தகவல்களின் அடிப்படையிலேயே தாம் செயற்பட்டதாக அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும், விசேட அதிரடிப்படையினர் தமது கடமைகளை நிறைவேற்றுகையில் அவர்களுக்கு உகந்ததல்லாத முறையில் நடந்திருக்கலாம் என்பதை சிரேஷ்ட அதிகாரி ஏற்றுக்கொண்டார். விசேட அதிரடிப் படையின் தளபதி முஸ்லிம் சமுதாயத்திடம் மன்னிப்புக் கோரினார் என எம்மிடம் கூறப்பட்டது.

சமூகத்தின் அறவிழுமியங்களில் பாரிய சீரழிவு ஏற்பட்டுள்ளது என்பதை இரண்டு சிரேஷ்ட அதிகாரிகளும் குறிப்பிட்டனர். அதிகமான இலங்கை சமூகத்தினர் PTSD இனால் (அதிர்ச்சி தரும் ஒரு நிகழ்வின் பின்னர் ஏற்படும் மனஅழுத்தக் குறைபாடு) பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர்களில் ஒருவர் தனது பகுப்பாய்வினை வழங்கினார். மேலும் திறந்த பொருளாதாரத்தினால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் நாட்டு மக்களைப் பாதித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். திகனவிலும் அளுத்கமையிலும் பொலிஸார் தவறிழைத்துள்ளனர் என்பதை இரண்டு அதிகாரிகளும் ஏற்றுக்கொண்ட அதேவேளை, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையில் பொலிஸார் தீவிர உடந்தையாக இருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட கடும் பிரயத்தனம் எடுத்துக்கொண்டனர். பொலிஸார் செயற்படுகையில் முகங்கொடுக்கும் சவால்கள் நுட்பமான முறையில் புரிந்துகொள்ளப்படவேண்டும் என இருவரும் குறிப்பிட்டதுடன் மக்கள் மத்தியிலுள்ள இனச் சமயப் பகைமைப் பிரச்சினையினைக் குறிவைத்துத் தீர்க்க அரசாங்கத்திற்குப் பரந்த அடிப்படையிலான ஒரு திட்டம் தேவை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

எம்மைச் சந்திப்பதற்காக நேரம் ஒதுக்கி, வன்முறைக்கு பதிற்செயற்பாடாற்றுகையில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் பற்றிய உள்நிலை விசாரணையில் இருந்து கண்டறியப்பட்டவை தொடர்பாக நாம் ஆர்வம் கொண்டிருந்த வினாக்களுக்குப் பதிலளித்தமையினை நாம் மெச்சினோம். அதேவேளை பொலிஸார் சிறந்த பயிற்சியினைப் பெறுவதற்கும் பொலிஸில் அதிக சிறுபான்மைச் சமுதாயப் பிரதிநிதிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் பாரிய தேவை இருப்பதும் தெளிவாகத் தெரிந்தது.

## அத்தியாயம் 6

## வன்முறையின் பின்னர் உள்ளூர் பௌத்த துறவிகளின் கண்ணோட்டம்

எம்முடன் பேசிய அதிகமான சிங்கள மக்களின் மத்தியில் முஸ்லிம்களுக்கெதிரான பரப்புரைகள் பரவியிருப்பதற்கான போதிய சான்றுகளை நாம் கண்டோம் - வன்முறையினைக் கண்டித்து முஸ்லிம்களின் துயர் மீது அனுதாபம் கொண்டவர்கள் மத்தியிலும் இதேநிலை காணப்பட்டது. முஸ்லிம் ''வேறுபாடு'' மற்றும் ''குற்றவுடமை'' ஆகியவை வெளிப்படுத்தப்படும் விதத்தில் ஒரு சமச்சீரான தன்மையினை நாம் அவதானித்தோம். முஸ்லிம்களைக் குற்றமுடையவர்களாகக் கண்டு அவர்களை ஓர் அச்சுறுத்தலாக நடத்தும் உணர்வுநிலை மற்றும் மொழி ஆகியவற்றுக்கு சமூகத்தின் அதிக உறுப்பினர்கள் உடனொத்திருப்பதையே இச்சமச்சீரானதன்மை சுட்டிக்காட்டியது.

பின்வருபவை பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள வெவ்வேறு விஹாரைகளைச் சேர்ந்த ஐந்து பிக்குகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் இருந்து பிரதானமாகப் பெறப்பட்டவையாகும். அனைத்துப் பிக்குகளும் வன்முறையினை ஒன்றுசேர்ந்து கண்டித்து நடந்த நிகழ்வு தொடர்பாக மனவருத்தம் தெரிவித்தனர். இவர்களில் சிலர் மிகுந்த மனவேதனையினை வெளிப்படுத்தி நடந்த தவறுக்காகத் தனிப்பட்ட பொறுப்பினை ஏற்றுக்கொண்டனர். சம்பவம் நடந்தபோது ஒருவர் ஊரில் இருக்கவில்லை. தான் விஹாரையில் இருந்திருந்தால் இது நடந்திருக்காது என அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். ஏனையோர் - கோணகலகல விஹாரையின் பிரதம பிக்குவைப் போல – வன்முறைக்கான காரணமாக ஏனைய மக்களின் தவறினை மீண்டும் மீண்டும் குறிப்பிட்டனர். சில பிக்குகள் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்குத் தங்குமிட வசதிகளை வழங்கியிருந்தனர். அவர்கள் கூறியவற்றின் உண்மைத்தன்மையினைச் சந்தேகிக்க எமக்கு எக்காரணங்களும் இருக்கவில்லை. எவ்வாறாயினும், அவர்களில் எவருமே அவர்களின் விஹாரைகளும் பீடங்களும் முஸ்லிம்களுக்கெதிரான எந்தப் பேச்சுக்களின் வழியே தமது அயல் முஸ்லிம்களைப் புரிந்துகொள்கின்றனவோ அந்த முஸ்லிம்களுக்கெதிரான பேச்சுக்களின் உண்மைத்தன்மையினை கேள்விக்குட்படுத்தவில்லை. மேலும் அவர்கள் அனைவருமே, முஸ்லிம்கள் குற்றமுடையவர்கள் என்கின்ற கூறுரைகளை ஒரு கேள்வியுமின்றி ஒப்புக்கொண்டனர். முஸ்லிம்களே அவர்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக்கான குற்றப்பொறுப்பினைக் கொண்டிருக்கின்றனர் எனப் பார்க்கப்பட்டனர். ஏன் முஸ்லிம்கள் இலக்குவைக்கப்பட்டனர் என்பதை விளக்கப் பயன்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் நடத்தையின் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத தன்மை பின்வரும் விதமாக வெளிப்படுத்தப்பட்டது.

- முஸ்லிம்கள் சொத்துக்களை ஏற்பாடு செய்து வாங்குகின்றனர். இதனால் நகரில் காணி விலைகள் அதிகரிக்கக் காரணமாக இருக்கின்றனர்.

- முகத்தை மூடுதல் (*நிகாப்*) ஒரு பொருத்தமற்ற அன்னியமாக்கும் நடைமுறையாகும். இந்த நடைமுறையினைப் பின்பற்றும் தேவையினைப் பற்றி முஸ்லிம்கள் கட்டாயம் மீளச் சிந்திக்கவேண்டும். முன்னைய தலைமுறையினர் தங்கள் தலைகளைத் தங்கள் சேலைகளால் மூடிக்கொண்டனர் - முகத்தை மூடுதல் என்பது சவூதி அரேபியாவில் இருந்து இங்கு வந்த பழக்கமாகும்.

- முஸ்லிம்களுக்கென்று அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இனரீதியான அரசியல் கட்சிகள் இருக்கக்கூடாது – தேசிய கட்சிகள் மட்டுமே இருக்கவேண்டும்.

- முஸ்லிம்களுக்கெனத் தனியான சட்டங்கள் இருக்கின்றன. ஒரு சமுதாயத்திற்குச் சிறுவர் துஷ்பிரயோகமாக இருப்பது மற்றொரு சமுதாயத்திற்குக் ''கலாசாரமாக'' இருக்கின்றது. (இது முஸ்லிம் திருமணச் சட்டங்கள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டது)

- முஸ்லிம்கள் சிங்களத்தில் பேசக்கூடிய சந்தர்ப்பங்களிலும் தங்களின் சொந்த மொழியில் பேசுகின்றனர். சிங்களவர்கள் இருக்கும் சந்தர்ப்பங்களிலும் கூட அவர்கள் தங்களுக்குள் தங்களின் சொந்த மொழியிலேயே பேசுகின்றனர்.

- முஸ்லிம்கள் தங்களின் சொந்தப் பாடசாலைகளைத் திறப்பதன் மூலம் சிங்களச் சமுதாயத்தில் இருந்து தூரமாகுகின்றனர்.

- முஸ்லிம்கள் சமயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

- கருத்தடை மாத்திரைகள் பயன்படுத்துவது பரவிவருகின்றது என்பதுடன் இந்த மாத்திரைகளைக் கொண்ட உணவுகளை விற்பனைசெய்கையில் பிடிபட்ட முஸ்லிம்களின் சாப்பாட்டுக் கடைகள் பற்றிய பல கதைகள் உள்ளன.

- யாருக்கும் ஒரு கோயிலுக்குள்ளோ அல்லது விஹாரையினுள்ளோ போக முடியும். ஆனால் முஸ்லிமல்லாத யாரும் முஸ்லிம் பள்ளிவாயலுக்குள் போக அனுமதிக்கப்படுவதில்லை.

- முஸ்லிம் அமைச்சர்கள் எமது தேசிய பாரம்பரியங்களின் புனிதத்தினைக் கெடுக்கின்றனர். வில்பத்தை அழிக்கின்றனர். தொல்பொருள் செல்வங்களுக்குச் சேதமேற்படுத்துகின்றனர்.

- இன்றைய சமூகத்தில் மதமாற்றம் செய்யவேண்டும் என்ற எதிர்பார்ப்பின்றி மக்கள் ஒருவர் மற்றவரைத் திருமணம் செய்ய அனுமதிக்கப்படவேண்டும். நீங்கள் ஒரு முஸ்லிமைத் திருமணம் செய்தால் நீங்கள் உங்கள் சமயத்தினை மாற்றவேண்டும்.

- சிங்களவர்களின் கடைகளுக்கு முஸ்லிம்கள் செல்வதை முஸ்லிம் அடிப்படைவாதிகள் தடுக்கின்றனர். (அக்குரணை).

- தாங்கள் மட்டுமே முக்கியமானவர்கள் என்பதைப் போன்று முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

- முஸ்லிம்கள் வரலாற்று ரீதியாக (அவர்கள் முதலில் இலங்கைக்கு வந்தபோது) தமிழ் மொழியினையன்றிச் சிங்கள மொழியினையே பேசுவதெனத் தெரிவுசெய்திருந்தால் எந்தப் பிரச்சினையும் இருந்திருக்காது.

- சிங்களவர்களை நன்கறிந்த மேலும் வித்தியாசமாக ஆடையணிந்த முன்னைய முஸ்லிம்கள் மிகவும் நல்லவர்கள்.

சொற்பமான பிக்குகள் வன்முறை பற்றி ஆச்சரியமடைந்தனர். வன்முறைக்கான காரணிகள் சிறந்த முறையில் கட்டுப்படுத்தப்படவில்லை என்பதையிட்டு மனவருத்தமடைந்தனர். மற்றொரு கலகத்தினைத் தவிர்க்க வேண்டுமாயின் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களில் முஸ்லிம்கள் இலக்குவைக்கவேண்டும் என ஒரு பிக்கு எம்மிடம் கூறினார்.

திகன, தெல்தெனிய மற்றும் அக்குரணை ஆகிய இடங்களிலுள்ள ஐந்து பிக்குகளும் வன்முறை காரணமாகக் கைதுசெய்யப்பட்டு ஊரடங்கினை மீறிய குற்றச்சாட்டின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நபர்களைப் பற்றிக் குறிப்பிட்டனர். ‘‘அவர்களின் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. அவர்களின் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதும் பாதிக்கப்பட்டுள்ளது’’ என எம்மிடம் கூறப்பட்டது. குற்றம் புரிந்ததாகக் கூறப்படுபவர்களில் அதிகமானவர்கள் தீவைப்பிலும் கொள்ளையடிப்பதிலும் ஈடுபட்டமைக்கான காரணம் ‘‘அவர்கள் இளம் வயதினர், அவர்களுக்கு அறிவில்லை, என்ன நடக்கின்றது என்பதைப் பார்க்க அவர்கள் விரும்பினர், அவர்கள் போதையில் இருந்தனர்’’ எனப் பிக்குகள் எம்மிடம் கூறினர். இவ்வாறான விடயங்களைச் செய்தால் அதற்கான பின்விளைவுகள் இருக்கும் என்பதை மக்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கக் கட்டயாம் நிகழ்ச்சித்திட்டங்கள் இருக்கவேண்டும் என ஒரு பிக்கு பரிந்துரைத்தார். சிலர் மீது தவறாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என எம்மிடம் கூறப்பட்டது.

குற்றம் புரிந்ததாகக் குற்றம் சுமத்தப்படுபவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் கைவிடப்படவேண்டும் என்பதற்காகப் பல பிக்குகள் ஆதரவு திரட்டுவதில் ஈடுபட்டனர். குற்றம் புரிந்ததாகக் கூறப்படும் ஒருவரைக் குற்றச்சாட்டில் இருந்து விடுவிப்பதற்குக் கடிதம் ஒன்றினை வழங்க திகன பெரிய பள்ளிவாயல் மறுத்த காரணத்தினால் நல்லிணக்கத்திற்கான மற்றும் சிறந்த உறவினை மீள உருவாக்குவதற்கான வாய்ப்பினை திகன முஸ்லிம்கள் இழந்துவிட்டனர் என எம்மிடம் கூறப்பட்டது. முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதிலில் குறிப்பிட்ட நபர் பிரதான பங்கு வகித்ததாகவும் கண்ணால் கண்ட சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் முஸ்லிம் சமுதாய உறுப்பினர்கள் வலியுறுத்தினர். பாதிக்கப்பட்ட பல பிரதேசங்களில் முஸ்லிம் சமுதாயத்தினர் மீது இதேபோன்ற அழுத்தம் வழங்கப்பட்டதாக நாம் கேள்விப்பட்டோம். இந்தக் கைதுகளும் பல மாதங்களாகப் பிணை வழங்காமல் இருப்பதும் எதிர்காலக் கலகங்களுக்கான வழியினை ஏற்படுத்தலாம் எனப் பல பிக்குகள் கூறினர். ‘‘பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு’’ ஒரு வழியினைக் காணாமல் இருக்கும் குற்றத்தினை அவர்கள் முஸ்லிம் சமுதாயங்களின் மீது சுமத்தினர்.

திகனவிலும் தெல்தெனியவிலும் குற்றம் புரிந்தவர்களைக் கைதுசெய்வதற்கு அரசாங்கம் ICCPR சட்டத்தினைப் பயன்படுத்தியது. பலர் நீண்ட காலம் சிறையிலடைக்கப்பட்டனர். குற்றம் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களின் சமுதாயத்தினருக்கு இது பாரிய மன அழுத்தத்தினை ஏற்படுத்தியது. பொலிஸாரின் கடந்த காலச் செயற்பாடுகளைப் பார்க்கையில் வீதியில் நின்றவர்களும் வன்முறையில் ஈடுபடாதவர்களும் கைதுசெய்யப்பட்டிருக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே தமது சமுதாய உறுப்பினர்கள் பற்றிய பிக்குகளின் கரிசனை புரிந்துகொள்ளக்கூடியதாகும்.

குற்றம் புரிந்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினைப் பற்றியே பிக்குகள் தொடர்ந்தும் பேசிவந்ததுடன் முஸ்லிம்கள் மீது நிகழ்வுகள் ஏற்படுத்திய தாக்கம் பற்றிப் பேசமால் இருந்தமை, சிங்கள பௌத்த நம்பிக்கைகள் தொடர்பில் பிரதேச முஸ்லிம்கள் வகிக்கும் ஸ்தானத்தினையே சுட்டிக்காட்டுகின்றது. பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் மீது ஏற்படுத்தப்பட்ட வன்முறையினையும் அழிவினையும் கட்டாயம் தண்டனை வழங்கப்படக்கூடியதான குற்றச்செயல்களாகப் பலரும் நோக்கவில்லை.

தெல்தெனியவிலுள்ள பெரகெடிய விஹாரையின் சங்கைக்குரிய கீனபலஸ்சே உபாலி ஞானிஸ்சர தேரர் தனது கிராமத்தில் வன்முறை வெடிப்பதைத் தடுப்பதில் வெற்றிகண்டவராவார். மரணித்த குமாரசிங்கவின் கிராமத்தில் எந்த வன்முறையும் நிகழாமல் உறுதிப்படுத்துவதில் இந்தத் தேரர் வகித்த வகிபாத்திரத்தினை சகல தரப்பினரும் பாராட்டினர். வன்முறை இடம்பெறவில்லை என்பதை உறுதிப்படுத்தக் கூட்டத்தில் மாத்திரம் பங்குபற்றாது தனது பிரதேசத்தில் கும்பல்கள் தாக்குதல் நடத்துவதைத் தடுப்பதற்கு இவர் நேரடியாகக் களத்தில் இறங்கிச் செயற்படவும் நிர்ப்பந்திக்கப்பட்டார். தனது இலட்சியத்தினை மேலும் முன்னெடுக்கத் தன்னை இயலுமாக்குவதற்குத் தனக்கு அரசாங்கமும் அதிகாரத்தில் உள்ளவர்களும் தேவை என சங்கைக்குரிய உபாலி ஞானிஸ்ச தேரர் எம்மிடம் கூறினார். தான் வெளிப்படுத்தும் அஹிம்சை நெறிமிக்க நிலைப்பாட்டிற்கு வெறுமனே தனக்குத் தனிப்பட்ட பாராட்டுக்களைத் தெரிவித்து அங்கீகாரம் வழங்குவதோடு மாத்திரமல்லாது தான் வாழும் பிரதேசத்தில் சிறந்த சேவைகளை வழங்கவேண்டும் என்று அவர் கூறினார். அதாவது, சிறந்த வீதிகளை உருவாக்கல் மற்றும் தாக்குதல் நடத்துவதற்காகக் கும்பல் கூடிய இடத்திற்குத் தான் முச்சக்கர வண்டியில் செல்வதற்குத் (அதனை நிறுத்து அவரால் முடிந்தது) தனக்கு உதவிய இரண்டு இளைஞர்களுக்கும் சிறந்த தொழில்களை வழங்குதல் ஆகியவை. தனது பணியின் சாதகமான பெறுபேறுகளைப் பரந்த சமூகம் அங்கீகரிக்கவேண்டும் என அவர் விரும்புகின்றார். நகரத்தில் மக்களின் வகிபாத்திரத்தினை அங்கீகரிப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களின் விஜயங்கள் போன்ற இடையீடுகள் தேவை என அவர் பரிந்துரைத்தார். தமது உணர்வுகளுக்கு ஏற்ற வகையில் முஸ்லிம்களைத் தாக்குவதற்கு இளைஞர்களுக்கு அனுமதி வழங்காது தான் வகித்த நிலைப்பாடு பரந்த சமுதாயத்தினால் அங்கீகரிக்கப்படாத சிறுபான்மை நிலைப்பாடு என்கின்ற காரணத்தினால் இது அவசியமானதாகும் என அவர் உணர்ந்தார். இது செய்யப்படாவிட்டால் தனது நிகழ்ச்சிநிரலைத் தன்னால் முன்னோக்கி எடுத்துச் செல்ல முடியாமல் இருக்கும் என அவர் உணர்ந்தார்.

## அத்தியாயம் 7

## நிவாரண நடவடிக்கைகள்[55]

தாக்குதல்கள் நடைபெற்று இரண்டு நாட்களின் பின்னர் கண்டி லைன் பள்ளிவாயலில் மார்ச் 7 ஆம் திகதி ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. சேதமாக்கப்பட்ட வீடுகள் மீளக் கட்டப்படும் என இராணுவப் பிரதிநிதிகள் கூடியிருந்த மக்களுக்கு உறுதி வழங்கினர். (தாக்குதல்களின் பின்னர் இது அளுத்கமையில் நடைபெற்றது). எவ்வாறாயினும், இந்த வாக்குறுதி பின்னர் நிறைவேற்றப்படவில்லை. கண்டி பள்ளிவாயல் குழு உறுப்பினர் ஒருவரின் கருத்துப்படி சமுதாயத்துடன் சிறந்த உறவினைக் கொண்டிருந்த, சேதமாக்கப்பட்ட வீடுகளை மீள்நிர்மாணித்துத் தருவதாக வாக்குறுதியளித்த இராணுவ அதிகாரி மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்டார்.

அளுத்கமை வன்முறையின் பின்னர் வீடுகளை மீள்நிர்மாணிக்க இராணுவம் கொண்டுவரப்பட்டது போல் கொண்டுவரப்படாத அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் நட்டஈடு மிகுந்த தாமதத்தின் பின்னர் வழங்கப்பட்டது. REPIA மற்றும் பாதுகாப்பு அமைச்சு போன்ற வெவ்வேறு அதிகாரசபைகளின் மேற்பார்வையின் கீழ் நட்டஈடுகள் வழங்கப்பட்டன. இதற்குச் சமாந்தரமாக, முஸ்லிம் சமுதாய உறுப்பினர்களும் சமுதாயத்தின் உள்ளேயான குழுக்களும் வீடுகளையும் பள்ளிவாயல்களையும் மீளக் கட்டுவதற்கு பணத்தினை வழங்குவதற்கு ஒன்றுசேர்ந்தன. இந்த உதவி பாதிக்கப்பட்டவர்களால் பெரிதும் மெச்சப்பட்டது. ஏனெனில் இதில் பணித்துறைச் செயன்முறைகளோ அல்லது தாமதங்களோ இருக்கவில்லை என்பதுடன் சில குடும்பங்கள் வன்முறை முடிவுற்று ஒரு மாதத்தின் பின்னரே இயல்பு நிலைக்குத் திரும்பவும் இது உதவியது.

**ஆதனம் மற்றும் கைத்தொழில்கள் புனரமைப்பு அதிகாரசபை (REPIA) மூலமான நட்டஈடு**

கண்டி மாவட்டத்தில் தாக்குதல்கள் நடைபெற்று ஐந்து மாதங்களின் பின்னரும் இழப்புக்களினாலும் சேதங்களினாலும் பாதிக்கப்பட்ட பலரும் அரசாங்கத்தினால் அவர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட நட்டஈட்டினைப் பெற்றுக்கொள்ளவில்லை. இத்தாமதத்திற்கான காரணம் 2018 ஜூன் 11 ஆம் திகதி ஆரம்பித்த 16 நாட்கள் நாடு தழுவிய தபால் சேவைகளின் பணி நிறுத்தம் என REPIA மூலங்கள் தெரிவித்தன. பணி நிறுத்தத்தின் காரணமாக REPIA வுக்குத் தபாலில் அனுப்பப்பட்ட கோரிக்கைகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

REPIA தலைவர் ஈ அன்னலிங்கம் குறிப்பிடுகையில், “280 பேருக்கு கச்சேரியிலுள்ள கேட்போர் கூடத்தில் நாம் தனிப்பட்ட முறையில் காசோலைகளை வழங்கினோம். காசோலைகளை வழங்க நான் தனிப்பட்ட ரீதியில் சமூகமளித்திருந்தேன். தபால் துறைப் பணி நிறுத்தத்தின் காரணமாகத் தாமதம் ஏற்பட்டது. இப்போது இது நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. காசோலைகள் மூலம் தனிப்பட்ட ரீதியில் வழங்கப்பட்ட தொகை 82 இலட்சம் ரூபாவாகும். இது 2018 மார்ச் 19 இல் வழங்கப்பட்டது. பின்னர் 2018 ஏப்ரல் மாதத்தில் இரண்டாவது முறை வழங்கப்பட்டது.” சில வியாபார உரிமையாளர்கள் காப்புறுதி முகவர்களிடம் கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளதால் REPIA ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக அவர்கள் அரசின் நட்டஈட்டினைப் பெறுவதற்கு தகுதியற்றவர்களாக ஆகியுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

2018 ஜூலை மாதம் REPIA விடம் 633 கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் 335 சேதமாக்கப்பட்ட வீடுகள், 233 கடைகள், 83 வாகனங்கள், 20 பள்ளிவாயல்கள் மற்றும் 2 கோயில்கள் ஆகியன உள்ளடங்கின. இதற்கான மரபொழுங்கு என்னவெனில், பாதிக்கப்பட்டவர் முதலில் பிரதேச செயலாளரையும் அரசாங்க அதிபரையும் அணுகி முறைப்பாட்டினை மேற்கொள்ள வேண்டும். பிரதேச செயலாளரும் அரசாங்க அதிபரும் மேற்கொள்ளும் மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே REPIA வினால் நட்டஈடு விநியோகிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் கண்டிச் சம்பவத்தில் பிரதேச செயலாளர்கள், மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டாளர்கள் REPIA அதிகாரிகள் மற்றும் அமைச்சின் பிரதிநிதிகள் உள்ளிட்ட விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டன. செலுத்தப்படக்கூடிய நட்டஈட்டினைத் தீர்மானிப்பதற்காக இக்குழுக்கள் பாதிக்கப்பட்ட மக்களுடன் கூட்டங்களை நடத்தின. REPIA தாமதங்களுக்கு எதிரானது என்று குறிப்பிட்ட அன்னலிங்கம், வன்முறை முடிவடைந்த உடனேயே பிரதமர் ரனில் விக்ரமசிங்கவின் தலைமையில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்களின் உடனடியான துயரத்தினைத் துடைப்பதற்காக அவ்வாறு பாதிக்கப்பட்ட 120 பேருக்கு அரசாங்க அதிபர் வழங்கும் பட்டியலினை மட்டும் பிரத்தியேகமாக

[55]இந்த அத்தியாயத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு இந்த அத்தியாயத்தினை மேர்கா டெகல் எழுதியுள்ளார்.

அடிப்படையாகக் கொண்டு ஆவணங்கள் எதுவுமின்றி முற்கொடுப்பனவு வழங்குவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். ''கடைசியில் விண்ணப்பங்களை நிரப்பவும் செயன்முறையினை முறைமைப்படுத்தவும் நாம் அவர்களுக்கு உதவினோம்'' என அவர் கூறினார்.

REPIA பதிவுகளின் படி, தாக்குதல் நடத்தப்பட்டு 5 மாதங்களினுள் நட்டஈட்டினைப் பெற்றுக்கொண்ட சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 249 ஆகும் என்பதுடன் இவற்றிற்கு 10.4 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்பட்டது. 126 கடைகள் கூட்டாக 5.46 மில்லியன் ரூபாவினைப் பெற்றுக்கொண்டன. மேலும் சேதமாக்கப்பட்ட வாகனங்களுக்காக 2.45 மில்லியன் ரூபா விநியோகிக்கப்பட்டது. இதன்படி ஐந்து மாதங்களினுள் REPIA வினால் கையளிக்கப்பட்ட மொத்தத் தொகை 18.32 மில்லியன் ரூபாவாகும். எவ்வாறாயினும், 500,000 ரூபாவுக்கு மேற்பட்ட கோரிக்கைகள் செயன்முறைப்படுத்த நீண்ட காலத்தினை எடுத்தன. பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகையாக நட்டஈட்டினைச் செலுத்தாமல் இருப்பதற்காக ஏனைய அரச நிறுவனங்களுடனும் REPIA இணைந்து செயற்படவேண்டியுள்ளது. REPIA முகங்கொடுத்த மற்றுமொரு தடை, பள்ளிவாயல்களுக்கு நட்டஈடு வழங்கும்போது ஏற்பட்ட குழப்பமாகும். ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் ஒரு பள்ளிவாயலுக்கு இரண்டு அல்லது மூன்று உப பள்ளிவயால்கள் இருக்கும். எவ்வாறாயினும், இந்தப் பிரச்சினையினை முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் 2018 ஜுலையில் தீர்த்துவைத்தார். இதன் அடிப்படையில் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் நட்டஈட்டிற்கான ஒரு கடிதம் விநியோகிக்கப்பட்டது. 20 சமயத் தலங்கள் சேதமாக்கப்பட்டதாக REPIA பதிவுசெய்திருந்தது, ஆனால் 19 கோரிக்கைகளே கிடைத்தன. இந்த 19 பள்ளிவாயல்களுக்கும் 640,000.00 ரூபா வழங்கப்பட்டது.

தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு வருடம் 7 மாதங்களின் பின்னர் அனைத்துக் கோரிக்கைகளிலும் 90 சதவிகிதமானவை வழங்கப்பட்டுவிட்டதாக REPIA அறிவித்தது. எஞ்சிய 10 சதவிகித கோரிக்கைகளுள் 16 கோரிக்கைகள் குழு அறிக்கை வரும்வரை காத்திருக்கவேண்டிய பாரிய தொகைக்கான கோரிக்கைகளாக இருப்பதால் அவை செலுத்தப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டது. மதிப்பீடுகளை மேற்கொண்டு தேவைப்படும் உண்மையான நட்டஈட்டுத் தொகையினை REPIA வுக்கு அறிவிப்பதற்காக அமைச்சரவையினால் நிறுவப்பட்ட குழுவின் தாமதத்தினால் செயன்முறை நீண்டதாகியுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கையின் படி[56], பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட காரணத்தினால் REPIA வினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தொகையில் முரண்பாடுகள் இருந்திருக்கின்றன. உதாரணமாக, அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது: ''அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைவாக, அளுத்கமை கலகத்தில் உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் நட்டஈடாக 20 லட்சம் ரூபா வழங்கப்பட்டது. இதற்கு மறுதலையாக, அண்மைய கண்டி – திகன இனச் சமய வன்முறையில் உயிரிழந்தவர்களுக்கு அமைச்சரவை 500000 ரூபாவினை மட்டும் அங்கீகரித்துள்ளது. இத்திட்டமிடப்படாத நட்டஈட்டு அங்கீகாரங்களுக்கு முரணாக REPIA வின் முறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நட்டஈடு மிகக் குறைவானதாக இருக்கின்றது. உதாரணமாக, மேலே குறிப்பிட்டவாறாக, ''பொதுமக்களுக்கான மிகவும் பாதிக்கப்பட்ட நபர்கள் நட்டஈட்டுத் திட்டத்தின்'' கீழ் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான நட்டஈடு இறப்பொன்றிற்கு 100,000 ரூபாவாகும்''. இது REPIA வின் நட்டஈட்டுத் திட்டத்தினைத் தரமுயர்த்துவதற்கான தேவையினைச் சுட்டிக்காட்டுகின்றது. ஏனெனில் இது தொடர்பான அதிகமான சுற்றுநிருபங்கள் 1980 களில் வெளியிடப்பட்டவை என்பதுடன் இவை கடந்த மூன்று தசாப்தங்களில் திருத்தப்படவில்லை. வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டினை வழங்குவதற்கு REPIA விடம் போதிய நிதியில்லை என்பதையும் கடந்த காலத்தில் பல்வேறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு வழங்குதல் இன்னும் நடைபெற்றுவருவதாகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. கிட்டத்தட்ட வருடா வருடம் நடைபெறும் நிகழ்வாகத் தற்போது மாறியுள்ள முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைக்கு நட்டஈடு வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்திடம் போதிய நிதியில்லை என்பதையே இது தற்செயலாக வெளிக்கூறுகின்றது.

இன அல்லது சமய அமைதியின்மையின் விளைவாக ஏற்படும் கலகம் அல்லது வன்முறையினைத் தொடர்ந்து நிவாரணங்களையும் நட்டஈட்டினையும் வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஏனைய அரச நிறுவனங்களுள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் தொடர்புடைய அமைப்புக்களும்

---

[56]பவானி பொன்சேகா, ''இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஒன்றிற்காக வாதாடல்'', 2018, பக் 21-22. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.
பார்க்க: https://www.cpalanka.org/wp-content/uploads/2018/06/Reparations-report-FINAL.pdf
(கிடைத்தது 25/10/1919)

பௌத்த சாசன அமைச்சும் தபால் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சும் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சும் உள்ளடங்குகின்றன[57]. மேற்குறிப்பிட்ட நிறுவனங்களைச் சம்பந்தப்படுத்தி சேதமாக்கப்பட்ட சொத்துக்களை நான்கு மாதங்களினுள் புனரமைப்பது என்ற தீர்மானம் பிரதமர் ரனில் விக்கிரமசிங்கவின் கட்டளைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது என டெய்லி மிரர் செய்தி வெளியிட்டிருந்தது[58]. 2019 மே மாதத்தில் வெளியிடப்பட்ட செய்திக் கட்டுரையில் கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு இன்னும் நட்டஈடு வழங்கப்படவில்லை என்றும் சொத்துச் சேதங்களுக்காக 178,000,000 ரூபாவும் சேதமாக்கப்பட்ட பள்ளிவாயல்களுக்காக 200,000 ரூபாவும் செய்தி வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில் செலுத்தப்பட வேண்டியிருந்தது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. (தயவுசெய்து வன்முறையின் பொருளாதாரம் எனும் இந்த அறிக்கையின் பகுதியினைப் பார்க்கவும்).

*கிரவுன்ட் வியூவுடன்* 2019 மே மாதத்தில் நடத்தப்பட்ட நேர்காணலில் தனது பலசரக்குக் கடையினை இழந்த ஒரு பாதிக்கப்பட்டவரின் அனுபவம் பகிரப்பட்டுள்ளது: ‘‘(…) பாதிக்கப்பட்டவர்களுக்கு வரவேண்டிய பூரண நட்டஈடு எவ்வாறு வரவில்லை, நிர்வாகக் கட்டுப்பாடுகளின் குழப்பத்தில் தொலைந்துவிட்டன. பள்ளிவாயலை மீள நிர்மாணிப்பதற்காகக் கட்டிட அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான சிக்கலான செயன்முறை பற்றியும் அவர் பேசினார். இழப்பீடுகள் நிலைமாற்றம் மிக்கவையாக இருப்பதற்கு அவை உடனடியானவையாகவும் செயற்திறன்மிக்கவையாகவும் உள்ளடக்கும் தன்மைமிக்கவையாகவும் இருக்கவேண்டும் என்பதுடன் செயன்முறை வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும் இருக்கவேண்டும் என சிவில் சமூகம் கடந்த வருடம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது[59].

அப்துல் பாசித் சம்சுதீன் எனும் 27 வயது இளைஞன் அவரின் குடும்ப வீட்டுக்கு வன்முறைக் கும்பல் தீ வைத்த காரணத்தினால் அந்த வீட்டினுள்ளேயே இறந்துபோனார். வன்முறையின் பின்னர் உடனடியாக இவரின் உடல் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதியுதவியுடன் அடக்கம் செய்யப்பட்டது. ஆனால் தமது வீட்டினையும் தந்தையின் கடையினையும் மீள்நிர்மாணிக்க வழங்கப்படுவதாக வாக்குறுதியளிக்கப்பட்ட நட்டஈடு குடும்பத்திற்கு வழங்கப்படவில்லை என 2019 மார்ச் 29 சண்டே ஒப்சேவர் செய்தி வெயியிட்டிருந்தது: ‘‘சம்சுதீனுக்கு (அப்துல் பாசித்தின் தந்தை) அரசாங்கத்திடமிருந்து நட்டஈடாக 150,000 ரூபா வழங்கப்பட்டது. ஆனால் சிதிலங்களாக்கப்பட்ட அவரின் வீட்டையும் கடையினையும் மீள்நிர்மாணிக்க இவருக்கு 30 இலட்சம் ரூபா செலவேற்பட்டிருக்கின்றது. கடந்த வருட கலகத்தின் பின்னர் மீள்நிர்மாணத்திற்குப் பள்ளிவாயல்தான் தங்களுக்கு உதவியதாக பசால் (அப்துல் பாசித்தின் மூத்த சகோதரர்) கூறினார். ‘‘அன்றைய தினம் எமக்கு ஏற்பட்ட அழுத்தம் இன்னும் மாறவில்லை. அரசாங்கம் எமது வீட்டுக்கு 50,000 ரூபாவும் கடைக்கு ஒரு இலட்சம் மட்டுமே வழங்கியது. இது ஆரம்பத் தொகைதான் என்றும் பின்பு அதிக கொடுப்பனவு செலுத்தப்படும் என்றும் அவர்கள் கூறினர். ஆனால் ஆரம்பக் கொடுப்பனவின் பின்னர் எதுவும் கிடைக்கவில்லை. எமது பள்ளிவாயலில் ஒரு நிதியம் இருக்கின்றது. இதற்குச் சகல முஸ்லிம்களும் அவர்களின் வருடாந்த இலாபத்தில் 2.5 சத விகிதத்தினை பெருநிறுவன சமூகப் பொறுப்புப் பணிகளுக்காக (CSR) நன்கொடையாக வழங்குகின்றனர். பள்ளிவாயலில் இருந்து எமக்கு நிதியுதவி கிடைத்திருக்காவிட்டால், எங்களுக்கு வேறு போக்கிடம் இருந்திருக்காது’’ என அவர் கூறினார்.

நட்டஈட்டிற்காக 205 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரனில் விக்ரமசிங்க 2018 ஆகஸ்டில் குறிப்பிட்டுள்ளார். ‘‘அந்தப் பணத்திற்கு என்ன நடந்தது என எமக்குத் தெரியாது. அரசாங்கம் சமுதாயத்திற்கு உதவியிருக்க வேண்டும். எமது சமூகம் அரசாங்கத்தில் நம்பிக்கை இழந்து வருகின்றது’’ என அவர் கூறினார்[60].

சண்டே ஒப்சேவரின் இதே செய்தியில் முஸ்லிம் இளைஞர்களால் தாக்கப்பட்டு இறந்த லொறிச் சாரதியின் மனைவியான திலகா பத்மசிறியுடனான நேர்காணலும் இடம்பெற்றிருந்தது. பல பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தங்களின் வீட்டை மீள்நிர்மாணிக்க நிதியுதவி

---

[57]பியுமி பொன்சேகா, ‘‘முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல்கள்: நட்டஈட்டுச் செயன்முறை மன உலைவினை ஏற்படுத்துகின்றது’’, டெய்லி மிர்ரர், 2019

பார்க்க *http://www.dailymirror.lk/news-features/Anti-Muslim-attacks%3A-Process-of-compensation-causes-trickle-ofunease/131-168220* (கிடைத்தது 25/10/1919)

[58]Ibid.

[59]அமலினி த சய்ரா, ‘‘திகன: ஒரு வருடம் கடந்த நிலையில்’’, டெய்லி மிர்ரர், 2019.

பார்க்க *https://groundviews.org/2019/03/05/digana-one-year-on/* (கிடைத்தது 25/10/1919)

[60]Ibid.

வழங்குவதாக வாக்குறுதியளித்ததாகவும் ஆனால் அவர்களின் வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார். இந்த அமைச்சர்கள் அவர்களின் தனிப்பட்ட நன்கொடையினைப் பற்றிக் குறிப்பிட்டனரா அல்லது இந்த விதவைப் பெண்ணுக்கு உரித்தான அரச நிதியில் இருந்தான தொகையினைப் பற்றிக் குறிப்பிட்டனரா என்பது தெளிவற்றதாக உள்ள அதேவேளை, திலகாவுக்கு எந்த உதவியும் இதுவரை கிடைக்கவில்லை என்பதே உண்மையாகும். இவருக்குக் கிடைத்த ஒரே உதவி முஸ்லிம் குடும்பம் ஒன்றினால் 2019 ஜனவரி 1 ஆம் திகதி பெரகெடிய விஹாரையில் வைத்து வழங்கப்பட்ட 50,000 ரூபா தனிப்பட்ட நன்கொடை மாத்திரமேயாகும்[61].

[61]கண்டி: எது இன்னும் சுற்றி நிற்கிறது, இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில், http://lawandsocietytrust.blogspot.com/2020/03/kandy-what-lingers-twoyears-on.html

# அத்தியாயம் 8

## 2018 மார்ச் நிகழ்வுகள் பற்றிய கருத்துரைகள் - அரசியல் செயற்பாட்டாளர்கள்

அரசியல்வாதிகள் மற்றும் தொடர்புடைய சிவில் சமூகப் பங்கீடுபாட்டாளர்கள் ஆகியோரின் கூற்றுக்கள் பற்றிய செய்திப் பத்திரிகை அறிக்கைகளை ஒன்று சேர்த்துக் கீழ்வரும் பகுதி தயாரிக்கப்பட்டுள்ளது.

**அ. அரசாங்கத்தின் கண்ணோட்டம்**

பொலிஸ் மற்றும் இராணுவத்தினைத் திரட்டுவதிலும் வன்முறையினை நிறுத்துவதற்குப் படையினைத் திரட்டுவதிலும் அரசாங்கத்தின் பதிற்செயற்பாடு போதியதாக அமையவில்லை என்பதே பலரின் அவதானிப்பாக இருக்கின்ற அதேவேளை, வன்முறையின் பின்னர் வன்முறைக்கான பொறுப்பினை ஏற்க மறுக்கும் பகட்டாரவாரப் பேச்சுக்களோ உறுதியானவையா இருந்தன. அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய செய்தியினை வெளியிட்ட 2018 மார்ச் 8 ஆம் திகதி மவ்பிம செய்திப்பத்திரிகை ராஜித சேனாரத்ன, கபீர் ஹாசிம் மற்றும் சரத் அமுனுகம ஆகியோர் கண்டி மாவட்டச் சம்பவங்களைப் பற்றிக் கலந்துரையாடுவதை முக்கியத்துவப்படுத்தியிருந்தது[62]. தலைப்பு பின்வருமாறு அமைந்திருந்துது:

> ‘‘திகனவில் நடந்த சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் பிரதேசத்திற்கு வெளியே இருந்து வந்தவர்கள்’’

வன்முறையினைத் தூண்டியவர்கள் மற்றும் வன்முறையினை மேற்கொண்டவர்கள் அனைவரும் உடனடியாகக் கைதுசெய்யப்படுவர் என அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார். திகன தாக்குதல்களுக்குப் பொறுப்பான நான்கு பேர் ஏற்கனவே அதிகாரிகளினால் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார். அண்மையில் தேர்வுசெய்யப்பட்ட இரண்டு பிரதேச சபை உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் அதே அரசியல் கட்சியுடன் இணைந்துள்ள ஒரு பிக்கு ஆகியோர் வன்முறைக்குப் பொறுப்பானவர்கள் என அடையாளம் காணப்பட்டனர். தெல்தெனியவில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் உறுப்பினரின் செயலாளரும் வன்முறைக்குப் பொறுப்பானவர்கள் என்றும் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சேனாரத்ன குறிப்பிட்டார். மார்ச் 6 ஆம் திகதி இரவுடன் 24 பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். தேசியவாத உணர்வுகளைத் தாம் நிராகரிப்பதாகப் பாராளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் விடுத்த கூற்றினைப் பாராட்டிய சரத் அமுனுக சம்பவத்தினை ஊடகங்கள் பொறுப்புமிக்க முறையில் உள்ளடக்கியமையினையும் பாராட்டினார். நிகழ்வுகளைப் பகுப்பாய்வு செய்த ராஜித சேனாரத்ன, அரசாங்கத்திற்குச் சிங்கள, முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் வழங்கும் ஆதரவினையே அண்மையில் நடந்த தேர்தல்கள் எடுத்துக்காட்டுவதாகக் குறிப்பிட்டார். தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் அரசாங்கம் சிறுபான்மையினருடன் கொண்டுள்ள நல்லுறவினைப் பாதிப்படையச் செய்ய முயற்சிப்பதாகக் குறிப்பிட்டார் (இவர் 2015 தேர்தலைக் குறிப்பிட்டாரேயன்றி 2018 உள்ளூராட்சித் தேர்தல்களை அல்ல). கருத்தடை மருந்துகள் பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மருத்துவ நிபுணர்களைத் திரட்டி அவ்வாறான குற்றச்சாட்டிற்கு எவ்வித அறிவியல் அடிப்படையும் இல்லை என்ற பதிலையளித்தது எனவும் அவர் கூறினார். வெறுப்புப் பேச்சுக்களைக் கட்டுப்படுத்தக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். புலனாய்வுத் துறையினர் மீது பிரதமர் குறை கூறுவது பற்றிக் கேட்டபோது, அதனால்தான் சூழ்நிலையினைக் கட்டுப்படுத்த இராணுவம் திரட்டப்பட்டது என அவர் கூறினார். பொலிஸார் அவர்களின் கடமையினைச் செய்யவில்லையா எனக் கேட்டபோது இது தொடர்பாக விசாரணை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் மாஅதிபர் அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டார். நீதியினை நிலைநாட்டுவதில் அளுத்கமையில் ஏற்பட்ட தாமதமே திகன நிகழ்வுகளிலும் தாக்கம் செலுத்தியிருக்கலாமா எனக் கேட்டபோது, திகனவிற்கும் அளுத்கமைவிற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது என்றும் அளுத்கமையில் குற்றம் புரிந்தவர்களுக்கு அரசாங்கம் ஆதரவு வழங்கியது என்றும் அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், நீதியினை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது என்பதை அவர் ஏற்றுக்கொண்டார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் விடுக்கப்பட்ட கூற்றுக்கள் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகள் அரசாங்கத்தினால் சகித்துக்கொள்ளப்படவில்லை என்ற செய்தி தேசிய மட்டத்தில் அனுப்பப்படுவதையே சுட்டிக்காட்டியது. அளுத்கமையில் அரசாங்கம் காட்டிய பதில் நடவடிக்கையில் இருந்தும் இது பெருமளவில் வித்தியாசமானதாகும். நிகழ்வு நடந்த பின்னர் நிகழ்வினை ஊடகங்கள் பதிவுசெய்வதைத் தடுத்த அரசாங்கம் பிரதேச முஸ்லிம்களினாலேயே ‘‘மோதல்கள்’’ தூண்டப்பட்டன என்ற ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட கூற்றுரையினை உருவாக்கியது. இந்தக்

---

[62]மவ்பிம 08.03.2018, (தெனகம், தம்மிக ரனவீர)

கூற்றுரையே நிகழ்வு பற்றிப் பேசிய பல அரசாங்க முகவர்களினாலும் பகிரப்பட்டது. திகன நிகழ்வுகளின் பின்னர் இவ்வாறு நடக்கவில்லை. அநீதி நடந்துள்ளது என்பதுவும் குற்றத்தினை நிகழ்த்தியவர்கள் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும் என்பதுவும் குறைந்தது பேச்சளவிலாவது ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமூக ஊடகத் தடையும் அதனைத் தொடர்ந்து வெறுப்புத் தொடர்பான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக முகநூலுடன் கலந்துரையாடியமையும் மெச்சத்தக்கவையாகும். எவ்வாறாயினும், அரசாங்கத்தின் ஏனைய முயற்சிகளைப் போலவே, இப்பேச்சுக்கள் எல்லாம் உண்மையான பதில் செயற்பாடுகளுடன் அரிதாகவே பொருந்தின. கீழே கலந்துரையாடப்படுகின்றவாறு, குற்றத்தினை நிகழ்த்தியவர்கள் ICCPR சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் பிணை வழங்கப்படாது நீண்ட காலம் சிறையில் வைக்கப்பட்டனர். மேலும் இவர்களுக்கு எதிரான வழக்குகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. எவ்வாறாயினும், வழக்குகள் தொடர்ந்தும் பூர்த்தியற்றவையாக இருக்கின்றன. அத்துடன் கைதுசெய்யப்பட்டவர்களில் அதிகமானவர்கள் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

**பிரதமர்**

திகதி: 6 மார்ச் 2018

அரசாங்கத்தின் நிலைப்பாட்டுடன் பொருந்தும் வகையில், பாராளுமன்றத்தில் கண்டி வன்முறை பற்றிப் பேசிய பிரதமர் ரனில் விக்ரமசிங்க குமாரசிங்கவின் மரணம் பற்றி விசாரிப்பதற்கு சிஜடியினர் குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். வன்முறையின் ஆரம்பம் பற்றிச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறிய அவர் வன்முறையினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அரசாங்கம் நட்டஈடு வழங்கும் என அறிவித்தார்.

''அரசியல் அதிகார வேட்கை கொண்ட சிலர் இவ்வகையான சம்பவங்களால் நன்மை தேட முயற்சிப்பதுடன் அவர்கள் இயல்பு நிலையினைக் குழப்பி இன வன்முறையினைத் தூண்டத் திட்டமிடுவதைக் காண முடிகின்றது. ஆட்சிக்கு வருவதற்காக நெருக்கடியினைப் பயன்படுத்தி நாடு முழுவதும் இன வன்முறையினையும் இனவாதத்தினையும் தூண்டுவதே அவர்களுக்கு இருக்கும் ஒரே ஒரு கருவியாகும். சமூக ஊடகத்தின் மூலம் இனவாதத்தினையும் இனப் பகைமையினையும் பரப்புவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. நாட்டில் சிங்கள மேலாண்மைக்கு முஸ்லிம்கள் அச்சுறுத்தலாக உள்ளனர் எனக் கடந்த ஒன்பது மாதங்களாக அவ்வாறான ஒரு குழு சமூக ஊடகத்தில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றது. அவர்கள் போலியான புள்ளிவிபரங்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர்.'' இந்த அட்டூழியங்களையும் எவ்வடிவிலான இன முறுகலையும் அரசாங்கம் திட்டவட்டமாகக் கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வன்முறை நடைபெற்ற முதலாம் நாளில் பிரதமர் பின்வரும் டுவிட்டர் செய்தியினை வெளியிட்டார்:

''குரூரமான யுத்தத்திற்கு முகங்கொடுத்த தேசத்தவர்கள் என்ற ரீதியில் சமாதானம், மரியாதை, ஒற்றுமை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் பெறுமதியினை நாம் அனைவரும் அறிவோம். கடந்த சில நாட்களாக நடைபெற்ற இனவாத மற்றும் வன்முறைத் தாக்குதல்களை அரசாங்கம் கண்டிக்கின்றது. அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நாம் மேலதிக நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கமாட்டோம்''.

மூலம்: டுவிட்டர்

**ஜனதா விமுக்தி பெரமுன (ஜேவிபி)**

மாக்சிஸக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜனதா விமுக்தி பெரமுன) இந்த நாட்டில் ஏற்பட்ட இரண்டு இளைஞர் கிளர்ச்சிகளுக்குப் பொறுப்பானதாகும். திகன சம்பவங்கள் தொடர்பாக ஜேவிபி மிகச் சிறந்த பகுப்பாய்வினைக் கொண்டுள்ளதுடன் அச்சம்பவங்களுக்காக அரசாங்கத்தினையும் எதிர்க்கட்சியினையும் கடுமையாக விமர்சிப்போரில் ஒரு தரப்பாகவும் உள்ளது. ஜேவிபியின் தலைவரான அநுர குமார திசநாயக்க முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளைத் தூண்டியமை தொடர்பிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வன்முறை தொடர்பிலும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: ''நீங்கள் நாட்டின் எதிர்காலத்தினை விடத் தேசியவாதத்தினை ஆராதித்தால் நாட்டில் இரத்த ஆறுதான் ஓடும்.[63] அரசாங்கத்தினையும் ''தோற்கடிக்கப்பட்டவர்கள்'' (2015 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் பற்றிய குறிப்பு) என அவரால் பெயரிடப்பட்ட குழுவினையும் தன் கண்டனங்களால் சரமாரியாகத் தாக்கிய அவர், இனவாதத்தினை வளர்ப்பதன் மூலம் இரண்டு குழுக்களும் நன்மையடைகின்றன எனக் கூறினார். அவரின் கூற்று பின்வருமாறு அமைந்திருந்தது:

[63] லக்பிம - 08.03.2018

> ''மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்குவதிலும் அவர்களுக்கு ஜனநாயகம் உண்டு என்பதை உறுதிப்படுத்தி அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதிலும் அரசாங்கம் மக்களைக் கைவிட்டுவிட்டது. விவசாயிகள் வருமான வீழ்ச்சியினால் வருந்துகின்றனர். அனைத்து இன இளைஞர்களும் வேலைவாய்ப்பின்மையால் கஷ்டப்படுகின்றனர். இந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும். ஆனால் இன வன்முறை உருவாகியுள்ளது. இந்த நேரத்தில் வன்முறை வெடித்தமை அரசாங்கத்திற்குப் பெரும் நன்மையில் முடிந்துள்ளது''.

தோற்கடிக்கப்பட்ட அரசியல் அமைப்புப் பற்றிக் குறிப்பிட்ட அவர், அவை இனவாதத் தளத்தின் மூலம் தங்களின் அரசியல் அதிகாரத்தினை மீண்டும் தக்கவைக்க முயற்சிப்பதாகக் குறிப்பிட்டார்.

> ''அவர்களினால் மக்களுக்குச் சிறந்த ஜனநாயகத்தினை, வெற்றிகரமான பொருளாதாரத்தினை அல்லது உறுதியான வெளிநாட்டுக் கொள்கையினை வழங்க முடியாதுள்ளது. இதனால் அவர்களின் ஒரே புகலிடம் தேசியவாத உணர்வுகளை உருவாக்குவதே. மீண்டும் அதிகாரத்திற்கு வரவேண்டும் என்பதற்காக தேர்தல் பிரச்சாரத்தின் போது பகைமையினைத் தூண்டுவதற்காக அவர்கள் தங்களால் இயன்ற அனைத்தினையும் செய்தார்கள். இரண்டு தரப்புக்களும் ஒன்றில் அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்காக அல்லது அதிகாரத்திற்கு வருவதற்காக இனவாத உணர்வுகளினால் நன்மை அடைகின்றனர்''.

வன்முறை நிகழும்போது அரசாங்கம் அதன் கடமையில் தவறியமை பற்றிப் பேசுகையில், சமூக ஊடகச் செயற்பாடுகள் தொடர்பில் அவதானமாக இருந்திருந்தால் இவ்வகையான தாக்குதலுக்கான தளம் அமைக்கப்பட்டு வருகின்றது என்பது அரசாங்கத்திற்குத் தெளிவாகியிருக்கும் என அவர் குறிப்பிட்டார்.

> ''இளைஞர்களின் பெரும் குழுவொன்று பட்டப்பகலில் கடைகளைத் தாக்கி அவற்றிற்குத் தீ வைத்து பெரும் அழிவினை ஏற்படுத்தியபோது அதனை ஓர் அரசாங்கத்தினால் தடுத்து நிறுத்த முடியாவிட்டால், அவ்வாறான அரசாங்கத்தினால் என்ன பயன்? இந்த நாட்டின் ஒவ்வொரு பிரசைக்கும் பாதுகாப்பினை வழங்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஆனால் இந்தத் தலைவர்கள் அவை எல்லாவற்றினையும் முற்றுமுழுவதுமாகக் கைவிட்டுவிட்டனர்.''

அரசாங்கம் வன்முறையினைத் தூண்டவில்லை என்றிருக்கலாம். ஆனால் அதில் இருந்து அரசாங்கம் நன்மையடைகின்றது. ''வன்முறையினைக் கட்டுப்படுத்தி அதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக வன்முறை பற்றிப் பாராமுகமாக இருந்து சம்பவங்கள் நடப்பதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது'' என அவர் மேலும் கூறினார். வன்முறை மிகத் திறமையாக ஏற்பாடு செய்யப்பட்டு வெளியிடங்களில் இருந்து தாக்குதலுக்கென ஆட்கள் கொண்டுவரப்பட்டனர் என்பது தெளிவான விடயமாகும் என அவர் மேலும் கூறினார். கும்பலில் பலரும் முகத்தினை மூடியிருந்ததுடன் தடிகளையும் வைத்திருந்தனர். அத்துடன் தீ வைப்பதற்குத் தேவையான பொருட்களையும் வைத்திருந்தனர் என்பதிலிருந்து இது தெளிவாகின்றது என அவர் கூறினார். அனைத்து மக்களினதும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தத் தவறியதால் சம்பவங்களுக்கான முழுப் பொறுப்பினையும் ஜனாதிபதியும் பிரதமரும் ஏற்கவேண்டும் என அவர் கூறினார். ''இந்தக் குழுக்கள் மோதலை உருவாக்குவதற்கும் பட்டப்பகலில் தமக்கு விருப்பமான முறையில் காடைத்தனம் புரிவதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தன'' என அவர் வாதிட்டார். ''இந்த மோதல்கள் ஆட்சியாளர்களின் ஆசீர்வாதத்துடனேயே நடைபெற்றன என்பது தெளிவானதாகும்''. இது தவிர்த்திருக்கக்கூடிய மோதல் என அவர் மேலும் குறிப்பிட்டார். நிலவி வரும் அரசியல் பேதங்களுக்கு அப்பால் அனைத்துக் கட்சிகளும் இனவாதத்தினைத் தூண்டுவதில் இருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும் என அவர் கூறினார்.

கடமைப் புறக்கணிப்பினை மேற்கொண்ட காரனத்தினால் அரசாங்கத்தின் மீதான குற்றப் பொறுப்பினையும் ராஜபக்ச குடும்பத்தின் பரம்பரை இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக உருவாக்கப்பட்ட அரசியல் உட்கட்டமைப்பின் பிரதிநிதிகளை மட்டும் எதிர்க்கட்சி கொண்டிருந்தமையினால் அதன் குற்றப் பொறுப்பினையும் ஜேவிபி தலைவரின் விபரமான கூற்றுக்கள் குறிப்பிட்டன. இந்த விபரக் கூற்றுக்கள் திகன நிகழ்வுகளின் மீது கவனம் குவிக்கும் கூர்மையான பகுப்பாய்வுகளாக அமைந்திருந்தன. நாம் பேசிய முஸ்லிம்களின் குறிப்பாக திகன

பஜார் வியாபாரிகளின் கள மட்டப் பகுப்பாய்வுகளும் இரண்டு அரசியல் கட்சிகள் தொடர்பாக இதே பகுப்பாய்வினையே பிரதிபலித்தன. கணிசமான சிங்கள வாக்காளர்களைக் கொண்ட அரசியல் கட்சிகள் இவ்வாறான பகுப்பாய்வுகளைக் கொண்டிருந்தன என்கின்ற விடயமும் அவை தேசிய சிங்கள மொழி ஊடகத்தில் வெளியிடப்பட்டன என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும். எவ்வாறாயினும், 2013 இல் பிபிஎஸ்சின் செயற்பாடுகள் மூலமாக முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்தினாலும் பின்னாட்களில் அமித் வீரசிங்கவின் மஹசொன் பலகாய போன்ற குழுக்களினாலும் பரப்பப்பட்ட உணர்வுகள் சிங்கள இளைஞர்களின் பிரக்ஞையினை உள்வாங்கும் அளவுக்குச் சமூக ஊடகங்களில் படிந்துபோயுள்ள அளவின் காரணமாக அச்சு ஊடகங்களின் மூலம் வெளிவரும் மிக நிதானமான குரல்களினால் அப்படிவினை அகற்ற முடியாதுள்ளது.

**கம்யூனிஸ்ட் கட்சி**

கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள் திகன நிகழ்வுகள் தொடர்பில் மிகவும் தெளிவான பதிலை வழங்கினர். நாடு முழுவதும் பரந்து வாழும் முஸ்லிம் சமுதாயத்தினைத் தூண்டிவிடுவது ஆபத்தான செயல் என அவர்கள் குறிப்பிட்டனர். இது தமிழர்களுக்கு எதிரான பதற்றங்களை விடப் பாரதூரமானது. ஏனென்றால் இது அம்மக்களின் உள்ளார்ந்த அம்சமாக மாறிவிடலாம். விடயங்கள் சிவில் யுத்தத்தின் நிலைக்குச் சீர்குலைந்தால் அது மிக ஆபத்தானதாக அமைந்துவிடும். உதாரணமாக, 1983 இல் கறுப்பு ஜூலை நிகழ்ந்த பின்னர் நாட்டின் விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்த தமிழ்நாடு மட்டுமே முயற்சித்தது. ஆனால் உலகில் தற்போது 54 முஸ்லிம் நாடுகள் உள்ளன. இஸ்லாமிய நாடுகளின் அமைப்பு ஏற்கனவே அதன் கரிசணைகளை வெளியிட்டுள்ளது. மேலும் எமது தேயிலையினை மத்திய கிழக்கு நாடுகளே வாங்குகின்றன. கறுப்பு ஜூலையின் பின்னர் பொது மக்களுக்கு உரையாற்ற ஜே ஆர் ஜெயவர்தன 6 நாட்கள் காத்திருந்தார் என்பதை அவர்கள் குறிப்பிட்டனர். ''அவர் ஆறு நாட்கள் மௌனமாக இருந்தார். எல்லாம் முடிந்த பின்னர்தான் அவர் மக்கள் முன் உரையாற்றினார். அதன் விளைவினை நாம் முப்பது வருடங்கள் அனுபவித்தோம். அறிக்கையினை வெளியிட முன்னர் ஜனாதிபதி சிறிசேனவும் தாமதித்திருக்கின்றார்''.[64] சொற்களால் முழு நாட்டினையும் பற்றி எரியச் செய்ய முடியும் என்பதால் அரசியல்வாதிகள் தாம் என்ன கூறுகின்றோம் என்பது பற்றி அவதானமாக இருக்கவேண்டும் என அவர்கள் கூறினர்.

1983 கலவரம் நடந்த பின்னர் பொது மக்கள் முன் உரையாற்றப் பெரிதும் தாமதித்த ஜே ஆர் ஜெயவர்தனவின் மௌனத்தினை ஜனாதிபதி சிறிசேனவின் மௌனத்துடன் ஒப்பிட்டமை, திகன நிகழ்வுகளைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எந்த அளவு பாரதூரமாக எடுத்துள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், நீதி, மனித உரிமைகள், பேரினவாதம் பற்றிய கூர்மையான மதிப்பீடு போன்ற மக்களின் சாத்தியமான உணர்வுகளைப் பற்றிப் பேசாது நிகழ்வுகளின் அபாயம் பற்றிய விபரங்களுக்கு இட்டுச் செல்லும் கலந்துரையாடலுக்கு மட்டும் இவர்கள் தங்களை வரையறுத்துக்கொண்டது நெருடலை ஏற்படுத்துகின்றது. எவ்வாறாயினும், சில மாதங்களின் பின்னர் இஸ்லாமியப் போராளர் உருவாகியமையும் திகன நிகழ்வுகள் நடந்து ஒரு வருடத்தின் பின்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடைபெற்றமையும் இவர்களின் கரிசனைகள் தீர்க்கதரிசனமானவை என்பதையே சுட்டிநிற்கின்றன.

***இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் (மீரா ஸ்ரீனிவாசனுடனான ரவூப் ஹகீமின் நேர்காணலை அடிப்படையாகக் கொண்டது)***[65]

கண்டியில் நடைபெற்ற வன்முறை சிங்கள – முஸ்லிம் மோதல் அல்ல மாறாக அது முஸ்லிம்களின் மீதான கும்பல் தாக்குதல் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹகீம் த இந்து செய்திப் பத்திரிகையின் மீரா ஸ்ரீனிவாசனுடனான நேர்காணலின் போது குறிப்பிட்டிருந்தார்.

யுத்தத்தின் பின்னர் இனவெறிச் சக்திகளும் சர்வதேசப் பரப்பில் இருந்து வந்த இஸ்லாம் பற்றிய அச்சமும் ஒன்றுசேர்ந்தமையே இதற்கான காரணம் என அவர் மேலும் விளக்கினார். முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் பகைமையினைத் தூண்டி,''மாற்றான்'' (other) என்பதை உருவாக்குவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட இயக்கம் செயற்பட்ட வழிவகைகள் பற்றி அவர் குறிப்பிட்டார். உதாரணமாக, 2013 இல் பரந்த கவனத்தினை ஈர்த்த ஹலால் பிரச்சினை மற்றும் முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பான ஆர்ப்பாட்டங்கள் போன்றவை. இஸ்லாம் பற்றிய

[64] மவ்பிம: 09.03.2018

[65] மீரா ஸ்ரீனிவாசன், ''இது சிங்கள – முஸ்லிம் மோதலல்ல, இது முஸ்லிம்கள் மீதான கும்பல் தாக்குதல்: இலங்கை அமைச்சர் ரவூப் ஹகீம்'' *த ஹிந்து*, 14 மார்ச், 2018 https://www.thehindu.com/opinion/interview/it-was-not-a-sinhalamuslim-clash-it-was-a-mob-attack-on-muslims/article23229464.ece

அச்சத்தினை உருவாக்குவதில் வியாபாரப் பகைமை மற்றும் பொறாமை வகித்த இடத்தினையும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாறை மற்றும் திகன ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்டவை எனவும் முற்றுமுழுவதும் இனவாதத்தினை மையப்படுத்தி நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிவுற்ற உடனேயே இந்த வன்முறைகள் நடைபெற்றமை கவனத்தில் கொள்ளப்படவேண்டும் எனவும் ஹகீம் கருத்துரைத்தார். வன்முறையின் பின்னால் அரசியல் பின்புலம் உள்ளது என்பதை மறுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். நிகழ்விற்காகப் பொலிசாரின் மீதும் அவர்களின் செயற்பாடின்மையின் மீதும் குற்றஞ்சாட்டிய ஹகீம் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> ''அவர்கள் வேண்டுமென்றே புறக்கணித்ததன் மூலம் அவர்கள் இந்த வன்முறையில் உடந்தையாக இருந்திருக்கின்றனர். அவர்கள் முனைப்பாக ஆதரவு வழங்கியதன் மூலம் உடந்தையாக இருக்காவிட்டாலும், உரிய நேரத்தில் முஸ்லிம்களைக் காப்பாற்ற வராமல் இருந்ததன் மூலம் அதனை நிறைவேற்றியிருக்கின்றனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, என்ன நடக்கப்போகின்றது என்பது பற்றி உரிய முன்னெச்சரிக்கையினைப் புலனாய்வுச் சமுதாயம் வழங்கத் தவறியிருக்கின்றது. இறுதிச் சடங்கு நடைபெற்ற அன்று ஏதோ ஒன்று நடக்கப்போகின்றது என்பது உள்ளூர் அரசியல்வாதிகளான எமக்குத் தெரிந்திருந்தது.... நாம் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் அனைவருடனும் பேசிக்கொண்டே இருந்தோம். எதைப் பற்றியும் பயப்படத் தேவையில்லை என்றும் தாம் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வோம் என்றும் அவர்கள் எமக்கு உறுதி வழங்கினர். இறுதியில் அது நடந்தபோது, அவர்கள் கோபத்தில் பின்வருமாறு கூறினர்: ''இந்த அளவுக்கு இது நடக்கும் என நாம் எதிர்பார்க்கவில்லை. எம்மால் வன்முறையினைக் கட்டுப்படுத்த முடியவில்லை''. அவர்கள் வெறும் சாக்குப்போக்குகளையே கூறினர். இவ்வாறான ஒரு அனர்த்தத்திற்கு அவர்கள் தயாராக இருந்திருக்கவேண்டும்.''

சிங்களச் சமுதாயத்தினை மலடாக்கும் முஸ்லிம்களின் சதிமுயற்சிகள் தொடர்பான கதைகைளப் பற்றிக் கேட்டபோது – அண்மையில் உலாவந்த கருத்தடை மாத்திரைக் கதைகள் - இந்தப் பிரச்சினையினைத் தீர்க்க அரசாங்கம் தொடர்பாடல் உபாயமார்க்கம் ஒன்றினை உருவாக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார். வெறுப்புப் பேச்சுக்களைப் பரப்பும் செயற்பாட்டில் பிக்குகள் ஈடுபட்டிருக்கையில் உரிய சட்டம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் தயங்குவது போல் தெரிகின்றது என அவர் குறிப்பிட்டார். அளுத்கமை விடயங்கள் தொடர்பிலும் அரசாங்கம் உடனடியாக பதிற்செயற்பாடாற்றவில்லை என அவர் குறிப்பிட்டார். இதற்கான காரணம் சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் தமது பிடி தளர்ந்து விடுமோ என்ற அச்சமே என அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், இவ்வாறான உணர்வுகள் சமூகத்தின் சொற்பமான அடிப்படைவாதிகளையே கவர்ந்துள்ளனவேயன்றி பெரும்பான்மையினரை அல்ல என ஹகீம் குறிப்பிட்டார். முஸ்லிம் சிறுபான்மையினர் அரசாங்கத்திற்கான தமத ஆதரவை விலக்கிச் செல்கின்றனர் எனக் காட்டுவதற்கான ஓர் உபாயமார்க்கமாகவும் இது இருக்கமுடியும் என அவர் கூறினார். ஜனாதிபதியினையும் நல்லாட்சி அரசாங்கத்தினையும் ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காக முஸ்லிம்கள் ஒன்று திரண்டு வாக்களித்தனர் என அவர் கூறினார்.

கருத்துரைத்த வேறு எவரினாலும் வெளிப்படுத்தப்படாத விதத்தில் அரசியல் சூழமைவு பற்றிய ஒரு முக்கியமான விடயத்தினையும் ஹகீம் எழுப்பினார். தற்போதைய கூட்டமைப்பு அரசாங்கத்தின் உறுப்பினர்கள் அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் சிறப்பான பெறுபேறுகளைப் பெறாதமை கூட்டமைப்பில் தளர்வினை ஏற்படுத்தியுள்ளது. ஹகீமின் கருத்துப்படி:

> ''உள்ளூராட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்த உடனேயே அரசாங்கத்தின் பிரதான பங்காளர்களுக்கு இடையில் இடம்பெற்ற ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டும் நடவடிக்கை அந்த அரசாங்கத்தில் பங்காளர்களாக இருந்த எம் அனைவருக்கும் அசௌகரியத்தினை ஏற்படுத்தியது. ஆளுகையில் ஒத்திசைவில்லை போல் தென்படுகின்றது. மேலும் அளவுக்கதிகமான நிச்சயமின்மை காணப்படுகின்றது. இவ்வாறான அரசியல் ஸ்திரமின்மை இப்படிப்பட்ட தீவிரவாதிகளுக்கான வளமான தளத்தினை உருவாக்குகின்றது.''

***பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் - தமிழ் தேசியக் கூட்டமைப்பு***

2018.03.05 இல் வெளியிடப்பட்ட அரசாங்கத்தின் அறிக்கை திகன தாக்குதலை உறுதியாகவும் திட்டவட்டமாகவும் கண்டிக்கின்றது. (அரசாங்கத் தகவல் திணைக்களம்). சட்ட அமுலாக்கல் அதிகாரிகளின் வகிபாத்திரம் பாரதூரமான சந்தேகத்துக்குள்ளாகியுள்ளது. இவ்வாறான வன்முறைச் செயற்பாடுகளில் தாம் ஈடுபடலாம் என்கின்ற, சட்டம் தம்மை ஒன்றும் செய்யாது என்கின்ற, சட்டத்தின் ஆட்சி தமக்கு எதிராக அமுலாக்கப்படாது என்கின்ற நம்பிக்கை மக்களுக்கு இருப்பது போல் தென்படுகின்றது என அவர் சபையில் தெரிவித்தார். (சண்டே ஒப்சேவர்).

***பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் (இலங்கை அறிக்கை, 6 மார்ச் 2018)[66]***

*இலங்கை: தனது சொந்தப் பிரசைகளுக்கெதிராக வன்முறை இழைக்கப்படுகையில் அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தாது பாராமுகமாக இருக்கையில்,*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ சுமந்திரன், ''எண்ணிக்கை அடிப்படையில் கீழ்நிலையிலிருக்கும் சமுதாயம்'' என அவர் குறிப்பிடும், சமுதாயத்திற்கு எதிராக வன்முறை நடவடிக்கையில் அரசாங்கத் தலைவர்கள் முதுகெழும்பில்லாதவர்களாக இருந்தனர் என அவர்களைக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

''சரியான விடயம் எதுவோ அதற்காக உங்களால் குரல் கொடுக்க முடியாவிட்டால், உங்களின் நாட்டில் எண்ணிக்கை அடிப்படையில் கீழ்நிலையில் இருக்கும் சமுதாயங்களுக்காக வாதாட முடியாவிட்டால், உங்களுக்கு ஆட்சி செய்வதற்கு எந்த உரிமையும் இல்லை'', என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டார்.

[66] ''இலங்கை: தனது சொந்தப் பிரசைகளுக்கெதிராக வன்முறை இழைக்கப்படுகையில் அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தாது பாராமுகமாக இருக்கையில் - எம்.ஏ. சுமந்திரன் (பாஉ, ததேகூ)'', ஸ்ரீலங்கா ப்ரீப், 12 மார்ச் 2018 https://srilankabrief.org/2018/03/sri-lanka-when-a-government-shrugs-its-shoulders-turns-a-blind-eye-to-theviolence-being-perpetrated-against-its-own-citizens-m-a-sumanthiran-mp-tna /

## அத்தியாயம் 9

## சிவில் சமூக இடையீடுகள்

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

*திகதி: 2018 மார்ச் 6*
முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகள் பரப்பப்படுவதை நிறுத்தி வன்முறையினை நிகழ்த்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளைக் கோரி நிகழ்வுகள் பற்றிய ஓர் அறிக்கையினை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்டுள்ளது. அறிக்கையின் பகுதி கீழே வழங்கப்பட்டுள்ளது.

*முஸ்லிம் சமுதாயத்திற்கெதிராக வன்முறையினைத் தூண்டும் வீடியோ கிளிப்கள் வைரலாகப் பரப்பப்பட்டதையிட்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆழமான கரிசணை கொண்டுள்ளது. இவ்வாறான பல கிளிப்புகள் நிலையத்தின் வசம் உள்ளது. இதில் ஒரு கிளிப் பௌத்த பிக்கு எனக் கூறும் ஒருவரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வீடியோவில் வரும் தனிநபர் முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிராக வன்முறையினைத் தூண்டுவதற்காகப் போலியான தகவல்களை உண்மையினைப் போன்று பயன்படுத்தி முஸ்லிம்களுக்குப் பரிவு காட்டுவதாகப் பிரதான தேரர்கள் மீது குற்றம் சுமத்துகின்றார்.*

*மேலதிக வன்முறையினைத் தூண்டுவதில் இருந்தும் தவிர்ந்திருக்குமாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அனைத்துச் சமுதாயங்களையும் சேர்ந்த பிரசைகளுக்கும் அழைப்பு விடுப்பதுடன் அமுலிலுள்ள சட்டத்திற்கு அமைவாக குற்றத்தினை இழைத்தவர்களைக் கைதுசெய்து அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் துரித நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளைக் கோரியுள்ளது. நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை அல்லது இவ்வாறான முக்கியமான கட்டத்தில் அரை மனதுடன் செயற்படுகின்றமை சமுதாயத்தின் மத்தியில் அவநம்பிக்கையினையும் அச்சத்தினையும் பதற்றத்தினையும் ஆழப்படுத்தி, வெறுப்பினையும் வன்முறையினையும் தீவிரப்படுத்தி சட்டக்காப்புக் கலாசாரத்தினையே வலுப்படுத்தும்.*

*கண்டியிலும் அம்பாறையிலும் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் தனித்த சம்பவங்களல்ல, ஆனால் யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் சமுதாயப் பதற்றத்தில் நிலவும் தொடர்ச்சியினையும் அதிகரிப்பினையுமே அது கோடிட்டுக்காட்டுகின்றது. இனப் பதற்றத்தினைத் தூண்டும் வீடியோக்களையும் வெறுப்புப் பேச்சுக்களையும் தயாரித்து விநியோகிப்பதற்குப் பொறுப்பாக இருப்பவர்கள் உள்ளடங்கலாகக் குற்றத்தினை இழைத்தவர்களைக் கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பானவர்களுக்கு அழைப்பு விடுக்கையில் சம்பந்தப்பட்ட சட்ட ஏற்பாடுகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறிப்பிட்டதையும் பொருட்படுத்தாது குற்றத்தீர்ப்பிற்கு இட்டுச்செல்லும் எவ்விதமான சட்ட நடவடிக்கைகளும் இற்றைவரையில் எடுக்கப்படவில்லை. இருப்பினும், மீண்டும், ஆக்கபூர்வமான ஈடுபாடு மேற்கொள்ளவேண்டும் என்ற விசுவாசத்தில், துரிதமானதும் தீர்மானகரமானதுமான நடவடிக்கை எடுக்குமாறு அழைப்பு விடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மற்றுமொரு கடிதத்தினை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இன்று அனுப்பியுள்ளது. சம்பந்தப்பட்ட சட்ட அமலாக்கல் அதிகாரிகளினால் தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியாவிட்டால் அல்லது அவர்களுக்கு அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க விருப்பமில்லாவிட்டால், அவர்கள் தங்களின் பதவிகளை இராஜினாமாச் செய்யவேண்டும் அல்லது சட்டத்தின் பிரகாரம் அவர்கள் பதவிகளில் இருந்து அகற்றப்படவேண்டும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உறுதியாக நம்புகின்றது. சூழ்நிலையின் பாரதூரம், நல்லிணக்கம் தொடர்பில் அரசாங்கத்தினால் அதன் பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாதிருத்தல், சமய மற்றும் இன வன்முறை மற்றும் சகிப்புத்தன்மையில்லாமையினைத் தடுக்க முடியாதிருத்தல் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேண முடியாதிருத்தல் தொடர்பில் அதிகரித்துவரும் புலனுணர்வு, இதைவிடக் குறைவாக எதையும் தேவைப்படுத்தவில்லை.*[67]

**தமிழ்ச் சிவில் சமூகம்**
*திகதி: 2018 மார்ச் 6*

[67] "மேலதிக வன்முறையினைத் தடுத்து, தேசிய, இன மற்றும் சமய வெறுப்பினைப் பரப்பும் தனிநபர்களைக் கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்தல்'', அறிக்கை - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்: கொழும்பு, 3 மார்ச் 2018. https://www.cpalanka.org/wp-content/uploads/2018/03/Kandy_statement.pdf

இந்த வாரம் கண்டியிலும் கடந்த வாரம் முன்னதாக அம்பாறையிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறையினை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். நடவடிக்கை எவற்றினையும் எடுக்காதிருப்பதன் மூலம் பொலிசார் இதற்கு உடந்தையாக இருக்கின்றனர் என்பது கண்டியிலும் அம்பாறையிலும் இருந்து வரும ஆரம்ப அறிக்கைகளின் மூலம் தெளிவாகியுள்ளது. வடக்கு கிழக்கில் பணியாற்றும் தமிழ் சமூக அமைப்புக்கள் என்கின்ற ரீதியில் நாம் முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிரான வன்முறை அதிகரித்து வருவதையிட்டு மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம். முன்னைய ஆட்சியின் கீழ் அளுத்கமையில் நடந்ததைப் போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாது என்ற வாக்குறுதியினை வழங்கியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. அளுத்கமையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த குற்றச்செயல்களை அரசாங்கம் விசாரித்திருக்கவேண்டும். சம்பவங்கள் விசாரிக்கப்பட்டுப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட்டிருந்தால், கண்டியிலும் அம்பாறையிலும் அதற்கு முன்னர் காலியிலும் நடந்தவற்றைத் தவிர்த்திருக்கலாம். சட்டக்காப்பு வன்முறைக்கு இட்டுச் செல்கின்றது. இது இலங்கையின் வரலாறு நெடுகிலும் மீண்டும் மீண்டும் நிகழும் விடயமாக இருக்கின்றது. வன்முறை பரவுவதைத் தடுக்க அவசியமான அனைத்தையும் அரசாங்கம் செய்யவேண்டும் என்பதுடன் கண்டியிலும் அம்பாறையிலும் வன்முறை நடந்த காரணத்தினை ஆராய்ந்து இந்தக் கொடுமையான செயலுக்குப் பொறுப்பான அனைவரையும் இதற்குப் பொறுப்புக் கூறவைக்க வேண்டும்.

சிங்கள மற்றும் தமிழ் சமுதாயங்களினுள் இஸ்லாம் பற்றி அதிகரித்துவரும் அச்சம் தொடர்பாகவும் நாம் கவலையடைகின்றோம். இந்த அச்சமே இன்று நாம் காண்கின்ற வன்முறைக்கான சூழலினை வழங்குகின்றது. இஸ்லாம் பற்றிய அச்சம் பரப்பப்படுவதற்கு எதிராக நாம் முனைப்பாகப் பணியாற்றி பரிகார நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இந்தத் தாக்குதல்களுக்கு எதிராக நாம் முஸ்லிம் சமுதாயத்துடன் கூட்டொருமையுடன் இணைந்திருக்கின்றோம் என்பதுடன் இனங்களுக்கிடையிலான பதற்றங்களைத் தணித்து இந்த வன்முறையினை இயலுமாக்கும் சட்டக் காப்புச் சுற்றினை முடிவுக்குக் கொண்டுவர நாம் ஒன்றுசேர்ந்து உழைப்போம் எனவும் வாக்குறுதியளிக்கின்றோம்.

***கையொப்பமிட்டோர்***

தமிழ் சிவில் சமூக மன்று
கொள்கை ஆய்வுக்கான அடையாளம் நிலையம்
மனித உரிமைகளை மேம்படுத்திப் பாதுகாப்பதற்கான நிலையம் (திருகோணமலை)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
நீதி மற்றும் சமாதான ஆணைக்குழு, யாழ்ப்பான மறைமாவட்டம்
சுயம் - பெண்கள் வலுவூட்டலுக்கான மையம்
சுயம்பு – அரங்கச் செயற்பாட்டு நிறுவனம்

**பொது பலசேனா (பிபிஎஸ்)**

2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் 2012 ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்தினை ஆரம்பித்ததற்கு பிபிஎஸ்சும் அதன் பொதுச் செயலாளரான சங்கைக்குரிய ஞானசாரவுமே காரணமாகும். இந்த இயக்கமே அளுத்கமையில் வன்முறை வெடிப்பதற்குப் பிரதான காரணமாக இருந்தது. பிக்குவின் இனக்குரோத உரையின் பின்னரே அளுத்கமை வன்முறை ஆரம்பித்தது. இறுதிச் சடங்கிற்கு முன்னைய இரவு திகனவில் குமாரசிங்கவின் வீட்டிலும் சங்கைக்குரிய ஞானசேரவைக் காண முடிந்தது. இது இறைவன் அல்லாவின் பிரச்சினையோ அல்லது பௌத்த சித்தாந்தத்தின் பிரச்சினையோ அல்ல ஆனால் எளிய மக்களின் பிரச்சினை என சங்கைக்குரிய ஞானசார பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் குறிப்பிட்டார். இந்தப் பிரச்சினை தொடர்பாக நாடு முழுவதும் புலமையாளர் கலந்துரையாடல் நடத்தப்படுவது அவசியம் என அவர் கூறினார். அவ்வாறான அனைத்துச் சம்பவங்களிலும் (2017 இல் ஜிந்தோட்டவிலும் 2018 இல் திகனவிலும்) மோதல்கள் முஸ்லிம்களினாலேயே ஆரம்பிக்கப்பட்டதாகவும் ஆனால் இந்தக் குற்றத்திற்குரியவர்கள் பௌத்தர்களே என்பது போல் தூதரகங்களுக்குக் காட்டப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இது ஒரு பெரிய பிரச்சினை என அவர் குறிப்பிட்டார். இது சிங்கள இளைஞர்களுக்கோ அல்லது முஸ்லிம் இளைஞர்களுக்கோ லத்தியினால் அடிப்பதன் மூலம் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினையல்ல என அவர் கூறினார். கோபமான மக்களையெல்லாம் ஒன்றுசேர்த்தால் ஒவ்வொரு தென்னை மரமும் தூக்கு மரமாக மாறலாம் என அவர் மேலும் குறிப்பிட்டார். கும்பல்களால் விசாரணையின்றி மரண தண்டனை விதிக்கப்படுவதே இதன் அர்த்தமாகும். நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டங்களில் செலவழிக்கப்படும் பணம் எல்லாம் எங்கு செல்கிறது என அவர் கேள்வி எழுப்பினார். அந்தப் பணத்திற்கு சர்க்கரைவள்ளிக் கிழங்கு பயிரிட்டிருந்தாலும் பட்டினியில் வாடுபவர்களுக்கு உதவியிருக்கும் என அவர் எள்ளலுடன் குறிப்பிட்டார். கண்டியில் பயன்படுத்தப்பட்ட முறையினால் பிரச்சினைகள் தீர்க்கப்படாது எனவும் சங்கைக்குரிய ஞானசார குறிப்பிட்டார். ஒரு தனி மாடிக் கட்டிடத்திற்குத் தீ வைப்பதால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு உதவி பெறவே அது காரணமாக அமையும் என அவர் குறிப்பிட்டார். மொழிப் பயன்பாட்டில் வல்லவரான சங்கைக்குரிய ஞானசார

தனது கூற்றில் சில உறையவைக்கும் உணர்வுகளைப் புகுத்தினார். தமது சொந்த நீதியினை நிலைநாட்டுவதற்காகக் கோபக்காரக் கும்பல் தென்னை மரங்களைத் ''தூக்கு மரங்களாக'' மாற்றும் கதை அவர் முன்பு பயன்படுத்திய உருவகக் கதையாகும். அவர் புகுத்திய மற்றைய உணர்வு, கடைகள் எரிக்கப்பட்ட மக்கள் அவர்களின் கடைகளைக் கட்டி விடுவார்கள் எனவே இயக்கம் தொடர்ந்திருக்கவேண்டும் என அனுப்பிய செய்தியாகும்.

**புரவசி பலய**

புரவசி பலய குழு என்பது 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொண்டுவந்த பிரதான சிவில் சமூக அணிதிரட்டல் முகவர்களில் ஒன்றாகும். கண்டி வன்முறை பற்றிய அதன் சொந்தப் பகுப்பாய்வினைக் குழு கொண்டுள்ளதுடன் குழுவின் ஊடக மாநாடு பல செய்திப் பத்திரிகைகளாலும் வெளியிடப்பட்டது. குழுவின் மிகப் பிரபல உறுப்பினர்களில் ஒருவரான சங்கைக்குரிய தம்பர அமிலவின் புகைப்படத்துடன் மவ்பிம பத்திரிகை அவரின் கூற்றினைத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது. ''அரசாங்கம் துவேஷ நாய்களைக் கட்டிவைக்க வேண்டும். ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர்களையும் விவசாயிகளையும் துரத்தித் துரத்தித் தாக்கும் பொலிஸ் படை என்ன செய்தது? அது திகனவில் என்ன செய்தது? முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவேண்டும் என்று புரவசி பலய கேட்டபோது அம்பாறையில் மோதல் உருவாக்கப்பட்டது என அவர்கள் குறிப்பிட்டனர். ''கள்வர்களைப் பாதுகாக்கும்'' ஜனாதிபதி நாட்டின் பிரச்சினைகளுக்கான பொறுப்பினை ஏற்கவேண்டும் என அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். உள்ளூராட்சித் தேர்தல்களின் போது பயன்படுத்தப்பட்ட தேசியவாத உணர்வுகளே நாட்டில் இப்போது தலைவிரித்தாடுகின்றன என சங்கைக்குரிய அமில குறிப்பிட்டார். ஜனாதிபதி ஒரு புடலங்காய்த் தலைவர் என அவர் குறிப்பிட்டார். நாட்டின் ஒற்றுமையினைக் காக்கத் தவறியமைக்காக அவர் ஜனாதிபதியினைக் கடுமையாக விமர்சித்தார். அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொண்டுவந்ததாகக் கூறும் புரவசி பலயவின் வாதத்தினை வலுப்படுத்திய அவர், நல்லாட்சிக்காகவும் நல்லிணக்கத்திற்காகவுமே ஜனாதிபதி ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டாரேயன்றி அரசியல் கட்சிகள் தொடர்பான தனது சொந்த நிகழ்ச்சிநிரலை முன்னெடுப்பதற்காக அல்ல என அவர் குறிப்பிட்டார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாது என முழு அரசாங்கமும் நினைக்கின்றது என்றும் ராஜபக்ச தாமே நாட்டின் உத்தியோகப்பற்றற்ற தலைவராக நடந்துகொள்கின்றார் என்றும் அவர் கூறினார்.

கடந்த தேர்தலைத் தேசியவாத உணர்வுகளைத் தூண்டும் அடிப்படையிலேயே ராஜபக்ச நடத்தியதாக சங்கைக்குரிய அமில குறிப்பிட்டார். மேலும் இவ்வாறான நடவடிக்கைகளில் பங்குபற்றியமைக்காக ராஜபக்சவின் மீது புரவசி பலய குறைகூறிய அதேவேளை தற்போது நல்லாட்சி அரசாங்கத்தின் கீழும் இதே விடயமே நடைபெறுகின்றது. இப்போது யாரின் மீது குறைகூற முடியும் என அவர் கேட்டார். 1983 ஆம் ஆண்டின் வன்முறை சிலரின் வன்முறையால் நடக்கவில்லை, மாறாகப் பலரின் மௌனத்தினால் நடந்தது என அவர் கூறினார்.

புரவசி பலயவின் பத்திரிகையாளர் மநாட்டில் வெளியிடப்பட்ட மற்றொரு விபரக் கூற்று பின்வருவதை உள்ளடக்கியிருந்தது.[68] தினமின கட்டுரையின் தலைப்புச் செய்தி குறிப்பிடுகின்றது: ''சட்டம் உரிய முறையில் செயற்படுத்தப்பட்டால் தெல்தெனிய அளவிற்குப் பிரச்சினை பரவியிருக்காது''. உபதலையங்கம் பின்வருமாறு குறிப்பிட்டது: ''இன்னொரு தடவை நாட்டினைத் துவேஷத்தினை நோக்கித் திருப்ப அனுமதிக்க முடியாது''. தேசியவாத உணர்வுகளை உருவாக்கியமைக்காக அவர்கள் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்சவினையும் கூட்டு எதிர்க்கட்சியினையும் குறை கூறினர். பிரதிநிதி ஒருவர் 2014 இல் அளுத்கமையில் நடந்ததை நினைவுகூர்ந்தார். கருத்தடை மாத்திரையுடன் தொடங்கிய பிரச்சினை தற்போதைய சந்தர்ப்பத்தில் ஒரு மரணத்தில் முடிவடைந்த விடயமாகத் தீவிரமடைந்துள்ளது. ''உலகில் எங்கேயும் மலட்டுத்தன்மைக்கான மாத்திரை என ஒன்றும் இல்லை. ஆனால் இந்த அறிவியல் உண்மையினைப் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு நவீன சமூகம் நமது இலங்கையில் இல்லை'' என அவர் கூறினார். சட்டமும் ஒழுங்கும் உரிய முறையில் பேணப்பட்டால் இது நடந்திருக்காது என அவர் மேலும் கூறினார். அரசாங்கம் மோதல் நடக்க அனுமதித்துவிட்டுப் பின்பு அதனைக் கட்டுப்படுத்த முயன்றிருக்கின்றது.

இவ்வாறான நிகழ்வுகளை ஊரடங்கினை அமுல்படுத்துவதால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது எனவும் குறிப்பிடப்பட்டது. அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரப் பிரிவு தீர்மானகரமான முடிவினை எடுக்கவேண்டும் என அவர்கள் கூறினர். நிறைவேற்று அதிகாரத்தினால் அது செய்யப்படாவிட்டால், தற்போதுள்ள நிறைவேற்று அதிகாரம் முன்னையதின் பாங்கினைப் பின்பற்றவில்லை என்பது தெளிவாகிவிடும். நாடு மீண்டும் ஒரு தடவை இன மற்றும் சமய வெறுப்பினுள் புதைவதற்கு

[68] தினமின 9 மார்ச் 2018.

அனுமதிக்க முடியாது. இந்த விடயத்தில் பொலிசார் திருப்பதிகரமான முறையில் செயற்படவில்லை. அதனால்தான் இராணுவம் தலையிடவேண்டும் என திகன மக்கள் அழைப்பு விடுத்தனர்.

வன்முறையில் ராஜபக்சவின் குற்றப்பொறுப்புக்கான விரிவான பகுப்பாய்வினைப் புரவசி பலய உறுப்பினர்கள் பத்திரிகையாளர் மாநாட்டின் போது சமர்ப்பித்தனர். ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு முயற்சிக்கின்றனர் என்றும் தம்மை அரசியல் வட்டத்தினுள் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருப்பவர்களாகக் காட்டுவதற்கே ராஜபக்சக்கள் எப்போதும் முயற்சித்துள்ளனர் என்றும் உறுப்பினர்கள் வாதிட்டனர். ராஜபக்ச பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் வந்துள்ளார் - வேறு எந்த இடத்திலும் முன்னாள் ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினராகப் போட்டியிடவில்லை. மிக அண்மையில் அவர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் தேசியவாத உணர்வுகளின் அடிப்படையில் போட்டியிட்டு வெற்றிபெற்றனர். தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் என்கின்ற மற்றும் தமக்கு யாரும் சவால் விடுக்க முடியாது என்கின்ற பிம்பத்தினை இவர்கள் இப்போது உருவாக்கி வருகின்றனர். சட்டம் ஒழுங்கு அமைச்சராக சரத் பொன்சேகாவினை நியமிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள் இவர்களை நிலைகுலைய வைத்தது. ஏனெனில், ராஜபக்ச குடும்பம் மற்றும் அவர்களின் அடிவருடிகளுக்கு எதிரான பல குற்றவியல் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவர் நடவடிக்கை எடுப்பதைத் துரிதப்படுத்துவார் என்பதாலாகும்.ராஜபக்சக்களின் பிரதான குறிக்கோள் இந்தக் குற்றச்சாட்டுக்களைத் தவிர்ப்பதாகும். இதனை நிறைவேற்ற அவர்கள் அரசியல் அதிகாரத்தினைப் பெறவேண்டும். எவ்வாறாயினும் அதனை அவர்கள் செய்வதற்கு அண்மையில் தேர்தல்களும் நடக்கப் போவதில்லை. எனவே தமக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதைத் தடுக்க ராஜபக்சக்கள் தம்மால் இயன்றதைச் செய்யவேண்டும். திகன மற்றும் தெல்தெனிய சம்பவங்களுக்கு இட்டுச்சென்ற அம்பாறை வன்முறை இதனால்தான் நடந்தது. எனவே, பெரும்பான்மையான மக்கள் இனத்துவ அல்லது சமயப் பகைமையினால் தூண்டப்படாத காரணத்தினால் மக்களை அமைதியாக இருக்குமாறு கூறுவது தேவையற்றது என அவர்கள் மேலும் கூறினர்.

## அத்தியாயம் 10

## நிகழ்வுகளின் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடக உள்ளடக்கம்

வன்முறை நடைபெற்ற இரண்டு மூன்று நாட்களில் (8 மற்றும் 9 மார்ச்) சிங்கள மொழிச் செய்திப் பத்திரிகைகளில் திகன நிகழ்வுகள் பற்றிப் பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட சுவாரசியமான கருத்துக்கள் வெளியிடப்பட்டன. சிங்களப் பத்திரிகைகளும் ஆங்கிலப் பத்திரிகைகளும் சம்பவம் பற்றி அறிக்கையிட்டுள்ள விதத்தினை மேலோட்டமாகப் பார்க்கையில் முஸ்லிம்களை மாற்றாராகப் பார்க்கின்ற துவேஷச் சொல்லாடல்கள் காணப்பட்டதுடன் நாடு நாசமாகப் போகின்றதே எனும் துயரத்தினை வெளிப்படுத்தும் கருத்துக்கள் முனைப்புப் பெற்றிருந்ததைப் பார்க்கலாம். பல வருடங்கள் நிலைத்திருந்த மோதல் பற்றியும் 1983 சம்பவங்கள் பற்றியும் இவற்றில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அப்பாவி மக்கள் மீண்டும் எவ்வாறு மீண்டும் ஒரு தடவை குறுகிய அரசியல் இலாபங்களுக்காகச் சதிநோக்கத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்பதுவும் குறிப்பிடப்பட்டிருந்தது. மாற்றுச் சிங்கள ஊடகங்களில் - ரிவிர (RIVIRA) மற்றும் ரெச (RESA) போன்ற பத்திரிகைகள் - பகுப்பாய்வுகளும் விமர்சனங்களும் சிறந்த தகவல்களுடன் கூர்மையானவையாக இருந்த அதேவேளை, திவயின, தினமின மற்றும் மவ்பிம போன்ற பெரும்போக்குச் செய்திப் பத்திரிகைகளில் திறனாய்விற்கான உணர்வும் பாரதூரமான சமூகப் பிரச்சினைகளில் கவனத்தினை ஈர்ப்பதற்கான ஆர்வமும் காணப்பட்டது.

அரசாங்கத்திற்குச் சார்பான செய்திப்பத்திரிகையான தினமின பத்திரிகையில் ''ஏன் இது நடந்தது?'' எனத் தலைப்பிட்டு வெளியிடப்பட்ட செய்தியில் அரசாங்கம் ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்சிலுக்கு பதில் வழங்கவேண்டியிருக்கும் மார்ச் மாதத்தில் பதற்றம் எப்போதும் உருவாகுகின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அரசாங்கத்தினைக் கையாலாகததாகக் காட்டுவதற்காகவே நிகழ்வுகள் திட்டமிடப்பட்டிருந்தன என அச்செய்திக் கட்டுரை குறிப்பிட்டிருந்தது. அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகள் பயண எச்சரிக்கை வழங்கும் சாத்தியம் உண்டு என்று குறிப்பிட்ட செய்திக் கட்டுரை முன்னைய வருடத்தில் அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகளைக் கண்ட சுற்றுலாத் துறை பாதிப்படையலாம் என்றும் கணிப்பிட்டிருந்தது. சமூக ஊடகத்தில் வதந்திகள் தீ போன்று பரவுகின்றன என்றும் அமுல்படுத்தப்பட்ட சமூக ஊடகத் தடை இதனால் அவசியமானது என்றும் கட்டுரை மேலும் குறிப்பிட்டிருந்தது.

மலட்டுத்தன்மை ஏற்படுத்தும் மாத்திரை பற்றிய கதையினை மறுதலித்த கட்டுரை சிங்கள சனத்தொகை வளர்ச்சி வீதமும் அறிவியலும் இக்கதையினை அர்த்தமற்றதாக ஆக்குகின்றன எனக் குறிப்பிட்டிருந்தது. இந்தக் கட்டுரைகள் 1983 ஆம் ஆண்டின் இன வன்முறை பற்றியும் குறிப்பிட்டிருந்தன - இன மோதலின் ஆரம்பத்தினைக் குறிக்கின்றது எனப் பலரும் கருதிய வன்முறை - இந்த நிகழ்வு நடந்திருக்காவிட்டால் இப்போது இலங்கை ஓர் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறியிருக்கும் என்றும் இக்கட்டுரைகள் வாதிட்டிருந்தன. இக்கட்டம் வரையில் கட்டுரையானது முஸ்லிம்களின் துயரம் பற்றி எவ்வகையிலும் குறிப்பிடாது கண்டியில் நடைபெற்ற வன்முறை போன்ற நிகழ்வுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வாறு பாதகமானவையாக இருக்கின்றன என்கின்ற தர்க்கங்களையே முன்வைத்தது. அடுத்த பகுதியில் கட்டுரை கலாசாரப் பல்வகைமை ஒரு சொத்தாகவும் அபிவிருத்திக்கான உதவியாகவும் அங்கீகரிக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தது. கண்டி மக்கள் ஒருவர் மற்றவருடன் நல்லுறவுடன் வாழ்ந்தனர் என்றும் ''வெளியில் இருந்து வந்தவர்களினாலேயே'' பிரச்சினைகள் உருவாக்கப்பட்டன என்றும் அது குறிப்பிட்டது. எந்தக் குழுவும் தாழ்ந்ததும் அல்ல உயர்ந்ததும் அல்ல என்றும் சகல சமயங்களும் இனக் குழுக்களும் அரசியலமைப்பில் பொதியப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் கொண்டிருக்கவேண்டும் என்றும் கட்டுரை முடிவாகக் குறிப்பிட்டிருந்தது.

ராஜபக்சவுக்கு ஆதரவானது மற்றும் ஐதேகவுக்கு எதிரானது என நன்கறியப்பட்ட திவயின பத்திரிகையும் நடந்த நிகழ்வுகளைக் கடுமையாக விமர்சித்ததுடன் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டவாறே அவற்றினை அறிக்கையிட்டிருந்தது. அரசாங்கத்தினை விமர்சிப்பதற்கும் ராஜபக்சவை மெச்சுவதற்கும் இந்த வாய்ப்பினைப் பத்திரிகை பயன்படுத்தியிருந்தது. ராஜபக்சவின் கட்சியே அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் அமோக வெற்றியீட்டியிருந்தது. ''நாட்டை உலுக்கிய ஒரு வாரம்'' எனத் தலைப்பிட்ட ஒரு கட்டுரை பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: நாடு இப்போது சிங்கள முஸ்லிம் வன்முறையினைப் பற்றி மட்டுமே சிந்தித்துக்கொண்டிருக்கின்றது. பிணை முறி ஊழல், அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு ஆகிய எல்லாம் மறக்கப்பட்டுவிட்டன.'' ஐதேகவுடன் இணைந்துள்ள ராஜபக்ச அரசாங்கத்தின் முன்னைய உறுப்பினர்கள் ராஜபக்சவிடமிருந்து சிறுபான்மை வாக்காளர்களைத் தூரமாக்குவதற்காக இனப் பகைமையினைத் தூண்டிய சதித்திட்டம் நடைபெற்றிருக்கின்றது எனப் பத்திரிகை ஒரு கருத்தினை வெளியிட்டிருந்தது. பாராளுமன்றத்தில் புலனாய்வு முகவர்களுக்கெதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன என்றும் கட்டுரை குறிப்பிட்டிருந்தது. புலனாய்வு முகவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தும் அவர்களை அவமானப்படுத்தியும் புலனாய்வு அதிகாரிகளை நீண்ட காலம் மறியலில் வைத்தும் அவர்களின் உரிய செயற்பாட்டினைத் தற்போதைய அரசாங்கம் கீழறுத்துள்ளது எனவும்

கட்டுரை குறிப்பிட்டிருந்தது. இது ஒட்டுமொத்த புலனாய்வு அமைப்பினையும் பலவீனப்படுத்தியுள்ளது என்றும் ஒரு விசேட அறிக்கையினை வெளியிட்டு மக்களை அமைதியாக இருக்குமாறு ராஜபக்ச கேட்டுள்ளதாகவும் கட்டுரை குறிப்பிட்டிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினரான மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளரான சரித ஹேரத் என்பவர் லங்காதீப பத்திரிகையில் எழுதிய பத்தியில், உள்ளூராட்சித் தேர்தலில் ராஜபக்சவின் தலைமையிலான எஸ்எல்பிபி வெற்றி பெற்ற பின்னர் நாட்டிற்கு ஒரு தலைமை இல்லாமல் போனமையே வன்முறை நிகழக் காரணம் எனக் கூறியிருந்தார். தேசிய அரசாங்கத்திடம் அதிகாரம் இருந்த போதிலும் அது மக்களின் கௌரவத்தினை முழுமையாக இழந்துவிட்டது எனப் பத்தி வாதிட்டது. இக்காரணத்தினால்தான் தெல்தெனியவில் கூட்டத்தினைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது எனப் பத்தி குறிப்பிட்டது.

மஹிந்த ராஜபக்ச முஸ்லிம்களுக்கு எதிரானவர் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை எனக் காட்டுவதற்குக் கூட்டு எதிர்க்கட்சிக்கு இது ஒரு வாய்ப்பாகும் எனவும் கட்டுரை குறிப்பிட்டிருந்தது. காலனித்துவத்தின் பின்னர் எவ்வாறான ஒரு நாடாக இருக்க விரும்புகின்றது என்ற கேள்வியுடன் இலங்கை இன்னும் தல்லாடிக் கொண்டிருக்கின்றது என்றும் ஆசிரியர் குறிப்பிட்டிருந்தார். அவர் மேலும் இரண்டு விடயங்களைக் குறிப்பிடுகின்றார். முதலாவது விடயம், நாட்டு முஸ்லிம்களின் தலைவர் அஷ்ரப் மிகத் திறமையான அரசியல்வாதி. முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சேர்வதை அவர் தடுத்தார். ஆனால் அஷ்ரபின் அரசியல் சாணக்கியத்தில் கடுகளவேனும் அந்த பதியுதீனிடமும் ஹகீமிடமும் (அரசாங்கத்தில் சக்திமிக்க முஸ்லிம் தலைவர்கள்) இல்லை. இரண்டாவது விடயம், பௌத்தம் என்பது வெறுமனே சமயம் சார்ந்தது மட்டுமல்ல அது நாகரீகமும் சார்ந்தது என்பதாகவே இந்த நாட்டில் பௌத்தத்தின் அந்தஸ்து புரிந்துகொள்ளப்படவேண்டும். மேலும் ஏனைய சமுதாய உறுப்பினர்கள் அதனைப் புரிந்துகொண்டால் அது நாட்டின் எதிர்காலத்திற்கு நற்செய்தி கூறுவதாகவே அமையும். உதாரணமாக, கண்டியிலுள்ள தலதா மாளிகை அல்லது அநுராதபுரம் புனித நகரம் போன்ற இடங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக பௌத்த மக்கள் உணர்கின்ற பாதுகாப்பின்மையினை பிரச்சினையினைப் புரிந்துகொள்கின்ற மிதவாதிகளின் இடையீட்டினாலேயே அகற்ற முடியுமேயன்றி பௌத்த பிக்குகளின் அதிருப்திக்கு ஏற்கனவே உள்ளாகியிருப்பவர்கள் சங்கைக்குரிய பிக்குகளைத் துஷ்பிரயோகம் செய்வதனால் அல்ல.

பின்வருவது, ரெசா பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்றின் தொகுப்பாகும். இந்தப் பத்திரிகையில் உள்ள பல கட்டுரைகள் கண்டி நிகழ்வுகள் தொடர்பாக விமர்சனமான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்ததுடன் புலனுணர்வு ரீதியான பகுப்பாய்வினையும் வழங்கியிருந்தது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுரைகள் கண்டியில் நடந்த வன்முறை தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல்களில் இருந்து ஆசிரியர் அறிந்துகொண்டவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன. சிறுபான்மையினர் தொடர்பாகப் பெரும்பான்மையினர் மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும். பெருநிறுவனத் துறையின் உயர் மட்டங்களில், பெரும்பான்மைச் சமுதாயம் சிறுபான்மையினர் தொடர்பாக வெறுப்பினைக் கொண்டுள்ளது. பொதுவாகச் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதற்காக தேசப்பற்று மற்றும் சமுதாய உணர்வுகள் என்ற பெயரில் இனங்களுக்கிடையிலான மோதல்கள் உருவாக்கப்படுகின்றன. அனால் சிங்களவர்களில் பெரும்பான்மையானவர்கள் இவற்றினை அங்கீகரிப்பதில்லை. இருப்பினும் ஒரு சிறிய குழுவின் இச்செயற்பாடுகளின் விளைவுகளுக்குப் பெரும்பான்மையினர் முகங்கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கண்டியைச் சேர்ந்த ஓர் அரசியல்வாதியும் அவரின் குண்டர்களுமே வன்முறைக்குப் பொறுப்பானவர்கள் என திம்பிரியகம பண்டாரவினால் எழுதப்பட்ட இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கட்டுரை இதற்கான தொடர்பினைப் பகிரங்கமாகவே குறிப்பிடுவதுடன் முன்னைய சந்தர்ப்பங்களிலும் இந்த அரசியல்வாதி காடையர்களையும் வன்முறையினையும் பயன்படுத்தியுள்ளார் எனவும் குற்றத்தினை நிகழ்த்தியவர்களைக் கையாளுகையில் சட்டம் நீக்குப் போக்காக இருக்கக்கூடாது எனவும் குறிப்பிடுகின்றார். கட்டுரையில் 1983 ஆம் ஆண்டு நிகழ்ந்த வன்முறையின் புகைப்படம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்த விமர்சன ரீதியான கருத்துக்கள் பெரும்பான்மையான சிங்களவர்கள் மத்தியில் தெளிவான கருத்துக்கள் நிலவுவதன் அடையாளமாகும். அளுத்கமை சம்பவங்களின் பின்னர் நிலவியதுடன் ஒப்பிடுகையில் உத்தியோகபூர்வச் சொல்லாடல்களில் காணப்பட்ட வித்தியாசங்களையும் செய்தி அறிக்கையிடல்கள் எடுத்துக்காட்டின. ஏதோ நடக்கக்கூடாத ஒன்று நடந்துவிட்டது மற்றும் அது தணிக்கப்படவேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பழியினைப் பங்கிடுவது பகிரங்கமாக நடக்கவில்லை அல்லது முஸ்லிம்களாகவே இந்த வன்முறையினை உருவாக்கிக் கொண்டார்கள் எனப் பாதிக்கப்பட்டவர்களைக் குறைகூறும் கருத்துரைகளும் இடம்பெறவில்லை. சமுதாய மட்டத்தில் நிறைந்து காணப்படும் முஸ்லிம்களுக்கெதிரான கருத்துக்களுடன் ஒப்பிடுகையில் இது வித்தியாசமானதாகும். இலத்திரனியல் ஊடகங்களின் தலையீடு, குறிப்பாகத் தொலைக்காட்சி அலைவரிசைகளின் தலையீடு அதிகரித்த அளவில் பொறுப்பற்றதாக மாறிவருவதுடன் அவர்களின் அறிக்கையிடலில் பேரினவாதமும் காணப்படுகின்றது. இவை முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளைப் பரப்புவதற்கு அதிக வாய்ப்புக்களைக் கொண்ட மூலங்களாக இருக்கலாம்.

**சர்வதேச ஊடகங்கள்**

மார்ச் 6 ஆம் திகதி அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதுடன் சர்வதேச ஆங்கில மொழி ஊடகங்களில் நிகழ்வுகள் பற்றிய செய்தி அறிக்கையிடல் சடுதியாக அதிகரித்தது[69]. அனேகமாக அனைத்துப் பிரதான ஊடக நிறுவனங்களும் ஒன்று அல்லது இரண்டு பொதுப்படையான செய்திகளை அறிக்கையிட்டன. பிரகடனத்தின் முன்னரும் பின்னருமான செய்தி அறிக்கையிடலின் அளவு எவ்வாறாயினும் இடையிடையே நிகழ்வதாகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் காணப்பட்டது. ஒரு சில ஊடக நிறுவனங்கள் நிகழ்வின் நோக்கெல்லைக்கு அப்பால் சென்றன. ராய்டர் மற்றும் அல் ஜசீரா ஆகிய செய்தி நிறுவனங்கள் ஓரளவு விபரங்களுடன் வன்முறையினை அறிக்கையிட்டிருந்தன. இரண்டுமே மார்ச் மாதம் முழுவதும் பல செய்திகளை வெளியிட்டிருந்தன. நீண்ட விபரங்களுடன் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட இவர்களின் செய்திகள் வன்முறை பற்றிய நுட்பமான தகவல்களை உள்நாட்டு அரசியல் நிலைமையுடன் சேர்த்து வழங்குவதற்கு முயற்சித்தன. பொதுவாக இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குச் சர்வதேசக் கவனம் ஈர்க்கப்பட்டிருந்தது. அதைவிட அதிகமாகக் கவனம் ஈர்க்கப்படவில்லை.

உள்ளடக்கத்தினைப் பொறுத்த அளவில் அறிக்கைகள் சார்பளவில் வன்முறையினைப் பற்றி நேரடியாகக் குறிப்பிட்டன. குறிப்பாக முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை பற்றிக் குறிப்பிட்டன. ஆனால் வன்முறையின் வரலாற்று ரீதியான முன்சம்பவங்கள் மற்றும் அவற்றின் சூழமைவு ரீதியான வெளிப்பாடுகள் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்ததுடன் சில வேளைகளில் ஆதாரப்படுத்தப்படாதவையாகவும் இருந்தன. இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகள் நடத்தப்பட்ட விதம் பற்றிய வரலாறு பல்வேறு விதமாக அறிக்கையிடப்பட்டது – உதாரணமாக, இரண்டு சமுதாயங்களுக்கும் இடையிலான "அதிகரித்துவரும் பதற்றங்கள்" எனப் பலரும் தலைப்பிட்டுக் குறிப்பிட்ட விடயத்திற்கான காலச் சட்டகங்கள் கணிசமாக மாறுபட்டன. இவ்வகையான வன்முறையினை ஒரு புதிய போக்கு எனச் சிலர் குறிப்பிட்டனர் - த இகனமிஸ்ட் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரை நிகழ்வுகள் பின்வருவனவற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் குறிப்பிட்டிருந்தது: தமிழர்கள் மீது நிழலாடிக்கொண்டிருந்த பகைமையினைச் சிங்களத் தீவிரவாதிகள் முஸ்லிம்கள் (இவர்களில் அதிகமானவர்கள் தமிழைத் தமது தாய்மொழியாகப் பேசுகின்றனர்) மீது மாற்றுவதற்கு முயற்சிக்கின்ற நிலை காணப்படும் ஒரு "புதிய சமூகப் பிளவு.[70]" இந்த நிலை 2009 இல் யுத்தம் முடிவடைந்ததில் இருந்து காணப்படும் ஒரு தனிப்பட்ட போக்கு எனச் சிலர் கருத்துத் தெரிவித்தனர்[71]. ஏனைய சிலர் 2012 ஆம் ஆண்டினை இந்தப் போக்குச் செல்வாக்குச் செலுத்திய ஆண்டாகத் தன்னிச்சையாக மேற்கோள் காட்டினர்[72]. வெகு சொற்பமான கட்டுரைகளே இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளின் வரலாற்றினை இந்தக் காலச் சட்டகத்திற்கு அப்பால் ஓரளவு கருதுதற்குரிய நிலையுடன் நோக்கியிருந்தன. நிகழ்வுகளை விபரித்த அதிகமான கட்டுரைகள் அவற்றினை வெளியிட்டிருந்த விதம் அவ்வாறன நிகழ்வுகளை ஓரளவு எதிர்வுகூறத்தக்கவை போலத் தென்படச் செய்தன. ஆனால் இவை முஸ்லிம் சிங்களப் பதற்றங்களின் வரலாற்றினைப் பற்றிக் குறிப்பிடத் தவறியுள்ளதுடன் மாறாகச் சமூக வன்முறை நிகழ்வுகள் இலங்கையில் பொதுவாகச் சாதாரணமானது எனவும் வாதிட்டன. இலங்கையில் பெரும்பான்மை - சிறுபான்மை உறவு எனும் தலைப்பு பொதுவாகப் பல கட்டுரைகளில் நாட்டின் மக்கள் தொகையின் கட்டமைப்பின் உருவாக்கம் பற்றி நினைவுபடுத்தும் ஒரு வரிக்கு வரையறுக்கப்பட்டிருந்தன என்பதுடன் சிவில் யுத்தம் பற்றிய சுருக்கமான கருத்துக்களையும் அவை கொண்டிருந்தன. உள்நாட்டில் நிகழும் புதிய சுற்றுக்கு மாற்றமாக வெகு சொற்பமான கட்டுரைகளே கண்டி நிகழ்வுகளை 1983 ஜூலை சம்பவங்களுடன் ஒப்பிட்டிருந்தன.

கருத்தடை மாத்திரைகள் பற்றிய வதந்திகள் பற்றிய குறிப்புக்களோ அல்லது முஸ்லிம் சமுதாயத்தினுள் சனத்தொகை வளர்ச்சி பற்றிய குறிப்புக்களோ ஒட்டுமொத்தமாக இக்கட்டுரைகளில் காணப்படவில்லை. வன்மத்திற்கான விளக்கங்கள் வழங்கப்படுகையில் பலவந்த மதமாற்றம்

---

[69] "அரசாங்கம் 10 நாட்களுக்கு அவசரகால நிலையினைப் பிரகடனப்படுத்தப்போகின்றது." *டெய்லி மிரர்,* 6 மார்ச் 2018 http://www.dailymirror.lk/article/Govt-to-declare-State-of-Emergency-for-days--146826.html

[70] "இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை ஒரு புதிய சமூகப் பிளவுக்கான சமிக்ஞையினைக் காட்டுகின்றது," த இகனமிஸ்ட், 8 மார்ச் 2018 https://www.economist.com/asia/2018/03/08/anti-muslim-riots-in-sri-lanka-signal-a-new-social-fissure

[71] "முஸ்லிம்களுக்குச் சொந்தமான உணவு விடுதிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இலங்கையில் புதிதாக வன்முறை வெடித்துள்ளது," *இந்துஸ்தான் டைம்ஸ்,* 11 மார்ச் 2018, https://www.hindustantimes.com/world-news/fresh-violence-erupts-in-sri-lanka-as-muslim-ownedrestaurant-comes-under-attack/story-s26tFY8iCGONiq7pYsdEwN.html

[72] "இலங்கை வன்முறை: தாக்குதல்களைத் தொடர்ந்து அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது," *பி.பி.சி நிவ்ஸ்,* 6 மார்ச் 2018 https://www.bbc.com/news/world-asia-43300913

அல்லது புனித பௌத்தத் தலங்கள் நாசமாக்கப்படுகின்றன எனும் சிங்கள மக்களின் முறைப்பாடுகள் பற்றிய குறிப்புக்களையே காண முடிந்தது[73].

அனேகமாக அனைத்து அறிக்கைகளும் வன்முறைக்கான பிரதான ஊக்குவிப்புச் சக்தியாகக் "கடும்போக்கு பௌத்தமக்களைக்" குறிப்பிட்டிருந்தன[74]. பொதுவாக இந்தக் கண்ணோட்டம் 2017 ஆம் ஆண்டின் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கெதிரான ஆர்ப்பாட்டத்துடன் தொடர்புபட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டம் அச்சந்தர்ப்பத்தில் சர்வதேச ஊடகங்களின் கவனத்தினைப் பெற்றிருந்தது[75]. அதிகரித்துவரும் பௌத்த தேசியவாதத்தின் அண்மைக் கால வரலாற்று ரீதியான அறிகுறி என விமர்சகர்கள் சுட்டிக்காட்டிய மற்றொரு தொடர்புப் புள்ளியாகும். "முஸ்லிம்களுக்கெதிரான புதிய வன்முறையின் மத்தியில் 'இலங்கை விளிம்பில்' " எனும் தலைப்பிலான அல் ஜசீராவின் நீண்ட கட்டுரையில், தாக்குதல்கள் முன்பே திட்டமிடப்பட்டிருக்க வேண்டும் மற்றும் கடும்போக்கு பௌத்தக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் மேலதிக வன்முறையினை நியாயப்படுத்தக்கூடிய முஸ்லிம்களின் பதிலடியினைத் தூண்டுவதற்காக இது வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனும் கருத்தினை ஆசிரியர்கள் அழுத்தமாகப் பதிவுசெய்திருந்தனர்[76]. உள்ளூராட்சித் தேர்தல்களில் ராஜபக்ச அடைந்த அண்மைய வெற்றியே இந்தக் குழுக்களை வலுப்படுத்தியுள்ளது என ஆசிரியர்கள் அறிக்கையிட்டுள்ளனர். ஏனைய சில அறிக்கைகள் சமூக ஊடகங்களை முடக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தில் கவனம் குவித்தன. இவை பொதுவாக முஸ்லிம்களுக்கு எதிரான பரப்புரைகள் பரவுவதைத் தடுப்பதற்கான ஒரு நடவடிக்கையாக இது விளக்கப்பட்டது. இப்பரப்புரைகள் தவறான தகவல்களைப் பரப்பும் கடும்போக்கு பௌத்த குழுக்களுடன் மீண்டும் தொடர்புபடுத்தப்பட்டன[77].

இந்த நிலையில், உள்நாட்டு அரசியலுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாது உள்நாட்டுப் பத்திரிகைகளில் வன்முறை பற்றி வழங்கப்பட்ட வாதங்களின் அனைத்து விவரணங்களும் பொதுவாக இருட்டடிப்புச் செய்யப்பட்டவையாகவே இருந்தன என்றே எம்மால் கூற முடியும். சர்வதேசத்தின் அதிக கரிசனை பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலை மீதே காணப்பட்டது. இதற்கான காரணம் அதன் புலனுணரப்பட்ட சர்வதேச ரீதியான விளைவுகளாகும். "சந்தேகநபர்களை அதிகார அமைப்புக்கள் கைது செய்து நீண்ட காலம் தடுத்துவைக்கக்கூடியதும் மேலும் தேவைப்படுகையில் பலத்தினைப் பிரயோகிக்கக் கூடியதும்" என அவசரகால நிலையினை பிபிசி விபரித்திருந்தது[78]. இதனுடன் சேர்ந்து உருவான மற்றுமொரு தொனிப்பொருள் ஏனைய ஆசிரியர்கள் சிலரால் நீண்டகாலமாக நிலவிவருவது என விபரிக்கப்பட்ட "சட்டக்காப்புக் கலாசாரம்" ஆகும்."இந்த வன்முறைப் பாங்குகள் இலங்கைக்குப் புதியவையல்ல" என்றும் ஏனெனில் இந்தக் கலவரம் அல்லது 2009 இல் முடிவடைந்த யுத்தம் ஆகியவற்றினை நிகழ்த்தியவர்களை அரசாங்கத்தினால் பொறுப்புக்கூற வைக்க முடியவில்லை என்றும் வாதங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன[79]. சட்டக்காப்புக் கலாசாரத்தின் மீது கவனம் செலுத்திய வாதங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டம் பற்றிய கலந்துரையாடலுடனும் அது மறுசீரமைக்கப்படவேண்டிய தேவையுடனும் தொடர்புற்றிருந்தன[80]. இருந்தபோதிலும், 2009 இன் பின்னர் ஐக்கிய நாடுகளினால்

---

[73]சிஹார் அனீஸ் மற்றும் ஆதிதி ஷா, "கடும்போக்கு இலங்கை பிக்குகள் பௌத்த சிங்கள அரசாங்கத்திற்காக அழைப்பு விடுக்கின்றன" ராய்ட்டர்ஸ், 7 யூலை 2019 https://www.reuters.com/article/us-sri-lanka-buddhist-idUSKCN1U2078

[74]"இலங்கை வன்முறை: தாக்குதல்களைத் தொடர்ந்து அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது," *பி.பி.சி நியூஸ்,* 6 மார்ச் 2018 https://www.bbc.com/news/world-asia-43300913

[75]"ரோஹிங்யாக்களை அழித்தல்", திரும்ப முடியாத நிலை", ராய்ட்டர்ஸ், மே 2017 https://www.reuters.com/investigates/special-report/myanmar-rohingya-return/

[76]ஜீ. ஆனந்தசங்கரி, "இலங்கையின் சட்டக்காப்புக் கலாசாரம் வன்முறைக்கு இட்டுச் செல்கின்றது", த ஸ்டார், *7* மார்ச் 2018 https://www.thestar.com/opinion/contributors/2018/03/07/sri-lankas-culture-of-impunity-leads-to-violence.html

[77]ஏ தாயுப் மற்றும் எம். பிஷர், "நாடுகள் தீப்பெட்டிகளாக இருக்கையில் பேஸ்புக் தீக்குச்சியாக இருக்கின்றது," த நியூயோர்க் ரைம்ஸ், 21 ஏப்ரில் 2018. https://www.nytimes.com/2018/04/21/world/asia/facebook-sri-lanka-riots.html

[78]"இலங்கை வன்முறை: தாக்குதல்களைத் தொடர்ந்து அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது," *பி.பி.சி நியூஸ்,* 6 மார்ச் 2018 https://www.bbc.com/news/world-asia-43300913

[79]ஜீ. ஆனந்தசங்கரி, "இலங்கையின் சட்டக்காப்புக் கலாசாரம் வன்முறைக்கு இட்டுச் செல்கின்றது", த ஸ்டார், *7* மார்ச் 2018, https://www.thestar.com/opinion/contributors/2018/03/07/sri-lankas-culture-of-impunity-leads-to-violence.html

[80]பீ. வின்டுவர், "சித்திரவதை தாராளமாகப் பயன்படுத்தப்படுவதுடன் இலங்கை மறுசீரமைப்புக்கள் "ஸ்தம்பிதமடைந்துவிட்டன" - ஐ.நா, த கார்டியன், 23 ஜூலை 2018. https://www.theguardian.com/world/2018/jul/23/sri-lankan-reform-has-ground-to-a-halt-with-torture-usedfreely-un

மஹிந்த ராஜபக்ச மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றிய குறிப்புக்களைத் தவிர நிருபர்களினால் மனித உரிமைகள் கோணம் அரிதாகவே பயன்படுத்தப்பட்டிருந்தது. நல்லிணக்கத்திற்கான வாக்குறுதிகள் தொடர்பில் சிறிசேன மேற்கொண்ட முன்னேற்றங்களை இக்கலவரங்கள் சீர்குலைப்பதற்கான சாத்தியம் பற்றியும் சிலர் கேள்வி எழுப்பினர்[81].

உள்நாட்டு அரசியலில் நேரடியாகக் கவனம் செலுத்திய அறிக்கைகள் வன்முறையினைத் தடுப்பதிலும் உள்ளார்ந்த ரீதியில் அதனை நிகழ்த்தியதிலும் அரசாங்கத்தின் வகிபாத்திரத்தில் இலக்குவைத்தன. அரசாங்கம் அதன் பாதுகாப்பு இயந்திரத்தின் கூறுகளின் கட்டுப்பாட்டினை இழந்துவிட்டது என நிருபர்கள் தெரிவித்தனர். இருப்பினும் அரசாங்கம் சம்பந்தப்பட்டுள்ளது என்ற எந்தக் குற்றச்சாட்டினையும் சகல அரசாங்க அதிகாரிகளும் மறுத்தனர். எவ்வாறாயினும், ‘‘பலம்வாய்ந்த முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்சவின் ஆதரவுடன்’’ பொலிஸாரும் அரசியல்வாதிகளும் வன்முறையில் ஈடுபட்டனர் என்பதற்கான சான்றுகளைக் காட்டி ரொய்டர் ஒரு முக்கியமான செய்தியினை மார்ச் மாதம் பிற்பகுதியில் வெளியிட்டிருந்தது[82]. இந்த வன்முறை முன்பு திட்டமிடப்பட்ட ஒன்று என்றும் சமூக ஊடகத் தளங்களில் பௌத்த தீவிரவாதிகளின் இயல்பான வெறுப்புப் பேச்சு மற்றும் உணர்வுத் தூண்டல்களினால் ஏற்பட்ட ஒன்றல்ல என்றும் இக்கட்டுரை வாதிட்டது. அரசாங்கம் அதன் பாதுகாப்பு இயந்திரத்தின் கூறுகளின் கட்டுப்பாட்டினை, குறிப்பாக விசேட அதிரடிப் படை மீதான கட்டுப்பாட்டினை இழந்துவிட்டது என்ற கூற்றினை இக்கட்டுரை வலியுறுத்தியிருந்தது. எவ்வாறாயினும், இக்கட்டுரையினைத் தவிர, தாக்குதல்களுக்கான அரசியல் நோக்கங்கள் பற்றியும் முஸ்லிம்களுக்கெதிரான பரப்புரை இலங்கையில் ஏன் அரசியல் ரீதியாகச் சாதகமான நிலையினை அடைவதற்கு காரணமாக இருக்கின்றது என்றும் அரிதான குறிப்புக்களே காணப்பட்டன அல்லது குறிப்புக்கள் காணப்படவில்லை.

தொகுத்து நோக்குகையில், கண்டியில் வன்முறை நடைபெற்றபோது சர்வதேச அக்கறை மிகக் குறுகிய காலத்திற்கு மாத்திரமே நிலைத்திருந்தது என ஊடக அறிக்கைகளின் பகுப்பாய்வுகள் வெளிக்கூறுகின்றன. வெளியிடப்பட்ட செய்திகளில் மிகப் பொதுவானதாக வன்முறை அதன் தன்மையில் தனித்துவமான வகையில் முஸ்லிம்களுக்கு எதிரானது என்பதுவும் இந்த வன்முறைக்கான காரணம் சமுதாயங்களுக்கிடையில் அதிகரித்துவரும் பதற்றமும் கடும்போக்கு பௌத்தக் குழுக்கள் அவர்களின் செய்திகளை ஒன்லைனில் பரப்புவது என்பதுவும் உள்ளடக்கப்பட்டிருந்தன. செய்திகளில் உள்நாட்டு அரசியல், இலங்கையில் பௌத்த - முஸ்லிம் பகைமையின் வரலாறு மற்றும் வன்முறைக்கான தனித்துவமான காரணங்கள் ஆகியவை பொதுவான முறையில் எடுத்தாளப்பட்டிருந்தன என்பதுடன் கருத்துரைஞர்கள் பொதுவான அறிக்கையிடல் என்பதற்கு அப்பால் அரிதாகவே நகர்ந்திருந்தனர்.

**சர்வதேச சமுதாய பதிற்செயற்பாடு[83]**

கலகம் பற்றிய சர்வதேச சமுதாயத்தின் பதிற்செயற்பாடு, சில விதிவிலக்குகளுடன், ராஜதந்திர சமுதாயத்தின் சுருக்கமான அறிக்கைகளுக்கும் ஐக்கிய நாடுகளின் மிதமான கண்டனத்திற்கும் பொதுவாக வரையறுக்கப்பட்டிருந்தன. ஐக்கிய நாடுகள் சபை வன்முறையினை உடனடியாகக் கண்டித்திருந்தது. இலங்கைத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மென் மார்ச் 9 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தார். கண்டிக்கு விஜயம் செய்த பெல்ட்மென் உள்ளூர்ச் சமுதாயத் தவைர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ‘‘சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்தமையினையும் முஸ்லிம்களுக்கும் அவர்களின் சொத்துக்களுக்கும் எதிராகத் தாக்குதல் நடத்தப்பட்டமையினையும் பெல்ட்மென் கண்டித்தார்.’’[84] பெல்ட்மெனின் விஜயத்தின்போதான பேச்சுக்களில் அதிகமானவை குற்றம் நிகழ்த்தியவர்களைச் சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கான

---

[81]ஏ. அஸ்மா, ‘‘விளக்கப்படும் இலங்கையின் இன வன்முறைஇ’’ ரிஆர்ரி வேர்ல்ட், 16 மார்ச் 2018 https://www.trtworld.com/asia/sri-lanka-s-communal-violence-explained-15970

[82]டொம் அலாட் மற்றும் சிஹார் அனீஸ், ‘‘இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான கலகத்தில் இணைந்து கொண்டதாகப் பொலிசார் மற்றும் அரசியல்வாதிகள் மீது குற்றச்சாட்டு,’’ ராய்ட்டர்ஸ், 25 மார்ச் 2018 https://uk.reuters.com/article/uk-sri-lanka-clashes-insight/police-politicians-accused-of-joining-srilankas-anti-muslim-riots-idUKKBN1H102O

[83]செனல் ஹேவகே, கெசன்ட்ரா பிண்டோ மற்றும பாரன வைத்யதிலக,‘‘இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான கலகத்திற்கான சர்வதேச எதிர்வினைகள்’’ 21 மார்ச் 2018, https://lki.lk/blog/international-reactions-to-anti-muslim-riots/

[84]‘‘இலங்கை: முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையினை ஐக்கிய நாடுகள் கண்டிக்கின்றது’’, அல் - ஜஸீரா, 11 மார்ச் 2018 https://www.aljazeera.com/news/2018/3/11/sri-lanka-un-condemns-anti-muslim-violence

அரசாங்கத்தின் கடப்பாட்டினையே கேள்விக்குட்படுத்தின. மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஜெய்ட் ராட் அல் ஹுசெய்ன் நிகழ்வுகள் பற்றிக் கருத்துத் தெரிவித்ததுடன தான் "இடைமாற்ற நீதி நிகழ்ச்சிநிரலின் அமுல்படுத்தலைத் துரிதப்படுத்துமாறு அரசாங்கத்திடம் மீண்டும் மீண்டும் வேண்டிக்கொண்டதாகவும் வகைப்பொறுப்பு மற்றும் இடைமாற்ற நீதி ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்படுவது பாதிக்கப்பட்டுள்ளவர்களைப் பொறுத்த அளவில் அவசரமானது" என்றும் அவர் குறிப்பிட்டார். உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளின் நிலை பற்றிய மிகப் பெரிய வருடாந்த அறிக்கையின் பகுதியாக இந்த அறிக்கை வாசிக்கப்பட்டதுடன் வன்முறை நிகழ்ந்த நேரத்திலேயே இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமையும் நிகழ்ந்தது[85]. சிவில் சமூகம் அரசாங்கத்தினை இலக்குவைத்தது - நாட்டின் சிறுபான்மையினருக்கெதிரான வன்முறையினைச் சதா நிலைக்கவைப்பவர்கள் அனுபவிக்கும் சட்டக்காப்புக்கு முடிவுகட்டுவதற்கு இலங்கை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்திருந்தது. மனித உரிமைகளை மேலும் துஷ்பிரயோகம் செய்வதற்கு அவசர கால நிலை ஒரு சாட்டாக அமைந்துவிடக்கூடாது எனச் சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பணிப்பாளர் மார்ச் 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட கட்டுரையில் எச்சரித்திருந்தார்.[86]

அறிக்கைகளை வெளியிடுவது, பரந்தளவில் கருதப்படும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்திற்காக வாதாடுவது என வெளிநாட்டு அமைச்சுக்களின் பதிற்செயற்பாடுகள் அவற்றின் விமர்சனங்களில் பொதுவானவையாக இருந்தன. இந்த விமர்சனங்கள் பொதுவாக இலங்கை அரசாங்கத்தினைக் குறிப்பதாக இருந்தன. ஐரோப்பியச் சங்கத்தின் தூதுவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் அரசியல் தலைவர்களினாலும் சமுதாயத் தலைவர்களினாலும் வன்முறை ஏகமனதாகக் கண்டிக்கப்படவேண்டும் என்பதற்கான தமது விருப்பத்தினைத் தெரிவித்திருந்தனர். "அவசர கால நிலையின் கீழ் எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் விகிதாசாரமானதாக இருக்கவேண்டும் என்றும் அவை அரசியலமைப்பு ரீதியான உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதிக்கவேண்டும்" என்றும் தமது விருப்பத்தினை வெளிப்படுத்தியிருந்தனர்[87]. மனித உரிமைகளும் அடிப்படை மனித சுதந்திரங்களும் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த உறுதிப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் எடுக்கவேண்டிய துரித நடவடிக்கைகளை அமெரிக்கத் தூதரகம் வலியுறுத்தியது[88]. கனேடிய வெளிவிவகார அமைச்சரான கிறிஸ்டியா பிரீலேன்ட் வெளியிட்ட அறிக்கையில், முஸ்லிம்கள் இலக்குவைக்கப்பட்ட சமுதாயங்களுக்கிடையிலான வன்முறை பற்றிய கனேடிய அரசாங்கத்தின் கரிசணைகளை வெளிப்படுத்தியிருந்தார். தவறான தகவல்களைப் பரப்பும் பிரச்சாரம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என வேண்டிய அமைச்சர் அனைவரினதும் மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பதற்கும் வன்முறைக்குப் பொறுப்பானவர்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கும் அனைத்துச் சிறுபான்மையினரதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு அவர் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.[89] சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரான ஜெங் சுவாங் விடயம் "இலங்கையின் உள்நாட்டு விவகாரம்" எனக் கூறியிருந்தார்[90].

இஸ்லாமிய ஒத்துழைப்பிற்கான அமைப்பு 2018 மார்ச் 7 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் முஸ்லிம்களுக்கெதிராக 2018 பெப்ரவரி 28 முதல் மார்ச் 04 வரை தீவிரவாதக் கும்பலால் கட்டவிழ்த்துவிடப்பட்ட மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் பற்றி அதன் தீவிர கரிசணைகளை வெளியிட்டிருந்தது[91]. அமைப்பின் பொதுச் செயலாளர் கலாநிதி யூசுப் அல் ஒதய்மீன் தீவிரவாதக் குழுக்களினால் வெறுப்பும் வன்முறையும் பரப்புரை செய்யப்படுவதை நிறுத்தி இலங்கையிலுள்ள முஸ்லிம்களின் சொத்துக்களையும் உயிர்களையும் பாதுகாப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

---

[85] UNOHCHR, மனித உரிமைகள் கரிசணை பற்றிய உயர் ஸ்தானிகரின் உலகளாவிய இற்றைப்படுத்தல், 2018 https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=22772

[86] சர்வதேச மன்னிப்புச் சபை, இலங்கை: அவசர கால நிலை மனித உரிமைகளை மதிக்கவேண்டும், 2018 https://www.amnesty.org/en/latest/news/2018/03/sri-lanka-soe-must-respect-human-rights/

[87] EEAS, "வெறுப்புக் குற்றச்செயல்களைப் புரிந்தவர்கள் துரிதமாகச் சட்டத்தின் முன் கொண்டுவரப்படவேண்டும் என் ஐரோப்பியச் சங்கத்தின் தூதுவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்", 2018 https://eeas.europa.eu/delegations/sri-lanka/40968/node/40968_tk

[88] இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம், அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கை, 2018 https://lk.usembassy.gov/statement-u-s-embassy/

[89] "இலங்கை வன்முறை பற்றிக் கனடா ஆழமான கரிசணை கொண்டுள்ளது", வெளிநாட்டு விவகாரங்கள் கனடா, 7 மார்ச் 2018 https://www.canada.ca/en/global-affairs/news/2018/03/canada-deeply-concerned-by-violence-in-sri-lanka.html

[90] http://lk.china-embassy.org/eng/xwdt/t1540295.htm

[91] "இலங்கையிலுள்ள முஸ்லிம்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பு (OIC) வேண்டுகோள் விடுத்தது" இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பு, மார்ச் 2018 https://www.oic-oci.org/topic/?t_id=17455&t_ref=9254&lan=en

கலாநிதி யூசுப் சமுதாயங்களுக்கு மத்தியில் அமைதியும் நல்லுறவும் நிலவவேண்டும் என வேண்டுகாள் விடுத்ததுடன் சட்டத்தின் ஆட்சியினை அமுல்படுத்துமாறும் சம்பவங்களைப் பற்றி விசாரணை நடத்திக் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்குமாறும் அதிகாரிகளை வேண்டிக்கொண்டார்[92].

**பின்விரிவுக் குறிப்புரைகளும் பரிந்துரைகளும்**

2018 இல் கண்டி மாவட்டத்தில் நிகழ்ந்த வன்முறைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள், உள்நாட்டு முஸ்லிம் ஆயுதக் குழுவினால் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள், பல வாரங்களின் பின்னர் வயம்ப மாகாணத்தில் முஸ்லிம் கிராமங்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், மிக அண்மையில் கொவிட் 19 தொற்றின்போதும் தேர்தல்களின் போதும் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகியவை பல பாடங்களை வழங்குகின்றன. இலங்கை மக்களின் மனதில் காணப்படும் சிறுபான்மையினருக்கு எதிரான கொள்கையின், குறிப்பாக முஸ்லிம்களை இலக்குவைத்த கொள்கையின் முறைமையாக்கத்தில் 2018 கண்டி அடிப்படையில் ஒரு முக்கிய புள்ளியாகத் தொடர்ந்திருக்கின்றது. சிறுபான்மையினருக்கு எதிரான இந்த உணர்வுகள் 2012 ஆம் ஆண்டில் இருந்து உருவாக்கப்பட்டு ஒன்றுதிரட்டப்பட்டுத் தொடர்ந்து வந்த வருடங்களில் பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. 2012 இல் இருந்து முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளின் ஒழுங்கமைக்கப்பட்ட பெரும் போக்காக்கத்திற்கு இற்றைவரையில் அரசின் அற்பமான எதிர்ப்பே காட்டப்பட்டிருக்கின்றது. யுத்தம் முடிவடைந்ததும் உடனடியாகவே, சிங்கள மேலாதிக்கத்தின் யுத்தத்திற்குப் பின்னரான மகிமைப்படுத்தலின் ஓரங்கமாக முஸ்லிம்களுக்கு எதிரான இயக்கம் மறுமலர்ச்சியடைய அரசு அனுமதியளித்தது. அரசு அதன் சொந்த வாரிசு இலட்சியங்களைச் சட்டபூர்வமானதாக்கி யதார்த்தமாக்குவதற்காக யுத்தத்திற்குப் பின்னரான வெற்றி பற்றிய ஆரவாரப் பேச்சுக்களையும் சிறுபான்மையிரை ஓரங்கட்டுவதையும் பயன்படுத்தியது. 2015 ஆம் ஆண்டில் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டமை, கண்டியில் நடைபெற்ற வன்முறையினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் இழந்த நிம்மதி உணர்வினை அவர்களுக்கு மீண்டும் வழங்கியது. புதிய நல்லாட்சி அரசாங்கம் வன்முறைக்கு உடந்தையாக இருந்தது போல் அல்லது குறைந்தது வன்முறை நடப்பதைத் தடுப்பதற்கு ஆற்றலற்று போல் அல்லது ஆர்வமற்றது போல் காணப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தின் போது எதிர்க்கட்சி அதன் தளத்தின் ஓரங்கமாக இனவாதப் பகைமையினைத் தொடர்ந்து பயன்படுத்தியது. பன்மைவாத மொழியினைப் பயன்படுத்தி யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்கச் செயன்முறையில் அரசாங்கம் ஈடுபட்டிருந்தாலும் எதிர்க்கட்சியினரின் இவ்வாறான பரப்புரைகளை ஓர் அச்சுறுத்தலாக அடையாளம் காண அது ஆற்றலற்று இருந்தது அல்லது அதனைச் செயற்திறனுடன் நிறுத்துவதற்கும் ஆற்றலற்று இருந்தது. எதிர்க்கட்சியினரின் நிலைப்பாட்டினை அரசாங்கம் வேறு எதையும் விட ஓர் அரசியல் அச்சுறுத்தலாகவே கருத்தில் கொண்டாதாகத் தென்பட்டதுடன் அதற்கு மாற்றீடான ஒரு நிலைப்பாட்டினை வழங்க எதையும் பெரிதாகச் செய்யவில்லை (ஹனீபா 2018). இன்று சிங்களப் பேரினவாத உரித்துக்கள் ஆழமாகப் பதிந்துள்ளதுடன் சிறுபான்மையினருக்கு எதிரான தர்க்கங்களும் முஸ்லிம்களுக்கெதிரான வீரியமிக்க உணர்வுகளும் நாளாந்த மொழியில் இயல்பானவையாக ஆக்கப்பட்டுள்ளன. 2019 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் உருவான அரசியல் மற்றும் சமூக முறைமை பெரும்பான்மைக்கும் சிறுபான்மைக்கும் இடையிலான அதிகார வரிசை வித்தியாசத்தின் விரும்பத்தகாத உணர்வுகளைச் சாதகமாகப் பயன்படுத்தியது. நடப்புத் தேர்தல் பிரச்சாரங்களில் எந்த எதிர்க்கட்சிக் குழுக்களினாலும் இதற்குச் சவால் விடுக்கப்படவில்லை என்பதுவும் ஆதிக்கமிக்க சொல்லாடலிலுள்ள வித்தியாசத்தினையே இது காட்டுகின்றது என்பதுவும் கரிசனைக்குரிய விடயங்களாகும். தற்போதைய ஜனாதிபதியின் பாதுகாப்புமயமாக்கம் மற்றும் இராணுவமயமாக்கம் ஆகியவற்றினைக் கொண்ட தேர்தல் தளம் அச்சத்தினையும் பாதுகாப்பற்ற உணர்வினையும் உருவாக்குவதிலேயே அதன் வளர்ச்சியினைக் கொண்டிருந்ததுடன் கட்டற்ற பௌத்த மேலாதிக்கத்திலும் அதன் வளர்ச்சியினைக் கொண்டிருந்தது.

யுத்தத்திற்குப் பின்னரான உடனடியான சூழமைவில் வெறுப்புப் பரப்புரைக்கு எதிரான சிவில் சமூக அணிதிரட்டலும் மந்தமானதாகவே இருந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெறுப்புப் பேச்சுக் கண்காணிப்பு இதில் காணப்பட்ட சொற்பமான விதிவிலக்குகளில் ஒன்றாக இருந்தது. எவ்வாறாயினும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னர் Watch Dog, Hate Speech Monitor உள்ளிட்ட பல குழுக்கள் உருவாகின. இந்தக் கண்காணிப்புக் குழுக்களும் அமைப்புக்களும் சமூக ஊடகத் தளங்களில் இருந்து வெறுப்புப் பேச்சுக்களை அகற்றுவதில் வெற்றி கண்டன. எவ்வாறாயினும் இலத்திரனியல் ஊடகங்களினால் வெளிப்படையான இனவாத உள்ளடக்கங்கள் கட்டுப்பாடுகள் எதுவுமின்றித் தொடர்ந்தும் பரப்பப்பட்டன. முஸ்லிம்களுக்கு எதிரான பரப்புரைகளையும் கருத்துக்களையும் சமூகம் உடனடியாக ஏற்றுக்கொள்வதும் அவ்வாறான பரப்புரைகளை அரசியலில் பயன்படுத்துவதற்கான தற்போதைய அரசாங்கத்தின் கடப்பாடும் ஊடகத்தின் எவ்விதமான கொள்கையுமற்ற செயற்பாடுகளும் அதற்கான ஆச்சரியப்படுத்தாத அனுமதியும் கருத்து வேறுபாட்டிற்கு அற்பமான அவகாசத்தினையே வழங்குகின்றன.

[92]Ibid

கண்டியில் வன்முறை முடிவடைந்த உடனேயே குற்றம் இழைத்தன் பேரில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் ICCPR சட்டத்தின் கீழ் பிணையின்றி மறியலில் வைக்கப்பட்டனர். எவ்வாறாயினும் வழக்குகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படாமல் கைதுசெய்யப்பட்ட பலர் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்று கருத்து வேறுபாட்டினை அகற்றுவதற்கே ICCPR சட்டம் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. வெறுப்புரைகளைப் பரப்புவதில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகவும் சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறையினைத் தூண்டுபவர்களுக்கு எதிராகவும் இச்சட்டம் பயன்படுத்தப்படுவது அனேகமாக இரண்டாம் பட்சமாகவே காணப்படுகின்றது. அண்மையில் முஸ்லிம் பத்திரிகையாளரும் எழுத்தாளருமான ரம்சி ராசிக் முஸ்லிம்களுக்கு எதிராக நிலவுகின்ற இனவாதத்திற்கு எதிராக சித்தாந்த ரீதியாக ஜிஹாத் செய்யவேண்டும் என அழைப்பு விடுத்தமைக்காக ICCPR சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் கைதுசெய்யப்பட்டு குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டது. இந்த அறிக்கை பூர்த்திசெய்யப்படும் தறுவாயிலும் அவர் தொடர்ந்தும் சிறையில் இருந்தார்.

யுத்தம் முடிவடைந்தது முதல் உருவாக்கப்பட்டு வரும் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகள் வலியுறுத்தப்படும் விதத்தில் ஒரு பாங்கு காணப்படுகின்றது. இது குறிப்பாக தேர்தல் காலத்திலும் ஏப்ரில் சிங்கள மற்றும் தமிழ் புதுவருடத்திற்காகப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் காலத்திலும் நிலவுகின்றது. வெறுப்புப் பரப்புரைகளை முனைப்புடன் எதிர்க்கின்ற ஒரு பதிற்செயற்பாட்டுச் செயன்முறையினைச் செயற்பாட்டாளர் குழுக்கள் ஏற்பாடு செய்வது அவசியமானதாகும். முஸ்லிம் மக்களைப் பூதாகரமாகவும் மனிதத்தன்மை அற்றவர்களாகவும் சித்தரிக்கும் நிலை, கொவிட் 19 தொற்றின்போது பரந்த அளவிலான சர்வதேச முன்னுதாரணங்களையும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களையும் பொருட்படுத்தாது கொவிடினால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை அடக்குவதற்கு மறுப்புத் தெரிவிப்பது நியாயமான ஒரு செயல் எனக் கருதும் அளவுக்குத் தீவிரமடைந்துள்ளது. முஸ்லிம்களின் கரிசணைகளைத் தீர்த்துவைப்பதற்கு எவ்விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனும் நிலையில் அவற்றிற்கு இடங்கொடுக்கப்படுவது பற்றிக் கூறத் தேவையில்லை. மேலும் அவ்வாறு முஸ்லிம்களின் கரிசணைகளுக்கு இடங்கொடுப்பது அவசியமற்றது என அரசியல்வாதிகளாலும் மருத்துவ - அறிவியல் சமுதாயத்தினாலும் கருதப்பட்டது[93]. இவ்வாறு முஸ்லிம்கள் பற்றிய அசமந்தக் கருத்துக்களும் நயவஞ்சகமும் நிலவும் சூழலில் இவ்வாறான ஆபத்தான கருத்துக்கள் - குறிப்பாக சமூக ஊடகங்களில் அவதானிக்கப்பட்டவை – கிரமமாக இடம்பெறுகையில் ஒன்றுசேர்த்துப் பயன்படுத்துவதற்கென பதிற்செயற்பாட்டுப் பொறிமுறை அமுலில் இருக்கவேண்டுமென்பது அவசியமானதாகும்.

எதிர்காலத்திற்கு நல்ல சகுனமாக அமையாத சமுதாயங்களுக்கிடையிலான ஆபத்தான பிளவுகளை உருவாக்கும் வன்முறையின் காரணமாகச் சமுதாயங்கள் பிரிந்து போவதை அவதானிப்பதற்காக திகனவுக்கும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களுக்கும் நாம் சென்றபோதே இப்பரிந்துரைகள் மனதில் பதிந்தன. எனவே இப்பரிந்துரைகள் இலங்கையில் பல துறைகளினூடும் தாக்கங்களை ஏற்படுத்தும் ஜனநாயக நெருக்கடி பற்றியே பேசுகின்றன. சிறுபான்மையினரை ஓரங்கட்டும் பரப்புரைகளை விதைத்தல் கிரமமாக இடம்பெறும் வன்முறைகளின் மூலம் வலுப்படுத்தப்படுகின்றது. இவற்றினை இயலுமாக்கும் சூழல் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் மூலம் மேலும் தீவிரமாக்கப்பட்டுள்ளது. எனவே இப்பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்ந்தும் அவசியமான ஒன்றாகவே இருக்கின்றது.

### சித்தாந்த ரீதியான மற்றும் தர்க்கரீதியான காரணங்களும் விளைவுகளும்

1. ICCPR சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுப் பிணையின்றி மறியலில் வைக்கப்படும் அளவுக்குத் தங்களின் உபகாரகர்கள் எவ்விதமான தவறினையும் செய்யவில்லை என்றே அதிகமான உள்ளூர் பிக்குகள் கருதினர். கைதுசெய்யப்பட்டுப் பிணையின்றி மறியலில் வைக்கப்பட ‘‘இவ்வாறான செயற்பாடுகள்’’ காரணமாகலாம் என மக்களுக்கு அறிவிக்கப்படவேண்டும் என, அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு, அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இலங்கைக் கிராமங்களில் சமுதாயத் தராதரங்களை மீறுபவர்கள் எனக் கருதப்படும் பலமற்ற மக்கள் மீது சமுதாயத்திலுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் மேற்கொள்ளும் வன்முறை ஒரு பொதுவான நடைமுறையாகும். முஸ்லிம்களின் அதிகரித்துவரும் அச்சுறுத்தல்களை இவ்வாறான அதே பொறிமுறைகளின் மூலம் கையாளுவது சாதாரணமான ஒன்று எனவும் அது வழமைக்கு மாறான ஒன்றல்ல எனவும் ஆனால் நிச்சயமாக வருந்தத்தக்கது எனவும் பிக்குகள் புலனுணர்ந்துள்ளது போலவே தென்படுகின்றது.

[93] அடக்கம் செய்வதற்கான சாத்தியத்தினை மதிப்பிடுவதற்கு ஒரு குழாமினை நியமிக்குமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்ட அறிக்கை கருத்தில் கொள்ளப்பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் (மார்ச் 2018) ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் இவ்வாறான நடத்தையினை குற்றவியல் நடவடிக்கைகள் எனக் குறிப்பிட்டதுடன் இன வன்முறையினைத் தூண்டி அதில் பங்குபற்றுபவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். எவ்வாறாயினும், உள்ளூர் மட்டத்தில் இந்த நடவடிக்கைகள் பாரிய தவறுகளல்ல எனப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளதுடன் அரசின் நடவடிக்கைகள் நிகழ்த்திய குற்றத்தினை விட அதீதமானது என்றும் புலனுணரப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கு உள்ளூர் முஸ்லிம்கள் ஒத்துழைக்காமை சிங்கள இளைஞர்களுக்கு முஸ்லிம்கள் மேலும் துயரத்தினை ஏற்படுத்துவதாக நோக்கப்பட்டுள்ளதுடன் இந்தப் பிரச்சினைக்கு ஒரு இணக்கமான தீர்வினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை வேண்டுமேன்றே தட்டிக்கழிக்கும் ஒன்றாகவும் நோக்கப்பட்டுள்ளது.

*எவ்விதமான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளோ அல்லது சமாதானத்தினை உருவாக்கச் செயற்பாடுகளோ, சமுதாய அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படும் இவ்வாறான வன்முறைமிக்க தலையீடுகளின் சட்டவிரோதத்தன்மை தொடர்பாக முதலில் கருத்தொருமிப்பினை உருவாக்கவேண்டும். இவ்வடிவிலான தலையீடுகள் தொடர்ந்தும் சட்டபூர்வமானவையாக இருந்தால், வன்முறைக்காக உள்ளூர் செயற்படுனர்களைத் திரட்ட தேசிய மட்டத்தில் உள்ள சக்திகள் பயன்படுத்தக்கூடிய ஒரு பொறிமுறையாக இது தொடர்ந்து செயற்படும்.*

2. வன்முறையினையும் துன்புறுத்தலையும் நியாயப்படுத்தும் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகள் மற்றும் தொடர்ந்தும் அச்சுறுத்தலின் கீழ் இருப்பதாக உணரும் முஸ்லிம்களின் உணர்வுகள் இப்போது உள்ளூர் மட்டத்தில் நன்கு வேரூன்றிவிட்டன. நிலவும் இந்த நிலை சாதாரணமானதாக ஆக்கப்படுவதற்கு எதிராகச் சிவில் சமூக இடையீடுகள் சவால் விடுக்கவேண்டும் என்பதுடன் அவை ஒரு குறிப்பிட்ட வரலாறு மற்றும் அரசியலில் இருப்பது கண்டுபிடிக்கப்பட வேண்டும் என வலியுறுத்த வேண்டும். குறிப்பாக, பல்வேறு அரசியல் ஆதாயங்களுக்காக நிலவுகின்ற துருவமயமாதலைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் ஆர்வமாக இருக்கின்ற இந்தச் சூழமைவில், *இத்துருவமயமாக்கலை மறுதலையாக்குவதற்கான ஓர் எதிர்ச்சொல்லாடலை உருவாக்கச் சிவில் சமூகம் முயற்சிப்பது அவசியமானதாகும்.*

3. இலங்கையில் முஸ்லிம்கள், பொது மக்களின் மனதில் ஓர் இனவாதமான சமுதாயமாக பார்க்கப்படுவது துரிதமடைந்து வருகின்றது. சகல நடவடிக்கைகளும் முஸ்லிம்கள் எனும் அவர்களின் அடையாளத்தில் இருந்து உருவாகுவதாகவே புரிந்துகொள்ளப்படுகின்றது. குறிப்பாக உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம்கள் பற்றியும் அவர்களுக்கேயுரித்தான தனித்துவங்கள் எனப் புரிந்துகொள்ளப்பட்ட நடைமுறைகள் பற்றியும் பாரிய ஆர்வம் உருவானது. இவ்வாறான இனவாதமாக்கலை விமர்சிக்கும் ஒரு நிலைபாட்டின் மூலமே சிவில் சமூக இடையீடுகள் புரிந்துகொள்ளப்படவேண்டும். ஒரு தனித்த ''முஸ்லிம் சமுதாயம்'' எனும் எண்ணக்கரு சிலவேளைகளில் முஸ்லிம்களால் தாமே பரப்பப்படும் ஒரு புனைவு என்பதைக் கட்டாயம் கவனத்தில் கொள்ளவேண்டும். முஸ்லிம்களின் அனைத்து நடவடிக்கைகளும் அவர்கள் முஸ்லிமாக இருக்கும் தன்மையில் இருந்து மட்டுமே வெளிப்படுகின்றது என்ற எண்ணக்கருவும் கேள்விக்குட்படுத்தப்படவேண்டும். முஸ்லிம்களையும் உள்ளடக்கும் இலங்கையின் 2 மில்லியன் சனத்தொகையின் மத்தியில் மிகக் குறைவான ஒத்த தன்மையே காணப்படுகின்றது. வேறு எந்த அடையாளத்திற்கும் இருப்பதைப் போன்று, ஒத்த தன்மையினை உறுதிப்படுத்துவது உண்மையான வித்தியாசங்களைப் பொய்யாக்குகின்றது. இலங்கை முஸ்லிம்களின் சமூக உருவாக்கத்தின் பகுப்பாய்வானது, வகுப்பு, பால்நிலை மற்றும் பிராந்தியம் ஆகியவற்றினூடான வேறாக்கலைத் தேவைப்படுத்துகின்றது. அதேபோன்று இலங்கையின் சகல அரசியல் கட்சிகளினூடான அரசியல் இணைவு மற்றும் (தேவையெனின்) வெவ்வேறு மறுசீரமைப்பு அமைப்புக்களில் உறுப்பாண்மை ஆகியவற்றின் அடிப்படையிலான வேறாக்கலையும் தேவைப்படுத்துகின்றது. தம்மை தரீக்காக்களின் உறுப்பினர்கள் என (தம்மைப் ''பாரம்பரிய'' முஸ்லிம்கள் எனக் கூறும் சூபி முஸ்லிம்கள்) அடையாளப்படுத்துபவர்களுக்கும் தம்மை மறுசீராக்கல் அமைப்புக்களுடன் இணைத்துக்கொண்டவர்களுக்கும் இடையிலான வித்தியாசம் தற்போது முக்கியமானதாக மாறிவருகின்றது.

*''ஒரே வகையான தன்மைக்கான'' விசுவாசம் மற்றும் பரஸ்பர உதவி தொடர்பாக முஸ்லிம்கள் தாமே முன்வைக்கும் கூற்றுக்களைப் பொருட்படுத்தாது இந்த வித்தியாசங்களைப் பகுப்பாய்வுசெய்து கவனத்தில் கொள்ளவேண்டும். அவ்வாறான பகுப்பாய்வினால் பதிற்செயற்பாடு தெரியப்படுத்தப்படவேண்டும்.*

4. 2018 ஆம் ஆண்டில் திகனவிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் நடைபெற்ற சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தடைசெய்யப்பட்ட வன்முறையானது அடிப்படையில் முறைமைவாய்ந்த பாகுபாட்டினதும் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மற்றும் கோட்பாடுகளினதும் சீர்குலைவினதும் விளைவாகும். இது பதிலாக, தேசிய பாதுகாப்பு எனும்

குறுகிய கருத்தியல் மீதான அதீத கவனக்குவிப்பு மூலமாகவும் சிறுபான்மையினருக்கு எதிராகவும் பெரும்போக்குச் சாராத குழுவினருக் எதிராகவும் பேரினவாதப் பிரம்மையினைத் தூண்டுவதன் மூலமாகவும் வசதிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான ஜனநாயக விரோத எத்தனிப்புக்களுக்கான வழிவகைகள் இராணுவமயமாக்கலின் மூலமும் வித்தியாசத்திற்கு எதிரான அச்சத்தினைப் பொதுவாகவும், குறிப்பாக சிறுபான்மையினருக்கு எதிராகப் பரப்புவதன் மூலமும் அடையாளப்படுத்தப்படுகின்றன. இராணுவத்திடம் அடிப்படையில் இராணுவத்துடன் தொடர்புறாத வகிபாத்திரங்களும் செயற்பாடுகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இன நல்லிணக்கம், நோய்க் கட்டுப்பாடு, உள்நாட்டு நிர்வாகம் மற்றும் பொதுவான நலனோம்புகைள் ஆகியவையும் உள்ளடங்குகின்றன. இதனால் சிவில் சமூகத்தின் முறைப்படியான இடம் பறிக்கப்பட்டு மக்களுக்கு இடையிலான நம்பிக்கையினைக் கட்டியெழுப்பலும் பறிக்கப்பட்டுள்ளது. மத்தியஸ்தர் என்ற ரீதியில் தற்போதைய சூழமைவின் காரணமாக இராணுவம் மொழி ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் பக்கச்சார்புடையதாக இருக்கின்றது. மேலும் சமுதாயங்களுக்கு இடையில் ஜனநாயக ரீதியாகவும் இயற்கையாகவும் இணைக்கப்படவேண்டிய பிளவுகளை உருவாக்கியுள்ள பிரதான பிரச்சினைகளை மோசமாக்குவதற்கு இட்டுச் செல்லும் வகையில் பால்நிலை மயமாக்கப்பட்டுள்ளதுடன் இனத்துவமாக்கவும் பட்டுள்ளது. மேலும் இது சமயமயமாக்கவும் பட்டுள்ளது.

> *எனவே நீதிச் செயன்முறையுடான எந்தவொரு நீடுறுதியான நல்லிணக்கமும் தடையின்றிச் செல்வதற்கு இராணுவமயமாக்கமும் இராணுவத் தர்க்கமும் நடுநிலையாக்கப்படவேண்டும். மேலும் அது உருவாக்கியுள்ள பகட்டாரவாரப் பேச்சுக்கள் செயற்திறனுடன் எதிர்க்கப்படவேண்டும். அத்துடன் சமுதாயங்கள் மேம்படுத்தப்பட்ட மற்றும் பாதுகாப்பான ஜனநாயகத் தளத்துடனும் இயலுமாக்கும் சூழலுடனும் ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட அனுமதிக்கப்படவேண்டும். இதனையே இத்தருணத்தில் இராணுவமயமாக்கம் பிரசைகளுக்கு முனைப்பாக மறுத்து வருகின்றது.*

**அரசினதும் அரசாங்கத்தினதும் வகிபாத்திரமும் பதிற்செயற்பாடும்**

1. முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளைப் பரப்புவது அதற்கெதிரான இயக்கத்தின் மூலம் நிறுத்தப்படவேண்டும். குறிப்பாக முஸ்லிம்கள் பற்றிய ஆனால் பொதுவாகச் சிறுபான்மையினர் மற்றும் ஏனைய பாதிப்புறு நிலையிலுள்ள குழுக்கள் பற்றிய தேசிய பரப்புரையினை அரசியல் தலைமைத்துவம் உருவாக்குவதுடன் இது அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். உள்ளூர் மட்டக் கலந்துரையாடல்களில் விடயங்களை நன்கறிந்த சமுதாயப் புத்திஜீவிகள் தலையிடுவதுடன் உள்ளூர் மட்ட இடையீடுகளும் அவசியமானதாகும். *மெய்நிலைக்* குற்றச் செயலாக்கத்தினை ஒத்த முஸ்லிம்கள் பற்றிய இன்றைய மாறாக் கருத்துக்கள் எதிர்த்து வாதாடுவதைக் கடினமாக்கும் அளவுக்கு வலுவானவையாக இருக்கின்றன. *எனவே எதிர்வாதப் பிரச்சாரம் அரசாங்கத்தின் உபாயமார்க்கத்தின் அங்கமாக மாறுவது இன்றியமையாததாகும்.*

2. தனது கிராமத்திற்குள் வன்முறை பரவுவதைத் தடுக்க அம்பலவின் சங்கைக்குரிய உபாலி ஞானிஸ்சர தேரருக்கு இயலுமாக இருந்த அதேவேளை, முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை பரந்த அளவிலான வன்முறையாக மாறுவதைத் தடுப்பதற்காக எப்படியாவது மத்தியஸ்தம் செய்வதற்காகப் பள்ளிவாயல் குழுவும் பொலிஸாரும் உள்ளூராட்சி அரசியல்வாதிகளும் மேற்கொண்ட தலையீடுகள் வெற்றியளிக்கவில்லை. பொலிஸாரின் பதிற்செயற்பாடு தொடர்பாக உள்ளக விசாரணை நடைபெற்றது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதில் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை அரசு மேலும் விசரிக்கவேண்டும் என்பதுடன் இவ்வாறான வழக்குகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் முறைமையிலுள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

   > *ஏனைய அவசர நிலைச் சேவைகளின் பதிற்செயற்பாட்டினையும் அரசு விசாரிக்கவேண்டும். உதாரணமாக, அழைக்கப்பட்ட பின்னர் வந்த தீயணைப்புப் படை அதன் தீயணைக்கும் இயந்திரத்தில் எவ்வாறு நீரின்றி வர முடியும்? என்னென்ன விடயங்கள் கவனிக்காது விடப்பட்டன மற்றும் வன்முறை நடப்பதற்கு என்னென்ன இயலுமாக்கும் நிலைமைகள் கட்டின்றி அனுமதிக்கப்பட்டன என்பனவும் ஆராயப்படவேண்டும்.*

3. இறந்த குமாரசிங்கவின் கிராமத்தில் முஸ்லிம்களுக்கெதிராக முஸ்லிம்களுக்கெதிராக வன்முறை எதுவும் நடக்கவில்லை என்பதை சங்கைக்குரிய ஞானிஸ்சர தேரர் உறுதிப்படுத்தியிருந்தார். தனது நடவடிக்கைகளை சமூக பொருளாதார அடிப்படையில் செல்லுபடியாக்குவதற்கு அரசு தலையிடவேண்டிய தேவையினைத் தேரர் வெளிப்படுத்தியுள்ள காரணத்தினால் இது தீவிரமாகக் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். (தனக்கு உதவிய

இளைஞர்களுக்குத் தொழில்வாய்ப்பு வழங்கப்படுவதன் மூலமும் தனது கிராமத்திற்குத் தார் வீதி அமைப்பதன் மூலமும் தனது முன்னெடுப்புக்கள் அங்கீகரிக்கப்படவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்).

*பிக்குவின் கோரிக்கை அவரின் முன்னெடுப்பினை அங்கீகரிப்பதன் மூலம் மட்டும் நிறைவேற்றப்படாது இந்தச் சமுதாயங்கள் மற்றும் அதன் தலைமைத்துவம் முகங்கொடுக்கும் பல்வேறு சிரமங்களைப் புரிந்துகொள்வதன் மூலமும் உருவாக்கப்பட்டுள்ள இனச் சமயப் பகைமையினை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பது பற்றிய மாற்றுச் சிந்தனையினை அங்கீகரிப்பதன் மூலமும் நிறைவேற்றப்பட வேண்டும்.*

4. அளுத்கமை (2014) நட்டஈடு 2018 இல் வழங்கப்பட்டன. கண்டி வன்முறைக்கான நட்டஈடு மிகக் குறைவான தொகையுடையதாக இருந்ததுடன் அதில் சில இன்னும் செலுத்தப்படவேண்டியுள்ளது. அளுத்கமையில் சேதமாக்கப்பட்ட வீடுகளையும் வியாபாரத் தலங்களையும் நிர்மாணிக்க இராணுவம் கொண்டுவரப்பட்டது.[94] இது திகனவில் மேற்கொள்ளப்படவில்லை. சிவில் சமூக மதிப்பீடுகளின் படி சேதத் தொகை ஒரு பில்லியன் ரூபா எனக் கண்டறியப்பட்ட அதேவேளை, அரசின் மதிப்பீடு 28 மில்லியன் ரூபாவாக இருந்தது. எனவே முஸ்லிம் சமய அமைப்புக்களும் சிவில் சமூக அமைப்புக்களும் பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் அவற்றின் வியாபாரங்களை மீளத் தொடங்க உதவுவதற்காக நிதி திரட்டுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டன. சமுதாய வளங்கள் திரட்டப்படவேண்டி நேரிட்டமையும் அரசு அவசியமான உதவியினை வழங்காமையும் தமக்கு உதவி தாமேதான் என்கின்ற பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் உணர்வு வலுப்படக் காரணமாக அமைந்ததுடன் நிதியினைத் திரட்டக்கூடிய சமுதாய அதிகார ஆளுமைகளையும் நிறுவனங்களையும் மேலும் வலுப்படுத்தியது.

*அரசாங்க நட்டஈட்டுத் திட்டங்கள் துரிதமாக அமுல்படுத்தப்படவேண்டும். பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் அரசினால் தாம் கைவிடப்பட்டுள்ளதாக உணரக்கூடாது. மேலும் அரசிற்குப் புறம்பான நிறுவனங்கள் தேவையற்ற வகையில் வலுப்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கு அரசாங்க நிறுவனங்கள் பணிபுரிவது உறுதிப்படுத்தப்படவேண்டும்.*

5. பொலிஸாரின் எதிர்வினைகள் போதியதாக அமையவில்லை எனக் கருதப்பட்டதுடன் அவை நிலைமையினை மேலும் மோசமாக்கியதாகச் சிலர் கருதினர். ஊள்ளூர் வலையமைப்புக்கள் மற்றும் குற்றத்தினை நிகழ்த்திய உள்ளூர்க்காரர்களுடனான உள்ளூர்ப் பொலிஸ் கான்ஸ்டபிள்களின் விசுவாசம் மற்றும் குற்றத்தினை நிகழ்த்தியவர்களின் பௌத்த – முஸ்லிம் வேறுபாடு பற்றிய பரப்புரைகளுக்கான அவர்களின் கடப்பாடு ஆகியவையும் எமது நேர்காணல்களின் போது குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டன. பிரதேசத்தினைச் சேர்ந்த உள்ளூர்ப் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் அனேகமாக முழுவதும் சிங்கள பௌத்தர்களாக இருந்தமை தாக்குதலுக்கான பதிற்செயற்பாட்டில் ஒரு பிரச்சினையினைத் தோற்றுவித்ததாகவே தென்படுகின்றது.

*உள்ளூர்ப் பொலிஸ் படையில் அனைத்து உள்ளூர்ச் சமுதாயங்களையும் சேர்ந்தவர்களின் பாரிய பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்பதுடன் அவர்கள் தலையிடுவதற்கு வலுவூட்டப்பட்டிருக்கவேண்டுமேயன்றி வெறுமனே அடையாளமாக அல்லது பொறுப்புக்களாக இருக்கக்கூடாது.*

6. பொலிஸ் படையின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவர் சமுதாய வன்முறையினைக் கையாளப் பொலிஸார் தயாராக இருந்தனர் எனக் குறிப்பிட்ட அதேவேளை, பொலிஸாருக்குப் போதிய வளங்கள் இருக்கவில்லை என்றும் அவர்களுக்குப் போதிய பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் மற்றொருவர் குறிப்பிட்டார். சம்பவங்கள் அடிக்கடி நிகழும் இவ்வாறான சூழமைவில் இவ்வாறான நிகழ்வுகளுக்குப் பதிற்செயற்பாடாற்றும் வகையில் பொலிஸார் தயார் படுத்தப்படல் வேண்டும்.

*இனங்களுக்கிடையிலான வன்முறையினையும் சமய வன்முறையினையும் பாகுபாட்டினையும் கையாளுவதற்கு பொலிசாருக்கும் ஏனைய சட்ட அமுலாக்கல் பிரிவினருக்கும் விசேட பயிற்சி வழங்கப்படவேண்டும். மேலும் இவ்வாறான அதிகாரிகள் இவ்வாறான நெருக்கடி நிலைமைகளின் போது தெளிவான மற்றும் தடையற்ற ஆணைகளுடன் கடமையாற்ற நியமிக்கப்படவேண்டும். இதில் விழிப்புணர்வினை*

[94]இராணுவத்துடன் தொடர்புபடாத அரச விவகாரங்களில் இராணுவத்தின் அதிகரித்த பிரசன்னத்தினை நாம் கண்டிக்கின்ற அதேவேளை, மீள் நிர்மாணத்தின் செலவினை அரசு ஏற்றுக்கொண்டது என்பதைச் சுட்டிக்காட்ட நாம் அளுத்கம மீள் நிர்மாணத்தினைக் குறிப்பிட்டோம். இது திகனவில் நிறைவேற்றப்படவில்லை என்பதுடன் இதனை நாம் முக்கியமான விடயமாகக் கருதுகின்றோம்.

*ஏற்படுத்தல், மனப்பாங்கு மாற்றத்தினை உருவாக்கல், என்ன செய்யப்படவேண்டும் மற்றும் எவ்வாறு அது செய்யப்படவேண்டும் என்பன பற்றிய புரிதல் ஆகியவை உள்ளடங்கும். அவர்கள் களத்தில் சகல சமுதாயங்களுடனும் உறவினையும் நம்பிக்கையினையும் உருவாக்க வேண்டும். இது நீண்ட காலத்திற்கு நடைபெறும் தொடரான செயன்முறையாகும்.*

7. அரச நிறுவனங்கள் பற்றிய முஸ்லிம்களின் அவநம்பிக்கை மற்றும் அரச அதிகாரிகளுடனான அவர்களின் கடினமான ஈடுபாடு ஆகியவை அம்மக்களின் மொழியினைப் பேசாத அரச அதிகாரிகளின் பிரசன்னத்தினால் மேலும் மோசமாக்கப்படுகின்றன. இந்தச் சமனிலையின்மை குறிப்பாக அதிக எண்ணிக்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் தீர்க்கப்படவேண்டும்.

   *அரச அதிகாரிகளின் மத்தியில், குறிப்பாக நிர்வாக அதிகாரிகளின் மத்தியில் உயர் விகிதாசாரத்தில் சிறுபான்மைச் சமுதாயத்தினரின் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும்.*

**சிவில் சமூக வகிபாத்திரமும் பதிற்செயற்பாடும்**

1. கண்டியில் நடைபெற்ற வன்முறை போன்ற முன்கூட்டியே திட்டமிடப்பட்ட இன வன்முறைகளுக்கான நீண்ட வரலாற்றினை இலங்கை கொண்டுள்ளது. ஒன்று திரண்ட அவநம்பிக்கை மற்றும் அச்சத்தின் இயற்கையான பிரவாக வெளிப்பாட்டின் காரணத்தினால் மட்டும் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் பாரிய பிரதேசங்களுக்குப் பரவின எனும் கருத்து சவாலுக்குட்படுத்தப்படவேண்டும். தூண்டிகளுக்கு பதிற்செயற்பாடாற்ற யார் ஒன்று திரட்டப்படுகின்றனர், ஒன்று திரட்டலினாலும் வன்முறையினாலும் அதிக நன்மையடைபவர் யார், இவ்வாறான செயற்பாடுகளுக்குத் தேவைப்படும் பெற்றோல், பொல்லுகள், மதுபானங்கள் போன்ற வளங்களை யார் வழங்கினர்? இவை நிலைநாட்டப்படவேண்டும். மேலே சுட்டிக்காட்டப்பட்டவாறு, இவ்வாறான சக்திகள் இயங்குவதற்கு இயங்குவழியினை வழங்கும் கள நடைமுறைகள் பற்றிய கூர்மையான மதிப்பீட்டினால் வன்முறையின் ஒழுங்கமைக்கப்பட்ட தன்மை பற்றிய வலியுறுத்தல் ஆதாரப்படுத்தப்படவேண்டும். *எனவே, இவ்வாறான நிகழ்வுகள் பற்றிய எந்த அறிக்கையிடல்களிலும் வன்முறையின் ஒழுங்கமைக்கப்பட்ட தன்மை வலியுறுத்தப்படவேண்டும் எனவும் உள்ளூர் அரசியல் பற்றிய பூரணமான பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் நாம் பரிந்துரைக்கின்றோம்.*
2. முஸ்லிம்களுக்கெதிரான சொல்லாடலுக்குத் தற்போது எந்த மாற்றீடுகளும் இல்லை. வன்முறையினையும் முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்தின் சித்தாந்தத்தினையும் எதிர்ப்பவர்களிடம், பாரம்பரிய முஸ்லிம்கள் நல்லவர்கள் மற்றும் புதிய தலைமுறையினர் மோசமானவர்கள் என்ற குற்றச்சாட்டினைத் தவிர முஸ்லிம்கள் தொடர்பாக வேறு எந்த மாற்று மொழியும் இல்லை. *முஸ்லிம் துரோகம் எனும் கருத்தின் உருவாக்கம் மற்றும் அரசியல்மயமாக்கம் உருவாக்கப்பட்ட அறிவின் வடிவம் எனப் புரிந்துகொள்வதற்கான ஊடகமாக ஒரு மாற்றுச் சட்டகத்தினை வழங்குவதற்கு ஒரு எதிர்ப்பிரச்சார இயக்கம் அவசியமானதாகும். ஊடக அறிவு மற்றும் இனவாத மொழி மற்றும் செய்திப் பரிமாற்றம் பற்றிய அறிவு மக்களின் மத்தியில் இள வயது முதல் அதிகரிக்கப்படவேண்டும். சமூக ஊடகப் பாவனை இனவாத மற்றும் பகைமையினைத் தூண்டும் உள்ளடக்கங்களுக்காகக் கண்காணிக்கப்படுவது முக்கியமானதாகும். மேலும் இவ்வாறான செய்திகளின் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் அவற்றிற்கு எவ்வாறு பதிற்செயற்பாடாற்றுவது என மக்களுக்கு விழிப்பூட்டப்படவேண்டும்.*

3. இவ்வாறான செயல்களில் ஈடுபடும் சிங்கள பௌத்த இளைஞர்கள் அவ்வாறு செய்வதற்கு ஏன் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்பது பற்றிய பகுப்பாய்வினைக் கொண்டிருப்பது முக்கியமானதாகும். அவர்களின் ஊக்கத்தினை இனச் சமய உணர்வுகளின் அடிப்படையில் மாத்திரம் புரிந்துகொள்வது போதாது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் இருந்து அவர்களை விலக்கிவைப்பது மற்றும் அவர்களின் வாழ்வினைப் பாதிக்கும் தீர்மானங்களை வகுக்கும் மன்றுகளில் இருந்து அவர்களை விலக்கிவைப்பது அமைதியின்மைக்குப் பங்களிப்பு வழங்கும் காரணிகளாகும். *சமாதான உருவாக்க முன்னெடுப்புக்கள் இளைஞர்களை ஈடுபடுத்தவேண்டும். கலகத்தில் பங்குபற்றிய பெரும்பான்மையானவர்கள் இளைஞர்களாக இருக்கின்ற காரணத்தினால் அனைத்து இனச் சமய சமுதாயத்தின் மத்தியிலும் இலங்கைச் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலகக்கார ஆண்கள் பற்றிய பகுப்பாய்வும் கூர்மையான மதிப்பீடும் அவசியமானதாகும்.*

4. முஸ்லிம்களுக்கெதிரான இயக்கத்தின் வகுப்புப் பரிமாணம் சிவில் சமூக இடையீடுகளுக்கு முறைசார் கோட்பாடுகளை வழங்கவேண்டும். சமூக அசைவியக்கத்துக்கான வாய்ப்புக்களுக்கான கடுமையான வரையறைகளைக் கொண்ட இளைஞர்கள் சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்களில் பங்குபற்றுகின்றனர். ‘‘கலகத்தின்போது’’

இஸ்லாமிய நூல்களையும் நடுத்தர வகுப்பு முஸ்லிம்களின் சொத்துக்களையும் அழிப்பதற்கான வெறி காணப்பட்டது. சிறுபான்மையினருக்கான உணர்வுகள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புக்கள் ஊக்கமளிக்கும் காரணிகளாகத் தோற்றமளிப்பதுடன் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் பொருட்களைக் கொண்ட நடுத்தர வகுப்பிடமிருந்து வரவில்லை என்கின்ற அதேவேளை சொத்துக்கள் இலக்குவைக்கப்பட்ட விதமும் புறக்கணிக்கப்படலாகாது. *முஸ்லிம்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட கோபம் மற்றும் பகைமை சொத்துக்களை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படுவது பல இடங்களிலும் புலப்பட்ட ஒரு விடயமாகும். எனவே இவ்வாறான அணிதிரளல் இனப் பகைமையின் அடிப்படையில் தோன்றுகின்ற அதேவேளை, அவற்றினை ஒரு காரணிக்கு மட்டும் வரையறுக்க முடியாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தீர்க்கப்படவேண்டும்.*

5. முஸ்லிம்களது வியாபாரங்களின் அழிப்பு ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல்களின் முன்னுரிமைக்குரியதாக இருந்தது என்பது எமது ஆய்வில் இருந்து தெளிவாகியுள்ளது. *இந்த வன்முறையின் போது முஸ்லிம் வியாபாரங்கள் அடையாளம் காணப்பட்டு இலக்குவைக்கப்பட்ட விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரதேசத்தின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட விளைவும் சனத்தொகைக் குழுமமாக முஸ்லிம்களின் பொருளாதாரத்தினை இலக்குவைத்தமையும் சிறந்த முறையில் புரிந்துகொள்ளப்படவேண்டும்.*

6. இந்தக் கட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான இயக்கத்திற்கும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைக்கும் முஸ்லிம் சிவில் சமூகத்தின் பதிற்செயற்பாடு தற்காலிகமானதாகவும் ஒழுங்கமைக்கப்படாததாகவும் தன்னிலையான வரலாற்று ரீதியான அல்லது சமூகவியல் பகுப்பாய்வினால் அல்லது நீண்ட காலத் திட்டத்தினால் தகவல்கள் வழங்கப்படாததாகவும் இருக்கின்றது. *ஒழுங்கமைக்கப்பட்ட இனவாதத்திற்கு எதிரான இடையீடுகள் மற்றும் அதன் விளைவுகள் தேசிய மட்டத் தொலைநோக்கு மற்றும் சகல சமுதாயங்களும் சமமான பங்கீடுபாட்டாளர்களாக இருக்கின்ற நாட்டிற்கான இலக்கு ஆகியவற்றில் இருந்து தகவல்களைப் பெறவேண்டும்.* இவ்வாறான ஒருங்கிணைக்கப்பட்ட இடையீடுகளின் ஆரம்பங்கள் சான்றாகக் காணக்கூடியதாக உள்ளன. இவற்றிற்கு உதவி வழங்கப்பட்டு அவை நிலைபேறாக்கப்படவேண்டும்.

7. காலத்திற்குக் காலம் தோன்றி மறைகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பின் மீண்டெழும் அலை எனும் சூழமைவில் நாளாந்த அடிப்படையில் முஸ்லிம்கள் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்கின்ற அச்சம் கருத்திற் கொள்ளப்படவேண்டும். வன்முறையினால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்கள் தாக்கப்படுவதற்கான சாத்தியம் பற்றிய அச்சத்தினை தொடர்ச்சியாகக் கொண்டிருக்கின்றனர். நாம் விஜயம் செய்த ஒரு கிராமத்தில் ஒரு பள்ளிவாயல் மீது எத்தாக்குதலும் மேற்கொள்ளப்படவில்லை. தாக்குதல் நடத்தியவர்கள் செல்லும்போது அடுத்த முறை தாக்கப்படுவதற்காகவே அப்பள்ளிவாயல் விடப்பட்டதாக அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருந்தவர்களிடம் கூறியுள்ளனர். மற்றொரு தாக்குதல் நடக்கலாம் என்ற அவர்களின் அச்சம் உணரக்கூடியதாக இருந்தது. ஊடகங்களின் வெட்கக்கேடான இனவாதத்தின் காரணமாக - குறிப்பாக சிங்கள ஊடகத் தொலைக்காட்சி அலைவரிசைகள் - நாட்டின் சகல இடங்களிலும் வாழும் முஸ்லிம்கள் தாங்கிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள மனப் பாரம் நிச்சயம் தவிர்க்க முடியாத விதத்தில் எதிர்விளைவுகளைக் கொண்டிருக்கும் - முஸ்லிம் சமுதாயத்தின் இந்த அனுபவங்களின் மனநல விளைவுகளை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

# நூற்பெயர்க் கோவை

## செய்திப் பதிரிகைள்


Anandasangaree, G. "Sri Lanka's Culture of Impunity Leads to Violence."*The Star,* March 7, 2018.
https://www.thestar.com/opinion/contributors/2018/03/07/sri-lankas-culture-ofimpunity-leads-to-violence.html

"Anti-Muslim Riots in Sri Lanka Signal a New Social Fissure."*The Economist*, March 8, 2018.
https://www.economist.com/asia/2018/03/08/anti-muslim-riots-in-sri-lanka-signal-anew-social-fissure

Bandara, Kelum. "Four Ministers Want Action against Ampara Violence." *Daily Mirror*, 1 March 2018.
http://www.dailymirror.lk/article/Four-Ministers-want-action-against-Amparaviolence-146600.html

"Clash in Digana: Police Use Teargas." *Daily Mirror*, 5 March 2018.
http://www.dailymirror.lk/article/Clash-in-Digana-Police-use-teargas-146773.html

"Fresh Violence Erupts in Sri Lanka as Muslim-Owned Restaurant Comes under Attack."*Hindustan Times*, March 11, 2018.
https://www.hindustantimes.com/worldnews/fresh-violence-erupts-in-sri-lanka-as-muslim-owned-restaurant-comes-underattack/story-s26tFY8iCGONiq7pYsdEwN.html

Fonseka, Piyumi. "Anti-Muslim Attacks: Process of Compensation Causes Trickle of Unease."*Daily Mirror*, 2019 Available at http://www.dailymirror.lk/news-features/Anti-Muslimattacks%3A-Process-of-compensation-causes-trickle-of-unease/131-168220
[Accessed 25/10/19]

"Govt. to Declare State of Emergency for 10 days." *Daily Mirror*, 6 March 2018
http://www.dailymirror.lk/article/Govt-to-declare-State-of-Emergency-for-days--146826.html

"Kandy Communal Violence: Main Suspect Arrested." *Daily News*, March 9th 2018,
http://www.dailynews.lk/2018/03/09/local/145064/kandy-communal-violence-mainsuspect-arrested

"OIC Voices Concern over Attacks against Muslims in Sri Lanka." *Saudi Gazette*, March 2, 2018.
http://saudigazette.com.sa/article/529535/SAUDI-ARABIA/OIC-voices-concernover-attacks-against-Muslims-in-Sri-Lanka

"Muslim MPs May Vote against PM if not Violence Controlled: Harees." *Daily Mirror*, 7 March 2018.
http://www.dailymirror.lk/146915/Muslim-MPs-may-vote-against-PM-if-notviolence-controlled-Harees

"No Infertility Tablets in Western Medicine: Health DG." *Daily Mirror*, 4 March 2018.
http://www.dailymirror.lk/article/No-infertility-tablets-in-western-medicine-Health-DG-146732.html

Perera, Yohan and Ajith Siriwardana. "Muslim MPs may Vote against PM if not Violence Controlled: Harees." *Daily Mirror*, 7 March 2018.
http://www.dailymirror.lk/article/Muslim-MPs-may-vote-against-PM-if-notviolence-controlled-Harees-146915.html

Perera, Yohan. "PM Orders to Probe Ampara Incident." *Daily Mirror*, 4 March 2018
http://www.dailymirror.lk/146738/PM-orders-to-probe-Ampara-incident

"Police Curfew in Kandy Administrative District." *Daily Mirror*, 5 March 2018
http://www.dailymirror.lk/article/-Police-curfew-in-Kandy-administrative-district-146776.html

"President Declares State of Emergency."*Daily Mirror,* March 21, 2018.
http://www.dailymirror.lk/breaking_news/President-declares-State-of-Emergency-/108-146832

Ramanayake, Indika and Tharindu Jayawardena. "Ampara: Carbohydrate Clumps; not Sterilizing Chemical- Govt. Analyst." *Daily Mirror*, 8 March 2018.
http://www.dailymirror.lk/article/Ampara-Carbohydrate-clumps-not-sterilizingchemical-Govt-Analyst-146954.html

Sanjeewa, Darshana. "81 Suspects Arrested over Kandy Violence, Four during Curfew." *Daily Mirror*, 8 March 2018. http://www.dailymirror.lk/article/-suspects-arrested-over-Kandyviolence-four-during-curfew-146962.html

Srinivasan, Meera. "It was not a Sinhala-Muslim Clash, it was a Mob Attack on Muslims: Sri Lanka Minister Rauff Hakeem." *The Hindu*, 14th March, 2018.
https://www.thehindu.com/opinion/interview/it-was-not-a-sinhala-muslim-clash-itwas-a-mob-attack-on-muslims/article23229464.ece
Siriwardana, Ajith and Yohan Perera. "Govt. Used Digana Violence to Divert Attention: Wimal." *Daily Mirror*, 6 March 2018
http://www.dailymirror.lk/article/Govt-used-Digana-violence-to-divert-attention-Wimal-146845.html

"SF Denounces Appointment of New Law and Order Minister." *Daily Mirror*, 8 March 2018
http://www.dailymirror.lk/article/SF-denounces-appointment-of-new-Law-and-Order-Minister-146966.html

"Situation under Control, Riots have Dealt a Huge Blow to Economy: PM." *Daily Mirror*, 8 March 2018. http://www.dailymirror.lk/article/Situation-under-control-riots-have-dealta-huge-blow-to-economy-PM-146980.html

Taub, A and M. Fisher. "Where Countries are Tinderboxes and Facebook Is a Match." *The New York Times*, April 21, 2018.
https://www.nytimes.com/2018/04/21/world/asia/facebook-sri-lanka-riots.html

Wintour, P. "Sri Lankan Reform has 'Ground to a Halt' with Torture Used Freely-UN. "*The Guardian*, July 23, 2018.
https://www.theguardian.com/world/2018/jul/23/sri-lankanreform-has-ground-to-a-halt-with-torture-used-freely-un

### அறிக்கைகள்

Amnesty International. (*Sri Lanka: State of Emergency must Respect Human Rights.*2018,
https://www.amnesty.org/en/latest/news/2018/03/sri-lanka-soe-mustrespect-human-rights/

Canada ca. *Canada Deeply Concerned by Violence in Sri Lanka. 2018.*
https://www.canada.ca/en/global-affairs/news/2018/03/canada-deeply-concerned-byviolence-in-sri-lanka.html

"CPA calls Authorities to take Swift Action to Prevent Further Violence and to Arrest and Prosecute Individuals Advocating National, Racial and Religious Hatred." Centre for Policy Alternative: Colombo, 6 March 2018.
EEAS. *EU Ambassadors Call for Perpetrators of Hate Crimes to be Swiftly Brought to Justice.* 2018.
https://eeas.europa.eu/delegations/sri-lanka/40968/node/40968_tk

Embassy of PRC in Sri Lanka. *Foreign Ministry Spokesperson's Comment on the Current Situation in Sri Lanka, 2018.*
http://lk.china-embassy.org/eng/xwdt/t1540295.htm

U.S. Embassy in Sri Lanka. *Statement from the U.S. Embassy, 2018*
https://lk.usembassy.gov/statement-u-s-embassy/

UNOHCHR. High Commissioner's Global Update of Human Rights Concerns, 2018.
https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=22772

### செய்தி இணையத்தளங்கள்

Allard, Tom and Shihar Aneez. "Police, Politicians Accused of Joining Sri Lanka's Anti-Muslim Riots." *Reuters*, 25 March 2018.
https://uk.reuters.com/article/uk-sri-lanka-clashesinsight/police-politicians-accused-of-joining-sri-lankas-anti-muslim-riotsidUKKBN1H102O

Aneez, Shihar and Aditi Shah. "Hardline Sri Lanka Monk calls for Buddhist Sinhalese Government. "*Reuters*, 7 July 2019
https://www.reuters.com/article/us-sri-lankabuddhist-idUSKCN1U2078

Amza, A. "Sri Lanka's Communal Violence Explained." *TRT World,* March 16, 2018.
https://www.trtworld.com/asia/sri-lanka-s-communal-violence-explained-15970

Arif, Yusuf. "Main Suspect in Kandy Incident Arrested." *Ada Derana*, March 8, 2018
http://www.adaderana.lk/news/46301/main-suspect-in-kandy-incident-arrested

Ariff, Yusuf. "Kandy Schools Closed until Further Notice." *Ada Derana*, March 7, 2018
http://www.adaderana.lk/news/46279/kandy-schools-closed-until-further-notice

Ariff, Yusuf. "IGP Dispatches 3 Special Police Teams to Kandy." *Ada Derana*, March 7, 2018
http://www.adaderana.lk/news/46275/igp-dispatches-3-special-police-teams-to-kandy

Ariff, Yusuf. "Leave of all Police Officers Cancelled." *Ada Derana*, March 7, 2018
http://www.adaderana.lk/news/46285/leave-of-all-police-officers-cancelled

Ariff, Yusuf. "Govt to Declare State of Emergency for 10 days." *Ada Derana*, March 6, 2018.
http://www.adaderana.lk/news/46261/govt-to-declare-state-of-emergency-for-10-days

Ariff, Yusuf. "Govt Condemns Incidents of Violence in Ampara and Digana." *Ada Derana*, March 6, 2018.
http://www.adaderana.lk/news/46253/govt-condemns-incidents-ofviolence-in-ampara-and-digana

Ariff, Yusuf. "Curfew in Kandy Administrative District during the Night." *Ada Derana*, March 9, 2018.
http://www.adaderana.lk/news/46324/curfew-in-kandy-administrative-districtduring-the-night

"Compensation for Victims Soon – PM." *Ada Derana*, March 9, 2018

http://www.adaderana.lk/news/46311/compensation-for-victims-soon-pm

De Sayrah, Amalini. "Digana: One Year On." *GroundViews,* 2019. Available at *https://groundviews.org/2019/03/05/digana-one-year-on/* [Accessed 25/10/2019]

"Erasing the Rohingya, Point of no Return." *Reuters*, May 2017
https://www.reuters.com/investigates/special-report/myanmar-rohingya-return

"Govt. Condemns Acts of Violence." *Daily Mirror*, 5 March 2018
http://www.dailymirror.lk/146797/Govt-condemns-acts-of-violence

"Mosque Vandalised in Ampara." *Aljazeera*, 27 Feb 2018
https://www.aljazeera.com/news/2018/02/mosque-vandalized-sri-lanka-ampara-180227144548660.html

Niwas, Afrah. "Through the Scorched Frames: The aftermath in Welekade." *GroundViews*, 03/20/2018.
https://groundviews.org/2018/03/20/through-the-scorched-frames-theaftermath-in-welekade/

"OIC Calls upon Sri Lanka Government to take Immediate Action to Protect Muslims."*Saudi Press Agency*, March 7,2018.
https://www.spa.gov.sa/viewfullstory.php?lang=en&newsid=1734420

"OIC Calls Upon Government to take Immediate Action to Protect Muslims in Sri Lanka."Organisation of Islamic Cooperation, March 2018 https://www.oicoci.org/topic/?t_id=17455&t_ref=9254&lan=en

Perper, Rosie. "After Declaring a State of Emergency, Sri Lanka has Banned Facebook, Instagram, and WhatsApp." *Business Insider*, Mar 8, 2018, http://www.businessinsider.com/sri-lanka-bans-facebook-to-stop-violence-2018-3

"President Orders Impartial Probe into Digana Incidents." *Ada Derana*, March 5, 2018
http://www.adaderana.lk/news/46248/president-orders-impartial-probe-into-diganaincidents

Rasheed, Z & I. Cader. "Sri Lanka 'on the Brink' Amid Fresh Anti-Muslim Violence." *Al Jazeera*, March 8, 2018.
https://www.aljazeera.com/news/2018/03/sri-lanka-brink-fresh-antimuslim-violence-180307203031915.html

Rasheed, Zaheena. "In Sri Lanka, Hate Speech and Impunity Fuel Anti-Muslim Violence."*Aljazeera, 13 Mar 2018*
https://www.aljazeera.com/news/2018/3/13/in-sri-lanka-hatespeech-and-impunity-fuel-anti-muslim-violence

"Sri Lanka: UN Condemns Anti-Muslim Violence."*Al Jazeera*, March 12, 2018.
https://www.aljazeera.com/news/2018/03/sri-lanka-condemns-anti-muslim-violence-180311194229544.html

Silva, Manushi. "Police Curfew in Kandy Administrative District Re-imposed." *Ada Derana*, March 7, 2018.
http://www.adaderana.lk/news/46273/police-curfew-in-kandyadministrative-district-re-imposed

"Sri Lanka: When a Government Shrugs its Shoulders & Turns a Blind Eye to the Violence being Perpetrated against its own Citizens - M.A. Sumanthiran (MP, TNA)." *Sri Lanka Brief,* 12 March 2018.
https://srilankabrief.org/2018/03/sri-lanka-when-a-government-shrugsits-shoulders-turns-a-blind-eye-to-the-violence-being-perpetrated-against-its-owncitizens-m-a-sumanthiran-mp-tna /

"Sri Lanka Violence: State of Emergency Declared over Attacks."*BBC,* March 6, 2018.
https://www.bbc.com/news/world-asia-43300913

"Sri Lanka Declares State of Emergency after Buddhist-Muslim Clash."*Reuter,* March 6,2018.
https://www.reuters.com/article/us-sri-lanka-clashes/sri-lanka-declares-state-ofemergency-after-buddhist-muslim-clash-idUSKCN1GI0WG

"Sri Lanka: UN Condemns Anti-Muslim Violence." *Aljazeera,* 11 Mar 2018
https://www.aljazeera.com/news/2018/3/11/sri-lanka-un-condemns-anti-muslimviolence

"Sri Lanka Buddhist Monks Denounce Anti-Muslim Riots." *Al Jazeera*, 9 Mar 2018,
https://www.aljazeera.com/news/2018/03/sri-lanka-buddhist-monks-denounce-antimuslim-riots-180309192840779.html

Usuf, Mass L. "Protest Opposite the Malay Military Mosque in Kandy." *Colombo Telegraph*, June 9, 2016.
https://www.colombotelegraph.com/index.php/protest-opposite-the-malaymilitary-mosque-in-kandy

Zubair, L., C Malge, F Shakira, T Hadgie S Rameez, and A Nijamdeen, "Is the State Grossly Underestimating the Losses from the Mob Violence in Kandy?" *Groundviews*, 24 June 2018,
https://groundviews.org/2018/06/24/is-the-state-grossly-underestimating-thelosses-from-the-mob-violence-in-kandy/

### புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள்

Haniffa, Farzana, Harini Amarasuriya, Vishakha Wijenayake, Gehan Gunatillake, *Where Have All the Neighbours Gone? Aluthgama Riots and Its Aftermath: A Fact-Finding Mission to Aluthgama, Dharga Town, Valipanna, and Beruwela*. Law and Society Trust 2014,
https://lstlanka.org/wp-content/uploads/2017/11/aluthgama-report-final-english.pdf

Haniffa, Farzana, *Conflict legacies and plural histories: what are the possibilities for Sri Lanka's future?* In **Transitional Justice in Sri Lanka: moving beyond promises.** Edited by Bhavani Fonseka. Colombo: Center for Policy Alternatives 2017.

### வலைப்பதிவுகள்

Hewage, Senal, Cassendra Pinto and Barana Waidyatilake. "International Reactions to Anti-Muslim Riots in Sri Lanka," 21 March 2018, https://lki.lk/blog/international-reactionsto-anti-muslim-riots/

"Kandy: What Lingers, Two Years On." http://lawandsocietytrust.blogspot.com/2020/03/kandy-what-lingers-two-years-on.html